நூலகர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாறு ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[Issued 5—11—1983]

304

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

(13)

# OFFICIAL REPORT

MONDAY 14th MARCH 1983

**Volume CXCV (No. 3).**

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price Rs. 2.75 Paise]

# பொருளடக்கம்

**14—3—1982**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் | 167—197 |
| 2. | கவன ஈர்ப்பு— | |
| | (1) சென்னை சர் தியாகராயர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள கலவரம், வன்முறை ஆகியவை குறித்து .. .. | 197—200 |
| | (2) பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையில் தண்ணீர் இல்லாததால் மீன்கள் செத்து அதனால் நாட்டிற்கு நஷ்டமும், சுகாதாரக் கேடும், காலரா பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது குறித்து .. .. | 201—202 |
| 3. | 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. .. | 202—276 |
| 4. | அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 276 |

14-3-83

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

---

திங்கட்கிழமை, 1983 மார்ச் 14

மாசி 30, துந்துபி—திருவள்ளுவராண்டு-2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### ஆங்கிலோ-இந்தியன் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்.

* 169 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஆங்கிலோ-இந்தியன் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள், விடுப்புச் சலுகைகள் முதலியன தரப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் விடுப்புச் சலுகைகள் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்றன. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் இவைகளை வழங்குவதற்கான கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆராயப்பட்டு வருகிறது.

(இ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மகப்பேறு விடுப்பு, மருத்துவ விடுப்பு போன்ற விடுப்புச் சலுகைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்பநல ஓய்வூதியம், பணிபுரிந்து வருங் காலத்தில் ஆசிரியர் மரணமடைந்து விட்டால் அன்னாரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்கும் சலுகை, புதிய விகித ஊதியம் முதலியன ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இதுதவிர தேர்வு நிலை ஊதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

[1983 மார்ச் 14

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் தமிழக அரசு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா ? அப்படி அமுல்படுத்தப்படவில்லையென்றால், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மற்ற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளத்தை அரசு தன்னுடைய நிதியிலிருந்து தருகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உரிய சம்பளத்தை அரசு தன்னுடைய நிதியிலிருந்து தருவதில்லை. அந்த அடிப்படையிலேதான் இந்த வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. நாம் பணம் தரவில்லையென்றாலும், அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

**செல்வி ஆ. லீலாவதி :** ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் அதே அளவு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, ஆண்டு விழும் தொகையை அரசே கொடுத்து ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளை அரசு தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதைப் போலவே மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அதே சம்பளத்தை நிர்ணயித்து, ஆண்டு விழும் தொகையை அவர்களுக்குக் கொடுத்து சலுகையை வழங்க அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் என்பது மைனாரிட்டி நிறுவனங்கள் என்ற அடிப்படையில் அரசால் ஆதரிக்கப்பட்டு வருகிற பள்ளிகள். ஆங்கிலத்திலே மக்கள் படிக்க விரும்புகிற காரணத்தால் ஏற்பட்டு வருகிற பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள். அப்படிப்பட்ட பள்ளிகளை பொதுமக்கள் கேட்கிறார்கள் என்பதால், அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு நாம் அனுமதி வழங்குகிறோம். ஆனால் அவர்களை ஆதரிப்பதில்லை. அதற்காக பணத்தைச் செலவிடுவதற்கில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்ற வகையில் ஏதாவது சில கோட்பாடுகளை விதித்து, அதை அந்த நிர்வாகங்கள் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்த அரசு முடிவு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது விடுப்பு போன்ற சலுகைகளை ஆராய்கிறோம் என்று சொல்லுவது அவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்ற காரணத்தாலேதான்.

**செல்வி ஆ. லீலாவதி :** மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் தொடங்கும்போது, அந்த நிர்வாகம் அரசுக்கு எந்த அளவிற்கு மானியம் கொடுக்க வேண்டியிருக்கிறது ? அதை அரசு தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக ஏதாவது நிபந்தனை விதித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. அனுமதி தருவதற்கென சில குறிப்பிட்ட நிபந்தனைகளை விதித்து அந்த அடிப்படையிலே அனுமதி வழங்குகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழ் நாடு அரசு கல்வி விதிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, பலர் வியாபார ஸ்தலமாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஆரம்பிக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அந்த நிலையில் அந்தப் பள்ளிகள் ஊக்குவிக்கப்படுமா ? தமிழ் நாடு கல்வி விதிகளின்படி தமிழில் போதிக்கிறோம் என்று அவர்கள் மாறினால், அவர்களுக்கு நம்முடைய விதிகளுக்கு உட்பட்டு மானியம் வழங்குவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளைப் பொறுத்த வரையில், ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறைந்த அளவு மாணவர்கள் இருந்தால்தான், அந்தப் பகுதியில் அரசு சலுகைகளைத் தரும் என்ற விதியை ஏற்படுத்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு மானியம் தராதது, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் தோன்றுவதையும், அது தொடர்ந்து நடப்பதையும் ஊக்கப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான். அவர்கள் தமிழை பயிற்று மொழியாக வைத்து, பள்ளிகளை மாற்றினால், அவர்களுக்கு மானியம் தருவதற்கான யோசனை பரிசீலனை செய்யப்படும்.

ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மைனாரிட்டி உரிமையைத் தர வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் இந்தக் கருத்தை வேறு பல இடங்களிலே சொல்லியிருக்கிறேன். மைனாரிட்டி நிர்வாகங்கள் என்பதை நிர்வாகத்தில் இருக்கின்ற ஒருவரை வைத்துச் சொல்லக்கூடிய அளவிற்கு தீர்ப்புகள் மூலமாக நிலமைகள் உருவாக்கப்பட்டிருக்

கின்றன. ஆகவே எந்த அடிப்படையில் சிறுபான்மையினர் நிர்வாகம் என்று வரையறுப்பது என்ற பிரச்சினைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருப்பது உண்மைதான். அந்த அடிப்படையிலே சொல்லப்பட்ட ஆதலால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து, அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்துக்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பெரும்பான்மையான ஆங்கிலோ-இந்தியர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறிவிட்டார்கள். இப்போது அந்தப் பெயர்தான் இருக்கிறது. ஆகவே அந்தப் பெயரை மாற்றிக்கொள்வார்களா? அடுத்து, அரசு தரும் சலுகைகள் முழுவதையும் தாராத பள்ளிகள் இருக்குமானால், அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படி தவறு செய்கின்ற நிர்வாகங்கள் மீது நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்ளும் நேரத்தில், அப்படி ஏதாவது இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நம்முடைய மாநிலத்தில் உள்ள பள்ளிகளுக்கு நாம் கல்வித் துறையின் மூலமாக அங்கீகாரம் வழங்குகிறோம். இந்தக் காரணத்தாலே பள்ளிகளில் உள்ள பாடத் திட்டம், பாடப் புத்தகம், தேர்வுகள் அனைத்தையுமே ஒருங்கிணைந்து நாமே நிர்ணயம் செய்து அவர்களுக்குக் கொண்டு வரலாம் அல்லவா? அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆங்கிலம் பயிற்சி மொழி என்ற அடிப்படையில் நடக்கின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆரம்பத்திலே பல்கலைக் கழகத்தின் நிர்வாக அமைப்பிலே சேர்ந்திருந்தன. இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மற்றபடி பெரிய அளவிற்கு வித்தியாசம் இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** அந்த முறையிலே நம்முடைய மற்ற பள்ளிகளிலும் ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கலாம் அல்லவா? அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்வார்களா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நம்முடைய பள்ளிகளில் படிக்கின்றவர்கள் சம்பளம் கட்டுவதில்லை. அவர்கள் சம்பளம் கட்டுகிறார்கள். நம்முடைய பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக உள்ள வகுப்புகளைத் துவங்க ஓரளவிற்கு அனுமதி வழங்காத காரணத்தாலேதான் அந்தப் பள்ளிகள் வந்துகொண்டிருக்கின்றன. பணம் தந்து படிக்கின்ற காரணத்தால், அவர்களை விட்டு வைத்திருக்கிறோம், நேரடியாக மறுக்கக் கூடாது என்பதற்காக.

### மைய மதிப்பீட்டு முறை

* 170. வினா—**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அக்டோபர் மாதத்தில் நடைபெறும் பள்ளியிறுதித் தேர்வுக்குரிய விடைத்தாள்களை மைய மதிப்பீட்டு முறையில் (Central valuation) திருத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமுல் நடத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) இதுகுறித்து அரசு ஆணை எண் 2197, கல்வி, நாள் 1—10—1981-ல் வெளியிடப்பட்டு 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வு விடைத்தாள்கள் மைய மதிப்பீட்டு முறையில் திருத்தப்பட்டுவிட்டன.

(முற்பகல் 9-40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்படி இடைக்காலத்திலே அக்டோபர், நவம்பர் மாதத்தில் நடைபெறுகின்ற பள்ளி இறுதித் தேர்வு இப்போது 10 ஆம், 12 ஆம் வகுப்புகளுக்கும் நடைபெறப்போகிறது. இந்த இரண்டு வகுப்புகளுக்கும் நடக்கின்ற அரசுத் தேர்விற்கு தொடர்ந்து இந்த மைய மதிப்பீட்டு முறையிலே திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அதுபோல 8ஆம் வகுப்புக்கும் ‘ காமன் எக்சாமினேஷன் ’ என்று வைத்திருக்கிறோம். ஆகவே அதே மைய மதிப்பீட்டு முறையில் திருத்தினால், நல்ல தேர்வுப் பலன்கள் கிடைக்கக்கூடும். அதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது 10 ஆம் வகுப்புக்கும் 12 ஆம் வகுப்புக்கும் மைய மதிப்பீட்டு முறை தொடங்கப்பட்டிருக்கிறது. 8-வது வகுப்பைப் பொறுத்த வரையில், அது தனியாகப் பரிசீலிக்கவேண்டிய ஒன்றாகும்.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, மைய மதிப்பீட்டிற்கு ஆசிரியர்கள் ஆசிரியைகள் செல்கின்றார்கள். முக்கியமாக பெண்கள் லாட்ஜில் தங்கி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். போர்ட்டிங் இல்லாத பள்ளிகளிலே அவர்களுக்கு இடவசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது, அவர்களுக்குக் குளிக்கவும் மற்ற பிற வசதிகளும் கிடைப்பதில்லை. ஆகவே போர்டிங் இருக்கின்ற பள்ளிகளிலே அவர்களுக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மைய மதிப்பீட்டு முறைக்கு வருகின்ற ஆசிரியர்களுக்கெல்லாம் கூடுமான அளவுக்கு சௌகரியங்கள் செய்துதர வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அந்த வகையிலே அந்த முயற்சிகளை எடுத்துக்கொள்வார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலேயும் ஒவ்வொரு வகுப்பிற்கும் பள்ளி இறுதித் தேர்வுகள் பள்ளிக்கூடங்களில் நடத்தப்படுகின்றன. அதிலே பல பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பள்ளி இறுதியில் நடத்தப்படும் தேர்வுத் தாள்களை இரண்டு முறைகளில் திருத்துகிறார்கள். ஒன்று வீட்டிற்கு எடுத்துச் சென்று திருத்துவார்கள். இன்னொன்று பள்ளிகளிலே வைத்து திருத்துவார்கள், அதாவது "central valuation in the school itself" என்ற முறையில் திருத்துவது. அந்த முறை ஒரு நல்ல முறையாக இருப்பதால், அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி இறுதித் தேர்வு முடிந்த பிறகு, பள்ளிக் கூடங்களிலேயே விடைத்தாள்களைத் திருத்த வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது பல்வேறு பள்ளிகளிலே இருக்கின்ற நிலைமைகளை வைத்து, அந்த அனுபவங்களை வைத்து முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். அந்த அடிப்படையிலே ஆசிரியர்களிடமிருந்து ஏதாவது இதுபற்றி விளக்கமாகத் தகவல் தந்தால், அதைப்பற்றிச் சிந்திக்கலாம்.



**செல்வி ஆ. லீலாவதி :** இப்போது, தண்ணீர்ப் பற்றாக்குறை, எலெக்ட்ரிசிடி இல்லாத காரணத்தால் இந்த வருடம் மைய விடைத்தாள்கள் திருத்துவதை விட்டுவிட்டு அவர்கள் வீடுகளுக்கே விடைத்தாள்களைக் கொண்டுசென்று திருத்துவதற்கு வசதி செய்யலாமா? அந்த விடைத்தாள்களை அவர்கள் வீட்டிற்கு அனுப்பலாமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படி ஒரு யோசனை இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்த மைய மதிப்பீட்டு முறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பீட்டாளர்களாக நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் எந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகிறார்கள் என்று அரசு அறிவிக்குமா? அதிலே பல்வேறு நிலையில் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுவதாக, பணி மூப்பு அடிப்படையில் புறக்கணிக்கப்படுவதாக, அதிலே வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லாம் பார்த்து நியமிக்கப்படுவதாக புகார்கள் வந்திருக்கின்றன. அது பற்றி பார்த்து, அப்படி தவறுகள் நடக்காமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எந்தவிதமான ஆதாரமும் இல்லாத புகாராக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் அங்கே இல்லை என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கின்ற அத்தனை ஆசிரியர்களுடைய விவரங்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. கம்ப்யூட்டரிலே நாம் பதிவு செய்து வைத்திருக்கிறோம். அந்த கம்ப்யூட்டரிலே எல்லாவிதமான விவரங்களும் இருக்கின்றன. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு விவரங்கள் சேர்த்துவைத்திருக்க முடியாது. இந்த முறை அங்கேயெல்லாம் இல்லை. அந்த கம்ப்யூட்டர் விவரங்களிலிருந்துதான் எடுக்கின்றார்கள். பணி மூப்பு பற்றிய விவரங்களையும் வைத்துத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், எந்த ஆசிரியர் சங்கமும் இப்படி நடக்கிறது என்று சொல்லவில்லை. அப்படி ஏதாவது தவறு இருந்து தெரிவித்தால் அதைப்பற்றிப் பார்க்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** சென்ற ஏப்ரல் மாதத்தில் இவ்வாறு மாநில முழுவதும் மைய் மதிப்பீட்டு தேர்வு முறையில் தேர்வு நடந்த காலத்தில் சென்னையில் மட்டும் ஏறத்தாழ 2½ மடங்கு தினப்படி கொடுக்கப்பட்டது. புதிய மாநகராட்சியில், திருச்சி, கோவை, சேலம் போன்ற நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தை ஏற்று அவர்கள் அந்த ஆர்ப்பாட்டத்தை விட்டுவிட்டு பணியை முழுமையாகச்

செய்து கடமைகளை முடித்தார்கள். இந்த ஆண்டும் அந்தத் தேர்வு முறை வருகிறது. அது குறித்து ஏதாவது சலுகைகளைப் பெருக்கிக்கொடுத்து தினப்படியை அதிகப்படுத்தக்கூடிய யோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றி விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டு கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்

* 171. வினா—திரு. செ. முத்துசாமி

திரு. க. மீனாட்சிசுந்தரம்

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் மற்றும்

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் கல்லூரி ஆசிரியர்களைப் போல், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் 'வங்கிகள்' மூலம் நேரடியாக ஊதியம் வழங்கும் சொற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையேனில், இதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கும் முறை முன்னோடி திட்டமாக முதலில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் 1—12—1982 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அந்தத் திட்டத்தை செயலாற்றுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

**திரு. செ. முத்துசாமி:** இந்தப் பள்ளிகளிலே நேரடியாக ஊதியம் கொண்டு வந்து செயல்பட்டு வருவதாக 1981ஆம் ஆண்டு சாதனைப் பட்டியலிலே கல்வித் துறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதனுடைய உண்மை நிலை என்ன என்று விளக்க வேண்டும். இன்னொன்று அப்படி வழங்கப்பட்டு பள்ளிகளிலே தனியாக செங்கற்பட்டில் பரிட்சார்த்தமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த இரண்டிற்கும் விளக்கமாக அமைச்சர் அவர்கள் விடை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாங்கள் ஒரு காரியத்தைச் செய்கிறோம். அந்த சாதனையை சொல்லிக் கொள்வதில் எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. உயர்நீதிமன்றம் தடை உத்தரவு போட்டிருக்கின்ற காரணத்தினாலே, அது இன்றைக்கு நடைபெறவில்லையே தவிர, நாங்கள் நடத்தாமல் இல்லை. அது மட்டுமல்ல. செங்கற்பட்டில் ஏன் தனியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், கல்லூரிகள் 170, 180 இருக்கும். பள்ளிகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. நிர்வாகத்திலே நாம் பல்வேறு மாறுதல்களை எதிர்பார்த்துத்தான் செய்கின்றோம். ஒரு நிர்வாகத்திலே அந்த மாறுகலைக் கொண்டு வந்து பிறகு அது சரியாக நடைபெற்றால், அந்த முயற்சிகளை மேற்கொண்டு பிறகு அதையே மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுபோகலாம் என்ற எண்ணத்திலேதான் செய்கிறோம். வேறு ஒன்றுமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அரசு செய்கின்ற சாதனைகளை சாதனைகளாகச் சொல்லிக் கொள்வதற்கு உரிமையுண்டு. அதிலே தவறு இல்லை. 1981-லே செய்யாத நேரத்திலே செய்ததாக, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கப்பட்டதாக, சாதனைப் பட்டியலிலே நாங்கள் பார்த்தோம். அதற்கு அடுத்து இப்போது உயர்நீதிமன்றத்திலே தனியார் பள்ளி நிர்வாகங்கள் அதற்குத் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அதை நீக்க அரசு மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அந்தத் தடையை எதிர்த்து வழக்காடிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட தடை உத்தரவானது வழக்குத் தொடர்ந்திருக்கின்ற நிர்வாகங்கள் மட்டும் பெற்றிருக்கின்றனவா அல்லது பொதுவாகவே அரசு ஆணைக்குத் தடை உத்தரவு என்று அந்த உயர்நீதிமன்றம் கொடுத்திருக்கிறதா? அந்த வழக்கைத் தொடர்ந்த அந்தந்த நிர்வாகங்களுக்குமட்டும் கொடுத்திருக்கிறது என்றால், மற்ற இடங்களில் அதைத் தொடர்ந்து அமுல் படுத்தலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பொதுவாகவே நாம் உத்தரவு போட்டோம். அந்த உத்தரவைத் தான் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தமிழகத்திலே தனியார் கல்லூரிகளிலே நேரடி ஊதியம் வழங்குதலைப் புகுத்தியது நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்தான். அதற்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். அதே முறையிலே நாங்கள் ஆவலாக எதிர்பார்த்திருந்தோம். அவர்களை

பொறுத்தவரையில், ஏமாற்றமளித்துவிட்டது. தேவை என்றால் நாங்களும் அரசோடு சேர்ந்து வழக்குமன்றத்திலே வாதாட விரும்புகிறோம். அதற்கு ஒரு வாய்ப்பு உருவாக்கித் தருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபோன்ற பிரச்சினைகளில் ஆசிரியர்களும் சேர்ந்து வாதாடுவது என்பது ஒரு நல்ல முயற்சிதான். ஆகவே அதை ஒரு பெட்டிஷன் மூலம் கேட்டு அவர்களை 'இம்பிளிட்' பண்ண வேண்டும் என்று சொல்லிக்கேட்டால், அவர்களும் சேர்ந்து வாதாடலாம்.

**திரு. செ. முத்துசாமி:** நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் கேட்டார்கள். அதற்குப் கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை. 1981 ஆம் ஆண்டிலே நேரடி ஊதியம் வழங்கப்படவில்லை. பள்ளிகளிலே அவ்வாறு வழங்கப்படு கிறது என்று கல்வித் துறைக் குறிப்பிலே இருந்தது. இதை சாதனைப் பட்டியலிலே போட்டிருக்கின்றார்கள்—ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் என்று. அந்தத் தவறு எப்படி நிகழ்ந்தது? 1982-ல் கொண்டுவந்தார்கள். 1981-ம் ஆண்டு சாதனைப் பட்டியலிலே எப்படி வந்தது? அந்தத் தவறுக்கு யார் காரணம்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது தவறல்ல. ஒரு முடிவை மேற்கொண்டு உத்தரவைப் போட்டிருக்கிறோம். ஆகவேதான் நாங்கள் அப்படிப் போட்டிருக்கிறோம். உயர்நீதிமன்றம் தடுத்து நிறுத்தியிருந்தால், அதற்கு என்ன சொல்ல முடியும்?

**திரு. செ. முத்துசாமி:** 1982 ஆம் ஆண்டு கல்வித் துறையில் நேரடியாக ஊதியம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் 1981 ஆம் ஆண்டில் வந்த சாதனைப் பட்டியலிலேயே அவ்வாறு போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சபையிலேகூட இரண்டொரு முறைகள் பேசினேன். பதில் வரவில்லை. 1981-ம் ஆண்டு எப்படி சாதனைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது? அது என்ன நாகரீகம் என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

(முற்பகல் 9-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு அரசின் சாதனைப்பட்டியலில் ஆசிரியர்களுக்கு ஓய்வூதிய வாரியம் அமைக்கப் படுவதாகச் சொல்லியிருக்கிறார்களே, அதுபற்றி அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இல்லாத விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தால், என்னால் பதில் சொல்ல முடியாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, அரசு, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான முழு மானியத்தையும், ஊதியம் முழுவதையும் கொடுக் கிறது. அந்த மானியம் ஆசிரியர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டு மென்பதற்காக, முழுமையாகப் போய்ச்சேர வேண்டுமென்பதற்காக நேரிடை ஊதியம் என்ற கொள்கையை முடிவு செய்து அமுல்படுத்தியிருக்கிறது பரீட் சார்த்தமாக. இந்த முற்போக்கான கொள்கைக்குக்கூட உயர்நீதி மன்றம் தடை விதித்திருக்கிறது என்றால், அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் சரியான முறையில் அந்த வழக்கில் முனைப்புடன் செயல்படவில்லையா? இதுவரை அப்படிச் செயல்படவில்லை என்றாலும், இனியாவது இதில் விரைந்து செயல் பட தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இந்த வழக்கிலே அரசு ஆணை போட்டது சரிதான் என்றும், அதை அமுல்படுத்த வேண்டு மென்றும் ஆதாரங்களோடு வழக்கறிஞர்கள் அறிவித்திருக்கிறார்கள். நாம் தருகின்ற இந்தச் சம்பளம், அரசுப் பணம்தான். அரசுப் பணத்தைத் தர ஒரு உத்தரவு போடுகிறோம். உயர்நீதி மன்றம் தடை செய்து, அந்தத் தடை இன்னும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்கும், ஆசிரியர் பிரதிநிதிகளின் கவனத்திற்கும், பொது மக்களின் கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டு வர வேண்டும். இப்படிப்பட்ட பிரச்சினைகள் உயர் நீதி மன்றத்திலே வரும்போது, இது ஒன்றும் சட்ட நுணுக்கம் வாய்ந்த ஒரு வழக்கல்ல. இதை ஒன்று அல்லது இரண்டு நாட்களிலே தீர்க்கலாம். ஆனால் சமுதாய ரீதியில் உயர்நீதி மன்றம் இதைப்பற்றி நினைத்தால்தான், இது போன்ற பிரச்சினைகளில் தீர்வு காண முடியும். இல்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்க, நாங்கள் வழக்கு மன்றத்திலே இருக் கிறது என்று பதில் சொல்ல நேரிடுகிறது. நீதி மன்றத்தை மீறி நாம் செயல் பட முடியாது. அதைத்தான் நாம் எடுத்துச் சொல்ல முடியும். இந்த முறையில் இருக்கிற நிலைமையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(திரு. செ. முத்துசாமி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூன்று தடவை கேள்வி கேட்டுவிட்டார்கள். 4 ஆம் தடவை எழுந்திருக்கிறார். 4 உறுப்பினர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு துணைக் கேள்விதான் கேட்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி இருக்க

லாம். 4 பேரும் இரண்டு இரண்டு வினாக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார் கள். அதன் பிறகும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூன்றாம் தடவை கேட் டார்கள். திரும்பவும் எழுந்திருந்தால் எப்படி?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருவதில் மிகுந்த பாதி வாங்கப்படுகிறார்கள் என்பது நாடு அறிந்த உண்மை. தினக்கூலிகள்கூட ஒரு நாளைக்கு 15 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு ஊதியத்தை முழுவதுமாகக் கொடுப்ப தில்லை. இந்த சமூக அநீதியை உணர்ந்து, நேரடியாகச் சம்பளம் வழங்க முன் வந்ததை ஆசிரியர் சமுதாயம் வரவேற்றிருக்கிறது. ஆனால் நீதி மன்றம் இதற்குத் தடை விதித்திருக்கிறது. அவர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்க வேறு ஏதாவது வழிகள் இருக்கின்றனவா? ஏன் நீதி மன்றத்தின் உணர்வுகள் சமுதாயப் பணியில் போகவில்லை? அரசு இதைப்பற்றி என்ன நினைக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, உயர்நீதி மன்றம் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. வழக்கை அவர்கள் இன்னும் பரிசீலிக்க வில்லை. இதுதான் தாமதத்திற்குக் காரணம். வழக்கை எடுத்துப் பரிசீலித் தால், நமக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்க முடியுமென்று கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நீதி மன்றத்திற்கு அவர்கள் சென்றவுடன், '**எக்ஸ்-பார்ட்டி**' யாக 'ஸ்டே' கொடுக்கப்பட்டதா? நம்முடைய வழக்கறிஞர்கள் ஆஜரான பிறகு, 'ஸ்டே' கொடுக்கப்பட்டதா? இதில் என்ன நடைபெற்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தடை உத்தரவு வழங்கியுள்ளது என்று தகவலைத் தந்திருக்கிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, சிலபல தனியார் நிறுவனங்கள் கொள்ளை அடிக்க இருக்கின்றன. மாதந்தோறும் 100 ரூபாய், 50 ரூபாய் என்று ஊதியத்தைப் பிடித்துக்கொண்டு, கொடுக்கிறார்கள். மக்களின் வரிப் பணத்திலிருந்து ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தைக் கொள்ளை அடிப்பது சரிதானா? * *

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதி மன்றத்தைக் குற்றம் சொல்வதுபோலச் சொல்வது சரியல்ல. அதைக் குறிப் பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாக, மாநிலத்திலே உள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகளிலே பார்க்கின்ற காரியம் என்னவென்றால் மாதாமாதம் கொடுக்கும் ஊதியத்திலே ஒரு பகுதியை வெட்டிவிடுகிறார்கள் என்பதுதான். நீதி மன்றத்திற்குச் சென்று அவர்கள் தடை வாங்குகிறார்கள். அந்தப் பணத்தை அவர்கள் எடுத்துக்கொள்வதால், நீதி மன்றத்திற்குச் சென்று, பணம் செலவு செய்து, மன்றாடுகிறார்கள். எனவே இதில் அரசு துரிதமாக நட வடிக்கை எடுத்து, ஒரு மாத காலத்திற்குள்ளாக வழக்கைத் தீர்த்து, ஆசிரியர் களுக்கு நேரடியாக ஊதியம் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த வழக்கை நடத்துவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும். உயர்நீதி மன்றத்திற் குள்ள பிரச்சினை, தனி நபர் அடிப்படை உரிமைகள் என்று வைத்திருப்பதால், அதை வைத்துத்தான் அவர்கள் ஆராய்கிறார்கள். அரசியல் சட்டத்திலே இப்படிப்பட்ட வழக்குகளுக்கு ஒரு தனிப்பட்ட அந்தஸ்து தராமல், பொது வான உரிமைகளுக்கு முதல் இடமும், தனிப்பட்ட உரிமைகளுக்கு இரண்டாம் இடமும் தந்தால்தான் உயர்நீதி மன்றமும் அதைப் பின்பற்றி தீர்ப்பு வழங்கும். இப்போது தனி நபர் அடிப்படை உரிமைகளுக்குச் சிறப்பு இருப்பதால், அந்த முறையில் அதை ஆராய்ந்து தடை தந்திருக்கிறார்கள்.

**செல்வி ஆ. லீலாவதி : செங்கை மாவட்டத்திலே ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் கொடுப்பதற்கு அரசு முன் வந்திருக்கிறது. அதற்குத் தனியாக அலுவலர்களை நியமித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இருக்கின்ற அலுவலர்களை வைத்து, நேரடியாக ஊதியம் தரக்கூடிய முறையைத் தான் பின்பற்றியிருக் கிறார்கள். அது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்த பிறகுதான் மேற்கொண்டு புதிய அலுவலர்களைப் போடலாமா என்பதைச் சிந்திக்க முடியும்.

## பணிமூப்புடைய பட்டதாரி தலைமை ஆசிரியர்கள்.

* 172. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக, முதுகலைப் பட்டம் பெறாத பணிமூப்புடைய பட்டதாரி தலைமையாசிரியர்கள் பணியாற்ற அரசு தொடர்ந்து வாய்ப்பளிக்குமா ?

(இ) பணிமூப்புடைய பட்டதாரி தலைமையாசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்ற வாய்ப்பளித்து, அவர்கள் முதுகலைப்பட்டம் பெற கால நிர்ணயம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள பணிவிதிகளில், மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப்பட்டம் பெறாத தலைமை ஆசிரியர்களுக்கு, தங்களை, முதுகலைப்பட்டம் பெற்று முழுத்தகுதியாக்கிக்கொள்ள, 30—6—1983 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பணிமூப்புடைய பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெறுவதற்காக 30—6—1983 வரை அவகாசம் அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதுவரை அப்படி பணிமூப்புடைய முதுகலைப் பட்டம் பெறாதவர்கள் எத்தனை பேர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ? அவர்கள் இந்தத் தகுதியைப் பெற்றுவிட்டார்களா ? அப்படிப் பெறவில்லை என்றால், தகுதியைப் பெற மேலும் கால நீட்டிப்பு தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்த கட்டத்தில், அந்தப் பள்ளிகளில் இருந்த அரசிதழ் பதிவு பெற்ற, முதுகலைப் பட்டம் பெறாத தலைமை ஆசிரியர்களே, மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். தனியார் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும்போது, அந்தப் பள்ளிகளில் முதுகலைப் பட்டம் பெறாத தலைமை ஆசிரியர்கள் இருந்தால், அவர்களையே மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியாராகத் தொடர்ந்திருக்க அனுமதிக்கப் பட்டது. இவர்கள் 30—6—1983க்குள் முதுகலைப் பட்டம் பெற வேண்டு மென்று சொல்லி, அவர்கள் பதவியில் இருக்கிறார்கள்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசுப் பள்ளிகளிலே உள்ளவர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க அரசு முன் வந்திருக்கிறதா அல்லது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். 30—6—1983-க்குள் அந்தத் தகுதியைப் பெறாதவர்களுக்கு, மேலும் ஓராண்டுக் காலம் நீட்டிக்க அரசு கருணையுடன் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு உயர் நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவு பெற்ற—கெஜட்டட்—தலைமை ஆசிரியர்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு அது இல்லை. இந்தத் தேதியை நீட்டித்துத் தருவது என்பதைப் பொறுத்தவரையில், அதற்கு முன்னதாக எவ்வளவு பேர்கள் பாஸ் செய்திருக்கிறார்கள் என்பதை வைத்து, ஆராய்ந்து, எடுக்கப்பட வேண்டிய முடிவாகும்.

**திரு. செ. முத்துசாமி :** 1—4—1978-ல் மேல்நிலைக் கல்வியை அரசாங்கம் கொண்டு வந்து, அமுலாக்கியது. அதற்கு முன்னதாக பள்ளிக்காகவே முழு நேரத்தையும் செலவு செய்து, மேற்படிப்பு படிக்க வழியில்லாமல் வேலை செய்த பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள், சீனியராகப் பணியாற்றி வந்தார்கள். எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல், ஏற்கெனவே பணியாற்றியவர்களைச் சென்றுவிடுங்கள் என்று சொல்லி, எம்.ஏ., பி.டி., தலைமை ஆசிரியர்

(முற்பகல் 10-00)

களை நியமித்தோம். தனியார் பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட காலம் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்கும் வாய்ப்பு தர வேண்டும். அதேசமயத்தில் தலைமையாசிரியர்களாக அரசுப் பள்ளிகளில் பணியாற்றாத காரணத்தால், திடீரென்று அவர்கள் செகன்டரி பள்ளிகளுக்குப் போக வேண்டுமென்று சொல்லி, அவர்களை மாறுதல் செய்வது தர்மம் இல்லையென்று அவர்கள் விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். இவ்வாறு டிஸ்கிரிமினேஷன் செய்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியார் பள்ளிகள் இந்தப் பள்ளிகளை ஆரம்பிக்கும் அளவுக்கு ஒத்துழைப்பு தரவில்லை. மேலும் மேல் நிலைப் பள்ளிகளைப்பற்றி பொதுமக்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் தெளிவான ஒரு நிலைமை இல்லாத காரணத்தாலும், நிறைய பள்ளிகளைத் திறந்தால்தான், இது வெற்றிபெறும் என்ற வகையிலும் இந்த முடிவை எடுத்தோம்.

*Selection Grade for Teachers absorbed in Government Schools.*

* 173 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Teachers, who had been absorbed in Government, due to the Aided Middle Schools being taken over and upgraded as High Schools, are not awarded Selection Grade on percentage basis, taking into consideration the services rendered by them in the Aided Schools; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை வழங்கியபோது ஆசிரியர்களின் பணி மூப்பினை மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டது. அரசுடைமை ஆக்கப்பட்ட பயிலகங்களில், பணி மூப்பு ஆசிரியர்கள் அரசுப் பணியில் ஈர்த்த நாளிலிருந்து கணக்கில் கொள்ள வேண்டியிருப்பதால், தனியார் பள்ளிகளில் பணியாற்றிய காலத்தை கணக்கிலெடுக்க இயலாததாயிற்று.

(இ) பி.டி. ஆசிரியர்களுக்கும் அதே ஊதிய விகிதத்தில் உள்ள ஏனைய ஆசிரியர்களுக்கும் 1—4—1973 முதலும், இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் துவக்க நிலை ஆசிரியர்களுக்கும், அதே ஊதிய விகிதத்தில் உள்ள ஏனைய ஆசிரியர்களுக்கும் 1—4—1974 முதலும், முதல்நிலை உடற்கல்வி ஆசிரியர்களுக்கு 1—4—1975லிருந்தும் 10 ஆண்டு காலப் பணி அடிப்படையில் தேர்வுநிலை வழங்கப்படுவதால் மேற் கூறிய நிலை இனி ஏற்படாது.

**திரு. பா. ரா. தாமஸ் :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், உதவிபெறும் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டுள்ளன. அந்தப் பள்ளிகளில் பணி மூப்புடைய ஆசிரியர்களாக இருந்தவர்களுக்குக் கூட இந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. அரசுப் பள்ளிகளை சதவிகித அடிப்படையில் எடுத்துக்கொண்டார்கள். இவர்களையும் சதவீத அடிப் படையில் எடுத்துக்கொண்டால், பணிமூப்பு அடிப்படையில் வாய்ப்பு கிடைக்கு மாதலால், இதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதிலே அரசுடைமையாக்கப்பட்ட பள்ளிகளைப்பற்றி மட்டும் தான் கேட்டிருக்கிறார்கள். தனியார் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றியவர்களுக்கும் சலுகைகள் தந்தால், அரசுப் பணியில் ஏற்கெனவே இருக்கின்ற ஆசிரியர்களை விட பணி மூப்பு நிலைக்கு இவர்கள்



போய்விடுவார்கள். அந்தக் குறையை நீக்க இதைச் செய்திருக்கிறோம். மேலும் இது புதிதல்ல. புதிதாக ஆசிரியர்களை நாம் எடுக்கின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற ஆசிரியர்களுக்குக் கீழேதான் இவர்களை வைப்பது வழக்கம்.

**திரு. செ. முத்துசாமி :** 1—4—1974-ல் 10 ஆண்டுக் கால பணி அடிப்படையில் செலக்ஷன் கிரேட் வழங்கும்போது, எல்லா நிர்வாகங்களிலும் ரெகுலராகப் பணியாற்றிய சர்வீஸ் காலம் அத்தனையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. 1—4—1971 அன்று பணியில் உள்ளவர்களுக்கும் இந்த வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தீர்ப்பையும் ஆதரவாகப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டு தீர்ப்பின் அடிப்படையில் 1—1—1971 அன்று அவர்கள் எந்த நிர்வாகத்தில் பணியாற்றியிருந்தாலும் அவர்களுக்கும் 10 ஆண்டு பணிக் கால அடிப்படையில் செலக்ஷன் கிரேட் பணி கொடுப்பதற்கான ஆய்வு அரசிடம் இருக்கிறதா ? எப்போது இதுகுறித்து முடிவு எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தீர்ப்பு தொடர்பான விவரம் என்னிடத்தில் இல்லை. அதுபற்றித் தனியாகக் கேட்டால் விவரம் தருகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** முதன் முதலாக 1—1—1971 முதல் சதவீத அடிப்படையில் தேர்வு நிலை என்கிற கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டது. அந்தச் சமயத்தில் சில ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளாக இருந்தவை அரசுப் பள்ளிகளாக ஆக்கப்பட்டன. அதுபோல் தனியார் பள்ளிகள் சில அரசுப் பள்ளிகளாக ஆக்கப்பட்டன. இரண்டாண்டுகளுக்கு முன்ப வெளியிட்ட அரசாணையில் 1—1—1971 தேதியில் சதவீத அடிப்படையில் தேர்வுநிலை கணக்கிட ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அவர்கள் ஏற்கெனவே பணிபுரிந்த காலத்தையும் எடுத்துக்கொண்டு மறுநிர்ணயம் செய்து 1—1—1971 ஆம் தேதி அடிப்படையில் சதவீதத் தேர்வு நிலை வழங்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளாக இருந்து அரசுப் பள்ளிகளாக ஆன பள்ளிகளில் பணியாற்றி வந்தவர்கள்பற்றி அந்த ஆணையில் ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. இதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களின் மூலக்கேள்வியின் நோக்கம். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் தேவை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி வாய்ப்பு தந்தால், அரசு ஆசிரியர்களைவிட பணி மூப்பானவர்களாக ஆகிவிடுவார்கள் என்கிற அடிப்படையில் அது மறுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே கூறப் பட்டிருக்கிறது.

*Restoration of Staff Members to same management.*

* 174 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, as per the Hand Book on the implementation of Higher Secondary Education in Tamil Nadu, staff members deployed during 1978–79, to other managements may be restored to the same management during the subsequent years; and

(*b*) the number so restored ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) எட்டு பேர்.

*Allotment of houses to Teachers.*

* 175 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that, as per G.O. No. 114, Public Works Department, dated 18th January 1967, certain number of houses is allotted to Teachers belonging to the Education Department at Mandapam Camp, Ramanathapuram district; and

(*b*) if so, the reasons for not following the Government Order, while allotting houses to Teachers working there ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.



திரு. பா. ரா. தாமஸ் : நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒன்றைப் பணிவோடு கூறுகிறேன். பொதுப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் ஆசிரியர்களை மக்களைப் போல் பாவிக்காமல் மாக்களாகவே பாவிக்கிறார்கள். அவர்களைப் பார்த்து காலியாக இருக்கிற வீடுகளை ஆசிரியர்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்கும்போது, அமைச்சர்கள் தங்கக்கூடிய ஒரு பங்களா இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் ஆசிரியர்கள் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறார்களா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, கேள்வி கேட்கும்போது குற்றம் சாட்டுவது மாதிரி தயவுசெய்து பேச வேண்டாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி கேட்கும்போது குற்றம் சாட்டுவது மாதிரி கேள்வி கேட்கக் கூடாது என்று இருக்கிற மரபை மறந்து விடுகிறார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : ஆசிரியர்களை பொறியாளர்கள் மாக்களாக பாவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆசிரியர்களுக்கும் சேர்த்து வீடுகளைப் பகிர்ந்துகொடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் பொறியாளர்கள் இவர்களைத் தள்ளி வைத்துவிட்டு ஒதுக்கீடு செய்வதும் ஆசிரியர்களை மாக்களாகக் கருதிப் பேசுவதும் சரியில்லை. இப்படி பொறியாளர்கள் மீது ஆசிரியர்கள் சொல்கிற குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்துகொள்ள முன்வர வேண்டும்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் பொறியாளர்கள் மீது புகார் சொல்கிறார். அவர்கள் ஆசிரியர்கள் பேரில் சரியான பற்றும் பாசமும் இல்லாமல் நடந்துகொள்கிறார்கள் என்று கூறுகிறார்கள் என்று தெரிகிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் 8 ஆயிரம் பொறியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் பொறியாளராவது, எந்த ஆசிரியர்களிடமாவது தரக் குறைவாக நடந்துகொண்டார் என்று ஆதாரத்துடன் சொன்னால், அந்தப் பொறியாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. மேலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, பொதுப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் ஆசிரியர்களுக்கு வீட்டை ஒதுக்கீடு செய்யவில்லையென்றும்

அவர்களிடம் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். இங்கே கேட்டிருக்கும் கேள்வி இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமிலுள்ள கல்வித் துறையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சில வீடுகள் பொதுப் பணித் துறையில் ஒதுக்கப்படுகின்றனவா இல்லையா என்பதுதான். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அங்கு இருக்கின்ற கட்டடங்கள் அனைத்தும் பொதுப் பணித் துறைக்கு மட்டும் உள்ளவை அல்ல. அரசு ஓர் உத்தரவு போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருந்து கொண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொதுவாக இருந்துகொண்டு ஒதுக்கீடு செய்கிறார், அந்த வகையில் ஆசிரியர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, இப்பிரச்சினை குறித்தும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்திற்காக பல வீடுகளை ஒதுக்கீடு செய்திருந்தார்கள். சேது சமுத்திரத் திட்டத்தின் கீழ் இருந்தவர்கள் வீடுகளைக் காலி செய்ததற்குப் பிறகு, ஆசிரியர்கள் தங்குவதற்கு வீட்டு வசதியில்லாமல் அவதிப்பட்ட காரணத்தால், காலியாக இருக்கிற வீட்டை, தங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று ஆசிரியர்கள் மனு செய்தார்கள். இதற்காக இரண்டொரு மாதத்திற்குரிய வாடகையைக் கூட செலுத்திவிட்டார்கள். அதற்குப் பிறகு திடீரென்று மின்சாரம் மற்றும் தண்ணீர் இணைப்பைத் துண்டித்து விட்டார்கள். இது வேதனை யான ஒரு செய்தி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அளித்த விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத் திலாவது இம்மாதிரி நடைபெறாமலிருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா, கவனிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** யாரோ தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினருக்குக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் குறிப் பிட்ட தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவருக்கு ஒரு கட்டடம் ஒதுக்கப்பட்டது. அது உண்மை. ஆனால் என்ன காரணத் தாலோ அவர் அதில் குடியிருக்கவில்லை. கட்டடம் யாருக்கு வழங்கப் பட்டதோ அவர் தான் அதை உபயோகப்படுத்த வேண்டும். ஆனால் அவர் உபயோகப்படுத்தாமல் கல்வித் துறையைச் சார்ந்த ஒரு காவலர் அங்கு வசித்து வருவதாகத் தெரிய வருகிறது. ஆகவே தவறு செய்பவர்கள் அவர்கள் தான். தவறுக்கு பாத்தியதைக்காரர்கள் பொதுப்பணித் துறையினர் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-10)

**திரு. செ. முத்துசாமி :** வீடுகளை ஒதுக்கீடு செய்வதில் எங்கேயாவது பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், தவறு நடந்தால் சொல்லுங்கள், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு சரியான பிரச்சினையை நான் சொல்கிறேன். இப்போது மேட்டூர் அணை இருக் கிறது. அங்கே இருக்கும் ட்ரெயினிங் ஸ்கூலில் கண்ட்ரோலில் 20 குவார்டர்ஸ் இருந்தன. இப்போது அங்கே மேல் நிலைப் பள்ளிகள் எல்லாம் வந்து ஆசிரியர்களின் எண்ணிக்கை 7 பங்கு உயர்ந்திருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த குவார்டர்சை ரிப்பேர் செய்ய வேண்டும் என்று சொல்லி அவர்களிடமிருந்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, ரிப்பேர் செய்த பிறகு மீண்டும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய முடியாது என்று நிராகரித்து இருக்கும் நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, ஏற்கெனவே கல்வித் துறைக்கு என்று ஒப்படைத்திருக்கும் அந்த 20 குவார்டர்சையும் ஆசிரியர்களுக்கு ஒதுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து நீதி வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இதேபொருள் பற்றிய ஒரு கேள்வியை இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது இருந்தார்களோ என்னவோ. அதற்கு பதில் சொல்லும்போது நான் விளக்கமாகப் பதில் சொல்லியிருக் கிறேன். ஆசிரியர்களுக்கென ரிப்பேர் செய்யப்பட்ட வீடுகள் 6 இருக் கின்றன. இந்த வீடுகளை, ஆசிரியர்களுக்குக் கொடுப்பதா அல்லது மற்ற துறையில் பணிபுரிபவர்களுக்குக் கொடுப்பதா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இருந்திருந்தால், தெரிந்து கொண்டிருக்கக்கூடும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்போது எவ்வளவு ஆசிரியர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? இப்போது ஸ்ரீலங்கா அகதிகளுக்கென புதிய கேம்ப் கட்டிக்கொண்டிருப்பதால், புதியதாக வீடுகள் காலியாகக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அப்படி காலியாகும் அந்தப் புதிய வீடுகளை ஆசிரியர்களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** முன்பு 20 ஆசிரியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. காலியான வீடுகள்பற்றி பொதுப் பணித் துறை தனியாக முடிவு எடுப்பதில்லை. அதற்கென்று தனியாக உள்ள குழு தான் முடிவு எடுக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** மேட்டூர் அணைப் பகுதியிலே இருக்கும் அந்த வீடுகள் ஆசிரியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 6 வீடுகள் தான் ரிப்பேர் செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி யிருப்பது உண்மை நிலைமை அல்ல. மற்ற வீடுகளை அவர்கள் மற்றவர் களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே கல்வித் துறைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் வீடுகளை ரிப்பேர் செய்து ஆசிரியர்களிடம் ஒப்படைக் காமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்த வீடுகளைத் திரும்பவும் இவர் களுக்கே ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? பொதுப் பணித் துறையிலே வீடுகள் கட்டித்தரத்தான் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஏற்கெனவே ஆசிரியர்களுக்கு இருந்த உரிமையை அங்கே இருக்கும் டி.ஈ. எடுத்துக்கொள்வது என்பது என்ன நியாயம் ? ஆகவே, திரும்பவும் அந்த வீடுகளை கல்வித் துறைக்கு வழங்கி நீதி வழங்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இப்போது இங்கே கேள்வி கேட்டு பதில் அளித்துக்கொண்டிருப்பது மண்டபத்தைப்பற்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேட்டூரைப்பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றி முழுவிவரங்களும் தற்போது என்னிடத்திலே இல்லை. ஆகவே, தனியாக கேள்வி கேட்டால், தேவையான விவரங்களைக் கொடுக்கலாம்.

### கதர்-கிராமிய நூற்பு நிலையங்கள்.

* 176. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் தற்போதுள்ள கதர் கிராமிய நூற்பு நிலையங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** ஆம்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கதர் கிராமிய நூற்பு நிலையங்களை அதிகப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அதிகப்படுத்தப்படும்போது, அவைகள் எந்தெந்த மாவட்டங்களில் நிறுவப்பட இருக்கின்றன ? அவை களிலே பணி செய்வதற்குத் தகுதியாக எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் ? அவைகளுடைய உற்பத்தியளவு என்ன இருக்கும், அவை களிலிருந்து லாபம் எவ்வளவு கிடைக்கும் என்பன போன்ற விவரங்களை அரசு தொகுத்திருக்கிறதா என்பன போன்ற விவரங்களை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** கிராமிய நூற்பு நிலையங் களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நூற்பு நிலையத்திலும் 30 பெண் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அங்கே, ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய திறமைக்கேற்ப ரூ. 5-லிருந்து ரூ. 7 வரை பெறும் வாய்ப்பு இருக்கிறது. 6 கதிர் கொண்ட நூற்பு நிலையங்களில் அந்த வாய்ப்பு இருந்தது. இப்போது 12 கதிர்கள் கொண்ட நூற்பு நிலையங்கள் அறிமுகப் படுத்தப்படுவதால், இன்னும் கூடுதலாக 10 ரூபாய் வரை அங்கே பணியாற்றும் பெண்கள் கூலியாகப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. திட்டகாலத்திலே, ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக 150 புதிய கிராமிய நூற்பு நிலையங்களை உருவாக்க இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டிலே 75 செட்களும், 12 கதர் ராட்டைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்த நூற்பு நிலையங்களில் ஆதிதிரா விடர்கள் அதிக அளவிலே வேலைவாய்ப்பு பெறும் வகையில் ஏதேனும் ஏற்பாடு செய்யப்படவிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மத்திய அரசின் சிறப்புத் திட்ட நிதி உதவியின் கீழ் Special Component Plan for Scheduled Castes என்பதன் அடிப்படையில் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் ரூ. 66.80 இலட்சம் செலவில் 20 கிராமிய நூற்பு நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஏற்கெனவே இருக்கும் கிராமிய நூற்பு நிலையங்கள் எங்கெங்கே இருக்கின்றன ? இப்போது புதியதாக உருவாக் கப்பட இருப்பவைகள் எங்கெங்கே உருவாக்கப்பட இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. சொ. தீ. இராசேந்திரன் :** மறைந்த திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஏறத்தாழ 416 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வந்தன. அதற்குப் பின்னர் இப்போது கிராமப் புறங்களிலே உள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் மேற்கொண்டு 150 கிராமிய நூற்பு நிலையங்களை உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டு, ஒவ்வொரு ஆண்டும் 75 என்ற அளவிலே அது இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்களிலே இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப இது அமைக்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலே அமைக்க வாய்ப்பு இல்லை. காரணம், அங்கே வயல்களில் வேலை செய்யும் பெண்களுக்கு அதன் மூலம் கிடைக்கும் கூலி அதிகமாக இருக்கிறது. ஆகவே, அங்கே இதை அதிகமாக அமைக்க வாய்ப்பு இல்லை. ஆகவே, எங்கெங்கே தாழ்த்தப்பட்ட மக்கள், கஷ்டப்படும் மக்கள் இருக்கிறார்களோ அங்கங்கே அந்த நிலைமைகளுக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 7—3—1983 ஆம் நாள் அன்றைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்ட வினாக்கள்.

### மேல்நிலைத் தொட்டி, கீழ்பாதி கிராமம்.

* 123. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் தாலுகாவில் உள்ள கொல்லி மலை கீழ்பாதி கிராமத்தில் 1976 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்ட மேல்நிலைத் தொட்டி இயங்கவில்லை என்பது உண்மையா ?

(இ) இது சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) கொல்லிமலை கீழ்பாதி கிராமத்தில் கட்டப்பட்ட மேல்நிலை தொட்டி இயங்கி வருகிறது.

(இ) பொதுமக்களிடமிருந்து மனு ஏதும் வரவில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா எண்கள் 124 மற்றும் 125 இரண்டும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால் இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

(இரண்டு வினாக்களுக்கும் ஒன்றாக விடையளிக்கப்பட்டது.)

### நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்துதல்

*124. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

* 125. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மூன்று நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் நகராட்சியை மாநகராட்சியாக்குவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இதுபற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார்கள். அவைகளைப் பரிசீலிக்க அரசு ஒரு குழு நியமித்துள்ளது. அக்குழு அதன் அறிக்கையை ஆறு மாத காலத்தில் அரசுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

[1983 மார்ச் 14

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : புதிதாக உருவாக்கப்பட இருக்கும் சேலம் மாநகராட்சியிலும், திருநெல்வேலி மாநகராட்சியிலும், திருச்சி மாநகராட்சியிலும், அந்த நகரங்களை மாநகரங்களாக ஆக்கும்போது, தற்போது இருக்கும் நகராட்சி எல்லையைவிட அதிகமாகச் சேர்க்கப்படும் பகுதிகள் எவையெவை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : ஒவ்வொரு நகராட்சியிலும் பல்வேறு பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன. குறிப்பாக சேலம் நகராட்சியில் சூரமங்கலம், அம்மாப்பேட்டை, பள்ளப்பட்டி, மெய்யனூர், அழகாபுரம்புதூர், ரெட்டியூர், குமாரசாமிப்பட்டி, தாதகாப்பட்டி போன்ற பகுதிகளைச் சேர்த்து ஒரு மாநகராட்சியாக அமைக்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையை அனுப்பியுள்ளார்கள். திருச்சியைப் பொறுத்தவரையில், பொன்மலை நகரத்தில் அதற்குப் பக்கத்திலே இருக்கும் ஒரு சில கிராமங்களைச் சேர்த்தும், திருநெல்வேலியைப் பொறுத்தவரையில், அதற்குப் பக்கத்திலே இருக்கும் பாளையங்கோட்டை, மேலப்பாளையம், தச்சநல்லூர் போன்ற இடங்களை அதனுடன் சேர்த்தும் மாநகராட்சிகளாக அமைக்கும் உத்தேசம் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : திருச்சி மாநகரத்திலே இருக்கும் ஸ்ரீரங்கமும் அதனுடன் சேர்க்கப்பட இருப்பதாகச் சொல்லவில்லை. ஆனால் அதையும் சேர்க்க இருப்பதாக ஒரு நிலை இருந்ததாகக் கருதி, அது ஒரு புனிதஸ்தலம் என்றும் ஆகவே அதன்தன்மை கெடாதவகையில் தனித்தே இருக்க வேண்டும் என்று. ஆகவே அதைச் சேர்க்கக்கூடாது என்றும் அங்கே எதிர்ப்பு இருக்கிறது. அதுபற்றிய கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா ? அப்படியென்றால் அதுபற்றி எடுத்த முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : அப்படிப்பட்ட மனு ஏதும் வரவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் ஸ்ரீரங்கம் நகரத்தினுடைய தனித் தன்மை காப்பாற்றப்பட வேண்டும், அது ஒரு புண்ணியஸ்தலம், அது பக்தர்கள் நிறைய வரும் இடம், அப்படிப்பட்ட இடத்தை சீரோடும், சிறப்போடும் தனியாக வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறல்ல.



1983 மார்ச் 14]

(முற்பகல் 10-20)

**திரு. எஸ். ஆர். இராதா** : ஸ்ரீரங்கத்தை திருச்சி மாநகராட்சியோடு சேர்ப்பதன் காரணமாக எந்த வகையில் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே அவ்வாறு ஸ்ரீரங்கத்தை, திருச்சி மாநகராட்சியோடு சேர்ப்பதனால், அதன் புனிதத்தன்மை எவ்வாறு கெட்டுவிடும் என்று அரசு கருதுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** : திருச்சி மாநகராட்சியோடு ஸ்ரீரங்கத்தைச் சேர்ப்பதனால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று யாரும் எப்போதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தமிழகத்தின் தொன்மை வாய்ந்த நகரங்களில் ஸ்ரீரங்கமும் ஒன்றாகும். எப்படி ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மதுரை, தமிழகத்தில் இருந்து வருகிறதோ அதைப் போலவே, திருவரங்கம் எனப்படும் ஸ்ரீரங்கமும் ஒரு மிகவும் தொன்மையான நகரமாகத் தமிழகத்தில் இருந்து வருகிறது. உலக சுற்றுலாப் பயணிகள் இங்கே வருகிறபோது, ஸ்ரீரங்கத்தைப் பார்க்க வேண்டும் என்ற மிகுந்த ஆர்வத்தோடு வருகிறார்கள். எனவே அவர்களை மனதில் வைத்துத்தான், தமிழகத்தின் தொன்மையான இந்த நகரம் அந்தப் பெயரிலேயே இருக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : அனைத்து நகராட்சிகளுக்கும் பொதுவான முறையில் தமிழ் நாடு நகராட்சிச் சட்டம் இருந்து வருகிறது. அதைப் போலவே மாநகராட்சிகள் புதிதாகக் கொண்டு வரப்படுவதன் காரணமாக, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளுக்கும் பொருந்தும் வண்ணம் பொதுவான மாநகராட்சிகள் சட்டம் கொண்டுவரப்படுமா ? அப்படிப்பட்ட பொதுவான ஒரு மாநகராட்சிச் சட்டம் கொண்டுவரப்படும்போது, அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுக்கு மட்டும் வாய்ப்பு அளிக்காமல், சென்னையில் உள்ள அதிகாரிகள் மதுரையின் மகிழ்ச்சியையும், கோவையின் குளிர்ச்சியையும், சேலத்தின் மாம்பழத்தையும் சுவைப்பதற்கான வகையில் மாறுதல் செய்வதற்கான முறையில் வழிவகைகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தற்போது அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய முறையில் தமிழ் நாடு முழுவதற்கும் நகராட்சிகளுக்கான ஒரே சட்டம் இருக்கிறது. அதைப்போலவே இனி மாநகராட்சிகளாக உயர்த்தப்பட இருக்கும் திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய புதிய மாநகராட்சிகளோடு ஏற்கெனவே இருக்கும் மாநகராட்சிகளையும் இணைத்து, அனைத்து மாநகராட்சிகளுக்குமாக ஒரே சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம். அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்படும்போது, தற்போது எப்படி ஒரு நகராட்சியிலிருந்து மற்றொரு நகராட்சிக்கு அதிகாரிகள் மாற்றப்படுகிறார்களோ அதைப்போன்ற நிலைமையை அதிலேயும் கடைப்பிடிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** நகராட்சிகள் மாநகராட்சிகளாக மாற்றப்படுவதன் காரணமாக மக்களுக்கு என்ன நன்மை ஏற்படுகிறது? மக்களுக்கு இதன் மூலமாக என்ன புதிய சலுகைகள் கிடைக்கின்றன? எந்தக் காரணத்திற்காக நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். இவ்வாறு நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுவதன் காரணமாக அதிகாரிகளுக்கு மட்டும்தான் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றனவா? அல்லது மக்களுக்கும் கூடுதலான நன்மைகள் கிடைக்கின்றனவா? மாநகராட்சிகளுக்கு என்று மத்திய அரசின் கிராண்ட் ஏதாவது கிடைக்கிறதா? அல்லது மாநில அரசு அதிகமான அளவுக்கு அத்தகைய மாநகராட்சிகளுக்கு நிதியுதவி அளிக்கிறதா? எனவே எந்தக் காரணங்களால் நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுகின்றன? மக்களுக்கு இதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுவதென்பது, ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின் அடிப்படையில்தான் செய்யப்படுகின்றது. ஜனத்தொகைக் கணக்கெடுப்பு, பண வசூல், நிதி நிலை போன்றவைகளை ஆராய்ந்து பார்த்து நகராட்சிகள் மாநகராட்சி அந்தஸ்திற்கு உயர்த்தப்படுகின்றன. மாநகராட்சிகளாக உயர்த்தப்படும்போது, அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சில கூடுதல் வசதிகள் கிடைக்கின்றன. அவ்வாறு அதிகமான வசதிகள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் மாநகராட்சிகள் உருவாக்கப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய 3 புதிய மாநகராட்சிகள் தவிர வேறு எந்த நகராட்சியையாவது மாநகராட்சியாக அறிவிக்கும் வகையில் தமிழகத்தில் பெரு நகரம் உள்ளதா? வேறு எந்த நகராட்சியையாவது மாநகராட்சியாக உயர்த்துவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும் கூட, வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூர் மிகப் பெரிய நகராட்சியாக விளங்குவதால், அதையாவது மாநகராட்சியாக உயர்த்துவதற்கான பரிசீலனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தற்போது அரசின் பரிசீலனையில் இருந்து மாநகராட்சிகளாக உயர்த்தப்பட இருப்பவை நான் மேலே குறிப்பிட்ட 3 நகராட்சிகளாக மட்டும்தான். வேறு எந்த நகராட்சியையும் மாநகராட்சி அந்தஸ்த்திற்கு உயர்த்த வேண்டும் என்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தற்போது மாநகராட்சி அந்தஸ்திற்கு அரசு உயர்த்தவுள்ள திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகள் எப்போது அவைகளுக்கான பணிகள் முடிவுற்று மாநகராட்சிகளாகச் செயல்படத் தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன். அதோடு, மாநகராட்சிகளுக்கான ஒட்டுமொத்தமான ஒரு சட்டம் இயற்றப்படும்போது, தற்போது எப்படி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அந்த ஒன்றியத்திற்குள்ளே—தவிர்க்க முடியாத சில காரணங்களின் அடிப்படையில் தவிர—மட்டும்தான் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்ற முறையில் வழி செய்யப்பட்டிருக்கிறதோ அதே அடிப்படையில் மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் ஆசிரியர்களை அந்த மாநகராட்சி எல்லைக்குள் மட்டுமே மாற்ற வேண்டும் என்றும் வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யக் கூடாது என்றும் எதிர்ப்பு தெரிவித்திருப்பதையும் கருத்தில் கொண்டு, அந்தக் கோரிக்கையை ஏற்கிற வகையில் மாநகராட்சிகளுக்கான சட்டத்தில் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** 2—12—1982 ஆம் தேதியன்று ஒரு குழுவினை, தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் செயலாளரைத் தலைவராகக் கொண்டு, தமிழக அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு தனது அறிக்கையை 6 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவும் அதற்கு ஏற்றாற்போல் நடவடிக்கையை எடுத்து வருகிறது. இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்திற்குள் அரசுக்கு அந்தக் குழு தனது அறிக்கையைக் கொடுத்தாலும் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது, அந்த நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்துவதற்கான மற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அடுத்து, மாநகராட்சிகளுக்காக என்று தனியான சட்டம் கொண்டுவரப்பட இருப்பதன் நோக்கம் என்னவென்றால், தற்போதைய முறையில் ஒரு சிலர் வெஸ்டட் இன்ட்ரஸ்ட் என்று நிலைமைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். மாநகராட்சியில் பணியில் உள்ள பலர் அங்கே பணியிலிருந்தாலும்கூட, வெளியே பல்வேறு பணிகளைப் பார்க்கிற நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னை மாநகராட்சியில் பணியாற்றுகிற அதிகாரிகளில் பலர் மாநகராட்சிப் பணிகளைவிட தங்களின் சொந்தத் தொழில்களையும் பணிகளையும் பார்ப்பதற்கே அதிகமான கவனத்தையும் நேரத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். 20, 25 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியிலேயே ஒரே இடத்தில் இருந்து கொண்டு பணியாற்றுகிற காரணத்தால், பல்வேறு தொழில்களை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இனி நீடிக்காத வகையில், அந்த அதிகாரிகள், எந்தக் காரணத்திற்காக அவர்கள் நிய

மிக்கப்பட்டார்களோ அந்தப் பணிகளைச் செவ்வனே செய்யக்கூடிய நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். எனவே ஒரு மாநகராட்சிப் பகுதியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற்றப்படக் கூடிய வகையில் நிலைமைகளைக் கொண்டுவந்தால், நன்றாக இருக்கும். ஏற்கெனவே சென்னையில் மட்டும் மாநகராட்சி இருந்தது. பிறகு மதுரை மாநகராட்சி ஏற்பட்டது. அதற்குப் பிறகு கோவை மாநகராட்சி ஏற்பட்டது. இனி இன்னும் மூன்று மாநகராட்சிகள் உருவாக இருக்கின்றன. எனவே மாநகராட்சிகளின் எண்ணிக்கை அதிகப்படும்போது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்கும் வகையில் மாறுதல்களுக்கு இடம் அளிக்கும் வகையில் சட்டத்தை உருவாக்குவதுதான் சிறந்ததாக இருக்க முடியும் என்று அரசு கருதுகிறது. ஊராட்சி ஒன்றியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது நகராட்சிகளிலேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஆசிரியர்களை மாற்றுவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே அதைப்போன்ற விதிமுறைகளைத்தான் மாநகராட்சிகளுக்காக உருவாக்கப்படும் சட்டத்திலும்கூட கொண்டுவர இருக்கிறோம்.

**செல்வி. ஆ. லீலாவதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, தற்போது ஒரு நகராட்சியிலிருந்து மற்றொரு நகராட்சிக்கு அதிகாரிகளை மட்டும்தான் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை மாறுதல் செய்வதில்லை. எனவே ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அத்தகைய மாற்றங்களிலிருந்து விடுவிக்க வேண்டும். ஏனென்றால் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இருக்கும் பணி ஒரு "புரமோஷன்-லெஸ் ஜாப்", எந்த விதமான பதவி உயர்வுக்கும் வழியில்லை. எனவே ஆசிரியர்களை மட்டும் மாற்றத்திலிருந்து விடுவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அப்படிப்பட்ட சட்டம் வந்து அதை அமுல்படுத்துகிற நேரத்தில் எப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றனவோ அவைகளைப் பார்த்துத்தான் நான் சொல்ல முடியும்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே 3 துணைக் கேள்விகளைக் கேட்டாகிவிட்டது. இதற்கு மேலும் கேட்க வேண்டுமா ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தக் கேள்வி என்னாலே கேட்கப்பட்டது. எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. மற்றவர்களுக்குத்தான் அதிகமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக நான் துணை வினாவைக் கேட்பதற்காகக் கையை உயர்த்துகிறபோது, மாண்புமிகு தலைவர் அவர்கள் கீழே குனிந்து கொள்கிற நிலைமை வழக்கமாக இருக்கிறது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இதை 'வாபஸ்' பெற வேண்டும். இப்படிப் பேசுவது எந்த வகையிலும் முறையல்ல. யாருக்கும் தலை குனிய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நகராட்சி அதிகாரிகளை மாற்றுகிற விதிமுறைகள் தற்போதைய நகராட்சிகள் சட்டத்திலேயே இருக்கின்றன. நான் அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ஆசிரியர்கள் தரப்பில் அதைக் குறித்து எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குள் ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்படுகிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியத்திற்கு அப்பால் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால், அந்த ஆசிரியரைப் பற்றி ஏதாவது புகார் இருக்க வேண்டும் அல்லது அவரே அந்தகைய மாறுதலைக் கேட்க வேண்டும். அப்படிப்பட்ட நேரத்தில் மட்டும்தான் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்ளாகவே மட்டுமல்லாமல், வெளியேயும் மாறுதல் செய்யப்படுகிறார்கள். எனவே அந்த அடிப்படையிலேயே மாநகராட்சிகளிலும் கொண்டு வருவதற்கான முறையில் அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் ஏதுமில்லை.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. கவன ஈர்ப்பு.

### (1) சென்னை சர் தியாகராயர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள கலவரம், வன்முறை ஆகியவை குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"சென்னை சர் தியாகராயர் கல்லூரியில் கலவரம் ஏற்பட்டுள்ளது, ஆசிரியர்கள் கல்லூரிக்குள் நுழைய அனுமதிக்கப்படாமல் வன்முறையில் தடுக்கப்பட்டுள்ளது ஆகியன குறித்தும், அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்."

[1983 மார்ச் 14

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, இந்தக் கல்லூரியிலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மெமோ என்று சொல்லப்படும் எந்தவிதமான விளக்கக் குறிப்பும் அனுப்பப்படவில்லை. அது மட்டுமல்ல, அவர்களுக்கு Show cause notice கொடுக்கப்படவுமில்லை. விசாரணைக் குழுவும் அமைக்கப்படவில்லை. கல்லூரி நிர்வாகக் குழுவில் இது குறித்து எந்த விவாதமும் செய்யப்படவு மில்லை. ஏதோ காவல் துறையில் ஒரு வழக்கு—ஒரு புகார்—பதிவு செய்யப் பட்டதன் அடிப்படையில், இந்த ஆசிரியர்கள் அனைவரும் முறையற்ற முறை யில், irregular suspension என்ற முறையில், தனியார் கல்லூரி சட்ட விதிகளுக்குப் புறம்பாகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்களுக்கு இதுவரை Subsistence Allowance கூட விதிமுறைகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த இர்ரெகுலர் சஸ்பென்ஷனை ரத்து செய்வது குறித்து கல்வித் துறையின் மூல மாக நடவடிக்கை எடுக்கப்படுமா? இதே கல்லூரித் தலைவர் மற்றும் செயலா ளர் ஆகியோர் மீது கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் சிட்டி சிவில் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து ஒரு Restraint Order வாங்கியிருக்கிறார்கள். அதோடு அந்தக் கல்லூரித் தலைவர் மற்றும் செய லாளர் மீது மிஸ் அப்ரோபிரியேஷன் சார்ஜஸ் அடிப்படையில் சென்னை மெட்ரோபாலிட்டன் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடரப்பட் டிருக்கிறது. அதுவும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாலே தொடரப்பட்டிருக் கிறது. அது மட்டுமல்லாமல், ஆந்திர அரசிடமிருந்து சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, கல்லூரி நிர்வாகம், தெலுங்கு மொழி வளர்ச்சிக்காக, பெற்ற சுமார் எண்பதாயிரம் ரூபாயைப் பயன்படுத்தாமல் முறையற்ற வழியில் செய்திருக் கிறார்கள். நம்முடைய அரசு அண்மையில் நிறைவேற்றிய சட்டத்தில் அப்படிப் பட்ட கல்லூரி நிர்வாகங்களை சஸ்பண்ட் செய்வதற்கும், கல்லூரி நிர்வாகத் தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட் டிருக்கிறது. அந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஏன் அந்தக் கல்லூரி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

---

@ 277–278 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 14]

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நிர்வாகக் குழுவின் சார்பாக கல்லூரியில் கலவரம் ஏற்பட்டு அமைதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலை மையில் சர் தியாகராயர் கல்லூரி இருக்கிறது. ஆகவே எங்களுக்கு வந்திருக் கின்ற விவரங்களையும், மேற்கொண்டு கிடைக்கின்ற விவரங்களையும் வைத்து ஆராய்ந்து தக்க பரிகாரம் காண வேண்டும் என்று கருதி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநரை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த விவரங்களைச் சேகரித்த பின்னாலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு எடுக்கும்.

**செல்வி ஆ. லீலாவதி:** நிர்வாகக் குழுவின் தலைவர் தன்னுடைய கார் தீக்கிரையாக்கப்பட்டது என்று கூறி தெலுங்கு தாய்மொழியாகக் கொண்டவர் களை மட்டும் சஸ்பெண்டு செய்திருக்கிறார். தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கும் தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்திக் கொண்டு ஆசிரியர்கள் மத்தியில் குழப்பங் களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று அங்கே பேசப்படுகிறது.

தியாகராய கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் இம்மாதிரியான குழப்பம் ஏற் பட்டு, இரண்டு மாதங்களாக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்து அரசுக்கு இந்த நிலைமை என்று அவர்கள் எடுத்துக்கூறினார்கள். ஆகவே பச்சையப் பன் டிரஸ்ட் போர்டை எடுத்தது போல, இந்த டிரஸ்ட் போர்டையும் அரசு ஏற்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சர் தியாகராய மேல் நிலைப் பள்ளியில் இதே போல குழப்பம் ஏற்பட்டதற்குப் பிறகு பேசி, நம்முடைய கல்லூரிக் கல்வித் துறை அதிகாரிகளால் ஓரளவிற்குத் தீர்க்கப்பட்டு, அது இப்போது, நடந்துகொண்டு வருகிறது. இப்போது இந்தக் கல்லூரியிலே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் விசாரித்து என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகிறோமோ அந்த நடவடிக்கை களை நிச்சயமாக எடுக்க இருக்கிறோம். இதிலே பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன. டிரஸ்ட் போர்டை எடுத்தால்தான், நிலைமைகளுக்கு ஒரு பரிகாரம் காண முடியும் என்ற முடிவுக்கு அரசு வருமானால், அதையும் இந்த அரசு செய்யும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்**: தலைவர் அவர்களே, தேவையானால் அந்த டிரஸ்ட் போர்டை எடுப்பதற்கு அரசு தயங்காது என்று கூறியதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை தியாகராயா கல்லூரியில் இப்போது நடைபெற்று வருகிற குழப்பங்களாலே அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சென்ற திங்கள் 25-ஆம் தேதிதான் ஊதியம் கிடைத்தது. இந்தத் திங்கள் இன்று வரை ஊதியம் கிடைக்கவில்லை. அரசு அதற்குரிய நடவடிக்கை எடுத்து ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்க ஆவன செய்யுமா?

அங்கே நடந்து வருகிற சம்பவத்தாலே மாணவர்கள் படிக்க முடியாத நிலை, தேர்வுக்குப் பணம் கட்ட முடியாத நிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் கூட தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

அந்தக் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் தன்னுடைய கார் சேதம் அடைந்ததாகவும், அதனால் 45 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறி, அங்கே பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து அதை வசூலிக்கும் முயற்சி எடுத்துக்கொள்ளுவதாகக் கூறி ஆசிரியர்கள் தங்களுடைய அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் தவிர்க்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: நிர்வாகக் குழு ஆசிரியர்கள் மீது புகார் கொடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனாலே நமக்கு ஒரு சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்த வழக்கு இருக்கிறபோது, அதை மீறி வேறு ஒரு நடவடிக்கை எடுப்பது என்பது சரியாக வராது. மற்றபடி ஆசிரியர்களுடைய வேலை, அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பது மாணவர்கள் நலன்களைப் பாதுகாப்பது ஆகியவற்றில் அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும். நிர்வாகக் குழுவினர் அவர்களாகவே தவறுகள் செய்திருந்தால், அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். சம்பளத்தைப்பற்றித் தனியாக ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கும்.



**(2) பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையில் தண்ணீர் இல்லாததால் மீன்கள் செத்து அதனால் நாட்டிற்கு நஷ்டமும், சுகாதாரக் கேடும், காலரா பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது குறித்து.**

**மாண்புமிகு திரு. க. மீனாட்சிசுந்தரம்**: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"பெரியார் மாவட்டத்திலுள்ள பவானிசாகர் அணையில் தண்ணீர் இல்லாததால் ரூ. 3 கோடி பெறுமானமுள்ள மீன்கள் செத்து மிதந்துள்ளதாலும், தேங்கியுள்ள தண்ணீரில் 400 டன் மீன்களும் 21 இலட்சம் மீன் குஞ்சுகளும் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாலும் நாட்டிற்கு பெருத்த நட்டம் ஏற்பட்டுள்ளதோடு, செத்த மீன்களால் சுகாதாரக் கேடும், காலரா பரவும் ஆபத்தும் ஏற்பட்டு மக்கள் படும் அவல நிலை குறித்து."

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுகாதாரக் கேடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு பல்வேறு பயனுள்ள நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக விவர அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பவானிசாகர் அருகில் தண்ணீரின் அளவு குறையும்போதே பின்விளைவு எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்து நகராட்சியும், சுகாதாரத் துறையும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், இந்த நட்டம் வந்திருக்காது, பரவலாகச் செத்த மீன்கள் மிதந்து நாற்றம் வீசக்கூடிய அளவிற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. காலத்திலே நடவடிக்கை எடுக்காத காரணத்தாலே, காலரா போன்ற வியாதிகள் ஏற்பட்டதால், பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அந்த பாதிப்பிலிருந்து மீட்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: காலராவால் யாரும் பாதிக்கப்படவில்லை, காலரா வரக்கூடாது என்பதற்காகத்தான் 3,627 ஆண்டி-காலரா இனாக்குலேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. Chlorination of ten drinking water wells has been carried out on 3rd February 1983 and 4th February 1983. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும் என்று

---

@ 279–280 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கும் விஷயம் அல்ல இது. முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அங்கே செத்த மீன்களாலே கூட அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நஷ்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, எவ்வளவு மீன் அங்கே இறந்திருக்கும் என்பதை மதிப்பீடு செய்ய முடியாது. ஆனால் ஏராளமான மீன்கள் இறந்திருக்கின்றன என்பது மட்டும் நமக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் டன் கணக்கில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை டன் என்று பார்க்க முடியாது. சில மீன்கள் பக்கத்திலே விழுந்திருக்கின்றன. சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இது தமிழக நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், இது ஒரு சுயேச்சையான நிதிநிலை அறிக்கை இல்லை என்பது நமக்குத் தெரியும். மத்தியிலே அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கிற சமஷ்டி அரசில் ஒரு சார்பு மாநிலம் என்ற முறையில் குறைவான அதிகாரங்களைக் கொண்ட மாநிலத்தினுடைய பட்ஜெட் என்ற முறையிலே இது சுயேட்சையான நிதிநிலை அறிக்கை அல்ல என்பதை நான் உணர்கிறேன்.

சாவரனிட்டியாகவுள்ள, சுயேட்சியாதிபத்தியம் உள்ளதாகக் கருதக்கூடிய இந்திய அரசின் நிதிநிலை அறிக்கையின் மீது உலக வங்கி, சர்வதேச நிதி இயக்கம் ஆகியவற்றின் கட்டுப்பாடும், பிடிப்பும் இருக்கும்போது, பார்லிமெண்டில் பட்ஜெட் சமர்ப்பிக்கும் முன்னாலே ஐ. எம். எஃப் அதிகாரிகளுடைய கருத்தைக் கேட்டு உருவாக்க வேண்டும் என்ற அளவிற்குத் தவறுகள் இருக்கும்போது, பார்லிமெண்டின் மீது பிடி இருக்கும்போது, நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய நிதிநிலை அறிக்கை என்பது எவ்வளவு குறைவான அதிகாரங்களைக் கொண்டது என்பதைப்பற்றி நான் புரிந்துதான் பேச



(முற்பகல் 10-40)

கிறேன். நம்முடைய நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது பாராவில் நம் மாநிலத்திலே இயற்கையால் ஏற்பட்டிருக்கின்ற இடர்பாடுகளைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். இயற்கையால் ஏற்பட்டவைதான், செயற்கையால் அல்ல, இவை மேன் மேட் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்கள் 'மேன்-மேட்' என்று குறிப்பிடுகிறார்கள். ஏன் அப்படிச் சொல்கின்றார்கள் என்பதை நான் இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தபோது தெரிந்துகொண்டேன். நிதிநிலை அறிக்கையில் 'தமிழக அரசு தன் அறிவாற்றல் திறன்களையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி ஒரு பக்கம் இயற்கையால் ஏற்படும் கொடுமைகளைச் சமாளித்தும், மற்றொரு புறம் செயற்கையால் ஏற்படுத்தப்படும் இடர்பாடுகளைச் சமாளித்தும் மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட பாடுபடுகிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் படித்தபோது இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையின்படி உள்ள பாதிப்புபற்றி எங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் தேடிப்பார்த்தேன். செயற்கை இடர்பாட்டிலே அவர்கள் இருப்பது தெரிகிறது. இந்த அறிக்கையிலே 11-வது பாராவிலே தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள பல்வேறான கஷ்டங்களை எடுத்துக்கூறுகிறார்கள். அந்த 11-வது பிரிவிலே நான் தேடியது கிடைக்கவில்லை. நான் தேடியது, தமிழ் நாட்டுப் பொருளாதாரம் பற்றிப் பேசும்போது மத்திய அரசினுடைய சமீபகால நடவடிக்கைகள் நம்மை எப்படி பாதிக்கும் என்பதைப்பற்றி எங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று பார்த்தேன். உண்மையாகச் சொல்லவேண்டுமென்றால், இந்த ஆண்டு மத்திய அரசு நம்முடைய மாநில மக்கள் மீது எவ்வளவு பெரிய சுமையை ஏற்றியிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு பார்த்தேன். இந்த வருட பட்ஜெட்டிலே 716 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பட்ஜெட் வருவதற்கு முன் ரூ. 2,100 கோடிக்கு அவர்கள் வரிபோட்டிருக்கிறார்கள். அதாவது மண்ணெண்ணெய், பெட்ரோல் புராடக்ட்ஸ் போன்றவைகளுக்கு விலையேற்றுவதன் மூலம் ரூ. 800 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். பத்திரிகையிலே படிக்கிறோம். 'ஒபக்' கண்ட்ரீஸில் பெட்ரோல் எடுப்பவர்கள் மத்தியிலே போட்டி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு பிப்பாய்க்கு க்ரூடாயிலுக்கு 5 டாலர் குறைக்கலாம் என்று முடிவெடுத்து அதன்படி அவர்கள் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்களே குறைக்கின்ற சூழ்நிலையிலே, இந்த பார்லிமெண்ட் செஷனுக்கு முன்னாலேயே இங்கே ரூ. 800 கோடிக்கு, மண்ணெண்ணெய், பெட்ரோல் புராடட்ஸ்க்கு விலையை உயர்த்தியிருக்கிறார்கள். அத்துடன் ரெயில் சார்ஜ், ஃப்ரெய்ட் சார்ஜ் எல்லாம் உயர்த்தியிருக்கிறார்கள். பிரயாணக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம்

என்ற வகையில் 490 கோடி ரூபாய்க்கு ஏற்றியிருக்கிறார்கள். தபால் கட்டணம் 70 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். சுங்கக் கட்டணமாக, எக்சைஸ் கட்டணமாக ரூ. 200 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். சிகரெட் மீது இருந்த சலுகையை வாபஸ் பெற்றதன் காரணமாக ரூ. 550 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி ரூ. 2,100 கோடி அளவுக்கு இந்த ஆண்டு பட்ஜெட் வருவதற்கு முன்பே உயர்த்தியிருக்கிறார்கள். அவையெல்லாம் இந்த பட்ஜெட் மூலமாக வருகின்ற வரியாகக் காட்டக்கூடாது என்ற அளவில் செய்திருக்கிறார்கள். ஆக இப்போது பட்ஜெட்டிலே ரூ. 710 கோடிக்கு வரி போட்டு, அதன் மூலமாக 2,800 கோடி ரூபாய் அளவுக்கு வரி போட்டிருக்கிறார்கள். 70 கோடி ஜனங்கள் தலைமேலே இந்த 2,800 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். அதாவது ஒரு பிரஜைக்கு ரூ. 40 என்று ஆகிறது. 40 ரூபாய் என்று கணக்கிடும்போது, 5 கோடி ஜனத்தொகையுள்ள தமிழகத்திற்கு சராசரியாக ரூ. 200 கோடிக்கு வரி என்ற அளவில் மத்திய அரசு வரி போடுகிறது.

இப்போது இந்த மாநில பட்ஜெட்டிலே துறைமுக வரி என்று போடுகிறார்கள். அதன் மூலம் 26 கோடி ரூபாய்க்கு வரி வருகிறது. இதுவும் தமிழக மக்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்று பார்க்க வேண்டும். தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய வாங்கும் சக்தியை அது பாதிக்கும் என்றும், அதை வாபஸ் பெற வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் உள்ள வியாபாரிகள் இன்றைக்கு கடை திறக்கமாட்டோம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ரூ. 26 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி பொருள்கள் மீது வரி உயர்த்தினால், அது தமிழ் நாட்டில் உள்ளவர்களுடைய வியாபாரத்தை பாதிக்கும். தமிழ் நாட்டின் பொருளாதாரத்தின் மீது ஒரே ஆண்டில் ரூ. 200 கோடி அளவுக்கு வரி உயர்த்தப்படும்போது, தமிழ் நாடு பாதிக்கப்படாதா, தமிழகத்தின் விலைவாசிகள் ஏறாதா? அப்படி இருக்கும்போது, அதைப்பற்றி ஏன் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடவில்லை என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய பாதிப்பை இது ஏற்படுத்துமே, அதைப்பற்றி ஏன் குறிப்பிடவில்லை? அப்படி குறிப்பிடாதது மட்டுமல்ல, ஓரிடத்திலே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதற்கு நியாயம் கற்பித்தும் சொல்கிறார்கள். இப்போது நிலக்கரி கொண்டுவருகின்றதன் காரணமாக, ரெயில்வே ஃப்ரெய்ட் காரணமாக செலவு உயர்ந்திருக்கின்ற நிலைமைகளையெல்லாம் காட்டிச் சொல்கின்றார்கள். மின்சாரக் கட்டணம் உயரப்போகிறது என்று மேம்போக்காகச் சொல்கின்றார்கள். இப்படியெல்லாம் உயர்த்தப்படும்போதுதான், பெரிய பிரச்சினைகள் வருகின்றன. இந்தச் சுமை தமிழ் நாட்டு மக்கள்மீது விழுகிறது. தமிழ் நாட்டு மக்கள் இந்த 26 கோடி ரூபாய் சுமையை அவர்கள் தலைமை மீது இந்த மாநில அரசு வைக்கும்போது, அதையே தாங்க முடியா



மல் இருக்கிறார்கள். அதற்காகக் கூக்குரலிடும்போது, இப்படி ரூ. 200 கோடிக்கு வரி வருகிறது. அதைப்பற்றி எடுத்துச்சொல்லவேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கின்றது. அப்படி இந்தக் குறிப்பிலே எடுத்துச்சொல்லவில்லை. மாண்புமிகு ஆளும்கட்சி உறுப்பினர், ராஜ்ய சபா உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் பட்ஜெட்டைப் பாராட்டி உரையாற்றியிருக்கிறார்கள். அப்படியென்றால் ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் யோசிக்கமாட்டார்களா? ஆளும் கட்சியிலே விவாதிக்க மாட்டார்களா? அந்த அரசு போடுகின்ற சுமையை அவர்கள் தாங்குவார்களா? மத்திய அரசு போடுகின்ற சுமையை எல்லாம் மாநில அரசு தாங்க வேண்டியதாக இருக்கிறது. அந்தச் சுமையைத் தாங்க முடியாமல் இருக்கின்றோம். இந்த மாநிலத்தினுடைய உறுப்பினராக திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது, இதைப்பற்றிப் பேசியிருக்க வேண்டும். இந்தக் கொள்கைகளைப் பற்றியெல்லாம் கட்சியிலே பேசினார்களா? பரவலான சுதந்திரம் இருந்தால், யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாம் என்று கருதுகிறார்களா? மத்திய அரசு பட்ஜெட்டை சரி என்று சொல்கின்றார்களா? ரூ. 200 கோடிக்கு நம் மாநிலத்தின்மீது சராசரியாக வரி போட்டிருப்பதை இந்த அரசு கவனிக்கவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: எங்கள் கட்சியில் கூட யோசிக்காமல் பேசுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஒன்றுமில்லை. நல்லதைப் பாராட்டுவதும் தவறுகளைக் கண்டிப்பதும் எங்கள் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கை, எங்கள் கட்சி பற்றிச் சொல்கிறார்கள். அவர்கள் கட்சியைப்பற்றி நாங்களும் விமர்சிக்கவேண்டி வரும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்கேனும் கொஞ்சம் குறுக்கீடு இல்லாமல் இருக்க வேண்டும். இன்று விவாதம் முடிந்தாக வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: அவர்கள் குறுக்கிடாமல் இருக்க வேண்டும். அவர்கள் குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர்கள் குறுக்கிடுவதை நானும் விரும்பவில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: என் நேரம் போய்விடும். அவர்கள் குறுக்கிடுகின்ற நேரத்தைக் கழித்துவிட்டு எனக்குப் பேசுவதற்கு நேரம் கொடுப்பதாக இருந்தால் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் உறுப்பினர் அவர்களுக்கு உதவி பண்ணிக்கொண்டுதான் இருக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நாங்கள் நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்க்கிறோம். இந்திய அரசு ரூ. 2,100 கோடிக்கு வரி ஏற்றியிருக்கிறது. 1,900 கோடிக்கு மேல் போட்டிருக்கிறது. இதன் காரணமாக பண வீக்கம் ஏற்பட்டு விலையேற்றம் ஏற்படுகிறது. அது தமிழ் நாட்டைப் பாதிக்கிறது. இந்த பட்ஜெட்டை இவர்கள் வரவேற்கிறார்களா ? அதுதான் திரு. இராமகிருஷ்ணன் கட்சியின் கொள்கை என்றால், இந்த அறிக்கையிலே அப்படி கூறட்டும். மக்கள் இந்தப் பொருளாதாரத்தை வரவேற்கிறார்களா ? இரண்டு பக்கமும் ஒரே மாதிரி பேசவேண்டும் என்று ஏன் ஏற்பட்டது ? சட்டமன்றத்திலே பேசுகிறார்கள். அந்த பட்ஜெட்டை இன்றைக்கு வரவேற்பதில் என்ன நியாயம் இருக்கிறது ? ரூ. 200 கோடிக்கு தமிழ்நாட்டின் மீது வரி போட்டிருக்கிறார்கள். அப்படி அந்த வரிகளை ஏன் போடுகின்றார்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

சமீப காலத்தில் நம் நாட்டில் அந்நியச் செலாவணிபற்றிச் சொல்கிறேன். ஐ.எம்.எப். பற்றிப் பேசுகிறபோது, நான் ஒரு இடதுசாரியாக இருந்து பேசுகிறேன் என்று நினைக்கலாம். இலங்கையின் திரு. ஜெயவர்த்தனே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் இடதுசாரியல்ல. அவர் சொன்னதைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. அங்கு நடப்பது ஆட்சியல்ல, அங்கே சர்வாதிகாரம் நடைபெறுகிறது என்று உலகநாடுகளிலே சொல்லப்படுகிறது. ஜெயவர்த்தனே அவர்கள் ஐ.எம்.எப்.க்கு போய் யாரும் நம்பிக்கையோடு திரும்ப முடியவில்லை என்று சொல்கிறார்கள். அங்கே யார் கடன் வாங்கினாலும், கடன் வாங்கியவர்கள் அந்தந்த நாட்டிலுள்ள விளைபொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டும் என்று சொல்கிறார்கள். வெளிநாட்டுக்காரர்கள் "உங்கள் நாட்டில் உள்ள பொருள்கள் மீது விலையை ஏற்றுங்கள்" என்று சொல்லி, கடன்களைக் கொடுக்கும் அளவுக்கு இருக்கின்றார்கள். வலதுசாரியாக இருந்து அவர் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் கூறினால் இடது சாரி, ஆகையால் அப்படிச் சொல்கிறேன் என்று சொல்லலாம். நம்முடைய அரசுக்கும் கூறுகிறது. "உங்கள் கடனைத் திருப்பித் தர முடியாது. உங்களுடைய நாணயத்திற்கு மதிப்பில்லை. ஒரு ரூபாய்க்கு 21 பைசா தான் மதிப்புள்ளது. ஆகவே மதிப்பில்லை. ஆகவே உங்கள் நாட்டிலே உற்பத்தியாகின்ற சிமெண்ட், சீனி போன்ற பொருள்களை ஏற்றுமதி பண்ணுவதன் மூலம் உங்கள் கடனைத் திருப்பிக்கொடுங்கள்" என்று சொல்கின்றார்கள். அதனால் நாம் ஏற்றுமதி பண்ணவேண்டியிருக்கும். வாங்கும்

(முற்பகல் 10-50)

சக்தியைக் குறையுங்கள் என்று சொல்லுகிறார்கள். "உங்கள் நாட்டு மக்களுடைய வாங்கும் சக்தியைக் குறைப்பதன் மூலமாக, உங்கள் நாட்டில் உற்பத்தி





யாகும் பொருள்களை எங்களுக்கு ஏற்றுமதி செய்யுங்கள், அப்படி வட்டியைக் கொடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மத்திய அரசு தோப்புக் கரணம் போட்டு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களை மட்டுமல்ல, நம்மை அது எப்படி பாதிக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்று அரிசிக்கு கடையில் கியூ நிற்கிறார்கள். 1.50 அல்லது 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி விற்கிறோமே, அது வெளி மார்க்கெட்டில் 5. 6 ரூபாய் விற்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நமக்கு அரிசி தர வேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் இருந்தார்கள். பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்திலே அதிகமாக அரிசி விற்கக்கூடாது, உணவு தானியங்களுக்கு மானியம் கொடுக்கக் கூடாது, விவசாயிகளுக்கு வழங்கும் உரத்திற்கு மானியம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அவன் கட்டளையிடுகிறான். ஆதலால் உணவு தானியத்திற்கு மானியம் இல்லை. உரத்திற்கு மானியம் இல்லை என்று மத்திய அரசு சொல்லுகிறது. அதை ப்ரொக்யூர்மென்ட் பண்ணாதே என்று சொல்லுகிறது. நாம் ப்ரொக்யூர்மென்ட் பண்ணும்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலை குறைவாக இருக்கிறதென்று சொல்லி, அவர்களுக்கு போனஸ் கொடுத்தால், அதற்கு மானியம் தர மாட்டோம் என்று மத்திய அரசு வாதிக்கிறது. உணவு தானியங்களைக் கொள்முதல் செய்ய ரிசர்வ் வங்கியைக் கடன் கொடுக்காதே என்று சொல்லுகிறது. உரத்திற்கு மானியம் கொடுக்காதே என்று சொல்லுகிறது. அதை மாநில அரசுகளின்மீது சுமத்துகிறது. ஐ.எம்.எஃப். கடன் மூலம் இவ்வளவு சொல்லும்போது, இந்த அரசு என்ன செய்கிறது ? அந்தக் கொள்கையைச் சரிதான் என்று கூறி, பார்லிமெண்டில் ஓட்டு போடுகிறார்கள். ஐ.எம்.எஃப். கடன் வாங்கியது சரி என்று கை தூக்கியிருக்கிறார்கள். கடன் வாங்கியவன், கடனை அடைக்க விலைவாசியை உயர்த்தும்போது நாட்டிலே எதிர்ப்பு ஏற்படுகிறது. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறார்கள். தும்பு ஐ.எம்.எஃப் கடன். அதற்கு ஓட்டு போட்டுவிட்டு. கடன் வந்த பிறகு, அதன் விளைவாக பஸ் கட்டணத்தை உயர்த்தி, மின் கட்டணத்தை உயர்த்து என்று கட்டளையிடும்போது, அப்படி மத்திய அரசு சொல்லும்போது, வேறு வழியில்லாமல் உயர்த்துகிறார்கள். அதனால் இங்கே விலைவாசி உயருகிறது. அரிசி வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதுதான் வாலைப் பிடிக்கும் விஷயம். தும்பை விட்டுவிட்டு, இதைக் கொடு, அதைக் கொடு என்று சொல்லுகிறார்கள். அதுதான் வாலைப் பிடிக்கும் விஷயம். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் விஷயத்தை மாநில அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐ.எம்.எஃப். கடனால் மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் எவ்வளவு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல வேண்டுமென்றால், நிறைய இருக்கிறது. அதற்கு நேரமில்லை. சேம்பிளுக்

காகத்தான் சொல்லுகிறேன். மத்திய அரசு பொறுப்பா, மாநில அரசு பொறுப்பா என்பதைப் பார்க்க வேண்டும். அவரவர்கள் பொறுப்பை அப் போர்ஷன் செய்ய வேண்டும்.

இங்கே குடிநீர் பிரச்சினை இருக்கிறது. பருவ மழை பொய்த்ததால், அந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. பருவ மழை பொய்த்ததற்கு அரசைக் குறை சொல்லவில்லை. இரண்டு மான்சூன் பொய்த்ததால், பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அறிக்கையிலேயே அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் போன ஆண்டு பருவ மழை குறைந்திருக்கிறது. இந்த ஆண்டும் பொய்த்திருக்கிறது. அதனால் மக்களுக்கு எவ்வளவு சங்கடம் ஏற்படுமென்பது தெரியும். வீராணம், கட்டளைக் கால் வாய், கிருஷ்ணா நீர் பற்றி மாறி மாறிப் பேசுகிறோம். எதாவது ஒன்றை சீரியசாகப் 'பர்சியூ' பண்ண வேண்டாமா? அழுகிற பிள்ளைக்கு வாழைப் பழம் காட்டுவதுபோல குடிநீர் பிரச்சினை ஏற்படும்போது வீராணம், கிருஷ்ணா நீர், கட்டளைக் கால்வாய் என்று மாறி மாறிச் சொல்லுவது நல்லது தானா? இதை சீரியசாகப் 'பர்சியூ' பண்ண வேண்டாமா? பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் கேட்டிருக்கிறேன். வீராணம் திட்டத்தில் சில தவறுகள் நடந்திருக்கலாம். அதற்கு கோடிக் கணக்கில் அசெட்ஸ் உருவாக் கப்பட்டுவிட்டது. நடந்த தவறுகளுக்கு யார் காரணமோ அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். கோடிக்கணக்கான ரூபாய்கள் போடப்பட்டிருக் கின்றன. எனவே அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதுபற்றி யோசிக்க லாம், விஜய பாஸ்கர ரெட்டியிடம் ஓடிப் போய் வருவதைவிட. நம்முடைய அமைச்சரவர்கள் 2, 3 தடவை பேரவையிலும், மேலவையிலும், 'எடுத்துக் கொள்ளவே முடியாது' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கேட்டிருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் விஜய பாஸ்கர ரெட்டியிடம் ஓடிக் கொண்டிருக்கிறோமென்று சொன்னார்கள். திரு. என். டி. ராமாராவ் அவர்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதலமைச் சராக ஏற்றுக்கொள்ளவில்லையா?

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

**திரு. ஆ. நல்லசிவன்:** 'அப்போது' என்று சொன்னேன். இப்போது திரு. என். டி. ஆர். தான் முதலமைச்சர். இப்போது வீராணம் திட்டத்தைப் பற்றி ரீ-திங்கிங் பண்ணிப் பார்க்க வேண்டும். சென்னையையே காலி பண்ண வேண்டி வருமோ என்ற நிலை ஏற்படுகிறது. பரீட்சைகளை எல்லாம் மார்ச் 30-ஆம் தேதியோடு முடித்து விடுங்கள் என்று சொல்லுமளவிற்கு அபாயம்



ஏற்பட்டிருக்கிறது. எனவே ஏற்கெனவே உள்ள அசெட்டைப் பயன்படுத்தி, வீராணம் தண்ணீரைக் கொண்டு வந்திருந்தால், இந்த அளவிற்குக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்காது. இதை ஏன் கிளப்புகிறேன் என்றால், இது பெரிய பிரச்சினை. இதனால் தொத்து நோய் ஆபத்து இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு கருத்தைச் சொன் னார்கள். தொத்து நோயைத் தடுக்க, அதற்கு எதிர் நடவடிக்கை எடுக்க, 17 கோடி ரூபாய் தேவை என்று சொன்னார்கள். வறட்சி நிவாரணம் 17 கோடி ரூபாய் கிடைக்குமா என்பதே சந்தேகத்தில் இருக்கும்போது, தொத்து நோய் தடுப்புக்கு ரூ. 17 கோடி வேண்டுமென்று சொன்னால், எந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பது புரியும். வானத்திலுள்ள சந்திரனுக்குக் குழந்தையைக் காட்டுவதுபோல கிருஷ்ணா நீர், வீராணம், கட்டளைக் கால் வாய் என்று காட்டிவிட்டு, மழை பெய்யும்வரையில் அதைக் காட்டிவிட்டு, மழை பெய்ததற்குப் பிறகு அதை அப்படியே விட்டுவிடுகிறார்கள் என்ற நிலைமை இல்லாமல், இதைப்பற்றி சீரியசாகப் பரிசீலனை பண்ண வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2ஆம் தேதி ராஜ்ய சபையில் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும் போது ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. குறிப்பாக சென்னை நகரில் அதிகமாக இருக் கிறது. எனவே இராணுவத்தில் உள்ள வாகனங்களை தமிழ் நாட்டுக்கு அனுப்பி, காவிரியிலோ, கிருஷ்ணாவிலோ அல்லது வேறு எங்கேயாவது இருந்தோ தண்ணீரைக் கொண்டு வந்து கொடுங்கள், சென்னை நகர மக்களை தண்ணீர் இல்லாமல் தவிக்கவிடாதீர்கள். அந்த வண்டிகளைப் பயன்படுத்துங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து ஒரு தீர்மானம் போட்டு, ஆவன செய்ய முற்படுங்கள் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு காரியத்தை அவசரமாகச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் சொல்ல வேண்டும். நாங்களும் குரல் கொடுக்கிறோம். சென்னைக்கு அப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டிருக்கிறது

அடுத்து, காவிரித் தண்ணீர் பிரச்சினை. அது தஞ்சை மாவட்டத்தைப் பாலைவனமாக ஆக்கியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதில் 'பாலிடிக்ஸ்' இருக்கிறதா என்றால் இருக்கிறது. கர்நாடக மாநிலத்தை, தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டால், அவர்கள் தர மாட்டார்கள். எப்படி இதை சமாளிக்கப் போகிறோம்? மத்திய அரசு நம்முடைய உதவிக்கு வராது. தெளிவாக இருங்கள் உதவிக்கு வராது. டிரைபியூனலுக்கு போகலாம் என்றால், முடிவு வர பல ஆண்டுகளாகலாம். தமிழ் நாட்டு மக்கள், கர்நாடக மக்கள் நல்

வெண்ணத்தில்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் 6 மாதத்திற்கு முன்பு சொல்லியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். இப்போது ஒத்துக்கொள்வார்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, 6 மாதத்திற்கு முன்பு சொல்லும் நிலைமையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இல்லை.

(முற்பகல் 11-00)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** 6 மாத இரகசியம் என்றால் என்ன ?

**திரு. ஆ. நல்லசிவன் :** எல்லோரும் அதை எதிர்பார்க்கிறார்கள் என்பதால் நான் சொல்ல முன்வருகிறேன். இந்தப் பிரச்சினையிலே ஒட்டுமொத்தமாக அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. அப்படி இருந்தால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஒரு முக்கிய பிரச்சினைபற்றி நான் இங்கே குறிப்பிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கர்நாடகம் நமக்கு 100 டி.எம்.சி. குறைத்துத்தர இருந்தது என்று சொன்னார்கள். அதையும் வாய்மூலம்தான் சொன்னதாக அறிகிறேன். ஆனால் கையெழுத்துக்கு அவர்கள் மறுத்து விட்டார்கள். எனக்கு வந்த ஒரு தகவலை இங்கே சொல்கிறேன். நம்முடைய ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் திரு. மணவாளன் அரசுக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். 1924-ஆம் ஆண்டு அக்ரிமெண்ட் 1974-ஆம் ஆண்டு முடிந்தவுடன் 100 டி.எம்.சி. குறைத்து கர்நாடகம் கொடுக்க முன்வந்திருப்பது நமக்கு நல்லதுதான். நம்முடைய நலன் என்று பார்க்கும்போது, இதை 50 டி.எம்.சி. என்று குறைத்துக் கேட்டாவது நாம் ஒரு அக்ரிமெண்டுக்கு வந்து கையெழுத்து போட்டால், நமக்குத் தண்ணீர் வரும். இப்படி அக்ரிமெண்ட் செய்வதன் மூலம் குறைவு ஏற்படுகிற தண்ணீரை சிமெண்ட் கட்டுவதன் மூலமும், மாடர்னைசேசன் செய்வதன் மூலமும் சேமிக்க முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய உடன்பாட்டைச் செய்திருக்க வேண்டும். 1924-ஆம் ஆண்டு அக்ரிமென்டையே பார்த்துக்கொண்டிருப்பதற்கு பதிலாக விரைவில் ஒரு ஒப்பந்தத்துக்கு வர வேண்டும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, முக்கியமான கட்சியின் பொறுப்பில் இருப்பவர் பேசிக்கொண்டிருக்கிறார். இங்கே வேறு திறமையான தலைமைப் பொறியாளரே நம்மிடம் இல்லாதது மாதிரி ஓய்வுபெற்ற ஒரு தலைமைப் பொறியாளர்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படிப்பட்ட அறிவுப் பஞ்சம் நம்மிடம் இன்றைக்கு இல்லை. இது சம்பந்தமாக பல்வேறு கூட்டங்களை நாம் கூட்டியிருக்கிறோம். அப்போதெல்லாம் நம்முடைய மாண்புமிகு





முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். கலைஞர் ஆட்சியில் நடந்ததை இங்கே சூசகமாக உறுப்பினர் குறிப்பிட்டார். அதையெல்லாம் பகிரங்கமாகப் பேசுவது தான் எங்களது பழக்கம். உங்களைப் போல சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பேசுபவர்கள் அல்ல நாங்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நீங்கள் பகிரங்கமாகச் சொன்னதைத் தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நீங்கள் பகிரங்கமாகச் சொல்வதைத்தான் அப்போதும் தேர்தலிலே என்ன நிலை என்று பார்த்தக்கொண்டிருந்தோமே. ஆனால் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், இப்போது அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போக விரும்பவில்லை. இதில் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருந்தால், மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் பலமடைந்து விடுவார்கள். அதையே நாம் போஸ்ட்மார்ட்டம் செய்துகொண்டிருக்காமல், இப்போது நம்முடைய நிலை என்ன என்பதுபற்றி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே சொல்லியிருக்கிறோம். காவிரிப் படுகையை நவீனப்படுத்துவதன் மூலம் 15 ஆண்டுக் கால கட்டத்தில் எவ்வளவு நீரைச் சேமித்துக்கொள்ள முடியுமோ அதைச் சேமித்த பிறகு அதைப் பகிர்ந்துகொள்வது ஒரு பிரச்சினை. நமக்குக் காவிரி நீர் பிரச்சினையில் ரைப்பேரியன் ரைட் இருக்கிறது. இதில் ஒருவருக்கொருவர் பாதிக்கப்படாமல், ஆக்கிரமிக்கப்படாமல், சகோதர மனப்பான்மையுடன் தீர்வு காண வேண்டும். அதற்காகத் தான் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இவர்கள் எவ்வளவு கொடுப்பார்கள், நாம் எவ்வளவு பெறுவோம் என்பதல்ல பிரச்சினை. இதனை நவீனப்படுத்துவதன் மூலம் நாம் பெறுகின்ற நீரை எப்படிப் பயன்படுத்துவது ? 50 ஆண்டுகள் கொடுத்ததை சராசரியாகக் கொண்டு, அதை அடிப்படையாக வைத்து நீரைக் கணக்கிடுவதா, இல்லை 75 ஆண்டுக் காலத்தில் எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதை அடிப்படையாக வைத்துக் கணக்கிடுவதா என்கிற பிரச்சினை. இந்த இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு கணக்கிட வேண்டியிருக்கிறது. இதில் நம்முடைய நிலை என்னவென்றால், கால்வாயை நவீனப்படுத்துவதன் மூலம் இவ்வளவுதான் சேமிக்க முடியும் என்று இன்றைக்கு நாம் சொல்வது முடியாது. 15 ஆண்டுகளுக்கு முன்பு சேமிக்கப்படும் நீரின் அளவை இன்றைக்குச் சொல்வது அல்லது நிர்ணயிப்பது கடினம். முன்பே வைகை, பெரியாறு ஆகியவற்றை 'மாடர்னைசேசன்' செய்து கொள்ள ஆரம்பித்து விட்டோம். இப்போது இதற்கான சிமெண்ட், ஜல்லி கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. பாலிதீன் பைப் செய்வது போல் பாலிதீன் லைனிங் செய்து 60

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 மார்ச் 14

சதவிகிதம் பெண்ணையும் கலந்து இதனைச் செய்தால் போதும் என்கிற புதிய முறையையும் கையாளலாம் என்று ஆய்வு செய்து வருகிறோம். தவிரவும் 15 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்வளவு நீர் மீதமாகும் என்பதை இன்றைக்கு நாம் நிர்ணயிக்கத் [illegible] இதில் நாம் என்ன செய்வது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அப்படி நாம் யோசித்தால் கூட தமிழகத்திற்குத் தருவோம் என்று ஒத்துக்கொண்டதை இந்த இந்த மாதத்தில் கொடுக்க வேண்டுமென்று நாம் நிர்ணயித்தாக வேண்டும். காரணம் அவர்களுக்குத் தென்மேற்குப் பருவமழை சாதகமான நிலை. ஆனால் நமக்கு வடகிழக்குப் பருவ மழை தான் சாதகமான நிலை. வடகிழக்குப் பருவ மழை பெய்யும்போது அவர்கள் நீரைக் கொடுத்தால், அதனால் நமக்குப் பயனில்லை. ஜூன் 12லிருந்து ஒவ்வொரு மாதமும் இவ்வளவு நீர் வரத்து இருக்க வேண்டுமென்று உட்கார்ந்து பேசி, இதிலே நல்லதொரு முடிவெடுக்க வேண்டுமென்று நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஓர் அனுபவம் ஒரு தலைமைப் பொறியாளரிடம் இருப்பதை விட அதிகம். இதை நான் பெருமைக்காக, முதலமைச்சரைப் பாராட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நீங்களே சேர்ந்து பேசினால் கூட இதனை மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்வீர்கள். இதனை மிகத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். வெளியே உள்ள பொறியாளர் இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார் என்பது அல்ல. அவர் தலைமைப் பொறியாளராக இருந்தபோதும் சொல்லியிருக்கிறார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கருத்துக்களையும் கேட்டிருக்கிறோம். அவர் சொல்லியிருக்கிறார். ஆதலால் நாங்கள் புறக்கணித்து விட்டோம் என்பது அல்ல பிரச்சினை. 15 ஆண்டுக் காலத்தில் இதனை [illegible] மூலம் கிடைக்கக் கூடிய தண்ணீரை எடுத்து கர்நாடகமும், தமிழ் நாடும், கேரளாவும் எப்படி பகிர்ந்துகொள்வது? தமிழகத்திற்கு மேல் உள்ள பங்கு தண்ணீரிலிருந்து, பாண்டிச்சேரிக்கு எவ்வளவு ஒதுக்குவது? 15 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வளவு நீர் கிடைக்கும் என்று இப்போதே எப்படி நாம் நிர்ணயிப்பது? 75 ஆண்டுகளா, இல்லை வேறு அடிப்படையிலா என்பது குறித்தும் நாம் தீர்மானிக்க வேண்டும். இதுபற்றி எல்லாம் நாங்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டோம். இதிலே எந்தவிதமான அக்கறையையும் நாங்கள் காட்டவில்லை, சரியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று சொல்கின்ற வாதத்திற்குள் தயவுசெய்து உறுப்பினர் போக வேண்டாம். இப்படி ஒவ்வொரு கூட்டத்தையும் கூட்டிக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நீட்டித்துக்கொண்டே போவதை விடுத்து, மத்திய அரசு இதற்கு ஒரு முடிவு செய்து, இதைத் தீர்மானிக்க வேண்டும்.



1983 மார்ச் 14] [திரு. கா. இராசா முகமது]

இப்படி ஒவ்வொரு கூட்டத்தையும் கூட்டுவதன் மூலம் ஆகின்ற செலவைக் கொண்டு ஒரு அணையையே கட்டிவிடலாம். இப்படியே பேசிக்கொண்டு ஒரு முடிவுக்கு வராமல் இருந்தால், சிரமங்கள் இருந்தால், டிரிபியூனலுக்கு விட்டு விடலாம் என்று மத்திய அரசிடம் சொல்கிற நிலைமையில் தான் நாங்கள் இருக்கிறோம். கலைஞர் ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரு புரப்போசல் வந்தது, அவர்கள் அதனை ஏற்றார்களா இல்லையா எனபதல்ல பிரச்சினை. சென்ற முறை ஆட்சியில் இருந்த கர்நாடக அரசே அதை ஏற்றுக்கொள்ள வில்லை. மீண்டும் புதிதாக ஒரு கருத்தைக் கூறுகிறேன். அதன் மூலம் முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்லி குழப்பி விட்டார்கள். இப்போது திரு. ஹெக்டே அவர்கள் மார்ச் 24, 25 ஆம் தேதிகளில் இது குறித்து ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மத்திய அமைச்சரைச் சந்தித்து பேச வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு வசதி வாய்ப்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்கள். வசதியாக இருக்கிறது, வருகிறேன்" என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய கர்நாடக அரசின் நிலை என்ன என்பதைத் தெரிந்து அதற்குப் பிறகு தான் நாம் இதுபற்றிப் பேச வேண்டிவரும். அதற்குப் பிறகு மத்திய அரசிடம் இதுபற்றி கேட்டுக் கொள்ளப்படும். இதுசம்பந்தமாக உடனடியாக ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டுமென்று கேட்போம். வேறு இதிலே குழப்பக்கூடிய அளவுக்கு எந்த விதமான நிலைமையும் இல்லை.

(முற்பகல் 11-10)

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தில் 10 நிமிட நேரத்தை அவர்கள் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அப்படிச் செய்ய அந்த விஷயத்திலே பயப்படுகிறதா இல்லையா என்பதைப்பற்றி நான் இப்போது பேசவரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களை எடுத்துக்கொண்டால், அவர் என்னைவிட வயதில் சிறியவர், ஆனால் இந்த சபையிலே முன்னவர். இங்கே சண்டை போடும்போது மிகவும் அசிங்கமாகப் போகும். சந்தர்ப்பவாதம் என்று சொன்னால் எப்படி? . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி தான் நடந்துகொள்கிறார்கள். அதுவும் அஸ்ஸாம் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். முன்னர் தேர்வு நடக்கக்கூடாது என்ற நிலைமை இருந்தது.

அதுபற்றி சிலர் என்ன சொல்கிறார்களென்றால், கல்கத்தாவிலே ஓட்டுகள் அச்சடிக்கப்பட்டு, அவைகள் டெல்லியிலே சரிபார்க்கப்பட்டு, இராஜஸ்தான் பீஹார் அதிகாரிகளை வைத்து தேர்தல் நடத்தி, பங்களாதேஷ் மக்களை வைத்து ஓட்டு போட வைத்தார்கள் என்று சொல்லும்போது. அந்த நிலைமை வருகிறபோதுதான் இந்தத் தேர்தல் வேண்டாம் என்று அங்கே மக்கள் சொல்கிறார்கள். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நீங்கள் நிலைமைகளை மேற்கொள்வதைப் போலத்தான், இருக்கும் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நிலைமைகளைப் பார்த்துக் காரியங்களைச் செய்வது. டெக்னிக்கலாக இந்த விஷயத்தை நாம் பார்க்க வேண்டும். காவிரி படுகையிலே நாம் 30 லட்சம் ஏக்கர் விவசாயம் செய்து வருகிறோம் என்று சொன்னால் அதிலே 1 ஏக்கர் கூட பாதிக்க நாம் அனுமதிக்க மாட்டோம். ஆகவே, நாம் பழையதையே பேச வேண்டும் என்பதல்ல. இந்த விஷயத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய, அவர் கட்சியினுடைய கருத்தைச் சொல்லுங்கள். அதாவது 50 ஆண்டுகள் டிப்பெண்டபிலிட்டி என்று எடுத்துக்கொள்ளலாமா அல்லது 70 ஆண்டுகள் என்று எடுத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றியெல்லாம் சொல்லுங்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து என்ன ? திரு. மணவாளன் அவர்கள் சொன்னார் என்பதல்ல. இதிலே உங்களுடைய நிலை என்ன ? இந்தக் காவிரிப் பிரச்சினையிலே உங்களுடைய ‘ப்ரப்போசல்’ என்ன ?

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் அதைத்தான் சொல்ல வந்தேன். பூனைக்கு யார் முதலில் மணி கட்டுவது என்பதுதான் இப்போது தமிழ் நாட்டிலே இருக்கும் பிரச்சினை. என்னுடைய பாயின்ட் என்னவென்றால், முன்பிருந்த ஒரு முதலமைச்சர் அவர்கள் ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 100 டி.எம்.சி. தண்ணீருக்கு ஒத்துக்கொண்டு வந்தார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் இந்த விஷயத்திலே தலையிட வேண்டும் என்று நினைக்கவில்லை. முன்னாள் முதலமைச்சர் அவர்கள் காலத்தில் அவர் 100 டி.எம்.சி. க்கு ஒத்துக்கொண்டார் என்று யார் சொல்கிறார்கள் ? கர்நாடக அரசு சொன்னதாக இங்கே இப்போது இங்கே உள்ள முதலமைச்சர் அவர்கள் எங்கேயோ போய் சொல்கிறார். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அப்படி கையெழுத்துப் போட்டிருக்கிறாரா ? கர்நாடக அரசு அவர்களுக்குச் சாதகமாகப் பல விஷயங்களைச் சொல்கிறார்கள். அண்மையில் இந்த அரசிடமும், அரசு அதிகாரிகளிடமும் கேரள அரசு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு, பின்னர் மறுநாள் கேரளாவிலே



போய் அவர்கள் அப்படி சம்மதிக்கவில்லை என்று அறிக்கை விட்டால், அதற்கு இங்கே உள்ள அமைச்சர்கள் மீது குறை சொல்வதா? ஆகவே, தயவு செய்து அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு, நாம் என்ன சொல்கிறோம் என்ற பிரச்சினைக்கு வரவேண்டும். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அப்படி எதுவும் ஒத்துக்கொள்ளவில்லை. அப்படி ஒத்துக்கொள்ளவில்லை என்று அவர் மறுத்திருக்கிறார். அப்படி யார் சொன்னாலும் அவர்கள் தவறாகத்தான் சொல்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மாநிலத்தினுடைய முக்கியமான பிரச்சினை பற்றிப் பேசுகிறோம். நாம் எல்லோரும் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருப்பதால், நம்மை அறியாமலேயே நம் பேச்சில் அரசியல் வந்துவிடுகிறது. நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் உட்பட எல்லோரையும் கேட்டுக் கொள்வது இதிலே பல விவகாரங்கள் நமக்கு முழுக்க தெரியும். சில விவகாரங்கள் கொஞ்சநஞ்சம் தெரியும். என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். எப்படி நடந்தது என்பதும் தெரியும். இனி எப்படி காரியங்கள் செய்யவேண்டும் என்ற முயற்சியிலே இருக்கிறோம். இப்போது, சிலவற்றை நாம் விளக்குவதன் மூலமாக நாம் எடுத்திருக்கும் அல்லது எடுக்க வேண்டும் என்று விரும்பும் காரியங்களும், முடிய வேண்டும் என்று விரும்பும் பிரச்சினைகளும் சுமுகமாக முடிய வாய்ப்பு இல்லாமல் போய்விட வாய்ப்பு உண்டு. சில வாதங்கள் நமக்கு எதிராக வந்துவிடும் அபாயம் இருக்கிறது. இன்றைக்கு இங்கே கொடுத்த விவரங்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் எல்லாம், அவைகள் மிகவும் முக்கியமான தேவையாக இருந்தாலும், பத்திரிகையிலே வரவேண்டுமா என்பதையும் பார்க்க வேண்டும். கடந்த காலங்களைப் பற்றிய விஷயங்களை விட்டுவிட்டு, எதிர்காலங்களுக்கான விவாதங்களுக்கு வரலாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலுக்காக, இந்த மன்றத்தினுடைய தகவலுக்காக, நான் ஒன்றைச் சொல்கிறேன். அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ஒரு ரெசலூஷன்’ தயார் செய்தபோது இரண்டு முக்கியமான கூறுகள் அதிலே இருந்தன. அந்தத் தண்ணீரை எந்த இடத்திலே நாம் நிர்ணயம் செய்வது என்பது பற்றிய விஷயம். அதாவது மேலேயா அல்லது கீழேயா என்பதுதான் பிரச்சினை. அதை இன்ஃப்ளோவிலே செய்வதா அல்லது யூட்டிலைசேஷனிலே செய்வதா என்பதிலே தான் முடிவு எடுக்க வேண்டும். இதிலே நாம் தெளிவாக இருக்க வேண்டும். தெளிவாகத்தான் இருக்கிறோம். காவிரி டெல்டாவிலே வேறொரு

[திரு. கா. இராசா முகமது] [1983 மார்ச் 14

மாநிலத்தினுடைய அதிகாரி உட்கார்ந்து கொண்டு ஆணையிடுவதை நாம் ஒத்துக் கொள்ள முடியாது. எதுவாக இருந்தாலும், அது 'இன்ஃப்ளோவாக' இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதையும் மனதிலே வைத்துக் கொண்டு கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** என்னுடைய கட்சியின் கொள்கை என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். 'இன்ஃப்ளோ' ரெகுலேஷன் என்பதெல்லாம் டெக்னிக்கல் பாயிண்ட். என்னுடைய 'பேசிக் கொஸ்டீயன்' என்னவென்றால் . . . . .

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நான் குறுக்கிடுவதாகக் கருதக் கூடாது. எல்லோரும் அடிப்படை நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். 'இன்ஃப்ளோ' என்பது 'டெக்னிக்கல் கொஸ்டீயன்'. ஆனால் இது நம்முடைய உரிமைப் பிரச்சினை.

**திரு. ப. மாணிக்கம் :** முன்னர் நடந்த சர்வ கட்சிக் கூட்டத்திலேயும் எல்லாக் கட்சிகளும் 'இன்ஃப்ளோ' தான் நம்முடைய நிலைமை, 'ரெகுலேஷன்' அல்ல என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த விஷயத்தைத் திரும்பவும் இங்கே கொண்டு வருவதிலே அர்த்தம் இல்லை. காவிரி பிரச்சினையிலே ஒவ்வொரு கட்சியின் நிலைமையையும் இங்கே வெளிப்படுத்துவது சரிதானா என்பதையும் பார்க்க வேண்டும். அரசின் அணுகுமுறை வேறாக இருக்க வேண்டும். காவிரி பிரச்சினையை இப்போது இங்கே மேலவையில் எடுத்துக்கொண்டு, வாதாடுவது நல்லதல்ல. சர்வ கட்சிக் கூட்டம் கூட்டி அதிலே 'இன்ஃப்ளோ' என்ற அளவிலே நிலைமையை எடுத்திருக்கிறோம். இங்கே நாம் மக்கள் பிரச்சினைகளைப் பேச இருக்கிறோமே தவிர, இந்தக் காவிரிப் பிரச்சினையிலே தனியாக விவாதத்திற்கு உள்ளே போவது இன்றைக்குப் பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதை வெளிப்படுத்தினார்கள், நானும் வெளிப்படுத்துகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த விஷயத்தில் எல்லாக் கட்சிகளும் ஒரே நிலையில்தான் இருக்க வேண்டும். அப்படி இருப்பதுதான் நம்முடைய வெற்றிக்கு வழி வகுக்கும். எல்லாக் கட்சிகளும் ஒரே கொள்கை அடிப்படையிலே சர்வ கட்சிக் கூட்டத்திலே விவாதித்து முடிவெடுத்து ஒரே குரலாக அந்தக் கருத்தை எழுப்புகிறோம். ஆகவே, அதை வேகப்படுத்தும் முறைகளை ஆராய வேண்டும்.



1983 மார்ச் 14]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவிரிப் பிரச்சினையை ஒரு உவமானமாக எடுத்தார்கள். அந்த உவமானமே இப்போது உவமேயமாக மாறிவிட்டது. திரும்பவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** விவரம் சொல்ல வந்த என்னைச் சொல்லவிடாமல் செய்கிறார்கள். (சிரிப்பு) எனக்கு மறுப்பு தெரிவிக்க வந்தவர்கள் அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். (சிரிப்பு). இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியாமல் இருக்கும் காரணம் எனக்குத் தெரிந்தவரையில், இதிலே இப்படிச் செய்யலாம் என்று நாங்கள் திட்டவட்டமாகச் சொல்கிறோம். இந்த அரசு அப்படித் திட்டவட்டமாகச் சொல்லவில்லை, அதுதான். இந்தக் காவிரி பிரச்சினையில் உடன்பாடு காண இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, மைய அரசே இந்தப் பிரச்சினையில் தலையிட்டுக் காரியங்களைச் செய்வது. இரண்டாவது இந்தப் பிரச்சினையை ட்ரிப்யூனலுக்கு விட்டு விடுவது மூன்றாவது வழி என்னவென்றால், தமிழ் நாடு அரசும், கர்நாடக அரசும் இந்தப் பிரச்சினையிலே சுமுகமாகப் பேசித் தீர்த்தால் மைய அரசும் ட்ரிப்யூனலும் தேவையில்லை. அவர்கள் சில மாற்று யோசனைகளைச் சொல்கிறார்கள். 'இன்ஃப்ளோ'விலே கொஞ்சம் அளவுக்குக் குறைத்துக்கொள்ள வேண்டும். லோயர் ரைப்பேரியன் ரைட்ஸ், அப்பர் ரைப்பேரியன் ரைட்ஸ், இண்டர் நேஷனல் லா என்பதைப்பற்றியெல்லாம் வாதிட்டுக் கொண்டிருந்தால் தஞ்சாவூர் கருகி சாம்பலாகிவிடும். 50 டி.எம்.சி. குறைத்துக் கொள்ளலாமா என்று பேசும்போது, இதை முதலில் யார் சொல்வது என்ற பிரச்சினை தான் இப்போது இருக்கிறது. பூனைக்கு முதலில் யார் மணி கட்டுவது என்ற பிரச்சினைதான் இப்போது இருக்கிறது. நாங்கள் இதைச் சொல்கிறோம். எங்களுடைய கட்சிக்கு எந்தவித பயமும் இல்லை. நாங்கள் ஒத்துக் கொள்ளலாம் என்று தான் சொல்கிறோம். நீங்கள் இப்போது பதவியிலே இருக்கிறீர்கள். ஆகவே, உங்களுக்கு பயம் இருக்கிறது. எங்களுக்கு அந்தப் பயம் இல்லை.

(முற்பகல் 11-10)

50 டி.எம்.சி. அல்லது 70 டி.எம்.சி. அளவுக்குக் குறைக்கலாம் என்கின்ற விஷயம் வருகிறபோது அதை எப்போது குறைக்கலாம் 10 வருஷத்திற்குப் பிறகா அல்லது 5 வருஷத்திற்குப் பிறகா என்று அவர் சொன்னமாதிரி பேசிக்கொள்ளலாம். ஆனால் கால்வாயை 'மாடர்னைஸ்' செய்வதற்குத் தேவையான பணத்தை மத்திய அரசு தர வேண்டும் என்று கேட்க வேண்டும் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** விவாதத்தின்போது நாம் நம்முடைய ரைப்பேரியன் ரைட்சை ( Riparian rights ) விட்டுக் கொடுக்கவில்லை. அதற்கு முழுமையான சொந்தக்காரர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மக்கள். காவிரிப் படுகையில் இருப்பவர்கள் அனைவரும் அதற்குச் சொந்தக்காரர்கள். எனவே அதைப் பாதிக்கும் அளவில் எந்தப் பேச்சினைப் பேசினாலும் நல்லதல்ல. மேலும் நமக்கு அந்த உரிமையும் இல்லை. எனவே ரைப்பேரியன் ரைட்டில் எவ்வளவு விட்டுக் கொடுப்பது என்று நாம் இந்த நேரத்தில் பேசுவது சரியாக இருக்காது. நமக்கு அந்த உரிமை இருப்பதாகக்கூட நான் கருதவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** நமக்கு அந்த உரிமை இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் கருநாடக மாநிலத்தோடு எந்தவிதமான பேச்சு வார்த்தையும் மேற்கொள்ளாமல், மத்திய அரசை நம்பிக் கொண்டு, எந்த விதமான ஒப்பந்தத்திற்கும் வழி செய்யாமல் இருப்பதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தையே சுடுகாடாக ஆக்குவதற்கு மட்டும் உரிமை இருக்கிறதா ? 50 டி.எம்.சியா அல்லது 70 டி.எம்.சியா என்ற பிரச்சினையைப் பொறுத்த வரையில், இரண்டு அரசுகளுமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். மார்க்சிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், நாங்கள் இதிலே தெளிவாகவே இருக்கிறோம். நம்முடைய மாநில நன்மையைக் கருதி நாம் சிலவற்றை ஒப்புக்கொண்டாக வேண்டும். 30 டி.எம்.சி.க்குக் குறைக்க மாட்டோம் என்பதோ, விடவே மாட்டோம் என்பதோ சரியல்ல. அதைப்போலவே 'மாடர்னைசேஷன்' வந்த பிறகு கூட, குறைக்க மாட்டோம் என்று நாம் பேசிக் கொண்டிருப்பதும், அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவே மாட்டோம் என்று பேசிக் கொண்டிருப்பதும் எந்த வகையிலும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்காது. இப்படி இரண்டு பேருமே பேசிக் கொண்டிருந்தால், காவிரியில் தண்ணீரே வராது. தஞ்சாவூர் ஜில்லாவே சுடுகாடாக மாறிவிடும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** குறைத்துக்கொள்ள மாட்டோம் என்று யாருமே சொல்லவில்லை. நாம் சொல்லுவதெல்லாம் தற்போது பயிரிடப்படும் 30 இலட்சம் எக்கருக்கு எந்த வகையிலும் பாதிப்பு இருக்கக் கூடாது. அப்படி 30 இலட்சம் எக்கர் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன வழி ? ஆக ஒரு எக்கர் கூட இதில் பாதிக்கப்படக் கூடாது. அதை அனுமதிக்க மாட்டோம் என்பதுதான் எங்களின் நிலை. எனவே தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மாற்றிச் சொல்ல வேண்டாம் என்று





கேட்டுக் கொள்கிறேன். இப்போது நாம் விவசாயம் செய்து வருகிற நிலப் பரப்பில் ஒரு 'இன்ச்' நிலத்தைக்கூட விட்டுக் கொடுப்பதற்கு நாம் தயாராக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை ஒரு சொட்டு தண்ணீர்கூட கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். நாம் ஒரு 'இன்ச்' நிலம் கூட பாதிக்க விடமாட்டோம் என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. இந்த நிலைமையில் எப்படி சமாதானம் செய்வது என்பதுதான் பிரச்சினை. 'மாடர்னைஸ்' செய்யும்போது சேமிப்பு ஏற்படுகிறது. அதற்கு என்ன விகிதாச்சாரம், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு விகிதாச்சாரம், ஒவ்வொரு மாதத்திலும் கிருஷ்ணராஜ சாகரிலிருந்து எவ்வளவு திறந்து விடுவது, இதில் நம் பங்கு என்ன, புதுவையின் பங்கு என்ன என்றெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு சாத்திய பூர்வமான, நடைமுறைக்கு ஒத்து வரக் கூடிய விஷயங்களில்தான் நாம் மத்திய அரசின் மூலம் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு ஒப்பந்தம் காணலாம் என்று நினைக்கிறோம். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவுசெய்து காவிரிக் கரையைவிட்டு வெளியே வந்தால்தான் அவைக்கு நல்லது.

**திரு. ஆ. நல்லசிவன் :** 50 டி.எம்.சி. அல்லது 70 டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். ஒரு 'இன்ச்' நிலத்தைக்கூட குறைத்துக்கொள்ள முடியாது என்று இந்த அரசினர் சொல்லுகிறார்கள். அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "நீங்களே தஞ்சை மாவட்டத்தில் நிறைய நிலத்தடி தண்ணீர் இருக்கிறது என்று பட்ஜெட்டிலேயே சொல்லியிருக்கிறீர்கள். அதற்காகப் பணமும் ஒதுக்கியிருக்கிறீர்கள். இவ்வாறு நிலத்தடி தண்ணீரையும் எடுத்துக்கொண்டு கால்வாயையும் மாடர்னைஸ் பண்ணுவதன் மூலமாக 50 அல்லது 70 டி.எம்.சி. தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். அதனால் அந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேசுவதற்கு நீண்ட நேரம் கொடுப்பதாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் அப்படிக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். இதில் தவறான கருத்துகள் சொல்லப்பட்டு அவைகள் உண்மை என்றாகிவிடக்கூடாது என்பதற்காக நான் அடிக்கடி குறுக்கிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏதோ கருநாடக

[திரு. கா. இராசா முகமது] [1983 மார்ச் 14

மாநிலத்தில் தற்போது காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாற்றுக் கட்சி ஆட்சி அல்லது ஜனதா ஆட்சி வந்திருப்பதால், அதற்கு ஏற்றாற்போல், சப்பைக் கட்டுவதைப்போல், அந்த டோனில் பேச வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. இப்போது ஜனதா ஆட்சி அல்லது ஒரு கூட்டணி ஆட்சி இருக்கிறது. இதற்காக நம்முடைய உரிமைகள் பாதிக்கப்படுவதை நாம் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. 50 அல்லது 70 டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று யார் நம்மைக் கேட்டார்கள்? கருநாடக மாநில அரசு நம்மைப் பார்த்து அப்படிக் கேட்டிருக்கிறதா என்றால், இல்லை. அவர்களும் இவ்வளவு குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்கவில்லை. நாமும் அப்படிச் சொல்லவில்லை. முதலில் பெரிய அடிப்படையில் ஒப்பந்தத்தில் கையெழுத்தைப் போட்டுவிட்டு, இப்போது அதைக்கூட தவறு என்று கருநாடக மாநில அரசு சொல்லிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அளவுக்குக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று அவர்களால்கூட சொல்ல முடியவில்லை.

நாம் என்ன சொல்லுகிறோம் என்றால், 10, 15 அல்லது 20 ஆண்டுகளில் கால்வாயை நவீனப்படுத்துகிறபோது ஏற்படுகிற சேமிப்பு எவ்வளவு? அதில் அவர்களுக்குள்ள உரிமை என்ன? நமக்குள்ள உரிமை என்ன என்றுதான் கேட்கிறோம். நாம் ஒன்றும் ஆத்திரப்படவில்லை. வேகமாகவும் எதையும் சொல்லவில்லை. பிரச்சினை மிக முக்கியமான ஒன்று என்பதால் விவாதத்தில் தவறான கருத்துக்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் அடிக்கடி குறுக்கிடவேண்டியிருக்கிறது. அதை என்னுடைய கடமையாகக்கூட கருதுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தயவுசெய்து அடுத்த விஷயத்திற்குப் போக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தப் பிரச்சினையில் யார் முதலில் இதை ஆரம்பிப்பது என்பதில் தயக்கம் காட்டுகிறீர்கள். நீங்கள் உண்மையில் பயப்படுகிறீர்கள். நீங்கள் உண்மையில் பயப்படுகிறீர்களா அல்லவா என்பது காலப்போக்கில் எல்லோருக்கும் புரியும். நான் இதைச் சொல்வதற்குக் காரணமே, நீங்கள் பிரச்சினையைத் திசை திருப்புவதால் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது . . . .



1983 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதில் எலிகளுக்கு வேண்டுமானால் பயமாக இருக்கலாம். ஆனால் புலிகளுக்கு பயம் இருக்காது. திராவிடர் இயக்கம் என்பது தமிழகத்தில் ஒரு வீர வரலாறு படைத்தது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசையே எந்த அளவுக்கு எதிர்க்க வேண்டுமோ அந்த அளவுக்கு எதிர்த்து அதற்காகப் பாளையங்கோட்டைச் சிறைக்குக்கூட சென்றவர்கள் இருக்கிற இயக்கம் தான் இது. அப்படிப்பட்ட நிலைமையில் உங்களைவிட மிகப் பிரமாதமான போராட்டத்தையே நடத்தியவர்கள் நாங்கள். நிச்சயமாக எங்களுக்கு அந்த வரலாறு இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** எங்களைவிட என்றால் 'யாரைவிட'? இப்படி அமைச்சரே மேற்படி ரெயில் ஆகி பேசிக் கொண்டிருப்பது என்று வந்து விட்டால், நான் கூட மணிக் கணக்கில் பேச முடியும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மணிக்கணக்கில் விவாதம் நடத்துவது என்றால், உறுப்பினருடைய சவாலை ஏற்றுக்கொண்டு வெளியே பேசுவதற்குக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம். இதற்காக என்றே ஒரு கருத்தரங்கினை நடத்துவதற்குக்கூட தயாராக இருக்கிறோம். நான் இங்கே குறுக்கிடுவதற்குக் காரணம் உறுப்பினர் அவர்கள் பேசுவதை நான் சரி செய்ய வேண்டியிருக்கிறது. சொல்லுகிற கருத்துக்கள் தவறாகப் போய்விடக்கூடாது என்று இதையெல்லாம் சொல்லுகிறேன். எனவே பூனைக்கு மணி கட்டு கட்டுவதற்குப் பயன்படுகிறவர்கள் நாங்கள் அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப் பேசுவது எந்த வகையிலும் சரியல்ல.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் பேசும்போது "சப்பை கட்டுவது" என்று குறிப்பிடுவது மட்டும் 'பார்லிமென்டரி லாங்குவேஜ்'தானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சப்பைக் கட்டு கட்டுவது என்ற வார்த்தையில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. அது சரியான வார்த்தையல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால் அதை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அடுத்த விஷயத்திற்கு வந்தால்தான் விவாதம் முடிய ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அப்பைக் கட்டு கட்டுவது என்ற வார்த்தை பாராளுமன்ற வார்த்தை என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே அந்த வார்த்தை சரியில்லை என்று கருதப்படுமானால், நான் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் எதற்காக அதைக் குறிப்பிட்டேன் என்றால், முன்னாலே கருநாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. இப்போது ஜனதா ஆட்சி நடைபெறுகிறது அல்லது ஒரு கூட்டணி ஆட்சி நடக்கிறது என்ற காரணத்திற்காக உறுப்பினர் அவர்களுடைய 'டோன்' மாறியிருப்பது சரியல்ல என்றுதான் குறிப்பிட்டேன். எனவே உறுப்பினர் அவர்களுடைய 'டோன்' நிறை மாறியிருக்கிறது என்று சொல்லலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்** எப்படிச் சொல்ல வேண்டும் என்பதை நான் பார்த்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கவலைப்பட வேண்டாம். நான் சொல்ல வந்ததே இப்படி இரண்டு அரசுகளும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு ஒப்பந்தம் காணாமல் இருப்பதன் மூலமாக தஞ்சை மாவட்டத்தையே சுடு காடாக ஆக்க வேண்டுமா என்பதுதான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதை விட்டுவிட்டு வேறு பொருள் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கருநாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாட்டுக்கு வந்தால்தான், நாம் தஞ்சை மாவட்டத்தைப் பாதுகாக்க முடியும். தமிழகத்தில் நீங்கள் புலியா எலியா என்பதல்ல பிரச்சினை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவாதம் இந்தப் பொருள்பற்றியே நீடித்துக்கொண்டிருப்பது நல்லதல்ல. அடுத்த விஷயத்திற்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** எனவே இறுதியாக ஒரு வேண்டுகோள் மட்டும் விட ஆசைப்படுகிறேன். பகிரங்கமாக மற்றக் கட்சிகளையும் கலந்துகொண்டு காவிரி பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று சொல்லிக்கொண்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்ல விரும்புகிறேன்.





அரிசிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தஞ்சையில் விளைச்சல் இந்த ஆண்டு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது வாஸ்தவம்தான். தமிழ் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால், நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே உண்ணாவிரதம் இருந்து டெல்லிக்குக்கூட போனார். உண்ணாவிரதம் இருந்ததை நான்கூட இங்கே பாராட்டினேன். ஆனால் டெல்லிக்குப் போய் வந்த பிறகு முதலமைச்சர் ஓர் அறிக்கை விட்டார், அது என்ன அறிக்கை என்றால், "நான் அங்கே போய்ப் பார்த்தேன். அதற்குப் பிறகு அவர்கள் நிலைமையும் கஷ்டமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் என்ன செய்வார்கள் பிற மாநிலங்களுக்கும் அரிசி கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையே கஷ்டமாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதன் காரணமாக நமக்கு 5,000 டன் அரிசியையும், 5,000 டன் கோதுமையையும் தான் டெல்லி கொடுக்கிறது. யானைப் பசிக்கு சோளப் பொரி என்கிற வகையில் இதை மத்திய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது . . . நாம் கேட்பது ஒரு மாதத்திற்கு எண்பதாயிரம் டன்

(முற்பகல் 11-30)

அரிசி, 40 ஆயிரம் டன் கோதுமை. ஆனால் அவர்கள் தருவதாகச் சொல்லுவது ஐந்தாயிரம் டன் அரிசி, ஐந்தாயிரம் டன் கோதுமை. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களால் ஓர் அறிக்கை கொடுத்தாகிவிட்டது. "அவர்கள் பாடு கஷ்டமாக இருக்கிறது. கொடுக்க அரிசி இல்லை. அவர்கள் என்ன செய்வார்கள் ?" என்று முதலமைச்சரே கூறிய பிறகு, அவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். ஆகவே ஐந்தாயிரம் டன் அரிசி, ஐந்தாயிரம் டன் கோதுமை மட்டும் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். மத்திய அரசு உணவுதானிய மொத்த வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறி வந்ததை மத்திய அரசு மேற்கொள்ளாததால்தான், இன்றைக்கு 70 கோடி மக்களுக்கு அரிசி போட முடியவில்லை. ஆகவே மத்திய அரசின் இந்தத் தவறான கொள்கைக்கு தமிழ் நாட்டு முதலமைச்சர் ஏன் வக்காலத்து வாங்க வேண்டும்? உண்ணாவிரதம் இருந்த முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று பார்த்த பிறகு, இந்த அறிக்கையை விட்ட பிறகு, அந்த உண்ணாவிரதமே போசுக்கென்று போய்விட்டது. அப்படியானால் மத்திய அரசு உணவு தானியம் தந்தாக வேண்டும் என்று கோரி ஏன் உண்ணாவிரதம் இருந்தார்கள்? முன்பே அவருக்குத் தெரியாதா? ஆகவே எண்பதாயிரம் டன் அரிசியையும் நாற்பதாயிரம் டன் கோதுமையையும் மத்திய அரசு தர வேண்டும் என்று வற்புறுத்த வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கு இருக்கிறது. மத்திய

அரசு உணவுதானிய மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளாததன் காரணமாக, வறட்சி ஏற்படுகிறபோது சங்கடப்படுகிறது. ஆகவே மத்திய அரசின் அந்தத் தவறான கொள்கைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வக்காலத்து வாங்க வேண்டியதில்லை. தன்னுடைய கையில் 40 இலட்சம் டன் அரிசியை வைத்திருக்கக் கூடிய மத்திய அரசு உடனடியாக அதிலிருந்து கொடுத்து உதவுவதற்குப் பதிலாக, முதலமைச்சர் இப்படி அறிக்கை விட்டதால், ஐந்தாயிரம் டன்னை மட்டும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ரிப்போர்ட் வந்த பிறகுதான் தருவோம் என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் செத்தாலும் கூட, தமிழ் நாட்டிலிருந்து அரிசி கிடைக்காததால் மக்கள் செத்தார்கள் என்று ரிப்போர்ட் வந்த பிறகுதான் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் பத்திரிகையில் ரிப்போர்ட் வந்தால் போதாது. தமிழ் நாட்டில் பஞ்சம் வந்து மக்கள் செத்தார்கள் என்று அவருக்கு ரிப்போர்ட் வந்தால்தான் தருவோம் என்று திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் சொல்லுகிறார்கள்.

அடுத்தபடியாக, தாங்கள் கொள்முதல் செய்வதாகச் சொல்லுகிறார்கள். தஞ்சை, திருச்சி, சிதம்பரம் தாலுக்காவில் உள்ளவர்கள் யாரும் தனியார் வியாபாரத்தில் கொள்முதல் பண்ணக்கூடாது என்று சொல்லுகிறார்கள். பாக்கி பகுதியில் குவிண்டாலுக்கு 170 ரூபாய் என்றால், தஞ்சையிலே மட்டும் 180 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டும் என்று சொல்லும்போது, அங்கேயுள்ள விவசாயிகள் கூக்குரல் எழுப்புகிறார்கள். உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தைக் காட்டி, தமிழக அரசே மத்திய அரசுக்கு விலை நிர்ணயம் செய்ய சிபார்சு செய்திருப்பது குவிண்டாலுக்கு 140 ரூபாய். 140 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தும் மாநில அரசு விவசாயிகளுக்கு அந்த விலையைக் கூடத் தர மறுக்கிறது. அதனால்தான் வேண்டிய அளவிற்குக் கொள்முதல் செய்ய முடியவில்லை. ஆகவே அரிசியை மக்களுக்கு வழங்க முடியவில்லை.

அதைப் போலவே கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டார்கள், பிறகு போராட்டம் அறிவித்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 155 ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். விழுது கூட டன் 300 ரூபாய்க்கு விற்கிறது. கரும்புக்கு மாநில அரசு டன் ஒன்றுக்கு ரூபாய் 200 நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சிபார்சு செய்திருக்கிறது. ஆனால் அதை இவர்களே கொடுப்பதில்லை. மாநில அரசின் நிதியிலிருந்தா கொடுக்கப் போகிறார்கள்? அதை கம்பெனிக்காரர்கள் கொடுக்கப் போகிறார்கள். லெவி சர்க்கரையை



அவர்கள் எட்டு ரூபாய், பத்து ரூபாய் என்று விற்கிறார்கள். அதற்குக் கட்டுப்பாடு இல்லையே. ஆகவே இதிலே விவசாயிகளின் சிந்தனைக்கும், அரசினுடைய சிந்தனைக்கும் வேறுபாடு இருக்கிறது. விவசாயிகளினுடைய உணர்வுக்கும் அரசினரின் உணர்வுக்கும் எவ்வளவு தூரம் வித்தியாசம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சில் குறுக்கீடுகள் இருந்தன என்பதற்காக கூடுதலாக 15 நிமிடங்கள் கிடைத்திருக்கின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** குறுக்கீடுகளே பாதி நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இன்னுமொரு ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்கள் சேர்ந்து போராட முயற்சி செய்கிறார்கள். சம்பள உயர்வு வேண்டும், போனஸ் வேண்டும், ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் தர வேண்டும், விடுமுறை காலச் சலுகையில் இருவழிப் போக்குவரத்து வசதி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேச வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். . . அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதற்குப் பதிலாக அவர்களுடைய போராட்டத்தை தங்களுக்கு எதிரான போராட்டமாகக் கருதி, "முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டுத் தெருவில் நின்று போராடுவேன்." என்று முதலமைச்சர் அவர்களே கூறும்போது, பெரிய சிக்கல் உண்டாகிறது. இது முதலமைச்சர் பதவிக்கு அழகல்ல. அரசாங்க அதிகாரத்தில் உட்கார்ந்திருப்பவர்கள், ஊழியர்கள் கோரிக்கைகளை வைக்கும்போது, அந்தக் கோரிக்கைகளை ஏற்க முடியாததற்கான காரணங்களை 'எக்ஸ்பிளெய்ன்' பண்ண வேண்டும். முடிந்ததை மட்டும் கொடுத்துவிட்டு முடியாததைத் தர முடியாது என்று சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, தெருவிலே சந்திக்கிறேன் என்றால், அது எப்படி பொருத்தமாக இருக்கும்? தெருவிலே சந்திக்கத்தானா அவர்கள் உங்களை இங்கே அனுப்பியிருக்கிறார்கள்? மீண்டும் தெருவிலே சந்திக்கிறேன் என்றால் எப்படி? அவர்கள் மாநில அரசுக்கு எதிராக மட்டுமா கிளர்ச்சி செய்கிறார்கள்? மத்திய அரசுக்கு எதிராகவும்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 மார்ச் 14

கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உரிமைக்காகப் போராடும்போது, அவர்களைத் தெருவிலே சந்திக்கிறேன்" என்றால், அது எப்படி சரியாக இருக்கும்?

அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் ஒரு டிப்பார்ட்மெண்டில் மட்டும் 540 ஊழியர்களை 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறார்கள். ஆறு, ஏழு மாதங்களாக அவர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஹைக்கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். ஸ்டேவை வெகேட் செய்திருப்பதால் ரிட் அப்பீல் போட்டிருக்கிறார்கள். 540 அரசு ஊழியர்கள் மீது வன்மம் காட்டினால், அது எப்படி சரியாக இருக்கும்?

அவர்களுக்கென்று ஸ்தாபனம் இருக்கிறது. அதைத் தவிர அவர்களுக்கு என்ன சக்தி இருக்கிறது? ஆகவே அவர்களை எதிர்த்து நிற்கும் அளவிற்கு அரசு செய்வது சரியல்ல. இதையெல்லாம் ஒடுக்கத்தான் வேலை நிறுத்தத் தடுப்புச் சட்டம் வந்தது. இப்போது அந்தச் சட்டம் காலாவதியாகிவிட்டது. இதிலே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது குறித்த மசோதா பொறுக்குக் குழுவில் இருக்கும்போதே, இன்னொரு ஆர்டினன்சைக் கொண்டு வருவது சரியா? அது சட்ட ரீதியான ஆர்டினன்ஸ் என்று அமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது, அது சட்ட ரீதியாக இருந்தால் மட்டும் போதுமா? 'மாரல்' பார்க்க வேண்டாமா? ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தார்கள். அதை உடனே சட்டமாக்க முடியாது என்பதால், அதை பொறுக்குக் குழுவிற்கு ஆய்விற்காக அனுப்பினார்கள். அந்தக் குழுவின் ஆய்விற்குப் பிறகுதான் இங்கே வர வேண்டும். அதில் ஆய்வு செய்ய வேண்டியவை நிறைய இருக்கின்றன. அப்படி அந்தச் சட்ட முன் முன்வடிவை பொறுக்குக் குழுவின் ஆய்விற்கு அனுப்பிய பிறகு, அது பரிசீலனையில் இருக்கும்போது, அதே கருத்துள்ள ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், ஒரு கம்பெனியில் ஸ்டிரைக் நடக்கும்போது 'லாக் அவுட்' செய்வதைப் போல இருக்கிறது. பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருக்கும்போது, அதே பொருள் குறித்த இன்னொரு ஆர்டினன்சைக் கொண்டுவந்தால், வேண்டுமானால் அது சட்ட ரீதியாக சரியாக இருக்கலாம்? 'மாரலி' எப்படி சரியாக இருக்க முடியும்? ஏற்கெனவே கொண்டுவந்த மசோதா காலாவதியாகிவிட்டது. ஆகவே பொறுக்குக் குழுவின் ஆலோசனையில் உள்ள அந்த மசோதாவையும் வாபஸ் பெறுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வாபஸ் பெறவில்லையென்றால், தொழிலாளர்



1983 மார்ச் 14] [திரு. ஆ. நல்லசிவன்]

களுடைய உரிமையைப் பறிப்பதாகக் கருதி இந்த மாதம் 28 ஆம் தேதி அண்ணா தி.மு.க. தொழிற் சங்கத்தைத் தவிர மற்ற அனைத்துத் தொழிற் சங்கங்களும் பொறுக்குக் குழுவின் ஆய்வில் உள்ள மசோதாவை வாபஸ் வாங்க வேண்டும் என்று வலியுறுத்த வரவிருக்கிறார்கள். இது அரசைப் பயமுறுத்துவதற்காக அல்ல, தொழிலாளர்கள் நலனை இந்தச் சட்டம் பாதிக்கிறது. அவர்கள் இதைப்பற்றி வருத்தம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உணர்வைக் காட்டவிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, வெளியே மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிலிருந்து வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையை நடத்த உதவக் கூடிய தற்காலிக ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 6 வருஷங்களாக வேலை செய்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு 43 நாள் தான் அவர்களுக்கு வேலை. 250 நாள் வேலை பார்த்தால் நிரந்தரமாக்கவேண்டும் என்று சட்டத்திலே இருக்கிறது. வருஷத்திற்கு 43 நாள் விதம் 6 வருஷத்திற்கு வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 12 ரூபாய்தான் தருகிறார்கள். மாதத்திற்கு 300 ரூபாய் வருகிறது அவர்களுக்கு. செக்ரட்டேரியட்டில் எங்கெங்கு பதவி காலி ஏற்பட்டாலும், அங்கெல்லாம் இந்த ஊழியர்களை, நம்பிக்கைக்குப் பாத்திரமான அவர்களை அமர்த்திக்கொள்வோம் என்று ஒரு வாக்குறுதியை அரசின் சார்பில் தெரிவிக்க வேண்டும். மேலும் ஊதியத்தையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தயவு செய்து அரசு பிரஸ் பில்லை வாபஸ் பெறவேண்டும். இந்தியா பூராவும் கலங்கம் ஏற்படுத்திய பிரஸ் பில்லை வாபஸ் பெறுங்கள், ஏன் கரஸ்பாண்டெண்டுகளைக் கண்டு பயப்படுகிறார்கள்? அவர்கள் கூட கறுப்புச் சின்னம் அணிவதாகச் சொன்னார்கள். ஆனால் அரசுக்குக் கோபத்தை உண்டாக்கக் கூடாதே என்று இருக்கிறார்கள். சாதுவானவர்கள் தமிழ் நாடு கரஸ்பாண்டெண்டுகள். அவர்களைக் கட்டுப்படுத்த இப்படி ஒரு பிரஸ் பில்லா? இப்போது இந்த பிரஸ் ஆக்டை ஏன் போட்டீர்கள் என்று பீகாரில் கேட்டால், தமிழ் நாட்டைத்தான் காட்டுகிறார்கள். இதற்கு இந்தியா பூராவும் எதிர்ப்பு ஏற்பட்டதால், அவர்களே மலைத்துப் போய் வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். அப்படியும் இங்கே வாபஸ் வாங்க மறுக்கிறார்கள். கமிட்டி போட்டு 5 மாதங்கள் ஆகிவிட்டன.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 மார்ச் 14

ஏன் இவ்வளவு கௌரவம் பார்க்கிறார்கள்? அகில இந்தியாவில் ஆக்கி ஏற்படுத்தப்பட்ட 'பில்' இந்த ஸ்டேட்டில் மட்டும் இருப்பது நமக்கு அவமானம். ஆகவேதான் நான் பிரஸ் பில்லை, கறுப்பு பில்லை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து நியமனங்கள்பற்றிச் சொல்கின்றேன். 20 ஆயிரம் பேர்கள் நியமிக்கப்படாமல் இருக்கின்றார்கள். செவிலியர் துறையில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. இந்த நிலைமையிலே கிராமாதிகாரிகள் பிரச்சினை இருந்துகொண்டிருக்கின்றது.

கடைசியாக சர்க்காருக்கு ஆதரவான விஷயத்தைப் பற்றிப் பேசுகிறேன். சத்துணவுத் திட்டத்தை நாம் நிறைவேற்றுகிறோம். 144 கோடி ரூபாய்க்குச் செலவு செய்கிறோம். டெவலப்மெண்ட் பர்பஸுக்குச் செலவு செய்யலாம் என்று சொல்கின்றார்கள். 50 பெர்செண்டுக்கு மேற்பட்டவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றார்கள். அதில் 67 இலட்சம் பேர்களுக்கு, 4 இலட்சம் வயதானவர்களுக்கு சத்துணவுத் திட்டம் என்று வைத்திருக்கிறோம். இது எதற்காகப் போடுகிறார்கள் என்பது தெரியும். மகாத்மா காந்தி அவர்கள் சொன்னமாதிரி, தேவைப்படுவதைக் கொடுக்கும் போது 'அதை நிறுத்துங்கள்' என்று நான் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தை 'பிளானிங் எக்ஸ்பெண்டிசரில்' சேர்த்துக்கொள்வதற்கு என்று கேட்க வேண்டும். நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசு இதை 'பிளானிங் எக்ஸ்பெண்டிசர்' என்று எப்படி தருவார்கள்? அவர்கள் அப்படித் தந்தால் தொழில் ஆரம்பித்துவிடுவார்கள். தொழில் ஆரம்பித்தால் வேலை செய்வார்கள். அப்படி வேலை செய்தால், அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும். அந்தப் பெற்றோர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு அந்தப் பிள்ளைக்குச் சோறுபோடுவார்கள். இந்த 'பிளானிங் எக்ஸ்பெண்டிசர்' மூலம் தொழில் ஆரம்பித்து, வேலை கொடுத்து, சம்பளம் கொடுத்து, அவர்கள் சம்பளத்தைப் பெற்று சோறுபோடுவதற்கு பதிலாக அவர்களுக்கு தொழில் இல்லாததால், அந்தப் பிள்ளைகளுக்கு நேரடியாகச் சோறு கொடுக்கிறோம். அதாவது டெவலப்மெண்ட் செய்வதால் ஏற்படக்கூடிய விளைவுகளிலே ஒரு பகுதியை நாம் இப்படிச் செலவு செய்கிறோம். ஆகவே இதை பிளானிங் எக்ஸ்பெண்டிசரில் ஒன்றாகக் கருதிக் கொடுக்க வேண்டும். நிதிக் கமிஷனுக்குப்



1983 மார்ச் 14] [திரு. ஆ. நல்லசிவன்]

போகிறபோது, அதற்கு முன்னால் இப்படி கேட்க வேண்டும். இதையும் 'டெவலப்மெண்ட் ஆஸ்பெக்ட்' உள்ள பகுதியாகச் சொல்லி கேட்க வேண்டும். அதற்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம். 8-வது கமிஷனிலே கேட்டு பெறுவோம். தமிழக மக்களுக்குச் செய்வோம்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இந்தப் புதிய வரி, ரூ. 26 கோடிக்கு வேண்டாம். அரசினர் இரண்டு பிரச்சினைகளைக் கூறுவார்கள். நுழைவு வரி போட்டிருக்கிறார்கள். சென்னையிலிருந்து வேலூருக்கு, வேலூரிலிருந்து குடியாத்தத்திற்கு, குடியாத்தத்திலிருந்து இன்னொரு ஊருக்கு என்று ஐந்து ஊர்களுக்குப்போனால், 2 பர்செண்ட் விதம் 10 பர்செண்ட் போட்டுவிடுவார்கள். இப்படி வரிபோடுவதால் பொருள்களின் விலை ஏறும். நகரங்களிலே இருப்பவர்களுக்கு நுழைவு வரி என்று போட்டு அதிகமாக வரியை வசூலிப்பார்கள். ஆகவேதான் இன்றைக்கு வியாபாரிகள் எல்லாம் ஹர்த்தால் பண்ணுகிறார்கள். ஆகவே அதை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** கடைசியாக. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னுமா கடைசி? இடைத் தலையீடுகள் தவிர்த்து உறுப்பினர் அவர்களுக்கு 29 நிமிடங்கள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழுவிலே உறுப்பினர் அவர்கள் கூட இருந்து முடிவு கட்டினார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரே ஒரு விஷயம். ஆளும் கட்சிக்குச் சொல்கின்ற விஷயம். ஐந்து வருட காலமாக ஆட்சியிலே இருக்கின்றீர்கள். உங்களுக்கு மக்கள் மத்தியிலே ஆதரவு குறைகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேச்சை ஆரம்பிக்கின்ற மாதிரிதான் தெரிகின்றது. முடிக்கிறதாக இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் முடித்துவிடுகிறேன். முன் மாதிரி ஆரவாரமாக மக்கள் ஆதரிக்கவில்லை. ஆரவாரமான ஆதரவு இல்லை நான் சொல்வது என்னவென்றால், ஆளும் கட்சியினர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத காரணங்களாகத்தான் இருக்கும். பெரியகுளம் தேர்தல்பற்றிச் சொல்வார்கள். திருச்செந்தூர் பற்றிச் சொல்வார்கள். பெரியகுளம் தேர்தலில் வெற்றி பெற்றது உண்மைதான். ஆனால் திருச்செந்தூர் தேர்தலில் புதிய நிலைமை இருப்பதைப் பார்க்கி

வேண்டும். இதற்கு முன்பு இருந்ததைவிட அதிகமான ஓட்டுகள் தி.மு.க.வுக்குக் கிடைத்திருக்கிறது என்பதைப் பாருங்கள். தமிழகத்தில் முன்னால் இருந்த நிலைமைகள் இல்லை. ஆளும் கட்சியை எதிர்க்கின்ற பல கட்சிக்காரர்கள் பிரிந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் யாரும் நான் பேசும் போது தயவுசெய்து குறுக்கிட வேண்டாம் பேசுவது தடைபடுகிறது.

இதற்கு முன்னாலே ஐந்து ஆண்டு காலத்தில் நடந்த இடைத் தேர்தல்களில் பல கட்சிகளுக்கு எதிர்த்து நின்றவர்களுக்கு வாக்குகள் பிரிந்து போடப் பட்டிருக்கின்றன. ஆக தமிழகத்தில் உள்ள சக்தி பல கட்சிகளுக்குப் பிரிந்து போயிற்று. ஆளும் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகின்றவர்களுக்குப் போயிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. இருந்தாலும் கடந்த தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகமான வோட்டுக்களைப் பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எடுத்திருக்கின்ற விஷயத்தைப் பார்த்தால் முடிக்கிற மாதிரி தெரியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் முடித்துவிடுகிறேன். திருச்செந்தூர் பற்றிச் சொல்கிறேன். எங்கள் கட்சியைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் 70 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் கட்சி நிற்கவில்லை என்ற அளவில் 'எஸ்கேப்பிஸ்ட்' மாதிரி சொல்லக்கூடாது. உறுப்பினர் அவர்கள் கட்சி ஆதரித்தவர்க்கு என்ன நிலைமை ஏற்பட்டது ? பெரியகுளம் தொகுதியில் அந்த ஊர்க்காரரே நின்றார்கள். ஒரு காலத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அங்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தது ? இப்போது என்ன ஆயிற்று ?

**திரு. ஆ. நல்லசிவன் :** பெரியகுளத்தைப்பற்றி நான் மறந்துவிடவில்லை. பெரியகுளத்திலே எங்கள் அபேட்சகர் இல்லை. திருச்செந்தூரில் 'சப்போர்ட்' இல்லை. அதிலே எல்லாம் நான் நுழைய விரும்பவில்லை. இந்த இரண்டு



பெரிய கட்சிகளும் மோதுகிறபோது, எங்களைப் போன்ற சிறிய கட்சிகள் அந்த மாதிரிதான் இருக்கும். அது தெரிந்துதான் சொல்கிறேன். எங்களுடைய வோட்டைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டாம் உங்களுக்கு நான் சொல்வது என்னவென்றால், உங்களை எதிர்த்தவருக்கு உங்களைவிட அதிகமான வோட்டு கிடைத்திருக்கின்றது என்பதை எண்ணிப் பாருங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் முடித்துக்கொள்ள வேண்டும். தலையீடு பற்றிச் சொல்கிறார்கள். நிறுத்திக்கொண்டால் இன்னும் தலையீடே இருக்காது என்று தான் உத்தரவாதமாகச் சொல்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் கூற விரும்புவது தமிழ் நாட்டில் உங்கள் கொள்கைக்கு அதிருப்தி உருவாகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதனால் தான் திருச்செந்தூரில் இப்படி ஆகியிருக்கிறது என்று சொல்கிறேன். நீங்கள் இரண்டு பேர்களும் சண்டை போட்டது போதும். தமிழ் நாட்டில் நீங்கள் இரண்டு பேர்களும் சண்டை போடுவதனால், நீங்கள் செல்வாக்கு பெற்று ஜெயிக்க வேண்டும் என்பதற்காக ஏராளமான அளவுக்குச் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது அதுவும் பீப்பிள்ஸ் ரெப்பாசன்டேஷன் ஆக்டில் சொல்லியிருப்பதைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. நம் தமிழ் நாட்டிலே அதிகமாகச் செலவழிக்கின்ற ஒரு 'கல்சர்' உருவாகியிருக்கின்றது. லட்சக் கணக்கான ரூபாய் செலவாகிறது. நான் ஒரு யோசனை சொல்கிறேன். இரண்டு பேர்களும் சேர்ந்து 60, 70 பர்சென்ட் கவர் பண்ணுகிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் இங்கே அரசியலைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தவரைக் கூப்பிட வேண்டிவரும். இது முறையல்ல.

**திரு. ஆ. நல்லசிவன் :** தமிழ் நாட்டிலே மாறி மாறி ரொட்டேஷனிலே ஆட்சி பண்ணுங்கள். காங்கிரஸ் ஆட்சி வேண்டாம். எங்களை மாதிரி ஆட்கள் ஆட்சிக்கு வருகின்ற வரைக்கும் லெப்ட் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு வருகின்ற வரைக்கும் நீங்கள் இரண்டு பேர்களும் மாறி மாறி ஆட்சி செய்யுங்கள். ஒருவரை ஒருவர் மனதிலே வைத்துக்கொண்டு தாக்கிக் கொள்ள வேண்டாம். நான்— காங்கிரஸ்காரர் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதையெல்லாம் பொதுக் கூட்டத்திலே வைத்துக் கொள்ளலாம்.

[1983 மார்ச் 14

*திரு. ஆ. நல்லசிவன்* : மத்திய அரசை நாம் எதிர்த்துப் போராட வேண்டும். இரண்டு பேர்களும் பகைமையை மறந்து பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும். மாநில அரசுக்கு வேண்டிய அதிகாரங்களை நாம் பெறுவதிலே கவனத்தோடு இருக்க வேண்டும். ஆகவே இருவரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளாமல் இருந்து அப்படிப்பட்ட பாதையிலே போக வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்* : அப்பாடா, முடிந்தது.

*திரு. வி. வி. வி. ஆனந்தம்* : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். இன்றைய நம்முடைய தமிழகத்தின் நிலை என்ன? உணவுப் பற்றாக்குறை, குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை இப்படியெல்லாம் பல பற்றாக்குறைகள் இருக்கின்றன. இப்படியெல்லாம் பற்றாக்குறை இருக்கின்ற நிலைமையில், மக்களுக்கு மிகவும் தேவையானது குடிநீர். இந்தக் குடிநீர் பிரச்சினை சென்னையிலே, மதுரையிலே அதிகமாக இருக்கிறது. பெருவாரியான மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதோடு மட்டுமல்லாமல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்காததால், பல நோய்களுக்கு மக்கள் உள்ளாகியிருக்கிறார்கள். சென்னையிலேயும் மதுரையிலும் மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு இந்த நோய்களால் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்

(முற்பகல் 11-30)

கின்றன. இவையெல்லாம் காலத்திலே முன்கூட்டியே அறிந்து, அதற்குத் தக்க நிவாரணம் அளித்திருக்க வேண்டும். இப்போதாவது ஒரு முனைப்போடு, வேகமாக இந்த மாதிரிப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண அரசு முன்வர வேண்டும். சென்னை, மதுரை போன்ற பெருநகரங்களுக்குக் குடிதண்ணீர்



1983 மார்ச் 14] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு தொலைநோக்குடன் கூடிய பெரிய திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். மதுரையைப் பொறுத்தவரையில், வைகை அணையைக் கட்டியிருந்து குடிநீர் கொண்டுவந்தால்தான், அங்கே பற்றாக்குறை ஏற்படாது இருக்கும். அந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மழை பொய்த்ததால்தான் தமிழகம் எங்கும் இந்த ஆண்டு வறட்சி நிலவுகிறது. தமிழகத்தினுடைய எல்லா மாவட்டங்களிலுமே வறட்சி நிலவுகிறது. வறட்சி காரணமாக கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது. பண்டங்கள் கிடைத்தாலும், வேலை வாய்ப்புகள் அவர்களுக்கு இல்லாததால், பண்டங்களை வாங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் அவர்கள் பொருளாதார நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலைமையில் ஏற்கெனவே மத்திய அரசு 2,500 கோடி ரூபாய் அளவிற்கு மறைமுக வரி போட்டிருக்கிறது. அந்த வரிகள் எல்லாம் மக்கள் தலையில்தான் போகும். அதுபோதாது என்று நம்முடைய அரசும் 26 கோடி ரூபாய் அளவிற்கு மறைமுக வரி போட்டிருக்கிறது. இது எல்லாம் ஏழை எளிய மக்களைத்தான் பாதிக்கும். மத்திய அரசு விதித்துள்ள வரியால் போக்குவரத்துக் கட்டணங்கள், தபால் கட்டணங்கள், இன்னும் பல பொருள்களினுடைய விலை ஏறும் நிலை இருக்கிறது. இப்போது நிதிநிலை அறிக்கையில் புதிதாக நுழைவு வரி என்று ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த நுழைவு வரி மிகவும் பிற்போக்கானது. மற்ற மாநிலங்களில் இதை அகற்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கர்நாடகத்தில் இதை அகற்ற முன் வந்திருக்கிறார்கள். பொருளாதார நிபுணர் திரு. எல். கே. ஜா அவர்கள் மத்திய அரசுக்கு சமர்ப்பித்த ஒரு அறிக்கையில், இந்த வரியை ஒழிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்த வரியை வசூலிப்பதில் சிரமம் இருக்கிறது. ஒரு ரூபாயை வசூலிக்க 83 காசு ஆகிறதென்று மத்திய ராஜாங்க மந்திரி திரு. பூடாசிங் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது பிற்போக்கான வரி. இதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரியால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை எளிய மக்கள்தான். சீனி, வனஸ்பதி, ஜவுளி வகைகள் சிமெண்ட், பெட்ரோலியப் பொருட்கள், காகிதம் இப்படிப் பதினைந்து பொருள்களின் மேல் இந்த வரி போடப்பட்டிருக்கிறது. இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், இந்த மாநிலத்தில் தொழில்கள் பெருகுவதில் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இப்போது மின்சாரம் இல்லாத நிலையில், நிலக்கரி ஜெனரேட்டர்களை இயக்க அவசியமாக வேண்டியிருக்கிறது. அதற்கு வரி போட்டிருக்கிறார்கள். தாதுப் பொருட்களுக்கு வரி

போட்டால் நமது மாநிலத்தை விட்டுப் பிற மாநிலங்களுக்குத் தொழில் போகும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த [illegible] வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய விற்பனை வரி மூலமாகவும், மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலமாகவும் எதிர்பார்க்கப்படுகிற வருமானம் ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே போகிறது. நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்ப்பதைவிட கூடுதலாக, அதிகமாகக் கிடைக்குமென்று நாம் எதிர்பார்க்கலாம். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் விலைவாசி கூடியிருப்பதால் அதிகமாகக் கிடைக்கும். ஆகவே புதிய வரியைப் போட வேண்டியதில்லை என்று கூற விரும்புகிறேன். புதிய வரி நகராட்சிகளின் தேவைக்காக, அதன் நன்மைகளுக்காகப் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே நகராட்சிகளுக்கு வருவாய் அளித்த, அவர்களுடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள, விற்பனை வரியின் மீது சர்-சார்ஜ் இருக்கிறது. ஆகவே இந்த வரி தேவையற்றது என்று மறுபடியும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரியை எதிர்த்து இன்று தமிழகத்தில் அனைத்து வணிகர்களும் கடை அடைத்திருக்கிறார்கள். வணிகர் சங்கங்களைச் சார்ந்தவர்கள் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நானும் வணிகர் சங்கத் தலைவன் என்பதால் உண்ணாவிரதம் இருக்கிறேன். இதனால் வணிகர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். ஏழை எளிய மக்களுக்குத்தான் பாதிப்பு ஏற்படும். வணிகர்களுக்கு உள்ள சிரமங்கள் எல்லாம், வரியை வசூல் செய்வதில் அதிகாரிகள் கெடுபிடி ஏற்படும்; மேலும் அதில் ஊழல் செய்ய வாய்ப்பு ஏற்படுவதால், நியாயமாக வணிகம் செய்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதுதான். ஆகவே அவர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கைத் தளர்த்தியதற்கு ஒரு காரணம், கள்ளச் சாராயச் சந்தை ஒழியும் என்று அபிப்பிராயம் சொன்னார்கள். மதுவிலக்கைத் தளர்த்திய பிறகும் கள்ளச் சாராயம் ஒழியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு ஜோலார்பேட்டையில் கள்ள மது அருந்தி கிட்டத்தட்ட 30 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு அரும் உயிர்கள் பலியாகிவிட்டது. 13 வயது சிறுமிகூட கள்ளச் சாராயம் சாப்பிட்டு பாதிக்கப்பட்டிருக்கிறாள். எனவே மதுவிலக்கைத் தளர்த்தியதால் எந்தவித நன்மையும் ஏற்படவில்லை. மதுவிலக்கை அமுல் நடத்தாமல், ரத்து செய்ததால், ஏழை எளிய மக்களுக்காகப் போடும் திட்டங்கள் அவர்களைப் போய்ச் சேராது. அவர்கள் தங்களுடைய வருமானத்தை மது அருந்தியே செலவழிக்கிறார்கள். எனவே மதுவிலக்கை மீண்டும் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



நிதிநிலை அறிக்கையில் ஒருசில வரிச் சலுகைகளை அரசு அளித்திருக்கிறது. ஏழை மக்கள் உபயோகிக்கும் மண்ணெண்ணெய் விளக்கு, திரி ஆகியவற்றுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். கால்நடைத் தீவனமாகப் பயன்படுகிற மரவள்ளிக் கிழங்கு திப்பிகள், பருத்திக்கொட்டை, பொட்டு ஆகியவற்றுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். எள்ளுப் புண்ணாக்கு என்பது கால்நடைத் தீவனத்திற்கு மட்டும் பயன்படும் பொருளாகும். அதற்கு இந்த வரி விலக்கை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே தொழில் பெருகினால்தான், அந்த மாவட்டத்தில் முன்னேற்றம் காண முடியும். அந்த மாவட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால்தான், அங்கே தொழில்கள் பெருக வாய்ப்பு ஏற்படும். ஆகவே மாநில அரசு சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அதில் குளறுபடியான நிலைமையை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. மாவட்டத்திலிருந்து மாவட்டம் போகத் தடை இருக்கிறது. தாலுக்காவிலிருந்து தாலுக்காவுக்குப் போகவும் தடை இருக்கிறது. அரிசியைப் பொறுத்தவரையிலும் ஆந்திரா, கர்நாடகா, மகாராட்டிரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் நிறைய இருக்கிறது. வணிகர்கள் மூலமாக அந்த அரிசி நமது மாநிலத்தில் விற்பனைக்கு வருகிறது. இங்கே அந்த அரிசியை விற்பதில் சிரமம் இருப்பதால், வணிகர்கள் அதில் ஈடுபட முடியாமல் இருக்கிறது. அந்த அரிசி வந்தபிறகு, தாசில்தாருக்குத் தெரிவித்து, ஒவ்வொரு பில்லிலும் முத்திரை வாங்க வேண்டும். எந்த நகரத்தில் விற்பதற்கு அனுமதி வாங்குகிறோமோ, அங்கேதான் விற்க வேண்டும். பக்கத்து ஊருக்குக்கூட எடுத்துச் செல்ல முடியாது. அந்த மூவ்மெண்டுக்கு அனுமதி/பெர்மிட் வாங்க வேண்டும். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போக முடியாத நிலை இருக்கிறது. மற்ற மாநிலங்களிலிருந்து வரும் அரிசியை தாராளமாகப் பக்கத்துப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதித்தால் நல்லது. திருச்சி, தஞ்சை மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் தாராள போக்குவரத்திற்கு அனுமதி அளித்தால், அரிசி விலை குறையும், அரிசிப் பற்றாக்குறையும் இராது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1983 மார்ச் 14

சாலைப் போக்குவரத்துபற்றி ஒரு கருத்தைக்கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் மாவட்டங்களுக்கு இடையேயுள்ள சாலைகளை அந்தப் பகுதியில் உள்ள இன்ஜினியர்களோ, இந்தப் பகுதியில் உள்ள இன்ஜினியர்களோ, கவனித்துப் பொறுப்பு ஏற்காததால், இணைப்புச் சாலைகள் கவனிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. விளாத்திகுளம்—பெருநாழி இணைக்கும் சாலை இருக்கிறது. மூன்று திருநெல்வேலி மாவட்டத்திலும், இன்னொன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும் இருக்கிறது. ஆனால் அந்தச் சாலையை எந்த என்ஜினியரும் கவனிப்பதில்லை. அந்தச் சாலையிலே சிறு பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. இப்படி மாவட்டங்களுக்கு இடையே உள்ள சாலைகள் குறித்து கூட்டுப் பொறுப்பு இல்லாததால், அந்த வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று தெரிவித்து, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

(நண்பகல் 12-00)

**திரு. வலம்புரி ஜான் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நாடாளுமன்றத்தில் நாவாடியிருந்தாலும், இந்த மாமன்றத்தைப்பொறுத்தவரையில், இன்று எனது பேச்சு கன்னிப் பேச்சாக அமைகிறது. கன்னிப் பேச்சாக அமைவதால் ஒருகால் கனிந்த பேச்சாகவும் இருக்கலாம். ஒருகால் காய்ப் பேச்சாகவும் அமையலாம். நல்லது கொண்டு அல்லது தள்ளுவீர்கள் என்ற நம்பிக்கையில் நான் என்னுடைய கன்னிப்பேச்சைத் தொடங்குகிறேன். முதலாவதாக, சான்றோர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த பேரவையிலே ஒரு பத்திரிகையாளன் என்கின்ற வகையில் பார்த்தோடு என்னை அனுப்பி வைத்திருக்கிற சுர இதயம் படைத்தவரும், மக்கள் மனத்தில் நிறைந்தவருமான என் வணக்கத்திற்குரிய, வாழ்த்துக்குரிய தலைவர் கழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியாய் அமைகின்ற கன்னிப் பேச்சை நான் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

இங்கே விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் உரையாற்றுகிறபொழுது, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முன்னைப்போல் ஆரவாரமான ஆதரவு இல்லை என்பதாகக் குறிப்பிட்டார். போகிற போக்கில் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாமே தவிர, உண்மையான நிலைமைகள் அவ்வாறு இல்லை. திருச்செந்தூர் தேர்தலை ஒரு சாதாரண இடைத்தேர்தல் என்று கொள்ள இயலாது. இந்தியாவினுடைய அரசியல் வரலாற்றில் திருச்செந்தூர் இடைத்தேர்தல் என்பது இடைத் தேர்தல் அல்ல, அது எடைத் தேர்தல். பல



1983 மார்ச் 14] (திரு. வலம்புரி ஜான்)

பேரை எடை போட்ட தேர்தல். தேர்தல் முடிவுகளைப் பார்க்கிறபோது, அது எடை போட்ட தேர்தலாக மாத்திரமல்லாமல் சிலரை எடைக்குப் போட்டு விட்ட தேர்தலாகவும் அது அமைந்து விட்டது என்கிற அளவில் அதற்கு ஒரு தனித்த வரலாறு உண்டு. அது ஒரு சாதாரண தேர்தல் இல்லை என்று சொல்லுவதற்குக் காரணம், பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் மிக வலிவோடு போராடிய ஒரு களமாக அது அமைந்தது. அதுமாத்திரமல்லாமல் 10 கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்து பழி வாங்க வேண்டுமென்று நினைப்பதும், இயற்கையே எதிராக இருப்பதும், வறட்சியான சூழ்நிலை இருப்பதும், ஒருவருடைய மரணத்தைக் காட்டி அதற்காக நாங்கள் நீதி கேட்கப்போகிறோம் என்று மக்களிடத்தில் சொல்கிற ஒரு சூழலும், மத்திய அரசாங்கம் உருவாக்கி வைக்கிற ஒரு செயற்கைப் பஞ்சமும் இவ்வளவு இடர்ப்பாடான சூழ்நிலைக்கு மத்தியிலும் என்றைக்கும் இல்லாத அளவுக்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது என்றால், திருச்செந்தூரிலே நடைபெற்றது இடைத் தேர்தல் அல்ல, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் மன்றத்தில் எடை பார்த்த தேர்தல், உரசிப் பார்த்த தேர்தல். ஒரு வரலாற்றை உருவாக்கிய தேர்தல். வருங்கால வரலாறு இப்படித் தான் பேசும். ஆகவே ஆரவாரமான ஆதரவு இல்லை என்று அவர்கள் இங்கே சொன்னதை நான் வன்மையாக மறுக்கிறேன்.

அதைப்போலவே பேசுகிறபொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தன் அவர்கள், திருக்குறளிலே தொடங்கிய உரையாக அவர்களுடைய உரை இருந்தாலும் பற்றாக்குறை, வறட்சி பற்றாக் குறை, வறட்சி என்பதைப் பற்றிப் பற்றி இங்கே சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கும் இந்த மாமன்றத்திற்கும் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் திருக்குறளைச் சொன்னதாலே சொல்கிறேன். உலக இலக்கியங்களை அலசிப் பார்த்தாலும், தெரிந்தவரை, நான் படித்தவரை, திருக்குறள் ஒன்றிலே தான் 'வான் சிறப்பு' என்ற அதிகாரமே வருகிறது. வான் 'சிறப்பு என்ற அதிகாரம் வருகின்றது என்பது ஒரு செய்தியா என்று கேட்டால், அது ஒரு செய்தி மாத்திரமல்ல, சிந்தனைக்குரிய விவகாரம். உலக இலக்கியங்களிலே காற்றைப் பற்றியோ அல்லது நீரைப்பற்றியோ அல்லது நெருப்பைப் பற்றியோ வருகிறதா என்றால், இல்லை. அதுபோல் திருக்குறளிலே காற்றுக்கு ஒரு அதிகாரம் இல்லை, நெருப்புக்கு ஒரு அதிகாரம் இல்லை. ஆனால் மழைக்கு என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருக்கிற ஒரு இலக்கியத்தில் மழைக்கு என்று ஒரு அதிகாரம் இருக்கும் என்றால்,

(திரு. வலம்புரி ஜான்) [1983 மார்ச் 14

வான் சிறப்பு என்று வள்ளுவர்தான் அதனை அளித்திருப்பார் என்றால்,
அதற்கு இருக்கிற அடிப்படைக் காரணம், அருக்குளக்காரணம் தமிழகம் வானம்
பார்த்த வறண்ட மண்ணாகவே அன்றைக்கும் இருந்திருக்கிறது என்று தான்
அர்த்தம்.

இல்லாவிட்டால், சிலப்பதிகாரத்திலே—புதைப்பற்றி முழுமையாகத் தெரிந்
திருக்கிற நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே இருக்
கிறார்கள். வறட்சி, பஞ்சம் நிறை என்றெல்லாம் இங்கே உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டார்கள். 'பதிவெழு அறியாப் பழங்குடி கெழுக' என்று வரு
கிறது. ஏறத்தாழ 1,400 ஆண்டுகளுக்கு முன்பு கூட வறட்சி காரணமாக,
மழையின்மை காரணமாக, பஞ்சம் காரணமாக, மக்கள் நாடுகளை விட்டு,
நகரங்களை விட்டு, ஊரை விட்டுச் செல்கிற சூழ்நிலை எல்லாம் இருந்திருக்
கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.
ஆகவே வான்சிறப்பு என்ற அதிகாரம் இருக்கிறது. கடவுளை வைத்துப்
போற்றுகிற இடத்தில் கூட மழையை வைத்துப் போற்ற வேண்டுமென்ற
எண்ணம் இருக்கும் என்றால், 'மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்'
என்கிறார் என்றால், மழை அன்றைக்கும் கூட இல்லாமல் இருந்திருக்கிறது,
தமிழகம் வானம் பார்த்த வறண்ட மண்ணாகவே இருந்திருக்கிறது. ஆகவே
வறட்சி என்பது இன்றைக்கு வந்ததல்ல. அதையும் எடுத்துச்சொல்லுவதற்
குக் காரணம் ஒரு பெரிய மனிதர், பெரிய மனது கொண்டு இங்கே பேசினார்.
குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், "வறட்சிக்கு
நீங்கள் காரணம் இல்லை" என்றார்கள். அந்த வாய்மைநிறைந்த பெரிய
மனிதருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில்
4 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது,
"இந்த வறட்சி கூட நீங்கள் ஆள்வதால் தான் வந்தது, நீங்கள் ஆள்வதால்தான்
மழை கூட வரவில்லை" என்று எடுத்துச்சொன்ன காரணத்தால், அது இன்ன
மும் உறுத்திக்கொண்டிருக்கிற காரணத்தால், நான் இந்தக் கருத்தை இங்கே
எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆகவே இவர்கள் ஆளுகிறார்கள், அவர்கள்
ஆளுகிறார்கள் என்பதைப் பொறுத்தல்ல இது என்பதை நான் சுட்டிக்காட்டு
கிறேன். வரலாற்றின் வாயிலாகப் பார்த்தால் கூட, இலக்கியத்தினுடைய
ஊடாகப் பார்த்தால் கூட, வறட்சி என்பது என்றைக்கும், அன்றைக்கும் இருக்
கிற ஒரு சூழ்நிலைதான் என்பதைப் பார்க்கிறோம். ஆனால் அந்த வறட்சியை
நீக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க இந்த அரசு, ஆட்சிக் கட்சி
தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறதா என்று பார்த்தால், நிதி நிலை
அறிக்கையை மாத்திரமல்லாமல், அதனுடைய செயல்பாட்டை முழுவதுமாக



(திரு. வலம்புரி ஜான்)
1983 மார்ச் 14]

இன்றைக்கு எடுத்துப்பார்க்கிறபோது, அந்த முயற்சியிலே, மக்கள் துயர்
துடைக்கிற முயற்சிகளிலே இந்த அரசு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்
கொண்டிருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

அதற்கு எதிர்க் கட்சிக்காரர்களிலே சில பேர் ஆளும் கட்சிக்கு இது மோச
மான சூழ்நிலை என்று பேசுகிறார்கள். போக்கால நடவடிக்கை போல்
வறட்சியை சமாளிக்க அரசு போராடிக்கொண்டிருக்கிறபோது, சிலர் இதமாகப்
பேசுகிறார்கள். சிலர் பேசும்போது கொஞ்சம் பாசம் காட்டுகிறார்கள். சில
பேர் அப்படிப் பாசம் காட்ட இயலாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்
கிறார்கள் என்பதையும் நான் உணர்கிறேன். சில நேரங்களிலே அம்மா
அப்பாக்கள் அப்படித்தான். பிள்ளைகளை அழைத்துக் கொஞ்சுகிற
நேரத்தில் கேட்பார்கள். "நீ அப்பா பிள்ளையா, அம்மா பிள்ளையா?"
என்று கேட்பார்கள். புத்திசாலிப் பிள்ளையாக இருந்தால், இரண்டு பேரும்
இருக்கிறபோது "நான் அம்மா பிள்ளை—அப்பா பிள்ளை" என்று சொல்லி
விடும். சில பிள்ளைகள் அம்மா கேட்கிறபோது தெரியாமல், "அப்பா
பிள்ளை" என்று சொல்லிவிடும். இன்னமும் சில பிள்ளைகள் அப்பா
கேட்கிறபோது தெரியாமல், "அம்மா பிள்ளை" என்று சொல்லிவிடும்.
அப்படிச் சொல்லிவிட்ட காரணத்திற்காக மறுநாள் அந்தக் குழந்தை
காய்ச்சலில் வீழ்ந்தால் அல்லது நோய்நொடியில் வீழ்ந்தால்,
"நேற்றைக்குத் தான் அம்மா பிள்ளை என்றாயே, உன் அம்மாவே உன்னை
மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லட்டும்" என்றும் "நேற்றைக்குத்தான்
அப்பா பிள்ளை என்றாயே, உன் அப்பாவே உன்னை மருத்துவ மனைக்கு
அழைத்துச் செல்லட்டும்" என்றும் சொல்கிற சூழ்நிலை எங்காவது குழந்தை
களுக்கு வந்தால், அது எப்படி மக்கள் நலனுக்கு ஊட்டம் தருவதாக இருக்கும்
என்பதையும் இங்கே இருக்கின்ற சான்றோர்கள் எண்ணிப்பார்க்க வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படித்தான், ஆட்சிக் கட்சியாக இருந்
தாலும் வரும். அப்பாவாக ஒன்று வரும். பிறகு அம்மாவாக ஒன்று வரும். ஒரு
வரைத் தேர்ந்தெடுக்கவில்லை என்ற காரணத்திற்காக "இனி அப்பா பிள்ளை"
என்று தான் அழைப்பேன் என்பதும் "அம்மா பிள்ளை" என்று அழைக்க
வில்லை என்ற காரணத்திற்காக அந்த மாதிரியான காரணங்களை வெளியிலே
சொல்லாவிட்டாலும் கூட, நெஞ்சத்திலே ஒரு சுருக்கலாக வைத்துக் கொண்டு,
ஆட்சிக் கட்சி, வரலாற்றுக்கு எதிராக உருவாக்கப்பட்டிருக்கிற செயற்கைப்
பஞ்சத்திற்கு எதிராக, இயற்கையினுடைய வஞ்சத்திற்கு எதிராகப் போராடிக்
கொண்டிருக்கிறபோது, இப்படி எல்லாம் எதிர்க் கட்சிகள் செயல்படுவது
நியாயம் தானா? இங்கிலாந்து போன்ற நாடுகளுடைய அரசியல் வரலாற்றைப்
பார்க்கிறபோது, இரண்டாவது உலகப் பெரும் போர் நடக்கிறது. வின்ஸ்டன்

சர்ச்சில் நெருக்கடியில் போராடுகிறபோது, அவருக்கு எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆதரவு தந்தார்கள். இந்தியாவில் ஒரு மாபெரும் போர் நடக்கிறபோது, எவ்வளவு வாஞ்சையோடு, இந்த மண் ஆக்கிரமிப்பிலிருந்து காக்கப்பட வேண்டுமென்ற உரிமை உணர்வோடு எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு குரல் கொடுத்தார்களோ அந்த அளவுக்கு இந்தப் பஞ்சத்தை வீழ்த்துவதற்காக இந்த ஆட்சிக் கட்சி துடி துடித்து வேகம் காட்டுகிறபோது, இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்ப்பதிலே தவறில்லை என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் ஆதரிக்கவே இல்லை என்று நான் சொல்லவில்லை. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரு கொடியில் இரு மலர்கள். என்னைக் கேட்டால், கத்தரிக்கோல் இரண்டாக இருக்கிறது என்பேன். கத்தரிக்கோல் இரண்டாகத்தான் இருக்கும். ஆனால் கத்தரிக்கோல் இரண்டாக இருக்கிறது என்பதற்காக சில நேரங்களில் கை உள்ளே வந்தால் காயம் படுவதற்கும் அதிலே இடம் இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டு அரசியல் களத்திலே ஏறத்தாழ 1967க்குப் பிறகு திராவிடக் கட்சியிலே இருக்கிற இந்த இரண்டு கூறுகளும் தான் கிங்காங் தாராசிங் போல் பந்தயக் களத்திலே நிற்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் அகில இந்தியக் கட்சிகளாக இருந்தாலும்—அவர்களும் மரியாதைக்குரியவர்களே, அகில உலக கட்சிகளாக இருந்தாலும் அவர்களும் மாண்புக்கு உரியவர்களே—அவர்கள் பார்வையாளர்களாகத் தான் இருக்கிறார்கள். பார்வையாளர்களாக இருக்கிறவர்கள் பந்தயக் களத்திலே வரக் கூடாது என்கிற சட்டமில்லை. ஆனால் இந்த மாநிலத்தினுடைய மொழி உரிமைக்காக, இந்த மாநிலத்தினுடைய உரிய அதிகாரங்களுக்காக, இந்த மாநிலத்திலே வாழுகின்ற மக்களின் நலனுக்காக, குரல் கொடுக்கின்ற இந்த இரு கூறுகளும் திராவிட இயக்கத்தினுடைய இரு கூறுகள். இன்னும் சொல்லவேண்டுமென்றால் தமிழ்ச் சமுதாயத்தினுடைய உரிமைக்காகக் குரல் கொடுக்கின்ற ஒரே இயக்கம் இவை என்கின்ற காரணத்தால், நான் ஒன்றைத் தெளிவாகவே கூறுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் கட்சி வேற்றுமைகளை மறந்து இந்த அரசு போராடுகிற நேரத்திலே கூட, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை இன்னும் முழுமையான அளவிலே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும், தன்னுடைய ஈரத்தைக் காட்ட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் அரிசி கேட்கிறோம். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அவையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு மரியாதைக்குரிய தலைவர் சொன்னதாக எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நான் வார்த்தைக்கு வார்த்தை, வரி எண்ணிப் படித்துப் பார்த்து



விட்டு சொல்கிறேன். ஆட்சிக் கட்சிக்கு எதிராக கட்சிகள் இருக்கலாம். அதுதான் மக்களாட்சியினுடைய அடிப்படை. ஆனால் ஆட்சிக் கட்சி, எதிர்க் கட்சிக்கு எதிராக இருக்கிறது என்பதற்காக எங்கள் நெஞ்சத்தில் வேண்டுமானால் ஏறி நில்லுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. எங்கள் குரல் வளையை வெட்டி விடுங்கள், நாங்கள் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் தமிழ் நாட்டு மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது என்றால், எங்களோடு துணைநின்று குரல் கொடுக்க வேண்டாமா? அப்படி மத்திய அரசைக் கேட்க வேண்டாமா? ஒரு மரியாதைக்குரிய தலைவர் சொல்கிறார். "இந்த மாநில அரசு கேட்க வேண்டிய முறையிலே கேட்டால், அரிசி வரும்" என்று சொல்கிறார். நான் அவர்களைப் பணிவன்போடு இந்த மாமன்றத்தின் மூலம் கேட்கிறேன். "கேட்க வேண்டிய முறையிலே கேட்டால் அரிசி வரும்" என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்? அந்த முறையை எங்களுக்குச் சொல்லித் தரக் கூடாதா? அவர்கள் பெரியவர்களாக இருக்கிற காரணத்தால் ஏடும், எழுத்தாணியும் எடுத்துக்கொண்டு அவர்களிடத்தில் உட்கார்ந்து நாங்கள் அகரம், ஆகாரம் கேட்க ஆரம்பிக்கிறோம். என்ன முறை என்று சொல்லட்டும். அது என்ன சொல்லக் கூடாத முறையா? அது என்ன ஸ்ரீரங்க தரிசனமா, இல்லை தில்லை இரகசியமா? சொல்லக்கூடாதா? ஒரு மாநில அரசு கடிதம் எழுதலாம். ஒரு மாநில அரசு தொலைவழி செய்தி கேட்கலாம். ஒரு மாநில முதல்வர் தானே சொல்லலாம். ஒரு

(பிற்பகல் 12-10)

மாநில அரசு தன்னுடைய தேவைக்கு என்று அரிசி கேட்டால் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை கால்நடையாகவே போவார்களா? தமிழ் நாட்டு மக்களுக்கு இருக்கும் வாட்டத்தைப் போக்கும் அளவுக்கு வார்த்தைகளைச் சொல்லாமல், இடித்துரைக்க வேண்டும் என்று இப்படியெல்லாம் சொல்கிறார்களே. அவர்களை பொறுப்புள்ளவர்கள், பொறுப்போடு செயல்படுகிறார்கள் என்று தமிழக மக்கள் நினைப்பார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறது. மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் கேட்கிறோம், இப்போது இருக்கும் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக. நான் இப்போது ஒரு உண்மையைச் சொல்கிறேன். இந்தியாவிலே இருக்கும் ஏழைகளை விட எலிகளே அதிகம். அப்படி ஒரு விவரத்தை 'இம்பிரிண்ட்' என்ற பத்திரிகையிலே நான் பார்த்தேன். ஆண்டு ஒன்றுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கும் எலிகள், காப்பரன் பூச்சிகள், வெட்டுக்கிளிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து

சாப்பிடும் உணவு தானியம் எவ்வளவு என்றால், 25 மில்லியன் டன்கள். 250 லட்சம் டன்கள். 2½ கோடி டன்கள். இந்த நாட்டிலே இருக்கும் எலிகள், இந்த நாட்டிலே இருக்கும் வெட்டுக்கிளிகள், இந்த நாட்டிலே இருக்கும் கரப்பான் பூச்சிகள் இவைகள் எல்லாம் சேர்ந்து சாப்பிடும் உணவு தானியத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு என்று கேட்டால், இந்தியாவிலே இருக்கும் மொத்த உணவு உற்பத்தியிலே 20 சதவீதம். இதனுடைய மதிப்பீடு ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய். இந்த அளவுக்கு உணவை இந்த நாட்டிலே இருக்கும் எலிகளும், வெட்டுக்கிளிகளும், கரப்பான் பூச்சிகளும் சாப்பிடுகின்றன. அப்படியென்றால், நாட்டு மக்கள் கேட்கமாட்டார்களா? சிந்திக்கின்றவர்கள் கேட்கமாட்டார்களா? ஒரு வருடத்தில் எலிகள் மாத்திரமே சாப்பிடும்—நான் கரப்பான் பூச்சிகளை விட்டுவிடுகிறேன்—இந்த எலிகள் மாத்திரம் சாப்பிடும் உணவின் அளவை எல்லாம் எடுத்து ஒரு புகைவண்டியின் பெட்டிகளிலே ஏற்றி வைத்தால், அந்த இருப்புப் பாதையின் மொத்த நீளம் 3 ஆயிரம் மைல் வரும். அப்படி என்றால், கன்னியாகுமரியில் தொடங்கி, காஷ்மீர் கடந்து, மங்கோலியாவை எட்டிப்பிடித்து, அதற்கும் அப்பால் அங்கே ஒரு நகரத்தை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். அந்த அளவுக்கு உணவை இந்த எலிகள் சாப்பிடுகின்றன. எலிகள் சாப்பிட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இந்த மண் மகாவீரர் பிறந்த மண், புத்தன் பிறந்த மண் அல்லவா? அவைகள் சாப்பிடட்டும். "அவைகள் சாப்பிடும் அந்தச் சாப்பாட்டில் இந்த ஏழைத் தமிழர்களுக்காக 6 சதவீதம் சாப்பாட்டைத் தரக்கூடாதா?" என்று மன்றாடுகிறோம், மடியேந்திக் கேட்கிறோம். ஆகவே, அவர்கள் கருணை காட்ட வேண்டும் என்று கேட்கிறோம். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தச் சத்துணவுத் திட்டம் வந்துவிட்டதால் தான் இப்படி ஒரு பஞ்சம் வந்துவிட்டது என்று பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது இந்தச் சத்துணவுத் திட்டத்தை எதிர்த்தார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களை நெஞ்சத்திலே வைத்துப் போற்றுவேன், அவர்கள் மிகவும் தெளிவாகச் சொன்னார்கள். நான் கன்னிப்பேச்சுப் பேசும் இன்றையதினம் கார்ல் மார்க்ஸ் அவர்கள் 100-வது ஆண்டுவிழா, 'உலக மக்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழக்க வேண்டியது சங்கிலிகளே தவிர வேறு ஒன்றும் இல்லை" என்று சொன்னார்கள்.

"Workers of the world Unit! You have nothing to lose butyour chain என்று பேசுகின்ற அந்தப் பொதுவுடைமை விஞ்ஞானம் கூட இவ்வளவு ஈரத்தோடும், இரக்கத்தோடும் இதை அணுகிப் பார்த்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன், சோறுபோடக் கூடாது என்று யாராவது சொல்வார்களா என்று சுந்தரமாகக்



கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது, ஒரு அரசாங்கம் தர்மஸ்தாபனம் அல்ல என்று சொன்னார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. நான் ஒன்றைச் சொல்கிறேன், ஒரு அரசாங்கம் தர்மஸ்தாபனம் இல்லைதான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சிக்கு ஒரு காலத்திலே கருவாக இருந்திருக்கிற பெரியவர் திரு. ஜீவானந்தம் அவர்கள் என்ன சொன்னார் என்றால், "வயிற்றுக்குச் சோறு போட வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம்" என்று பாரதியார் அவர்கள் சொன்ன வரிகளை திரு. ஜீவானந்தம் அவர்கள் தமிழ் நாட்டிலே சொல்லாத இடமே இல்லை. நான் சின்னப் பிள்ளையாகப் இருக்கும்போது, பள்ளிக்குப் போகும்போது கேட்டிருக்கிறேன். அப்போது இந்தக் கருத்துக்களைச் சொல்லி அவர் முழங்காத மேடை இல்லை. ஆகவே, அவர்களுடைய தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாம் பாரதியின் இந்தக் கருத்தாகிய, "வயிற்றுக்குச் சோறு போட வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம்" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிப் பேசுகிறவர்கள் எல்லாம், சிந்திக்க வேண்டும். இன்றைக்கு வயிற்றுக்குச் சோறு போட வேண்டும் ஆனால் மனிதர்களுக்கல்ல, சின்ன குழந்தைகளுக்கு என்ற நிலைமை இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கும் மனிதர்களுக்கு எல்லாம் சோறு போட வேண்டும் என்று சொல்லியிருந்தால், அந்த மகாகவியின் படத்தை என்ன செய்திருப்பார்களோ, தெரியாது. சிலர் இதிலே 'ஃபீசிபிலிட்டி' இல்லை என்று சொல்கிறார்கள். நான் அந்த மாபெரும் மேதைகளுக்குச் சொல்கிறேன், ஃபீசிபிலிட்டி என்பது என்ன? ஒரு திருமணம் ஆகிறது என்று சொன்னால், அதற்கு முன்னமே "இவனுக்குக் குழந்தையே பிறக்காது, ஆகவே, மணமே கூடாது" என்று பேசுவது? இந்தத் திட்டமே ஊழல் என்று பேசுகிறார்கள். நகம் இருந்தால், அந்த நகத்திலே அழுக்கு சேரத்தான் செய்யும். அப்படி அழுக்கு சேர்ந்தால், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் இன்னின்ன இடத்திலே குற்றங்குறைகள் இருக்கின்றன என்று சொன்னால், அப்படி அழுக்கு இருக்கிறது என்று சொன்னால், அதை எடுக்க வேண்டும் என்பதுதான் வாதமாக இருக்க வேண்டும் அப்படி இல்லாமல் அழுக்கு சேர்ந்தால், நகத்தையே வெட்டு என்பதல்ல வாதம். இந்த நகமே கூடாது என்றும், சில சமயங்களிலே அதற்கும் மேலே சென்று, இந்த விரல் இருந்தால் தானே நகம் இருக்கிறது, இந்த நகம் இருந்தால்தானே அதில் அழுக்கு சேருகிறது, ஆகவே விரலை வெட்டு என்று சொல்கிறார்கள். ஒரு காலத்திலே 'வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன்' என்று ஒரு கவிஞர் சொன்னார். அந்த அடிப்படையில், அந்த உணர்வில்தான் இப்போது 65 லட்சம் குழந்தைகளுக்கு சோறு போடுகிறோம். இந்தத் திட்டம் நடக்கக்கூடாது என்ற எண்ணம் இருப்பதால்தான் 'நடக்காது' என்று

(திரு. வலம்புரி ஜான்) [1983 மார்ச் 14

சொல்லுகிறார்கள். நடக்கக்கூடாது என்று இருக்கும் எண்ணம் தான் நடக்காது என்பதன் அடிப்படை. நடக்கிறவை நடக்கட்டும். இன்றைக்கு சோறு சாப்பிடுகிறவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இதனால் 64 லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள் என்று பார்க்காமல் இந்தத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பெயர் வருகிறதே என்று தான் நினைக்கிறார்கள். நான் இந்த அவையிலே சொல்கிறேன், தெளிவாகச் சொல்கிறேன், சத்தியமாகச் சொல்கிறேன், இப்படி 64 லட்சம் குழந்தைகளுக்கும் என்னுடைய எதிரியாக இருக்கும் ஒருவர் உணவு இட்டாலும், நான் அவருடைய கால்களைப் பிடித்து முத்தம் இடுவேன். 5 வயதிலேயே பெற்றோர்களை இழந்த நான், திரு. காமராசர் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தில் உணவு சாப்பிட்டு வளர்ந்தவன். என்னைப்போல எத்தனையோ சிறுவர்கள், என்னைப்போல எத்தனையோ மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், வறுமையின் நிழலே படாதவர்கள், வறுமையின் கொடுமையிலே வாழாதவர்கள், பசுமையிலே இருப்பவர்கள், எப்போதும் குளிர்பதன நிலையிலே இருக்கும் சிலர், வறுமை, வாட்டம், பசி, பட்டினி என்பவைகள் எல்லாம் எப்படி இருக்கும் என்று தெரியாதவர்கள் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்களோ என்றுகூட நான் நினைக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு வாசகம் இருக்கிறது. அந்த வாசகம் என்னை வெகுவாகத் தொட்டது. "இந்தியாவில் ஒரு பகுதியாக விளங்கும் தமிழகத்தின் அரிசிப் பற்றாக்குறை" என்று அந்த வாசகம் இருக்கிறது. நான் மிகவும் அடக்கத்தோடு சொல்கிறேன், 'இந்தியாவில் ஒரு பகுதியாக இருக்கும் தமிழகம்' என்றெல்லாம் சொல்லும் அளவுக்கு நிலைமை இப்போது இருக்கிறது. இப்படி தனியாக எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இப்போது இருக்கிறது. நான் ஒரு பத்திரிகையிலே பார்த்தேன்.

There is a Carnival in Delhi after a carnage, an infernal massacre and a total conflagration in Assam.

என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். நமக்கெல்லாம் சிறப்பு உண்டு. நம்மாலேதான் ஆயிரக்கணக்கான மக்களை அஸ்ஸாமிலே கொன்று விட முடிகிறது. அதேசமயத்திலே, கூட்டுசேரா மாநாட்டிலே சென்று ஆப்பிக்காவிலே எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்லவும் முடிகிறது. "இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் தமிழகத்தினுடைய அரிசிப் பற்றாக்குறைத் தீர்க்க" என்று இருக்கும் அளவிலே நிலைமைகள் இருக்கின்றன. இப்போது தென்னகம் ஒரு தனிக் கோடு என்ற நிலைமையிலே இருக்கிறது. நான் இந்த நேரத்திலே தெளிவாகச் சொல்கிறேன், பூச்சாண்டி காட்டுவதற்காக அல்ல, அல்லது ஒரு பிரமிப்பை ஏற்படுத்துவதற்காகவும் அல்ல, இங்கே இருக்கும் சான்றோர்களுக்குச் சொல்கிறேன்;



1983 மார்ச் 14] (திரு. வலம்புரி ஜான்)

நான் ஒரு இளைஞன், ஆகவே, பொறுப்பில்லாமல் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது, நான் எல்லா வரலாற்றையும் படிக்கிறேன், ஆகவே, சொல்கிறேன். ஒரு உள்நாட்டுப் போருக்கு முன்பாக ஒரு நாட்டிலே என்னென்ன சூழ்நிலைகள் இருக்குமோ அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்றன. இது வெளிநாட்டு நோக்கர்கள் சொல்லும் கருத்து. வெளிநாட்டிலே இருக்கும் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி வருகிறது. அவ்வளவு மோசமான சூழ்நிலை இன்றையதினம் இந்த நாட்டிலே இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கும் மாநிலங்கள் எல்லாம் மகத்துவப் படுத்தப்பட்ட மாநகராட்சிகள் என்று ஒரு காலத்திலே சொல்லப்பட்டன. அந்தக் காலம் சென்று, இப்போது மாநிலங்கள் எல்லாம் பங்கப்படுத்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் என்று சொல்லும் அளவுக்கு மாறியிருக்கின்றன. மாண்புமிகு மறைந்த அண்ணா அவர்கள் சொல்கிற போது, அவருடைய கடைசி கடிதத்திலே சொன்னார்கள். மத்தியிலே ஒரு மாமியார் என்றும் மாநிலங்களை மருமகள் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு அந்த நிலைமையும் மாறி, மைய அரசு மேல் திருப்பதி என்ற அளவிலேயும் மாநில அரசு கீழ்த் திருப்பதி என்ற அளவிலேயும்தான் இருக்கின்றன. மேல் திருப்பதியிலே என்ன நடக்கிறது? அங்கே சாமி தரிசனம், சதுர்மறை வேதம். ஆனால் கீழ்த் திருப்பதியிலே பழக்கடைகள், பக்கோடா கடைகள் தான் இருக்கின்றன. இந்த நிலையிலே வசதியாக நிதியாதாரங்களை தன்னுடைய கையிலே வைத்திருக்கும் மத்திய அரசு மக்களை வாழவைக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கும் மாநில அரசுகளை வஞ்சித்துக்கொண்டிருந்தால், இந்தியாவிலே ஒன்றுமை, ஒருமைப்பாடு வேண்டும் என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு அதிலே நம்பிக்கை இருக்கிறதா என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத்திலே ஒருமுறை ஆச்சாரிய கிருபளானி அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்றபோது சொன்னார்கள்.

"India is like a mighty elephant. It takes some time to stand up; but, when it stands up, it stands up."

நாங்கள் தலைவணங்கி ஒத்துக்கொள்கிறோம். யானை போன்றதுதான், அதுபெரியதுதான். எழுந்திருப்பதற்கு நேரம் ஆகலாம். ஆனால் எழுந்தால் எழுந்ததுதான். இங்கே இருக்கும் மக்கள் எல்லாம் பழுதடைந்துபோக வேண்டும், இங்கே இருக்கும் மாநிலங்கள் எல்லாம் சீர் குலைந்து போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், மத்தி எப்படி உறுதியாக இருக்க முடியும்? உறுப்புக்கள் எல்லாம் சிறப்பாக இருந்தால்தான் உடம்பு பலமாக இருக்க முடியும். மாநிலங்கள் வளங் கொழிக்கிற அளவுக்கு, மக்களைக் காப்பாற்றுகிற அளவுக்கு அவைகளுக்கு நிதியாதாரங்கள் இருந்தால்

(திரு. வலம்புரி ஜான்) [1983 மார்ச் 14

தானே, மத்திய அரசு வலுவாக இருக்க முடியும்? எனவே மத்திய அரசு மட்டும் வலுவாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வரலாறு சொல்லுகிற எச்சரிக்கையை இந்த மன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏற்றுவதன் மூலமாக, ஒரு பெரும் கடமையைச் செய்யும் உணர்வோடு நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மொகலாயப் பேரரசு இந்த மண்ணில் வீழ்ந்ததற்கான காரணம் என்ன? ஆக்ஸ்போர்டு ஹிஸ்டரி ஆப் இந்தியா என்ற நூலில் அதன் ஆசிரியர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது "சென்ட்ரலைஸ்டு சென்டர்" என்ற முறையில் அரசின் அதிகாரத்தைக் குவித்த காரணத்தாலே, அன்றைய தினம் மொகலாயப் பேரரசு வீழ்ந்தது. நான் அதிகாரங்கள் என்று சொல்லுகிற போது, ஒன்றை மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே "சுயாட்சி" என்ற சொல் இல்லை. காரணம் சுயாட்சி என்கிற சொல்லைக்கூட சிலர் தவறாகக் கொச்சைப்படுத்திவிடுகிறார்கள் என்பதற்காகவே இந்த நிதிநிலை அறிக்கையில் தன்னாட்சி என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தன்னாட்சி என்பது வேறு. தனியாட்சி என்பது வேறு. இதற்காகக் கூட நான் இங்கே ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். காரணம் இதற்கும் வேறு ஒரு பொருளைச் சொல்லி இந்த வார்த்தைகளையே காயப்படுத்திவிடுகிறார்கள், வேறு பொருளைச் சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள். எனவே இதற்குப் பொருள் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு நான் உள்ளாகியிருக்கிறேன். தன்னாட்சி என்பது என்ன? தனியாட்சி என்பது என்ன? ஒரு பையன் தன்னுடைய தகப்பனாரிடத்திலே சென்று, "அப்பா, ஒரு நல்ல படம் நடக்கிறது. அதை நான் பார்த்து வர விரும்புகிறேன். இனிய படம் நடக்கிறது. சீக்கிரமாக ஒரு 10 ரூபாய் கொடுங்கள். நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்றால் அது தன்னாட்சி. அதற்கு அந்தத் தகப்பன் "நீ என்ன படம் பார்ப்பது? நீ என்ன 10 ரூபாய் கேட்பது?" என்று கேட்டால், "10 ரூபாய் கேட்டால்தானே தரமாட்டேன் என்கிறாய், பர்சையே எடுத்துக் கொண்டால் என்ன?" என்கிற அளவுக்கு அவனைத் தூண்டிவிடுகிற நிலைமைக்குப் பெயர்தான் தனியாட்சி. இன்றைக்கு நாம் கேட்பது தன்னாட்சிதான். இன்னும் சிலர் சொல்லுகிறார்கள். "அயர்லாந்து நாட்டில் டி-வேலரா அப்படித்தான் கேட்டான். இறுதியில் அது விடுதலையில் போய் முடியவில்லையா? மேற்கு வங்கத்தில் முஜிபூர் ரஹ்மான் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் கேட்டான். கடைசியில் அது விடுதலையில் போய் முடியவில்லையா?" என்று கேட்டு, தங்களின் அறிவு விசாலத்திற்கு விளக்குப் போடுகிறார்கள். உண்மையான நிலைமை அதுவல்ல. இந்தியாவின் ஒன்றியத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. விடுதலைக் களத்தில் ஒருவர் வடக்கே



1983 மார்ச் 14] (திரு. வலம்புரி ஜான்)

மாண்டிருந்தால், தெற்கே ஒருவன் மாண்டிருப்பான். வடக்கே ஒரு பகவத் சிங் இறந்தான் என்றால் இங்கே தெற்கே ஒரு வாஞ்சிநாதன் இன்னுயிரைக் கொடுத்திருக்கிறான். எனவே அந்த உணர்வு இல்லாதவர்கள் அல்ல இங்கே இருப்பவர்கள். நாங்கள் விடுதலைக் களத்திலே பங்கு பெறாத இளைஞர்களாக இருக்கலாம். ஆனால் இந்தியா ஒன்று என்பதிலே நம்பிக்கை உள்ளவர்கள் நாங்கள். ஆனால் இந்தியா ஒன்றா என்று கேள்வி கேட்கிற அளவுக்கு மாநிலங்கள் இன்றையதினம் பழி வாங்கப்படுகின்றன.

(பிற்பகல் 12-20)

இன்றையதினம் அதிக அதிகாரம் தேவை என்று கோருகிறோம். அதிக அதிகாரம் என்று சொல்வதே கூட சரியில்லை என்பதுதான் என்னுடைய வாதமாகும். அரசியல் சட்ட வரலாற்றை நாம் மீண்டும் படித்துப் பார்த்தால், இதை மாற்ற வேண்டுமா வேண்டாமா என்றுகூடத் தோன்றும். காரணம் அதிக அதிகாரம்கூட நாம் கோரவில்லை. உரிய அதிகாரங்களைத் தான் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். It is not more powers; it is due powers. காரணம், அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு திருத்தத்தின் மூலமாகவும், மாநில அரசின் வரம்பிற்குள்ளாக மத்திய அரசு வந்து கொண்டிருக்கிறது. The Centre has made a great in road into the do main of States powers. மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களை எல்லாம் ஒவ்வொரு அரசியலமைப்புச்சட்டத் திருத்தத்தின் மூலமாக அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வி மானியக் குழு என்றிருக்கிறது (யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன்). அதைப்போலவே புட் கார்ப்பரேஷன் என்று இருக்கிறது, பிளானிங் கமிஷன் என்று இருக்கிறது. இப்படி மொத்தம் மொத்தமாக வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், மிக மிக மென்மையான வகையில், நமக்கே தெரியாத வகையில் ஒரு நாள் தேந்தத் தேதி மாநில அரசுக்கான அதிகாரங்களை எல்லாம் மத்திய அரசு, காலவோட்டத்தில், விடுதலைக்குப் பிறகு கைப்பற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதனால்தான் சொல்லுகிறேன், நாம் அதிக அதிகாரங்களைக்கூடக் கேட்கவில்லை. மாநில அரசுகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட அதிகாரங்களை மட்டுமாவது நமக்குத் திரும்பத் தந்தாக வேண்டும். அப்படி மத்திய அரசால் கைப்பற்றப்பட்ட அதிகாரங்கள் திரும்ப மாநிலங்களுக்கே வந்தாக வேண்டும் என்கிறபோது, இதை ஏதோ திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மட்டும்தான் கேட்கிறார்கள் என்று பலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசியல் சட்ட வரலாறு அப்படிச் சொல்லவில்லை. இந்தியாவின் அரசியல் சட்ட வரலாற்றை எடுத்துப் பார்த்தால், இந்தக் கருத்து இப்போதுதான் முதன் முதலாகப் பேசப்படுகிறதா என்பது தெரியும். அரசியல்

(திரு. வலம்புரி ஜான்) [1983 மார்ச் 14

நிர்ணய சபையிலேயே திரு. கே. எம். முன்ஷி இதைப் பேசவில்லையா? நான் இதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் அரசியல் மாநாட்டிலேயே இந்தக் கருத்தை எடுத்து வைக்கவில்லையா? அரசியல் சட்ட வரலாற்றிலே எங்கே பார்த்தாலும் மூன்று வார்த்தைகள் அடிக்கடி சொல்லப்படுவதைப் பார்க்கலாம். அதாவது டிசென்ட்ரலைசேஷன், டெவல்யூஷன், டெமாக்ரடைசேஷன் ஆகிய வார்த்தைகள் தான் அவைகள். இந்த வார்த்தைகள் எல்லாம் தன்னாட்சி என்பதற்கு அவர்கள் தருகிற விளக்கங்களே தவிர வேறு என்ன? அதிகாரங்கள் என்பவை மக்களுக்கு வந்தாக வேண்டும் என்பது மகாத்மாவின் கொள்கைதானே? அது மகாத்மாவின் கொள்கையாக இருக்கும்போது, அது வெறும் படமாக மட்டும் ஓடிக் கொண்டிருக்கலாமா? அந்தக் கட்சிக்காரர்களுக்காவது அவர் பாடமாக இருக்க வேண்டாமா? நான் இன்றைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்தியத் துணைக் கண்டத்தில் மிகவும் மோசமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதன் காரணமாக எங்கே பார்த்தாலும் மத்திய மாநில அதிகாரங்களைப் பரிசீலிக்க ஒரு குழு அமைத்தாக வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், இந்திய அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒரு அரசியல் நிர்ணய சபை வந்தாக வேண்டும். அப்போதுதான் இந்தியாவில் உள்ள மத்திய மாநில ஆட்சிகளின் அதிகாரங்களை ஏற்படுத்துகிற சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இங்கே மீண்டும் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாநிலங்கள் என்பவை வெறும் காலனிகளாக நடத்தப்படுகின்றன என்று கூட சிலராலே சொல்லப்படுகிறது. மாநிலங்கள் காலனிகளாக நடத்தப்படுவது கூட பரவாயில்லை. ஆனால் அவைகள் இன்றையதினம் காலனிகளாக நடத்தப்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதைத்தான் மெத்த வருத்தத்தோடு நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. 1982 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 188 தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழக அரசு உரிமங்கள் கோரியது. ஆனால் 188 தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் கோரினால் 37க்கு மட்டுமே மத்திய அரசாங்கத்தாலே உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றால், இந்த மாநிலம் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் காரணமாகத்தான் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கிற தமிழகம் என்று சொல்லுவதில் நியாயமிருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். 188 தொழில்களுக்கு உரிமங்களைக் கேட்டால், 37 உரிமங்கள் மட்டும் தான் இன்றைக்குக் கிடைக்கிறது. ஒரு காலத்தில் நாம் வடக்கு வாழ்கிறது,



1983 மார்ச் 14] (திரு. வலம்புரி ஜான்)

தெற்கு தேய்கிறது என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் குரல்
எழுப்பினோம். திராவிட இயக்கத்தால் எழுப்பப்பட்ட அந்தக் குரலைக்
கேட்டவர்கள் மேற்கு மேய்கிறது, கிழக்கு கிழிகிறது என்று நம்மைப் பார்த்துக்
கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன?
வடக்கே உள்ள தலைவர்களே சொல்லுகிறார்கள். இந்தியாவில் உத்தரப்
பிரதேசத்தில் முன்னேற்றம் இல்லை, பீகாரில் செழிப்பு இல்லை, தமிழ்
நாடு மட்டும் வாழ்கிறது என்று சொல்கிறார்கள். இப்போது வடக்கு வாழ
வில்லை, தெற்கு தான் வாழ்கிறது என்று இவர்கள் சொல்லிக் கொண்டிருக்
கிறார்கள் என்றால், இது ரீஜனலிசம் அல்லவா? இது மாநில உணர்வை
வளர்க்கவில்லையா? ஆனால் உண்மையில் இன்றைக்கு இருக்கிற விவகாரம்
என்ன என்றால், இந்தியாவில் வடக்குதான் இருக்கிறது. தெற்கு என்கிற
திசையே இல்லை என்பது முடிந்த முடிவாகிவிட்டது. நான் ஏதோ
வேடிக்கைக்காகவோ விளையாட்டுக்காகவோ அல்லது ஆத்திரப்பட்டோ இதை
நான் குறிப்பிடவில்லை. தெற்கு ஒரு திசையே அல்ல என்கிற சூழ்நிலைக்
குச் சிலர் வந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்தியைப் புகுத்துவதில்
இவ்வளவு தீவிரம் காட்டுவார்களா? இந்தி இந்தியத் துணைக் கண்டத்திலேயே
பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது என்று பலராலும் பன்னி பன்னிச்
சொல்லப்படுகிறது. பெரும்பான்மையான அறிவாளர்கள் இதை ஒத்துக்கொள்
கிறார்களா? இந்தி மொழி இந்தியாவில் பெரும்பான்மை மக்களின் மொழியா?
அண்மையில் பீகாரைச் சார்ந்த பாபு ஜெகஜீவன் ராம் அவர்களைச் சந்தித்துப்
பேசிக் கொண்டிருந்தபோது, நான் அவரைப் பார்த்து, "நீங்கள் எந்த மொழி
பேசுகிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "நான் போஜ்" மொழி
பேசுகிறேன் என்று சொன்னார். இந்தியாவில் பெரும்பான்மை மக்களால்
பேசப்படுவது இந்தி மொழி என்கிறார்களே என்று கேட்டேன். "அப்படியல்ல
நாங்கள் பேசுவது வேறு மொழி, இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு
மொழியில் பேசிக் கொண்டிருக்கிறோம். சிலர் கன்னோஜ் மொழியில் பேசு
கிறார்கள். "இப்படி பல்வேறு மொழிகளில் பேசினாலும் கூட, எழுதுவதை
மட்டும் இந்தியில் எழுத வேண்டும் என்ற முயற்சியில்தான் நாங்கள் எங்களை
ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்" என்று குறிப்பிட்டார். அப்படியென்றால்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் எவ்வளவு
என்று பார்க்க வேண்டாமா? அப்படியே அந்த எண்ணிக்கையை வைத்துப்
பார்த்தால்கூட, இந்தி மொழி என்பது எப்படி இந்தியாவின் பொது மொழியாக
இருக்க முடியும்? ஆனால் இந்த நாட்டில் மட்டும்தான் ஒரு சரித்திர
வேடிக்கையே நடந்து கொண்டிருக்கிறது. என்ன அந்த வேடிக்கை என்றால்,
தமிழ் நாட்டில் உள்ள மக்கள் மட்டும்தான் இந்தி மொழியை எதிர்க்கிறார்கள்
என்கிறார்கள். அங்கே இருக்கிற இந்தியிலே அதிக ஆர்வம் காட்டுகிற

(திரு. வலம்புரி ஜான்) [1983 மார்ச் 14

மக்கள்—அவர்களை நான் இந்தி வெறியர்கள் என்றுகூடச் சொல்லமாட்டேன்—அவர்கள் இந்தியை எதிர்க்கின்ற நம்மை எதிர்க்கவில்லை. நம்முடைய தமிழ் மொழியை எதிர்க்கவில்லை. மாறாக, தமிழர்களாகிய நாம் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்தால், அவர்கள் நம்மை எதிர்ப்பதில்லை. அதற்குப் பதிலாக ஆங்கிலத்தை எதிர்க்கிறார்கள். அவர்கள் எதிர்ப்பவர்களை எதிர்ப்பதில்லை. ஆன்றாவது நடமாட்டத்தான் எதிர்க்கிறார்கள். ஆங்கில மொழி ஒன்றுதான் இன்றைக்கு இங்கே இருக்கிற காப்பு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்த ஆங்கிலம் அகற்றப்பட்டால், அந்த வெற்றிடத்தை இந்தி வந்து பிடித்துக்கொள்ளும் என்ற சூழ்நிலையில் அவர்கள் ஆங்கிலத்தை எதிர்க்கிறார்கள். ஆகவேதான் நான் இந்த மாமன்றத்தின் மூலமாக ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 14 தேசிய மொழிகளோடு ஆங்கிலமும் ஒரு தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதற்காக நாம் வழி வகை செய்தாக வேண்டும். நாகாலாந்து மாநிலத்தில் பாராளுமன்ற விவகார அமைச்சராக இருந்த திரு. சட்டன்காந்தி என்பவர் ஆங்கில மொழியை நாகாலாந்து மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஆக்கி வைத்திருக்கிறார். எனவே ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை ஆக்கி வைத்திருக்கும்போது, ஆங்கிலத்தை மட்டுமே தங்களின் தாய்மொழியாகக் கொண்டு பேசுகிற மக்கள் இந்தியாவில் இருக்கிறபோது ஏன் ஆங்கிலத்தை இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்றாக ஆக்கவில்லை என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நியாயமாகச் செயல்பட வேண்டுமென்றால், இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட 14 தேசிய மொழிகளோடு இதுவும் ஒன்றாக இருக்க வேண்டும். இதைச் செய்ய மறுப்பதன் மூலம் நாட்டை எங்கே கொண்டு செல்ல விரும்புகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

காலங்காலமாக இன்னொன்றையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தி படித்தால் இந்தியாவில் வேலை கிடைக்கும் என்கிறார்கள். இதை விட வேடிக்கை வேறொன்றும் இல்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். வட மாநிலங்களில் உள்ளவர்கள் எல்லாவற்றையும் இந்தியில் படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்மைப் பார்த்து நீங்கள் இந்தியைப் படிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் கூட மிக அழகாகச் சொன்னார். "இலையைச் சாப்பிடுவது என்பது வேறு; இலையிலே சாப்பாடு என்பது வேறு". அதை ஒட்டித்தான் நான் இங்கே



1983 மார்ச் 14] (திரு. வலம்புரி ஜான்)

பேசிக் கொண்டிருக்கிறேன். வடக்கே உள்ளவர்கள் இந்தியிலே படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்மைப் பார்த்து இந்தியைப் படிக்கச் சொல்கிறார்கள். இந்தியிலே படிக்கிற மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு பெருமளவுக்கு இருக்கிறதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். உத்தரப் பிரதேசத்திலும் பீகாரிலும், மத்தியப் பிரதேசத்திலும் வேலையற்றவர்களே கிடையாதா? அங்கே இருக்கிறவர்கள் இந்தியைப் படித்திருக்கிற காரணத்தால், அவர்கள் வேலையில்லாப் பிரச்சினை இல்லாமல் இருக்கிறார்களா? அங்கே இருப்பவர்கள் இந்தியிலேயே படித்திருப்பதன் காரணமாக வேலை கிடைத்து விடும் என்றா அர்த்தம்? அவர்கள் இந்தி மொழியிலேயே நுண் கலைகளைக் கற்கிறார்கள், பொறியியலைக் கற்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்மைப் பார்த்து இந்தியைக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். இந்தியாவின் வரலாற்றைப் பார்த்தால், ஒரு உண்மை நமக்குப் புரியும். இந்தியாவின் தலைநகராக கல்கத்தா ஒரு சமயத்தில் இருந்தது. அதுவே நமது நாட்டின் தலைநகராக இருந்திருந்தால், நாம் தெரிந்திருக்க வேண்டிய மொழி வங்காளியாகும். திருவனந்தபுரம் தலைநகராக இந்த நாட்டுக்கு இருந்திருந்தால், தற்போது நாம் தெரிந்திருக்க வேண்டிய மொழி மலையாளம். இப்படி வரலாற்றின் விபத்தின் காரணமாக இந்தியாவின் தலைநகராக டெல்லிப் பட்டணம் ஆனது. இதன் காரணமாக அந்த டெல்லிப் பட்டணத்தைச் சுற்றியிருப்பவர்கள் பேசுகிற மொழியைத் தமிழ் மக்கள் மீது சுமத்தப் பார்க்கிறார்கள். இதன் காரணமாக இந்தியை நம்மீது திணிக்கப் பார்க்கிறார்கள் என்பதுதானே உண்மை. இன்னும் சிலர் சற்று சுகமான வாதத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்திக்கு தமிழ் நாட்டில் மட்டும்தான் எதிர்ப்பு இருக்கிறது என்கிறார்கள். அவர்கள் தயவு செய்து கேரளத்திற்குச் சென்று பார்க்கட்டும். அங்கே எந்த அளவுக்கு அனல்—நெருப்பு காணப்படுகிறது என்பதை அறிய முடியும். மேற்கு வங்கத்தில் ஒரு நிலை இருக்கிறது. காரணம் எந்தக் கவலைக்கும் உட்படாமல் மொழியைத் திணிப்பதில் அல்லது பரப்புவதில் அவர்கள் வேகம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சொல்லுகிற மிக மோசமான வாதம் ஒன்றும் இருக்கிறது. ஒரு மொழி மக்களை ஒன்றுசேர்க்கும் என்று சொல்லுகிறார்கள். வரலாற்றை எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு தவறாகப் படித்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்கள் தவறாகப் புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க முனைகிறார்கள். இதைவிட ஒரு மோசமான வாதம் இருக்க முடியாது. எந்த ஒரு நாட்டினையாவது ஒரு மொழி ஒன்று சேர்த்திருக்கிறதா?

. . . . . . . . . . . . . .

[1983 மார்ச் 14

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று பேச வேண்டிய உறுப்பினர்கள் பேசி முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வலம்புரி ஜான் : பஞ்சாபில் நடைபெற்ற 'எக்ஸ்பெரிமெண்ட்' பற்றி நான் சொல்லவில்லை. நான் வணங்கி வற்புறுத்திச் சொல்வதெல்லாம் மொழி மக்களை ஒன்று சேர்க்கத் தவறியது என்பதுதான். ஆந்திர மாநிலத்தில் தெலிங்கானா வேண்டும் என்று கிளர்ச்சி வந்தது. தெலிங்கானா வேண்டும் என்று கிளர்ச்சி வந்தபோது அங்குள்ள மக்கள் எல்லாம் தெலுங்கைப் பேசியவர்கள்தான். தெலிங்கானா நாடு உருவாகவில்லையே தவிர, அந்த நாட்டு மக்களை மொழி ஒன்று சேர்க்க முடிந்ததா ? அவர்களை அந்தக் கிளர்ச்சிகளிலிருந்து தவிர்த்ததா என்றால் இல்லை.

மராட்டியத்திலே பார்த்தோம், மராத்வாடா வேண்டும் என்று கேட்டதை. அவர்களுக்கு இடையிலே பொருளாதாரக் காரணங்கள் வந்ததே தவிர, மராட்டிய மொழி பேசுபவர்கள்தானே, நாம் ஏன் வேறு மாநிலம் கேட்பது என்று கருதக்கூடிய அளவிற்கு அந்த மொழி அவர்களை ஒன்று சேர்க்கவில்லை. ஆகவே நாம் பார்ப்பதெல்லாம், ஆந்திராவிலே மொழி மக்களை ஒன்று சேர்க்கவில்லை, மராட்டியத்திலே அந்த மக்களை மொழி ஒன்று சேர்க்க இயலவில்லை என்பதுதான். ஒரு மாநில மக்களைக்கூட ஒன்று சேர்க்க இயலாத ஒரு மொழி இந்தியா முழுவதிலும் ஒன்று சேர்க்கப் பயன்படும் என்று சொல்லும்போது, என்ன சொல் குறித்து அதைச் சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. கலங்கத்தை உருவாக்குகிற முயற்சி இது. மொகலாய தர்பாரைப் போல உத்தரவுகளைப் போடுவதும், மக்களை மதியாமல் நடப்பதும் ஏன் என்றால், தேசிய நீரோட்டம் என்று பேசுகிறார்கள். தமிழ் நாடு ஒரு பகுதியில்லையா ? ஆந்திரா ஒரு பகுதியில்லையா ? கர்நாடகம் ஒரு தேசம் இல்லையா ? அங்கெல்லாம் தேசிய நீரோட்டங்கள் இல்லையா ? ஹிஸ்டாரிக்கல் ஆக்சிடெண்டாக இந்தியாவுக்கு தலைநகர் ஏற்பட்டதைப் போல, வரலாற்று விபத்து என்று சொல்கிறார்களே, அதைப் போல இந்தி ஆட்சிமொழியாக வேண்டுமா, வேண்டாமா என்ற நிலை வந்தபோது வாக்குகள் பாதி பாதியாக விழுந்தன அதனால் டை வந்தது. அப்போது தலைவராக இருந்தவருக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அன்றைக்குத் தலைவராக இருந்தவர் பாபு இராசேந்திர பிரசாத். அவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் இந்தி பேசுகிறவர் என்ற காரணத்தாலும் இந்திக்கே வாய்ப்புக் கிடைத்தது. ஒரே ஒரு வாக்கால், வரலாற்று விபத்தால்



(திரு. வலம்புரி ஜான்)
1983 மார்ச் 14]

வந்த மொழி, திணிக்கப்படுவது என்றால், அதிலே என்ன நியாயம் இருக்க முடியும் ?

காலையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் சொல்லுகிற போது நீதிமன்றங்களைப்பற்றி ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தையை மாண்புமிகு தலைவர் அவர்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயிருந்து இரண்டு, மூன்று வரிகளை மாத்திரம் வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

"Having conferred freedom of speech on the Legislators, the said freedom is intended to be absolute and unfettered. Similar freedom is guaranteed to the legislators in respect of the votes they may give in the Legislature or any committee thereof. In other words, even if a legislator exercises his right of freedom of speech in violation, say, of article 211 of the Constitution, he would not be liable for any action in any Court.

உச்ச நீதிமன்றத்தில் இறுதியாக வந்த தீர்ப்பின் வாசகம் இது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சட்டமன்றத்திலே பேசும் போது இதைத்தான் சொன்னார்கள். அதனாலே அவமதிப்பு வழக்குகள் எல்லாம் வருகின்றன, வெளியே கூக்குரல் கிளம்புகிறது. நான் பேசுவதைக் கூட, வழக்கு மன்றத்தை அவமதிப்பதாக எடுத்துக்கொண்டாலும், எனக்கு அக்கறை இல்லை. உச்சநீதிமன்றத் தீர்ப்பு சொல்லுகிறது. இந்தக் கருத்தைச் சொல்லுவதற்கு உச்சநீதிமன்றத்திற்கு உரிமையுண்டு. இன்னும் இந்த நாட்டிலே பழமையான சிந்தனை இருக்கிறது. ஏதோ நீதிபதிகள் எல்லாம் தேவதூதர்களைப் போலவும், தீர்க்கதரிசிகளைப் போலவும் நினைக்கிறார்கள். இளைஞனாக இருப்பதால் நான் ஆத்திரப்பட்டு இப்படிச் சொல்லவில்லை.

இந்த நாட்டில் வரலாறு படைத்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு முறை திரு. எம். சி. சக்ளா அவர்களை அழைத்தார்கள். திரு. எம். சி. சக்ளா அவர்கள் தன்னுடைய "ரோசஸ் ஆஃப் டிசம்பர்" என்ற புத்தகத்திலே "என்னை பண்டித நேரு அழைத்தார். போவதற்கு எனக்கு மனதில்லை. நாட்டின் தலைவராக, பிரதமராக இருப்பதால், அவர் அழைக்கிறபோது சென்றேன்" என்று சொல்லுகிறார். அன்றைக்குத் தொடங்கி நீதிபதியாக இருந்த திரு. சுப்பாராவ் அவர்களையும், திரு. நஸ்ரூல் இஸ்லாம் அவர்களையும் பார்க்கிறோம். அரசியல் எண்ணம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அரசியல் எண்ணம் கொண்டவர்கள் உடனே தேர்தலில் குதித்துவிடுகிறார்கள்.

அரசியல் எண்ணத்தோடு நீதிபதிகள் இருக்கிறார்கள். சட்டப் புத்தகம் சின்னதாக இருக்கிறது. நீதிக் குறிப்பு பெரிதாக இருக்கிறது. ஒவ்வொரு நீதிபதியும் நீதிக் குறிப்புகளை எழுதுகிற நேரத்தில் அவருடைய சிந்தனை, அவருடைய அணுகு முறை, அவருடைய ஆசைகள் அவருடைய விருப்பு, வெறுப்புகள் நிச்சயமாக அதிலே இருக்கின்றன.

முதலமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் வேறு ஒன்றுமில்லை. முக்கியமாக அரசுக்கென்று திட்டங்கள் வருகிறபோது, நீதிமன்றங்கள் குறுக்கே நிற்கின்றனவே, குறுக்கே நிற்பது போன்று தோன்றுகிறதே என்று மென்மையாகச் சொன்னார்கள். ஜஸ்டிஸ் பகவதி அவர்கள் எனக்கு பேட்டி கொடுக்கும்போது ஒன்றைச் சொன்னார்கள். அது "சண்டே ஸ்டேண்டர்ட்," "இந்தியன் எக்ஸ்பிரஸ்" போன்ற பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது. இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலே உள்ள பிரசைடிங் ஜட்ஜ், ஜஸ்டிஸ் பகவதி, "இன்றைக்கு நாட்டிலே எப்படி நிலபுலத்துவம் இருக்கிறதோ அதைப் போலவே நீதிமன்றத்திலே நிலப்புலத்துவம்— Judicial feudalism இருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார். வழக்கு மன்றத்திலே நீதிபதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிற ஒருவர் "மக்களுக்காக தயாரிக்கப்படுகிற திட்டங்களுக்கெல்லாம் நீதிபதிகள் எதிராக இருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார். ஜஸ்டிஸ் கிருஷ்ண ஐயர் அவர்கள் வெளியே வந்த போது ஊர் தோறும் சொல்லுகிறார்கள். கடந்த மாதம் வழக்கறிஞர்கள் கூட்டத்திலே பேசும்போது, Judicial autocracy என்று அடித்துச் சொன்னார். நீதிபதிகள் எல்லாம் சொன்னது வெளியே வருகிறது, இந்தியாவினுடைய வணக்கத்திற்குரிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் "லா இன்ஸ்டிட்யூட்டில்" பேசுகின்றபோது இதே கருத்தைச் சொன்னார்கள். அவர் மென்மையாகச் சொல்ல இயலாவிட்டாலும், தெளிவாகச் சொன்னார்கள். "இந்த அரசு நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. முற்போக்கான திட்டங்கள் வருகின்றன. ஆனால் திட்டங்களுக்குத் துணையாக இருக்க வேண்டிய நீதிமன்றம் ஏதோ மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து வந்த ஆதிவாசிகளைப் போல தொடர்ந்து குறுக்கே நிற்கிறது" என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

இன்றைக்குக் கூச்சலும், குழப்பமும் வருகிறது. ஒரே கருத்தை உச்சநீதிமன்றத்திலே இன்றைக்கு இருக்கின்ற, வாழ்ந்து கொண்டிருக்கிற நீதிபதி பகவதி சொல்லலாம், மாபெரும் ஜூரிஸ்ட் கிருஷ்ண ஐயர் சொல்லலாம், வணக்கத்திற்குரிய இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லலாம். ஆனால் அதே கருத்தை அமைதி-



மென்மையாக சட்டப் பாதுகாப்போடு—நான் படித்துக் காட்டிய தீர்ப்பின்படி சட்டத்தினுடைய பாதுகாப்பு இருக்கிறது—ஒரு முதலமைச்சர் சொல்லக் கூடாது என்று கூச்சல் வருமானால், அரசியல் வர்ணம் பூசப்படுமானால், அதற்கு என்ன அர்த்தம்? இதிலே தேசிய நீரோட்டம் இல்லையா? சொல்லப்பட்ட கருத்தின் மீது வெறுப்பு இல்லை, ஆனால் சொல்பவர் மீது வெறுப்பு என்றால், அவர்களை மக்கள் எப்படி பாராட்டுவார்கள், என்ன மரியாதையைத் தருவார்கள் என்று அந்தப் பெருமக்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே நான் சொன்னதெல்லாம் ஒன்றுமல்ல. ஆட்சி செய்கின்ற கட்சியினர் எவ்வளவோ சிரமத்திற்கு மத்தியில் பாடுபடுகிறார்கள். பலபேரும் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது இதைக் கொச்சைப்படுத்தும் வகையில்; வானம் பொய்யவில்லை, வறட்சி நிலவுகிறது, தண்ணீர் இல்லை, தாகம் எடுக்கிறது, என்ன பண்பாடு, என்ன கலை என்றெல்லாம் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகம் அரேபியாவைப் போல ஆவதைப் போலவும், செந்தமிழ் நாடு சகாராவைப் போல மாறுவதைப் போலவும் கருத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றைக்கும் மக்கள் மொழி உரிமைக்காக இங்குள்ள திராவிடர் இயக்கம் போராடுகிறது. இதைச் சொல்லுகிற நேரத்தில் எதிர்க் கட்சிகளில் இருக்கிறவர்களில் பல பேர் இதயத்தோடு இருக்கிறார்கள், சிலபேர் மாத்திரம் புண்ணோடு இருக்கிறார்கள், அந்தக் கனிவோடு இருக்கிறவர்களை வணங்குகிறோம்.

இயேசுநாதரே முதலமைச்சராகி, நபிகள் நாயகம் நிதியமைச்சராகி, வர்த்தமான மகாவீரர் வருவாய்த்துறை அமைச்சராகி, கன்ஃபூஷியஸ் கல்வியமைச்சராகி, புத்தர் பொதுப்பணித் துறை அமைச்சராக ஆகியிருந்தாலும், குற்றம் சொல்லுகிறவர்கள் சொல்லிக்கொண்டேதான் இருப்பார்கள். ஆனால் இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சி பொன்னாட்சி. இந்த ஆட்சி மீது என்ன குற்றங்களைச் சொன்னாலும், இது மக்களாட்சி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி. இன்றைக்கு இவ்வளவு மோசமான சூழ்நிலையிலும் கூட ஒரு ஆட்சி வெற்றி பெற இயலும் என்ற சரித்திர முத்திரை படைத்த ஆட்சி. ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்று கூறி அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் இந்த அரசாங்கத்தின் ஆண்டு வருவாய்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளைப் பார்க்கிறபோது, தமிழ் நாட்டினுடைய மொத்த வருவாய்—'கன்சாலிடேட்டட் ஃபண்ட் ஆஃப் தமிழ் நாடு" என்ற தலைப்பில் வெளியீடு 23-ல் பக்கம் 14-ல் 2,230 கோடியே 32 இலட்சம் ரூபாய் என்றும், அதைப் போலவே 'கன்சாலிடேட்டட் ஃபண்டு ஆஃப் தமிழ்நாடு'—டிஸ்பர்ஸ்மென்ட் என்ற தலைப்பில் 2,425 இலட்சம் ரூபாய் செலவு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால், தொகு நிதியில் நிகரப் பற்றாக்குறை ரூபாய் 194,83 இலட்சமாக இருக்கிறது. நானும் கடந்த பத்தாண்டு காலமாக சட்டமன்றத்திலே, மேலவையிலே நிதி அமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற புள்ளிவிவரத்தை ஒழுங்காகப் படித்துக் கொண்டிருக்கிறேன். எந்தக் காரணத்தாலோ இந்த ஆண்டுதான் பட்ஜெட் இரண்டுவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பு என்று சொல்லமாட்டேன். அதிகாரிகள் எவ்வளவு கவனக் குறைவாக புள்ளிவிவரங்களைத் தயாரிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என் கையில் இருப்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகிரிசாமி அவர்கள் பெயரோடு அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற தாள்கள். இன்னுமொரு பக்கத்திலே நிதியமைச்சர் அவர்கள் படித்த புத்தகம். இந்த இரண்டுக்கும் இடையிலே எவ்வளவு முறைகேடுகள், தவறான புள்ளிவிவரங்கள், ஆயிரக்கணக்கில் அல்ல இலட்சக்கணக்கில் அல்ல, கோடிக்கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, அவைக்கு உண்மையான தகவலைக் கூட ஓர் அரசாங்கம் கொடுக்க முடியாமல்

(பிற்பகல் 12-40)

இருக்கிறதோ என்று சந்தேகப்படுகிறேன். என்னவென்று சொன்னால், புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் தயாரிக்க முடியாது. அரசாங்கம் தான் தயாரிக்க முடியும். அவர்கள் சொல்வதைத் தான் நாங்கள் ஏற்க வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வதைவிட வேறு ஆதாரம் நாம் சொல்ல முடியாது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற அந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளி விவரத்தையும் சட்ட மன்றப் பேரவை செயலாளரால் மானிய கோரிக்கைகளில் வழங்கப்படுகின்ற புள்ளிவிவரமும் ஒத்துவரவில்லை. உண்மையான புள்ளிவிவரம் எது என்பதை, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்பற்றி விவரமாக விளக்குவது நல்லது என்று நினைக்கிறேன். ஒரு தலைப்பில் நம்முடைய செயலாளர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்தில் 10,38,57,000 ரூபாய் தொகை செலவிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் 10,38,72,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள்., அதை 103ஆம் பக்கத்திலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோலவேதான் 'மாநில சட்டமன்றம்' என்ற தலைப்பின் கீழ் கோரிக்கையில் 1,32,78,000 ரூபாய் நிதி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நிதி அமைச்சர் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்தில் 1,36,48,000 ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். அதாவது 3.7 லட்சம் ரூபாய் வித்தியாசம். மானியக் கோரிக்கை 8-ல் தரப்பட்டிருக்கிறது. மாநில ஆட்சி தலைமைச் செயலகத் துறை பணியாளர் என்று இருக்கிறது. அதற்கு ரூ. 22,14,91,000 மான்யம் வேண்டும் என்று செயலாளர் சொல்கின்றார். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்தில் ரூ. 23,47,11,000 என்று சொல்கிறார்கள். அதாவது வித்தியாசம் ரூ. 1,32,70,000. அதுபோலவே நிதி நிர்வாகம் என்ற தலைப்பில் மான்ய கோரிக்கை 14-ல் ரூ. 11,12,31,000 என்று செயலாளர் குறிப்பு சொல்கிறது. ஆனால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தில் 12.57 லட்சம் சொச்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது வித்தியாசம் ரூ. 1.45 கோடி அளவுக்கு இருக்கிறது. இதெல்லாம் இப்போது காட்டக்கூடிய சில ஆதாரங்கள். இன்னும் வேடிக்கை என்னவென்றால், மான்யக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் என்ற தலைப்பில் ரூ. 17,20,000 செலவிடப்பட வேண்டும் என்று செயலாளர் குறிப்பு சொல்கிறது. ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த அந்தப் புத்தகத்தில் 176 ஆம் பக்கத்திலே ரூ. 8,76,20,000 என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது வித்தியாசம் மட்டும் ரூ. 8,59,00,000. இப்படி ஒரே அரசாங்கத்தில் இரண்டு நிர்வாகம். சட்டமன்றத் துறை, நிதித் துறை, இந்த இரண்டு இலாக்காக்களிலே இவ்வளவு வித்தியாசம் வரும் என்று சொல்ல முடியாது. இந்தப் புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு நாம் என்ன பேச முடியும்? எனக்குத் தெரியவில்லை. 34 மான்ய கோரிக்கைகளில் இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் வெளியாகி இருக்கின்றன. பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல் என்ற தலைப்பில் பெருந்தலைப்பு 603 எண்ணில் ரூ. 227,98,56,000 பெருந்தலைப்பில் 604 எண்ணில் ரூ. 61,19,58,000 ஆக ரூ. 289,18,14,000 ஆயிரத்திற்கு மான்ய கோரிக்கைபற்றி செயற் குறிப்பில் சொல்லப்படவில்லை. இவைகளுக்கெல்லாம் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கமான விவரங்களைத் தந்தால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1983 மார்ச் 14

அதுபோலவே எதிர்க் கட்சியைப் பொறுத்த வரையில், யார் எப்படியெல்லாம் இந்த அரசின் வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் சட்டமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிதி பாவலாக் பயன்தரவேண்டுமானால், அந்தத் தொகை குழந்தைகளுக்குப் பயன்பட வேண்டுமென்றால், அதை அந்தக் குழந்தைகளின் தாய்க்குக் கொடுங்கள். பெற்ற தாயைவிட வேறு யாரும் அந்த அளவுக்குக் கவலைப்படமாட்டார்கள் என்றுதான் சொன்னார்களே தவிர, அந்தத் திட்டமே கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் சொல்லவில்லை.

கிராமங்களிலே குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்றது என்று நிதி அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும், இந்தக் குறைகள் எப்போது ஏற்பட்டன, அதற்கு அரசாங்கம் எப்போது நடவடிக்கை எடுக்கிறது என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே மத்திய அரசு தேவையான உணவுப் பொருள்களைத் தரவில்லை, அதனால் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்றும் அதற்காக எங்கள் கட்சிக்காரர்கள் யாரும் இருக்கக்கூடாது என்றும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் முதலமைச்சர் உண்ணாவிரதம் இருக்கத்தான் வேண்டும் என்று நினைக்கவில்லை. ஒரு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு ஊக்கத்தோடு சொல்லும்போது அவர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தேவை இல்லை. ஆனால் அதற்கு இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தால், இன்றையதினம் மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றுவதாகச் சொன்னார்கள். எங்கே ஆதரிக்கவேண்டுமோ அங்கே ஆதரிக்கிறோம், எங்கே எதிர்க்கவேண்டுமோ அங்கே எதிர்க்கின்றோம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். உறவு இருந்தாலும் சரி, உறவு இல்லாவிட்டாலும் சரி. அது வேறு விவகாரம். இன்றையதினம் 75 ஆயிரம் டன் உணவு தேவை என்று சொல்கிறோம். திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் வருவார்கள். அவர்கள் வந்து பார்ப்பார்கள். பிப்ரவரி 25 ஆம் தேதிக்குள்ளாக உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்று அறிவிப்பு கொடுத்துவிட்டு, 5 ஆயிரம் டன் தான் வரும் என்ற செய்தி வருகிறது. அதற்கு கூட்டத்தை நாட்டையே இந்த அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது? உணவுப் பொருள்களை



1983 மார்ச் 14] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

வேண்டும். நாட்டிலே இருக்கக்கூடிய பற்றாக்குறையைப் போக்க வேண்டும். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும், இந்த அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம். ஏதோ உண்ணாவிரதம் இருந்தால், அரிசி வந்துவிடும் என்று எதிர்பார்த்தோம். அப்படியும் 5 ஆயிரம் டன் அரிசிதான் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையைக் கண்டித்து இந்த அரசு எடுக்கப்போகின்ற நடவடிக்கைக்காகக் காத்திருக்கிறோம். என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று சொல்லவில்லை. அதை விட்டுவிட்டு எதிர்க் கட்சியைக் குறைகூறிக்கொண்டிருக்கிறார்கள். 75 ஆயிரம் டன் அரிசி கேட்டால், இப்படிச் சொல்கின்றார்களே என்ன என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று எதிர்க் கட்சியைக் கேட்டால், என்ன செய்வது என்று நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

தமிழ்நாடு உள்ள இயக்கங்களில் சிறப்பாக இயங்குகின்ற இயக்கம் கூட்டுறவு இயக்கம். அவர்களை நாம் நம்பலாம். அவர்களை விட்டுவிட்டு சில இடத்திலே தனியாரிடத்திலே அரிசி வாங்குவதற்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி சட்ட மன்றத்திலே கூட பேசியிருக்கிறார்கள். அரியானா, பஞ்சாப் போன்ற இடங்களுக்குப் போகிறார்கள். இந்த வறட்சிக் காலத்திலே அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு தயவுசெய்து இடம் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுபோலவே குடிநீர்ப் பஞ்சம். இங்கே அவர்கள் ஊக்கத்தோடு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்கின்ற காரணத்தினாலே, இந்த நாட்டில் வறட்சி இருக்க வேண்டும், ஆட்சியிலே இருப்பவர்கள் அப்போதுதான் கீழே இறங்குவார்கள் என்ற சின்ன புத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இல்லை. இப்படி விழுந்து விழுந்து சொல்கின்றோம். இப்படி நினைவுபடுத்துவதன் மூலம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், அந்த நடவடிக்கைகள் மூலம் இந்தப் பிரச்சினை தீராதா என்ற அடிப்படையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பிரச்சினையை அணுகுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குடிநீர்ப் பஞ்சம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக் காட்ட வேறு பத்திரிகைகளை ஆதாரம் காட்டுகிறேன். ஆளும் கட்சி, அரசாங்கம் ஆதரவு கொடுக்கும் 'தினமலர்' என்ற அந்தப் பத்திரிகையிலேயே சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டம் வறட்சி நிலவரம் என்று தலைப்பு கட்டிக்கொண்டு போய். . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆதரிக்கின்ற பத்திரிகை என்று சொல்கிறார். அது அந்தப் பத்திரிகையினுடைய ஸ்டான்ட்டை பாதிக்கும். அது ஒரு நடுநிலைப் பத்திரிகைதான். எல்லோருக்கும் விளம்பரம் கொடுக்கிறோம். அதுபோல் அவர்களுக்கும் கொடுக்கிறோம். அரசு பரிசீலித்துத்தான் கொடுக்கிறது. அது வேறு விஷயம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: எந்தப் பத்திரிகைக்கு எப்படி விளம்பரம் கொடுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அது வேறு விஷயம். ஆளும் கட்சியினுடைய ஆசி அந்தப் பத்திரிகைக்கு உண்டு. அதற்கு ஆசீர்வாதம் இல்லை என்று சொன்னால், அதைப்பற்றிப் பரவாயில்லை. அந்தப் பத்திரிகையிலே சொல்லியிருக்கிறது. பெண்கள் 1½ மைல் தூரத்திலே இருக்கக்கூடிய கிணற்றிலேயிருந்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அங்கேயுள்ள மக்கள் வறட்சியின் காரணமாக பிழைப்பற்று சென்னைக்கும் பெங்களூருக்கும் போகிறதாகச் சொல்கிறார்கள். இன்னும்கூட பெங்களூர் பஸ் மூலம் பெண்கள் போகின்றார்கள் என்று தெரிகின்றது. பணியைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் போட்டதாலே அது

(பிற்பகல் 12-50)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

உண்மை என்று சொல்லவில்லை. ஒரு மாதத்திற்கு முன்னாலேயே நான் சொன்னேன். வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் பெங்களூர் நோக்கிச் செல்லுகிறார்கள். இந்த மாநிலத்தில் எந்தப் பகுதிக்குப் போனாலும் பிழைக்க வழியில்லை, எனவே பக்கத்து மாநிலத்துக்குப் போகலாமென்ற நிலைமை உருவாகியிருக்கிறது என்று சொன்னேன். உடனே நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன். இதுவரை நடவடிக்கை இல்லை. நமது அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள், 10,000-க்கு அதிகமாகப் பம்புகள் போட்டிருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். எங்கே போட்டிருக்கிறார்கள்? ஆரியலுக்காகச் சொல்லவில்லை. மாவட்ட வாரியாகச் சொல்லுங்கள். குடிநீர் வடிகால் வாரியம் 46 கோடி ரூபாய் அளவிற்கு வேலை செய்திருக்கிறது என்று சொல்லும்போது, வட ஆற்காடு மாவட்டத்தில் 5,000 துளைக் கிணறுகள் போட்டிருக்கிறார்கள், செங்கை மாவட்டத்தில் 3,000 துளைக் கிணறுகள் போட்டிருக்கிறார்கள், சென்னை நகரில் 5,000 துளைக் கிணறுகள் போட்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் சொல்லுங்கள். மொத்தமாகச் சொல்லுகிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம், அதன்



தலைவரின் கீழ் எந்தெந்த ஊர்களில் வேகமாகச் செயல்பட்டது என்பது தெரியும். வறட்சி எல்லோருக்கும் வந்திருக்கிறது. சென்னையிலே தண்ணீர் இல்லை. 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கிறீர்களே என்று கேட்டால், இப்போது மட்டுமா கொடுக்கிறோம், 1974-ல் கொடுக்கவில்லையா என்று சொல்லுகிறார்கள். அமைச்சராக இருப்பதால் எதையும் பேசுவதா? 1974-லே சென்னையிலே இருந்திருக்கிறோம். இப்போது சென்னையிலே 2 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுப்பதுபோல அப்போது கொடுக்கப்பட்டதா?. . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மேலவை மாற்றுத் தலைவரவர்களே, 1975 பிப்ரவரி மாதத்திலிருந்து ஆகஸ்டு மாதம் வரையில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து முழு புள்ளிவிவரத்தையும், நான் இந்த அவையில் சொன்னபடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். நேற்றைய முன்தினம் கொடுத்திருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவரவர்களே, முதலிலே 1974 என்று சொன்னார்கள். இப்போது 1975 க்கு வந்திருக்கிறார்கள் பரவாயில்லை. நான் சொன்னதெல்லாம் தி.மு.க. ஆட்சியில் நடக்கவில்லை. தி.மு.க. ஆட்சியில் நடந்ததாகவே வாதத்திற்கு வைத்துக்கொள்வோம். அதையே செய்ய வேண்டுமா? அதையேதான் செய்யப் போகிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அப்போது நாள் ஒன்றுக்கு 35 மில்லியன் காலன் கொடுத்தார்கள். இப்போது 45 மில்லியன் காலன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவரவர்களே, எவ்வளவு கொடுத்துக் கொண்டிருக்கிறோமென்பதல்ல. இன்றைய தினம் பல பகுதிகளில் தண்ணீர் இல்லை. 25, 26 ஆம் வட்டங்களுக்குச் செல்லட்டும். ஆட்சியில்தானே இருக்கிறார்கள். மாலையே போகட்டும். 2 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறோமென்று சொல்லுகிறார்கள். பல நாட்களாக அந்தப் பகுதிகளில் தண்ணீர் வரவில்லை. அதிகாரிகளைக் கேட்டால், மேடாக இருக்கிறது, அதனால் தண்ணீர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். குழாயில் தண்ணீர் வரவில்லை. டாங்கர்கள் வைத்திருக்கிறார்களே, அது பங்களாக்கள் இருக்கும் பகுதிகளுக்குப் போவதற்கு பதிலாக குடிசைப் பகுதிகள் இருக்கும் இடங்களுக்குப் போகக்கூடாதா? அங்கே உள்ளவர்கள் அதிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ள மாட்டார்களா? அங்கே தண்ணீர் கிடைக்காமல் மக்கள்

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1983 மார்ச் 14

எந்த அளவிற்கு அவதிப்படுகிறார்கள் என்பதை தினமணியில் படம் பிடித்துப் போட்டிருக்கிறார்கள். தண்ணீர் வரப்போகிறது என்று 25 மீட்டர் நீளத்திற்கு மக்கள் நிற்கவில்லை, பாத்திரங்கள் நிற்கின்றன. தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தால், அப்போது தண்ணீரைப் பிடித்துக்கொள்ளலாம் என்று 25 மீட்டர் நீளத்திற்கு பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்ட காட்சியை தினமணிப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இதைச் சொல்வதற்குக் காரணம்—மழை பெய்யவில்லை, ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு நீங்கள் தான் காரணம் என்று சொல்லவில்லை. மழை பெய்யவில்லை என்று சொல்லியே, மக்களை வாட்டுவது நியாயம்தானா? அதற்கு ஒரு அரசு தேவைதானா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜூன் மாதத்தில் பருவ மழை பெய்தால்தான், மின் வெட்டு நிலைமை சீர்திருத்தும் என்று சொல்லுகிறார்கள் இங்கேயுள்ள புனல் மின் திட்டங்களில் நீரில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். அனல் மின் நிலையங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? நிலக்கரி இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? தூத்துக்குடி அனல் மின் நிலையம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம்—இப்படி இருக்கக் கூடிய அனல் மின் நிலையங்களிலே இன்றைய தினம் 45 சதவிகிதம் மின்சாரம் உற்பத்தியாவதற்கு பதிலாக முழுமையாக 100 சதவிகிதம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா என்பதை வல்லுநர்களை வைத்து ஆராயும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கேகூட தேசியத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. தேசியம், தேசியம் என்று சாதகமான நிலையில் பேசுவதும், இப்படி ஒரு மாநிலம் வேதனையோடு இருக்கும்போது, யாராக இருந்தாலும், கண்டிக்கிறோம். 16 மாநிலங்களில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறதா என்றால், இல்லை. முழுமையாக மின்சாரப் பயனை அடைகிறார்கள். அங்கே மின்சார வெட்டே கிடையாது. அதைப் போலவே கேரளாவிலே கிடையாது. கேரளாவிலே நம் அளவிற்கு இல்லை. கொஞ்சம் அறிவித்திருக்கிறார்கள். கர்நாடகாவிலே மின் வெட்டு இருக்கிறது. 16 மாநிலங்களில் இல்லை. தேசியம் என்பது உண்மையானால், அதில் யாருக்காவது நம்பிக்கை இருந்தால் . . . .

**திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவரவர்களே, மின் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், இன்னமும் குறிப்பாகச் சொல்லப்போனால், டெல்லியைச் சுற்றியுள்ள அத்தனை மாநிலங்களிலும் மின் பற்றாக்குறை இருக்



1983 மார்ச் 14] (திரு. க. இராமமூர்த்தி)

கிறது. சம்மிட் கான்பெரன்சுக்காக வேறு நடவடிக்கைகள் எடுத்து, மின் பற்றாக்குறையிலிருந்து தப்பினார்கள். இந்தியாவில் பல மாநிலங்களில் மின் பற்றாக்குறை கடுமையாக இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 10 நாட்களுக்கு முன்னால் மத்திய மின்சார அமைச்சர் அவர்கள், நாட்டிலே மின்சார நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள் அப்படியிருந்தாலும் கேட்கிறேன். தமிழ் நாட்டில் 60, 70 சதவிகிதம் மின் வெட்டு; மற்ற மாநிலங்களில் 15 சதவிகிதம்கூட இல்லை என்றால், தேசியம் என்று சொல்லும்போது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றாக. . .

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய ஆட்சி மின்சாரத்தை உற்பத்தி செய்து பங்கீடு செய்யவில்லை. ஆகவே மத்திய ஆட்சி அதைப் பங்கீடு செய்யுமளவிற்கு நாம் கொடுத்தால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த மாதிரி சில பிரச்சினைகளைத் தீர்க்க சென்ட்ரல் கிரிட் மின்சாரத்தை வழங்க ஒரு கருத்தரங்கு நடத்தி, மத்திய அரசு சார்பாக ஒரு கருத்து சொல்லியிருக்கிறார்கள். பற்றாக்குறை மாநிலங்களுக்கு மின்சாரம் கொடுக்கும்போது, மத்தியத் தொகுப்பிலேயிருந்து தந்தால், ஏற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்டிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** சென்ட்ரல் கிரிட்டை இந்த மாநிலம் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. இருந்தாலும் வேறு வழியில்லை, ஏற்றுக் கொள்கிறோமென்று மின் துறை அமைச்சரவர்கள் சொன்னதாகக் கருதுகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** இதற்கு ஒரு மத்தியத் தொகுப்பு வைத்துக் கொள்ள வேண்டியது தானே!

**திரு. க. இராமமூர்த்தி :** உங்கள் தன்னாட்சி, சுயாட்சி கொள்கை எல்லாம் இங்கேதான் முடிவடையும் என்றால் சந்தோஷம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இதிலே தன்னாட்சி வராது. நிச்சயமாக வராது. எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதற்காக மத்திய அமைப்பு வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, சில மாநிலங்களை ஆட்டிப்படைக்க அல்ல,

[1983 மார்ச் 14

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மத்திய அரசு உற்பத்தி செய்யவில்லை, அதனால் மாநில அரசுதான் பொறுப்பு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்கிறார்கள். நெய்வேலியில் மத்திய அரசு தான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. கல்பாக்கத்தில் மத்திய அரசு தான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. கல்பாக்கத்திலே மின்சாரம் உற்பத்தி செய்ய தமிழகம் உதவி செய்யும். அதிலே எவ்வளவு மின்சாரம் நமக்குக் கொடுக்கிறார்கள் என்பது தெரியாது. இந்த நிலை இருக்கக் கூடாது என்று சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. தேசியம் பேசும் போது இதையும் மனத்திலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று திரு. இராம மூர்த்தி அவர்களைக் கேட்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இப்போது ஏற்பட்டுள்ள வறட்சிபோல எப்போதும் ஏற்படவில்லை. கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, வறட்சி வந்தது. நடவடிக்கை எடுத்தார்கள். ரூ. 18 கோடிக்கு அதிகமாகப் பணத்தைப் பெற்று, போர்க்கால நடவடிக்கைகளில் ஈடுபட்டார். உடனடியாக 45.63 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல இப்போது சொன்னாலும்கூட, இந்த அரசாங்கத்திற்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். அது செலவாகிறது என்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சிக்கு 200 கோடி ரூபாய் செலவழித்தால்கூட தீராது. உடனடியாக அமைச்சர் குழு சென்று மத்திய அரசிடம் பேச வேண்டும். அவர்கள் வந்து பார்த்து, நிலைமையைத் தெரிந்துகொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள் வந்தபோது இங்கு வறட்சி இருப்பது உண்மைதான் என்று பத்திரிகை நிருபர்களிடம் சூசகமாகச் சொல்லியிருப்ப தால், உடனடியாக இதில் காலதாமதம் செய்யாமல் 200 கோடி ரூபாய் அள விற்கு மத்திய அரசு உதவிட வேண்டுமென்று நாம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நான் சார்ந்துள்ள வட ஆற்காடு மாவட்டம் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு உள்ளவர்கள் பக்கத்து மாநிலத்திற்குப் போகிறார்கள். எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் போல மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றியும் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொன்னால், நேரமிராது. ஒவ்வொரு இலாக்காவைப்பற்றியும் மானியக் கோரிக்கைகள் வரும்போது, அவற்றின்மீது கருத்துக்களைச் சொல்ல லாம் என்று எண்ணி, ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1983 மார்ச் 14] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

(பிற்பகல் 1-00)

இந்த ஆண்டு தொழில் துறையைப் பொறுத்தவரையில், 12,253 சிறு தொழில்கள் பிரிவுகளைப் பதிவு செய்துள்ளனர் என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. எஸ்.எஸ்.ஐ. சர்ட்டிபிகேட் வாங்கி விட்டாலே, தொழில் நடத்து கிறார்கள் என்று அர்த்தமா? அவர்களில் எத்தனை பேர் ஆக்சுவலாகத் தொழில் நடத்துகிறார்கள் என்று பார்த்தால், ஆயிரம் பேர்கள் கூட இருக் காது. எஸ்.எஸ்.ஐ. சர்ட்டிபிகேட் வாங்கினால் டெலிபோன் கனெக்ஷன் சுலப மாக வாங்கலாம். அதற்காக வாங்குகிறார்கள். மேலும் ஏர்கண்டிஷன் பிளாண்டுக்காக வாங்குகிறார்கள். எக்சைஸ் டியூட்டி கிடையாது, அதற்காக வாங்கியிருப்பார்கள். அதுபோல் மத்திய அரசு தொழில் நடத்துவதற்கான உரிமங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட, நம் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமங் களை எத்தனை பேர்களுக்குக் கொடுக்க முடியும் என்பதில் இந்த அரசு கவனத்தைச் செலுத்த வேண்டும்.

அடுத்து, கல்வித் துறையைப் பொறுத்தவரையில், 359 கோடியே 79 லட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளிவிவரம் கூறு கிறது. இது உண்மை புள்ளிவிவரம் அல்ல என்பதை வேதனையோடு கூறு கிறேன். ஏனென்று சொன்னால், கடந்த ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக் கினோம் என்று சொன்னார்களோ அந்தத் தொகையைச் செலவு செய்தோம் என்று சொன்னால், இந்தப் புள்ளிவிவரங்களை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால், திட்டங்களுக்காக ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்கவில்லை. ஒன்றிரண்டு துறைகள் தவிர மற்ற அனைத் துத் துறைகளுக்கும் கடந்த ஆண்டு ஒதுக்கிய பணம் முழுமையாகச் செல வழிக்கப்படவில்லை. கல்வித் துறையிலே கட்டிடங்கள் கட்டுவதென்று சொல்லி சில கோடி ரூபாய் ஒதுக்கினோம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் திமிரியிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 6 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கினோம். ஆனால் இந்த 6 லட்சம் ரூபாய்க்கும் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. இடம் இல்லையென்று சொல்கிறார்கள். அங்குள்ள குழுவும் அதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் ஆளும் கட்சியினரால் அங்கு பிரச்சினை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. 'சீப் எஜுகேஷனல் ஆபிசர்', மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அழைக்கிறார்கள். 6 லட்சம் ரூபாய் வந்து விட்டது. கட்டிடம் கட்ட வேண்டுமே என்று சொல்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியினர் அதைப் பிரச்சினையாக்கி கட்டிடம் கட்ட அனுமதிக்க

வில்லை. இதுபோல் எத்தனையோ 6 லட்சம் ரூபாய்கள் செலவழிக்கப்படவில்லை. அதுபோல் இந்த 359 கோடி ரூபாயும் செலவழிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

அதைப்போலவே இந்த அரசு வருமானத்தைக் கூட குறைத்துக் காட்டுகிறதோ என்று நான் சந்தேகப்படுகிறேன். காரணம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற நிதி நிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தாலே நன்றாகத் தெரியும். 1947 ஆம் ஆண்டிலிருந்து இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையிலுள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தோமேயானால், ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு துறையிலும் வருமானம் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது. எப்போதாவது, ஏதாவது ஒரு காரணத்தால், இந்த வருமானம் குறைந்திருக்கிறதா என்பதை புள்ளிவிவரங்களிலிருந்து என்னால் பார்க்க முடியவில்லை. ஆனால் இங்கே 0.41 என்ற மானியக் கோரிக்கையின்கீழ் வண்டிகள் மீது வரி என்கிற தலைப்பில் 1982-83 திருத்த மதிப்பீட்டில் ஆண்டு வருமானம் 85 கோடி என்று இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு புதிய வரிகள் போட்டதற்குப் பிறகு 82 கோடி ரூபாய்தான் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது என்று இருக்கிறது. இந்த ஆண்டு வண்டிகள் மீது வரிகள் போட்டதற்குப் பிறகு கடந்த ஆண்டைவிட 3 கோடி ரூபாய் குறைவாக வருமானம் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆகவே நிச்சயம் வருமானமும் அதிகமாகும். ஆனால் அதற்கு மாறாக இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் எந்த அடிப்படையில் வைக்கப்படுகின்றன என்பது எனக்குப் புரியவில்லை.

அதுபோல் மாநில ஆயத் தீர்வைப்பற்றி 0.9 என்ற மானியத் தலைப்பில் கடந்த ஆண்டு ரூ. 150 கோடி ஆண்டு வருமானம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில ஆயத் தீர்வை என்று சொல்வதில் சாராயக் கடைகள் ஏலம், பிளன்டிங், பாட்டில் விற்பனை இப்படி எல்லாம் பல வருகின்றன. கடந்த ஆண்டு ரூ. 150 கோடி, இந்த ஆண்டு ரூ. 155 கோடி எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. இன்றைக்கு உண்மையிலேயே இந்தத் துறை 200 கோடி ரூபாய்க்கு மேல் இழந்து கொண்டிருக்கிறது. காரணம் ஆந்திராவில் இந்த வகையில் 600 கோடி ரூபாய் வருவாய் வருகிறது என்று தெரிகிறது. நம்முடைய மாநிலத்தில் முழுமையாக மதுவிலக்கு தளர்த்தப்பட்ட நிலையில் ஏராளமாக வருமானம் வந்திருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் புராகிபிஷன் ரத்து செய்யப்பட்டபோது, ஆண்டு ஒன்றுக்கு 150 கோடி ரூபாய் வருமானத்தை அரசு இழந்திருக்கிறது என்று அறிவித்தார்கள். 1973-74 ஆம் ஆண்டு அன்றைய நிலையில் மாநிலம் பூராவும் 12,000 சாராயக் கடைகள்



இல்லை. அதுபோல் 6 ஆயிரம் கள்ளுக் கடைகள் இல்லை. 1,500 பிராந்தி விஸ்கி கடைகள் இல்லை. இப்போது போட்டிருக்கிற வரிகளைப் போல் உயர்ந்த அளவில் வரிகளும் இல்லை. அந்த நிலையிலேயே 150 கோடி வருமானத்தை இழந்திருக்கிறோம் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அரசுக்கு இந்தத் துறையின் மூலம் 150 கோடி ரூபாய் வருவாய் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னால், உண்மையிலேயே நான் சொல்கிறேன், எங்கேயோ கோளாறு இருக்கிறது. 250 கோடி ரூபாயாவது குறைந்தபட்சம் நமக்கு வருமானம் வந்தாக வேண்டும். 54 லட்சம் பாட்டில்கள் விற்றதற்கு மாறாக இன்றையதினம் 1 கோடியே 20 லட்சம் பாட்டில்கள் என்கிற அளவுக்கு விற்பனை பெருகியிருக்கிறது. கள்ளச் சாராயத்தை ஒழிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அது உண்மையா, இல்லை இந்தப் புள்ளிவிவரம் உண்மையா என்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல இந்த வரிகளைப் பொறுத்தவரையில், நான் இந்த அரசுக்கு ஒரு ஆலோசனை கூறுகிறேன். சிமெண்ட், துணிகள் போன்றவற்றின் மீது நுழைவு வரி போட்டு 26 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறோம் என்று சொல்லிவிட்டு, ஆளும் கட்சிக்காரர்கள் இங்கே சொன்னதுபோல், 1 கோடி ரூபாய்க்கு வரி விலக்கு கொடுத்து 25 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வரியை தயவுசெய்து எடுத்துவிடவேண்டும். அதற்காக நான் ஒரு ஆலோசனையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கு அதிக வருவாய் வர ஆலோசனை கூறுகிறேன். இன்றைக்கு மிகப் பெரிய அளவுக்கு ஒரு கூட்டம் இந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறது. சாராய ஹோல்சேலர், ஐ.எம்.எப்.எல். இந்த வியாபாரத்தைப் பயன்படுத்தி ஏராளமாகக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 1 கோடியே 20 லட்சம் பாட்டில்கள் நாள்தோறும் விற்பனைக்கு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இதனைக் கூறியிருக்கிறார்கள். அரசு ஆணை நாள் 16—5—1981-லே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே சாராயம் எப்படி விற்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி 750 மில்லி பாட்டிலுக்கு 85 பைசா தான் வருகிறது. ஆனால் அந்த ஹோல்சேலர் 7 ரூபாய் 90 காசுக்கு விற்கிறான். செங்கல்பட்டு மாவட்டத்திற்கு இதற்கென்று ஒரு தலைவர் இருக்கிறார். அதுபோல் சென்னைக்கு ஒரு தலைவர் இருக்கிறார். இப்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு தலைவர், ஹோல்சேலர் இருக்கிறார். ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு லைசன்ஸ் பீஸ் என்கிற வகையில் 30 ஆயிரம் ரூபாய் கட்டுகிறார்கள். ஆனால் நாள் ஒன்றுக்கு இவர்கள் 30 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தயவுசெய்து இந்த வருவாய் ஒருசில

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1983 மார்ச் 14

தனியார் குடும்பத்திற்கு, அவர்களுடைய கஜானாவிற்குப் போவதற்கு பதிலாக அதை அரசு கஜானாவிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு அரசுக்கு வர வேண்டிய வருவாயை பிளன்டிங் யூனிட்டுகள், ஐ.எம்.எப்.எல். போன்றவைகள் சில கட்டிடங்களைக் காட்டி அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. இந்த வருவாய் அரசுக்கு வர வேண்டும். இன்றைக்கு சாராயத்தை பிளன்டிங் யூனிட்டுக்குப் போய் வண்டிகளில் ஏற்றி கடைகளில் வினியோகம் செய்ய ஒரு பாட்டிலுக்கு 51 பைசா என்று சொன்னால், செலவு எல்லாம் போக நாள்தோறும் 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஹோல்சேலர் சம்பாதிக்கிறார் என்றால், அரசுக்கு வர வேண்டிய இந்த வருவாய் தனியாருக்குப் போகலாமா என்று நான் அறிய விரும்புகிறேன். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். பிளன்டிங் யூனிட்டுகளில் சாராயத்தை அடைக்க பாட்டில்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு பாட்டிலுக்கும் 2 ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். தினசரி புதிய பாட்டில்களில் தான் சாராயத்தை அடைக்கிறார்களா என்றால் இல்லை. ஏற்கெனவே சாராயம் விற்ற கடைகளுக்குப் போய் பழைய பாட்டில்களை 80 காசுக்கு வாங்கி மறுபடியும் சுத்தம் செய்து அதில் சாராயத்தை அடைத்து விற்பனை செய்கிறார்கள். இந்த வகையில் நாள் ஒன்றுக்கு அவன் 12 லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கிறான். அப்படி என்றால், மாதத்திற்கு 3½ கோடி ரூபாய் வருகிறது. இதை அரசே ஏற்று நடத்த வேண்டும். இல்லையென்றால், கூட்டுறவுத் துறையிடம் இந்தப் பணியை ஒப்படைக்க வேண்டும். இதுகுறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

இன்றையதினம் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒன்றுமே இல்லை. அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். ஒவ்வொரு கட்டத்திலேயும் இப்படிப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். இந்த அரசாங்கத்தை நடத்துபவர்கள் அவர்கள் வைக்கும் கோரிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் கேட்பதிலே நியாயம் இருக்கிறதா என்பதை தயவு செய்து இந்த அரசு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இன்னும் ஒன்றைக் கேட்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தால் ஏற்றுக்கொள்கிறேன். 1983ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசு இலாக்காக்களிலே எதிலேயாவது பணம் இல்லை



1983 மார்ச் 14] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

என்று சொன்னால், உடனே இந்த அரசு ஒரு உத்தரவைப் போடுகிறது. எந்த இலாக்காவிலே அதிக அளவிலே பணம் இருக்கிறதோ அந்தப் பணத்தை டைவர்ட் செய்து, இல்லாத இலாக்காவிற்கு, பணம் தேவைப்படுகின்ற இலாக்காவிற்கு ஒதுக்குகிறோம் என்று சொல்லி உத்தரவிடுகிறது. யார் யாருக்குப் பணம் தேவைப்படுகிறதோ அந்த இலாக்காவிற்கு அனுப்ப உத்தரவிடுகிறது. ஏற்கெனவே வேலை செய்த ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கான பில்களைத் தயார் செய்து சம்பளக் கணக்கு அலுவலகத்துக்கு அனுப்புகிறார்கள். அங்கே இருப்பவர்கள் அந்த பில்களைப் பார்த்து பின்னர் பாஸ் செய்கிறார்கள். அப்படி பாஸ் செய்ததற்குப் பிறகும், என்ன காரணமோ தெரியவில்லை அதற்கான செக் இன்னும் கிடைக்கவில்லை. பலஇலாக்காக்களில் இந்த நிலைமைகள் இருப்பதால் கஷ்டப்படுகிறார்கள். பல இலாக்காக்களின் பில்கள் இவ்வாறு அங்கே இருக்கின்றன. இங்கே பக்கத்திலே சம்பளக் கணக்கு அலுவலகம் இருக்கிறது. அங்கே சென்று பாருங்கள். 15 நாட்களுக்கு மேலாகியும் நாம் அனுப்பிய பில்களுக்குரிய செக் கிடைக்கவில்லையே, எப்போது கிடைக்கும் என்று தெரியாமல் அலுவலர்கள் இருக்கிறார்கள். காலையிலே அங்கே சென்று இதை வாங்குவதற்காக அங்கேயே இருந்து, அங்கேயே இட்டிலி போன்றவைகளைச் சாப்பிட்டுவிட்டு மாலைவரை இருந்து பார்த்துவிட்டும் கிடைக்காமல் திரும்பிப் போகும் நிலைமைதான் இருக்கிறது. நான் கேட்கிறேன், அரசாங்கத்திடம் பணம் இல்லையா ? அப்படி பணம் இல்லை என்று சொன்னால், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. பணம் இருக்கிறது என்று சொன்னால் நான் கேட்கிறேன், ஏன் இந்தக் காலதாமதம்? இல்லை, பணமும் இருந்து கிடைக்கவில்லை என்று சொன்னால், இப்படி கால தாமதம் ஆவதற்கு யார் பொறுப்பு? அப்படி யாராவது செய்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளையெல்லாம் சொல்லும்போது நான் இன்னொன்றையும் சொல்கிறேன். ஒருவகையில் குற்றம் சொல்கிறேன் என்று எடுத்துக்கொண்டாலும் கவலையில்லை. வருமானம் வருகிறது. நாம் செலவும் செய்கிறோம். இன்றையதினம் பணம் வேண்டும் என்று மக்கள் மேல் வரியும் போடுகிறோம். அப்படிக் கிடைக்கும் பணம் வீணாகிறது என்று நாங்கள் எல்லாம் சொல்லும்போது, அதுவும் ஆளும் கட்சிக்காரர்களாலே விரயமாகின்றது என்று சொல்லும்போது, இந்த அரசு அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ஒரு கிடங்கு எழும்பூர் இரயில் நிலையத்திலே இருக்கிறது. இரயில் மூலம் வரும் பல ... களை அங்கே இறக்கிவைத்து, பின்னர் லாரிகளில் ஏற்றி அவைகள்

பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. 20 ஆயிரம் முட்டைகள் ஒவ்வொரு நாளும் போகின்றன. அதற்கு டெண்டர் கோரினார்கள். அந்த வேலைக்கு 1980-81-லே, திரு. முத்தரசன் என்பவர் டெண்டர் போடுகிறார். ஒரு முட்டைக்கு 30 பைசா என்று கேட்டு டெண்டர் கொடுக்கிறார். அதை அரசு அங்கீகரிக்கிறது. பிறகு அதை 60 பைசா என்று 'க்ளைம்' செய்கிறார். அதிகாரிகள் எதற்காக 60 பைசா போட்டிருக்கிறது என்று கேட்டால், ஒரு முட்டையை இரயிலிலேயிருந்து இறக்குகிறோம், இறக்கியதற்குப் பிறகு லாரியிலே ஏற்றுகிறோம், ஆகவே, இறக்குவதற்கு 30 பைசா என்றும், ஏற்றுவதற்கு 30 பைசா என்றும் சொல்லியிருக்கிறார். அப்படி கேட்க முயற்சிக்கிறார். இதெல்லாம் தவறு. அப்படிக் கேட்கக்கூடாது என்று கே. 2/40324/82. என்ற எண் உள்ள கோப்பிலே அவருக்கு பதில் எழுதி அனுப்பப்படுகிறது. இந்த டெண்டரிலே, இவர் அதை 30 பைசாவுக்கு எடுத்து 60 பைசா 'க்ளைம்' செய்தார் என்பது மட்டுமல்ல, பின்னர் 1982-83-க்கு டெண்டர் கோரப்பட்டது. இதுபற்றி தினத்தந்தியிலே விளம்பரம் வந்தது. அமரர் காமராசர் திறைவு சுமை தூக்கும் கூட்டுறவுச் சங்கம் டெண்டர் போட்டது. அவர்கள் 29 பைசாவுக்கு இந்த வேலையைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை அதே முத்தரசன் இப்போது 32 பைசாவுக்குச் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த முத்தரசனின் டெண்டரைப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். "நான் மூன்று ஆண்டு காலமாக இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன், எனக்கு நஷ்டம் வந்துவிட்டது, ஆகவே, அந்த மூன்று ஆண்டு காலத்திற்கும் எனக்கு 32 பைசா என்று கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி கேட்டிருக்கிறார். இந்த விவரங்கள் அந்தக் கோப்பிலே இருக்கின்றன. நான் சொல்வது தவறு என்றால், கோப்பைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம், அப்போதும் தவறு என்று சொன்னால், நான் அதைத் திருத்திக்கொள்கிறேன். அப்படிப் பார்த்துக்கொள்ளத்தான் நான் கோப்பின் எண்ணைத் தந்திருக்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒரு ஆளும் கட்சியின் கடமை என்பதால்தான் நான் சொல்கிறேன்.

நாம் இப்போது நீதிமன்றங்களைப்பற்றிக் கூட பேசுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் கூட பேசினார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. யாருக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்றெல்லாம் பேசினார்கள். நீதிமன்றங்களைப்பற்றிப் பேசினார்கள் 'பேசலாமா, பேசக்கூடாதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசலாமா?'' என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எனக்கென்று ஒரு கருத்து இருக்கலாம். அவர்களுக்கு என்று ஒரு கருத்து



இருக்கலாம். அரசியல் சட்டத்திலே 194(2)-லே இந்த உரிமை நமக்குக் கொடுக்கப்படலாம். கான்ஸ்டிட்யூஷனிலே 211 வது பாராவிலே ஒரு புதுப்பிரமாணம் எடுத்திருக்கலாம். நீதிபதிகளுக்கு விரோதமாகப் பேசக் கூடாது என்று இந்திய அரசியல் சட்டத்திலே விளக்கம் கொடுத்திருக்கலாம். அதைப்போலவே, 226-வது பிரிவிலே இன்னும் தெளிவாக நீதிபதிகளைப் பற்றிச் சொல்லியிருக்கலாம். இதைப்பற்றியெல்லாம் தீர்ப்பு அளிக்கவேண்டியவர்கள் வேறு. நான் சொல்வது நீதிமன்றங்களைப்பற்றிப் பேசுகிறோம். நீதிபதிகளைப்பற்றிப் பேசுகிறோம். ஒரு எல்லைக்கு உட்பட்டுப் பேசுகிறோம். நீதிபதி அதற்குமேலே போனால் அதை நீக்கவேண்டியது மாண்புமிகு தலைவர் அவர்களுடைய கடமை. நீதிமன்றங்களிலே இருக்கும் நீதிபதிகளை விமர்சிக்கலாமா, கூடாதா என்பதைவிட அந்த நீதிபதிகளுக்கு எந்த அளவுக்கு நாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : எனக்கு வருகின்றன சந்தேகம் எல்லாம் ஒரு அவையின் உறுப்பினராக இருந்துகொண்டே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தேகம் வருகிறதே என்பதுதான் எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. நமக்கு நீதிமன்றங்களிலே வாதாட ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் மன்ற உறுப்பினராக இருந்துகொண்டே நம்முடைய அவையை மீறுகிற ஒரு தன்மையை நம்முடைய கருத்துக்களைச் சொல்ல உரிமை இல்லாத ஒரு நிலைமையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களு உற்சாகப்படுத்துகிறாரோ ஆதரிக்கிறாரோ என்பதுதான் என்னுடைய வருத்தம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கோறடா அவர்கள் அவையின் உரிமையை மீறும் தன்மை இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்றால் தைரியமாக பிரிவிலேஜ்க்குக் கொண்டு வாருங்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நான் கருத்தறிய விரும்பினேன். அவர் சந்தேகப்படுகிறார் என்று சொன்னால், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையிலே அவரும் தன்னுடைய உரிமையை இழந்துவிடக்கூடாது என்ற முறையிலேதான் நான் சொல்கிறேன்.

திரு. ஆர்க்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கேட்கும் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்கிறேன். உறுப்பினர் என்ற முறையிலே அல்ல. இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையிலே வழக்குப் போடலாம். என்னுடைய கருத்தை எடுத்து வைக்கவேண்டிய இடத்திலே வைக்கலாம். இது ஒன்றும் புதிய முறை அல்லது 1957-லே கேரளாவிலே, இப்படி ஒரு பிரச்சினை வந்தது. அப்போது ஒரு சட்டமன்ற

உறுப்பினர் தீர்ப்பு கேட்டு நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார். அங்கே சட்டமன்ற என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது அதற்குப் பிறகு அந்த வழக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த வழக்கு என்ன வாயிற்று ? இப்படி சட்டமன்ற உறுப்பினரோ, மேலவை உறுப்பினரோ நீதி மன்றத்தை அணுகலாமா என்பதைப் பார்த்துத்தான் நானும் சென்றேனே தவிர வேறல்ல.

திரு. க. இராமமூர்த்தி : நீதிமன்றத்திலே வழக்கு போட்டாகிவிட்டது. அந்த வழக்கு பற்றிய வாதம் நடந்துகொண்டிருக்கிறது. 'Is this not sub-judice' ஏனென்றால், இந்த வழக்கு சரியா, இல்லையா என்பது பற்றிய பிரச்சினையில்லை. இப்போது அட்மிஷன் ஸ்டேஜில் இருக்கிறது. அட்மிஷன் பண்ணலாமா, கூடாதா என்பதுபற்றி ஒரு ஜட்ஜிலேயிருந்து பல ஜட்ஜ்களுக்கு இப்போது போடப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவாதத்தை இந்த அவையிலே வைத்துக் கொள்வது முறையா ?

(பிற்பகல் 1-20)

டாக்டர் இரா. சனார்த்தனம் : நான் வழக்கைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஒரு அவை உறுப்பினர் என்ற முறையிலே நமக்கு என்று சில சுதந்திரங்கள் இருக்கின்றன. நாமே அதற்குத் தடை போட்டால், நம்முடைய எண்ணங்களைத் தெரிவிக்கும் உரிமைகளை இழக்கக்கூடிய நிலைமை வரலாம், அப்படி வரக்கூடாது என்று சொன்னேனே தவிர நீதிமன்ற வழக்குப்பற்றிப் போகவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, அப்படிப்பட்ட நீதிபதிகளாகப் பணியாற்றுபவர்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைத்தான் நீதிமன்றங்களுக்காகப் பல கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்று சொல்லுகிற நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"எப்போதும் தமிழ்நாட்டுக்கு வந்தவர்களை வாழ்வைக்கும் சிறப்பு உண்டு. இந்தத் தமிழ்நாட்டின் தலைமை நீதிபதியாக திரு. கே. பி. என். சிங் அவர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே பொறுப்பேற்றுக் கொண்டார். உண்மையிலேயே இந்த ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு நீதிபதிகள் மீது கோபம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏதோ ஒரு காரணத்தில் அப்படி நடந்து கொள்கிறோம் என்பதுகூட நான் கருதவில்லை. அவர் சென்னையில் தாம் குடியிருக்க ஒரு வீடு கேட்டார். அவருக்கு வீடு கொடுப்பதில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் வளர்ந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். இன்னும் வீடு அவருக்குக் கொடுக்கப்படவில்லை.



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கெனவே மேலவையில் பேசப்பட்டது. சட்டமன்றப் பேரவையிலும்கூட பேசப்பட்டது. ஏதோ அவருக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு பேசுவதைப் போல் பேசுவது அவ்வளவு நன்றாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன். அவருக்கு ஒரு வீடு காட்டப்பட்டது. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரு விதமான ரசிகத் தன்மை இருப்பது போல், அவர் எதிர்பார்க்கிற இடத்தில் எதிர்பார்க்கிற வகையான வீடு கிடைக்காமல் இருக்கிறது. இப்போது நாம் தனி மனித உரிமைகளைப்பற்றி மிகவும் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். வீட்டின் சொந்தக்காரர் அந்த வீட்டைக் கொடுப்பதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும். அரசு வீடு காலியாக இருந்து அவர் அதைக் கேட்டு வழங்கப்படவில்லை என்றால், அதைப் பிரச்சினையாக ஆக்கலாம். ஆனால் நிலைமை அப்படி இல்லை. முன்னால் டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் அவர்கள் வீட்டைக்கூட பார்த்தார். அதைக்கூட பிரச்சினையாக ஆக்க முனைவது என்றால், நன்றாக இருக்காது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் சொல்லுவது அவருக்கு இந்த அரசு வீட்டை ஒதுக்கீடு செய்யவில்லை என்பதான குற்றச்சாட்டு கூட அல்ல. என்ன நிலைமை என்றால், அவர் அரசாங்கத்திடம் ஒரு வீடு கேட்கிறார். ஒரு வீட்டைக் காட்டுகிறார்கள். அவருக்கு அந்த வீடு பிடிக்கவில்லை. ஒரு நீதிபதிக்கே. . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நீதிபதிக்கு என்று கூட சொல்ல வேண்டியதில்லை. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். அமைச்சர்களுக்கே வீடு இல்லாமல் "கே" போட்டுச் சொல்லுகிறேன்—அவர்களே வெளியே இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் தவறுதான். . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மன்னிக்க வேண்டும். நான் ஒவ்வொரு வார்த்தையின் போதும் குறுக்கிட்டால்தான் நிலைமை சரியாக இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எதையாவது சொல்லிவிடலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது.

அமைச்சர்களுக்கு மறுக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது கட்டிடங்கள் இல்லை. இப்போதுதான் கட்டிக் கொண்டிருக்கிறோம். இதுதான் நிலைமை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்ல வந்தது இதுதான். நமது சட்ட அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு கருத்தைத் தெரிவித்தார்.

"Government had agreed to fix the accommodation for him at Monteith Road. Repair works were being undertaken and soon the house would be ready. Government considers the matter in the light of the rent-ceiling fixed for Judges at Rs. 2,500. Government have also fixed a ceiling of Rs. 2,000 for Ministers. Chief Minister, Mr. M. G. R., however, decided that the rent-ceiling should not apply to the accommodation for the Chief Justice and passed a special order to that effect."

அதாவது நம்முடைய முதலமைச்சர் அவர்களே கூட அத்தகைய சீலிங் தேவையில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று சொல்லி விட்டு அதற்குப் பிறகு சொல்கிறார்—

"The Government, after careful consideration of the proposal, directs that the private bungalow bearing Door No. 44, Monteith Road, Egmore, Madras, be taken and allotted to Justice Thiru K. B. N. Singh, Chief Justice, High Court, Madras as official residence, at the rent of Rs. 3,983".

இப்படி அரசாங்கம் ஒரு உத்தரவையே போட்டுவிட்டது. அரசாங்கம் உத்தரவே போட்டுவிட்டதே என்று நினைத்துக் கொண்டு சீப் ஜஸ்டிஸ் அந்த வீட்டுக்குப் போனால் அங்கேயிருப்பவர்கள் அவரைப் பார்த்து, "யார் உங்களுக்கு இந்த வீட்டை வாடகைக்கு விடுவதாகச் சொன்னது?" என்று கேட்கிறார்கள். ஒரு சீப் ஜஸ்டிசுக்கு வீடு ஒதுக்குவதில்கூட இந்த அளவுக்கு ஒரு மெத்தனம் ஏன் என்றுதான் கேட்கிறேன். வீட்டுக்காரரிடம் ஒப்புதல் வாங்கிக் கொண்டல்லவா இவருக்கு வீட்டை ஒதுக்கீடு செய்ய வேண்டும். முன்னாள் டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனாக இருந்த திருமதி மரிக்காயர் அம்மையார் அவர்கள் தனது வீட்டை யாருக்கும் வாடகைக்குக் கொடுக்க மாட்டேன் என்று எழுதியே கொடுத்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் இதில் குறுக்கிடுவதற்கு 2 காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அந்த இடம் சம்பந்தமாக அந்த அம்மையார் அவர்களே என்னிடம் வந்து பேசினார்கள். அவருடைய வீட்டிற்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு டாக்டர் அந்த வீட்டையே விலைக்கு வாங்க



ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு, பிறகு விற்பனை முடியாமற்போய் விடவே, அந்த வழக்கு இன்றையதினம் நீதிமன்றத்திலே இருக்கிறது. நிலைமை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சீப் ஜஸ்டிஸ் அந்த வீட்டை விரும்பினார். கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தோம். அதற்குப் பிறகு நான்கூட ஆதாரம் இல்லாமல் இங்கே எதையும் சொல்ல முடியாது. அவ்வளவு பெரிய வீட்டிற்கு இந்த வாடகையை நிர்ணயித்தால். அதுவேகூட சரியாக இருக்காது. நாம் வேண்டுமானால் வாடகையை நிர்ணயித்துவிடலாம். பின்னால் அது போதாது என்று அவர்களேகூட கோர்ட்டுக்குத்தான் போவார்கள். கட்டாயப்படுத்தி—மாண்புமிகு உறுப்பினர் அனுதாபத்தோடு பேசுகிற—சீப் ஜஸ்டிஸ் அவர்களுக்கு அந்த வீட்டை ஒதுக்கியிருந்தால், பிறகு அந்த அம்மையாருக்காகப் பரிந்து கொண்டு இப்படிக் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொடுக்கிறார்களே இது நியாயமா என்றுகூட கேட்பார். . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் இன்றையதினம் நீதிபதி ஒருவருக்காக வாதாட வரவில்லை. அவருக்காக அனுதாபப்பட்டு இந்தக் கருத்துக்களை நான் இங்கே சொல்லவில்லை.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் 35 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று நினைவுபடுத்துகிறேன்.

**திரு. வலம்புரி ஜான்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது போட்டிருக்கிற வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறபோது, அந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுக்கு அல்லது மற்ற நீதிபதிகளுக்கு—சலுகை என்றுகூட நான் சொல்லவில்லை—ஆதரவாக இங்கே இவர் பேசுவது நீதிவழங்குவதைப் பாதிக்காதா என்று கேட்க விரும்புகிறேன். அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினரின் உரிமையைப் பாதிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இப்படி என்மீது ஒரு வழக்கல்ல, பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் நீதிபதிகள் மீது அனுதாபப்பட்டு இங்கே பேசவில்லை. ஒரு நீதிபதிக்கே இந்த நிலைமை என்றால். . .

**திரு. எஸ். ஆர். இராதா:** நீதிபதிகளிடம் அனுதாபம் பெறுவதற்காக இப்படி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரா? அதன் மூலம் அவருக்குச் சலுகை கிடைக்க வேண்டும் என்று பேசுகிறாரா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** உங்கள் ஆட்சியில் நீதிபதிகள்கூட சலுகைகள் காட்டுவார்கள் என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** எந்த ஆட்சியிலும் நீதிபதிகளாக இருப்பவர்கள் சலுகை காட்டமாட்டார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். இனிமேலும் அப்படி நம்புவோமாக.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நாம் சொல்ல விரும்புவது, நான் எந்த நீதிபதியின் தயவுக்காகவும் தவம் கிடக்கிறவன் அல்ல. அவர்களின் ஆதரவு எனக்குத் தேவையும் இல்லை. ஆனால் சீப் ஜஸ்டிஸ் ஒருவருக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண குடிமகன் நிலைமை என்ன? ஒரு சாதாரண குடிமகனுக்கு அரசாங்க நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எத்தனையோ அரசு ஊழியர்கள் தங்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு எப்படி வீடு கிடைக்கும் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டும் என்று நான் விரும்பினாலும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் நேரத்தைச் சுட்டிக்காட்டுவதன் காரணத்தால், அவைகளையெல்லாம் மானியக் கோரிக்கைகளின்மீது பேசும்போது, தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை 15—3—1983 செவ்வாய்க் கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-27)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

189. Twenty-Fourth Annual Report of the Tamil Nadu Warehousing Corporation for the year 1981–82 (which contains audit report of the Corporation). (Tamil). [Laid on the table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962).]

### *B. Reports, Notifications and Other Papers.*

**Nil.**



## இணைப்பு I

[198 ஆம் பக்கத்தில் இனம் 2(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்னை சர் தியாகராய கல்லூரியின் முன்னாள் முதல்வராகப் பணி புரிந்து வந்த டாக்டர் மதன்மோகன்ராவ் என்பவரை மறுபடியும் பணியிலமர்த்தலாமா அல்லது அவருக்கு நஷ்டஈடு தரலாமா என்பது பற்றி பரிசீலிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அது குறித்து விவாதிக்க கல்லூரி நிருவாகக் குழுவின் கூட்டம் 27—1—1983 அன்று மாலை 5.45 மணிக்கு கல்லூரியில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பித்த 15 நிமிடங்களுக்குப் பின், கல்லூரி முதல்வர் பதவி நியமனம் பற்றி விவாதம் செய்ய வேண்டியிருந்ததால் தற்போதைய கல்லூரி முதல்வர் திரு. சுதீந்திரன் அவர்களை வெளியில் இருக்குமாறு நிருவாகக் குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டார். கோபமாக வெளியில் அவர் சென்ற பிறகு கல்லூரிக்கு வெளியே கலவரமான நிலை ஏற்பட்டது. மாணவர்களின் கலவரத்தின் காரணமாக நிருவாகக் குழு உறுப்பினர்கள் தாக்கப்பட்டார்கள். கல்லூரிக்குள் கல் எறியப்பட்டது. நிர்வாகக் குழுத் தலைவரின் கார் சேதமாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிருவாகக் குழுச் செயலர் கல்லூரி முதல்வர் திரு. சுதீந்திரனையும் வேறு சில ஆசிரியர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார். துணை முதல்வரை முதல்வர் பொறுப்பாக இருக்குமாறும் அவர் ஆணையிட்டிருக்கிறார். மேலும் அவர் கல்லூரியில் அமைதியான சூழ்நிலை உருவாகும்வரை கல்லூரியைப் பாதுகாப்பு காரணங்களுக்காக காலவரையறையின்றி மூட உத்தரவிட்டிருக்கிறார். கல்லூரியில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து கல்லூரி நிருவாகக் குழுவின் உறுப்பினர் ஒருவர் பேரிலும் சில ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பேரிலும் காவல்துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் நிர்வாகத்தினரிடையே பிளவு உள்ளதாகவும் நிர்வாகம் சரிவர இயங்காததால் அதைக் கலைத்துவிட்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது. இது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது கல்லூரியில் சகஜ நிலை உள்ளதாகவும் வகுப்புகளை 7-ந் தேதி முதல் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) தெரிவித்துள்ளார். 7 ஆம் தேதி மூன்றாம் ஆண்டு பட்டப் படிப்பு வகுப்புகளும் பட்டமேற்படிப்பு முதல், இரண்டாம் ஆண்டு வகுப்புகளும் வழக்கம் போல் திறக்கப்பட்டன. ஆனால் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. ஸ்ரீராமுலு அவர்கள் காலமானதற்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அன்று வகுப்புகள் எஞ்சியுள்ள காலத்திற்கு மூடப்பட்டன.



## இணைப்பு II

[20 ஆம் பக்கத்தில் இனம் 2(2)க்கான அடிக்குறிப்பைக் காண்க]

பவானிசாகர் அணைக்கட்டு பகுதியில் மீன்கள் பெருத்த அளவில் மடிந்துள்ளது என்ற செய்தி கிடைத்தவுடன், பவானிசாகர் ஆற்றங்கரையில் அமைந்துள்ள பகுதிகளில் தக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டி, 3—2—1983 அன்று ஈரோட்டில் உள்ள பெரியார் மாவட்ட நல அலுவலர் பொதுச் சுகாதார ஊழியர்கள் அடங்கிய ஒரு குழுவுடன் பவானிசாகர் நகரிய பகுதிக்கு விரைந்து சென்றார். அணைக்கட்டு பகுதியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு ஆற்றின் இருமருங்கிலும் செத்த மீன்கள் காணப்பட்டன. பவானிசாகர் வட்டார அபிவிருத்தி அலுவலர், பொதுப்பணித்துறை அலுவலர், மீன்வள அபிவிருத்தி அலுவலர் அவர்களுடன் தொடர்பு கொண்டு சத்தியமங்கலம், கோபிச்செட்டிபாளையம் நகராட்சியிலிருந்து தருவிக்கப்பட்ட 125 ஊழியர்களின் உதவியுடன் செத்த மீன்களை அப்புறப்படுத்த மாவட்ட நல அலுவலர் நடவடிக்கை எடுத்தார். இவைகள் குழிதோண்டி புதைக்கப்பட்டு இவைகளிலிருந்து எந்தவித தீங்கும் நேராமல் இருப்பதற்காக பூச்சி கொல்லி மருந்துகளும் தெளிக்கப்பட்டுள்ளன. செத்த அழுகிய மீன்கள் வியாபாரிகளிடமிருந்து பறிக்கப்பட்டு அவைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள எல்லா குடிநீர் நிலையங்களிலும் காலரா நோய் பரவாமல் தடுக்க வேண்டி குளோரின் மருந்து தெளித்தல், தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 3—2—1983, 4—2—1983 ஆகிய இரண்டு தினங்களில் மட்டும் 3,627 பேருக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டு, 10, கிணறுகளுக்கு குளோரின் மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. மேலும் அழுகிய மீன்களை உண்ண வேண்டாம் என்று பொது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலமாகவும் தண்டோரா போட்டும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குளோரின் மருந்திட்ட தண்ணீரையோ அல்லது கொதிக்க வைத்த நீரையோ அருந்துமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரத்துறை ஊழியர்களால் இந்த பகுதி முழுவதும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டுள்ளது.

பருவமழை பொய்த்துவிட்டதால் நீர் நிலைகளில் தண்ணீர்வற்றி அதனால் ஏற்படும் விளைவுகள் என்னென்ன என்பதைப்பற்றியும் அவைகளை எவ்வாறு தவிர்க்க வேண்டும் என்பதைப்பற்றியும் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறை இயக்குநர் அவர்கள் அத்துறையைச்சேர்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், நகராட்சியைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

மேற்கூறிய நிலையிலிருந்து எந்த பாதிப்பும் அடையத் தேவையில்லை என்றும், மக்கள் நலம் காக்க எல்லா நடவடிக்கைகளும் அரசு எடுக்கும் என்றும் குறிக்கொள்கிறேன்.

## பொருளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் | 281— 311 |
| 2. | அறிவிப்பு— | |
| | அலுவல் ஆய்வுக் குழுவின் அறிவிப்பில் மாற்றம் குறித்து | 311 |
| 3. | தகவல் கோரல்— | |
| | 14-3-1983 அன்று அவையில் தெரிவிக்கப் பட்ட கருத்தின் அடிப்படையில் வெளி வந்த செய்தி குறித்து | 311—312 |
| 4. | கவன ஈர்ப்பு – | |
| | (1) திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த புத்தானத்தம் கிராமத்தில் இரு குழுவினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து | 312—314 |
| | (2) தேர்வாணைக் குழுவின் சிறப்புத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 1,200 பட்டதாரி ஆசிரியர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாதது குறித்து | 314—316 |
| 5. | அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கையை அளித்தல். | 316 |
| 6. | 1983–84ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி. | 316—407 |
| 7. | பேரவை விதி 82–ன் கீழ் அமைச்சரின் அறிக்கை நகராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தல் குறித்து. | 358 |
| 8. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 407—408 |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1983 மார்ச் 15.

பங்குனி 1, துந்துபி, திருவள்ளுவராண்டு 2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி வாரியம்.

* 181 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஆசிரியர்களுக்கென தனியாக வீட்டுவசதி வாரியம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவ்வாரியத்தால் எவ்வளவு ஆசிரியர்கள் பயன் அடைவார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 1981 ஆம் ஆண்டு அரசு சாதனைப் பட்டியல் ஒன்று அனைத்துப் பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டிருந்தது. அந்த சாதனைப் பட்டியலிலே ஆசிரியர்களுக்கென இரண்டு சாதனைகளை வெளியிட்டிருந்தார்கள். அதிலே ஒன்று ஆசிரியர்களுக்கு என்று வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டது என்று வெளியிடப்பட்டிருந்தது. 1981-லே அமைக்கப்பட்டது என்று அரசாலே வெளியிடப்பட்ட அந்தத் திட்டத்தைப் பற்றி இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது.

[1983 மார்ச் 15

"அப்படியொரு திட்டம் இல்லை" என்று சொல்லுகிறார்கள் சாதனைப் பட்டியலில் வெளியிடப்பட்ட அந்தத் திட்டம் எதனாலே வெளியிடப்பட்டது? அதிலே ஏதாவது தவறு நடந்ததா? அல்லது இனிமேலாவது அந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தமிழ் நாட்டிலுள்ள மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்காக குடியிருப்பு கட்டுவதற்காக பத்தாயிரம் இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை பள்ளிக் கல்வி இயக்குநர் வகுத்துள்ளார். போதிய அளவிற்கு இடமும் நிதியும் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என வீட்டுவசதி வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் மேலாக அறிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கேட்கப் பட்டுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் இதற்கான போதிய நிதியை உலக வங்கியிடமிருந்தோ "ஹட்கோ" நிறுவனத்திடமிருந்தோ பெறுமாறு கேட்டுள்ளார். இந்தக் கருத்துபற்றி கல்வித் துறை, நிதித் துறை ஆகியவற்றுடன் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது. ஒரு தனித் துறை, அதாவது ஆசிரியர்களுக்கென தமிழ் நாடு அரசு ஊழியர்களுக்காக உள்ள வீடு கட்டும் நிதியிலிருந்து வீடுகள் கட்ட முடியாது என பள்ளிக் கல்வி இயக்குநருக்கு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 1981 ஆம் ஆண்டு சுமார் ஒரு இலட்சம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஆசிரியர்களாக அறிவிக்கப்பட்ட பிறகு, அதற்காக நடைபெற்ற ஒரு பெரிய பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு பேசும்போது, "ஆசிரியர்களுக்கு என்று தனி வீட்டு வசதி வாரியம் அமைப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும். இது குறித்து ஆசிரியர்கள் சங்கங்கள் தக்க தீர்மானங்கள் அனுப்பி வைத்தால், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்" என்று அறிவித்தார்கள். அதன் பிறகு உரிய முறையில் அரசுக்குத் தீர்மானங்களை பல்வேறு சங்கங்கள் சார்பாக அனுப்பி வைத்தோம். இப்போது அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் குறிப்பைப்பற்றியும், வீட்டு வசதி வாரியத்தின் நிலைமையைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணியை பள்ளிக் கல்வி இயக்குநர் செய்ய முடியாது, வீட்டு வசதி வாரியத்தால் முன்வந்து செய்ய முடியும். பள்ளிக் கல்வி இயக்குநர் வீட்டு வசதி வாரியத்திடம் இதற்கான இடத்தை ஒப்படைப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத காரியம்.



30

1983 மார்ச் 15]

காந்தி கிராமத் துணை வேந்தர் டாக்டர் ஆரம் அவர்கள், எல். ஐ. சி. உறுப்பினராக இருந்தபோது, எல். ஐ. சி. இந்தத் திட்டத்திற்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று அதிகாரபூர்வமாக கல்வியமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். எல்.ஐ.சி. அவ்வாறு கொடுக்கத் தயாராக இருக்கும்போது, தமிழக அரசின் சார்பாக இந்தத் திட்டத்திற்காக அவர்களை அணுகியிருக்கிறோமா? இதுவரை அப்படி அணுகாவிட்டால், அவர்களை அணுகி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வீட்டு வசதி வாரியத் துறையைப் பொறுத்தமட்டில் உள்ள பதிலை நான் இங்கே தந்திருக்கிறேன். எங்களைப் பொறுத்த வரையில் தெளிவாக இப்படி ஒரு பிரிவினருக்காக தனி வாரியம் அமைப்பது இல்லை என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதற்கு மேல் முடிவு எடுக்க வேண்டியது எந்த மட்டத்திலே இருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். வீட்டு வசதி வாரியத்திடம் போதிய அளவு நிதியும் இடமும் ஒப்படைத்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார். இது வீட்டு வசதி வாரியத்தினுடைய பதிலாகும். அதற்கு மேல் ஆசிரியர்கள் அதிக சலுகைகளைப் பெற வேண்டும் என்றால், எந்தத் துறை அமைச்சரை அணுக வேண்டுமோ அவரை அணுகி, பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது என்பது என்னுடைய கருத்தாகும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடையது என்பது அனைவரும் அறிந்ததே. அமைச்சர்கள் தனித்தனியாக வினாக்களுக்கு விளக்கம் அளித்தாலும், அனைவருக்கும் தலைவராக இருக்கக்கூடிய முதல்வர் அவர்கள் தந்த உறுதிமொழியின் அடிப்படையில், அரசு கூட்டுப் பொறுப்பிலே வெளியிடப்பட்ட அந்த விளம்பரத்தின் அடிப்படையில், முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கூட்டுப் பொறுப்பு என்றால் நிதியமைச்சர் அவர்களுடைய கோப்பிலே தொழிலாளர் நல அமைச்சர் கையெழுத்து போடுவது என்பதல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த அபாயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வராது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தத் துறை நிதியமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலே உள்ளது என்றால், வீட்டு வசதி வாரியத்திற்கும் பொறுப்பு நான்தான் collective responsibility என்றால் Government, as a whole, will be held responsible for whatever happens. என்று பொருள். ஒருவருடைய "டொமைனில்" இன்னொருவர் தலையிடுவது என்பதல்ல. வீட்டு வசதி துறையைப் பொறுத்தவரையில், சொல்லிவிட்டேன். இதற்கு மேல் ஏதாவது தனியாக வாரியம் வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்த வேண்டுமென்று சொன்னால், அதற்கென்று உள்ள அமைச்சர் அவர்களிடத்திலே பேசி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துகொள்ளலாம். தனியாக வீட்டுவசதி வாரியம் அமைத்தாலும் சரி, அல்லது வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்தாலும் சரி. வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த மட்டில், இந்தக் கேள்விக்குக் கொடுக்க வேண்டிய பதிலை நான் தந்திருக்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் ;** ஆசிரியர்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் தேவை என்ற கொள்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். வீட்டு வசதி என்பதை நினைக்கும்போது, தொழிலாளர் நல அமைச்சர்தான் கண் முன் வருகிறார். அவர்தான் வீட்டு வசதி வாரியத்தைப் பார்க்கிறார். ஆகவே அவர் ஆசிரியர்களுக்குரிய வீட்டு வசதிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அந்த பெருமையைத் தேடிக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த முறையில் அணுகுவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்க வேண்டுமா என்று ஆலோசனையைக் கேட்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நோக்கில் என்ன பதிலைச் சொல்ல வேண்டுமோ அதற்கேற்ப பதிலை இந்த இலாகாவின் சார்பாக சொல்லுவேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள், இது குறித்து நான் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஆசிரியர்களுக்கென்று தனியாக வீட்டுவசதி வாரியம் அமைப்பது என்ற கொள்கையைப் பொறுத்தவரையில், இது ஹவுசிங் போர்டைப் பொறுத்த வரையில் தனிப் பிரிவு ஒன்றை அமைப்பது குறித்து அல்லது கல்வித் துறையின் கட்டுப்பாட்டிற்குள் மூன்று இலட்சம் ஆசிரியர்களுக்காக தனி வீட்டு வசதிப் பிரிவு ஏற்படுத்துவது குறித்து அமைச்சர் அவர்களுடைய நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இது பற்றிய கோரிக்கை உரிய இலாக்காவிலிருந்து, அதாவது கல்வி இலாக்காவிலிருந்து வந்து அந்த அமைச்சர் கோப்பைச் சுற்றனுப்பி, அது அமைச்சரவைக் கூட்டத்தில் வருமானால், அந்த நோக்கில் எந்த ஸ்டாண்டை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு தனி வீட்டுவசதி வாரியம் வரும் என்று சாதனைப் பட்டியலிலே, 1981ஆம் ஆண்டிலே அரசு மற்ற சாதனைகளை வெளியிடும்போது விளம்பரப் படுத்தியிருக்கிறது. அதைப்பற்றி சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நான் கேட்டபோது, வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதை விரைவாகச் செயல்படுத்துவோம் என்று சொன்னார்கள். சென்ற கூட்டத் தொடரில் சொன்னது இப்போது வரவில்லை என்று தெரிகிறது. சென்ற கூட்டத் தொடரில் இருவரும் வரவில்லை என்று தெரிகிறது. சென்ற கூட்டத் தொடரில் இருவரும் பேசிக் கொண்டிருந்தது இப்போது என்ன நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் அப்போது கேள்விக்கு என்ன பதில் சொன்னேன் என்பதைத் தெரிந்துக்கொண்டு கேள்வி இப்போது கேட்க வேண்டும். அப்போது அவர் இல்லை. திடீரென்று அவர் கேள்வியைக் கேட்டார்கள். அவர் நான் சொன்ன பதிலைத் தெரிந்துகொண்டு வந்து, கேள்வி கேட்டால் தகுந்த பதில் சொல்கிறேன்.

## குடிநீர் வசதிகள்.

* 182 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய நகரப் பகுதிகளுக்கும் அதைச் சார்ந்த குக்கிராமங்களுக்கும், குடிநீர் வசதி செய்து தருவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதற்காக ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

(உ) இத்திட்டம் எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (இ) மற்றும் (உ) ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு நகரப்பகுதிகளுக்கு மற்றும் 250 குக்கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்ய 9 கோடி ரூபாய் செலவில் திட்டம் ஒன்றை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், கழிவு நீர் வடிகால் வாரியம் உருவாக்கியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தையிலே பேசியுள்ளார்கள். அந்தத் திட்டத்தினுடைய முழு வடிவம் என்ன? அது எந்தெந்தப் பகுதியிலே செயல்படுத்தப்படுகிறது? இப்போது வேதாரண்யம் பகுதியிலே மட்டும் செயல்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. மக்களிடையே பேசப்படுகிறது. அப்படியானால், தலைஞாயிறுப் பகுதி புறக்கணிக்கப்படுகிறதா என்பது பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி மற்றும் தலைஞாயிறு ஆகிய நகரங்களில் உள்ள மக்களுக்கும், வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள 216 குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கும் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மக்கள் தொகை 1,88,221 பேர்கள் ஆகும். அது உச்சகட்டமாக 2,86,189 பேர்கள் ஆகலாம் என்று கருதப்படுகிறது. வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 216 குடியிருப்புகளில் உள்ளவர்கள் 1,27,803, வேதாரண்யம் நகரம்—26,523, திருத்துறைப்பூண்டி நகரம்—20.695, தலைஞாயிறு நகரம்—13,200 பேர்கள். இதற்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டிய வழி பட்டுக்கோட்டை ராசாமடம் சாலையில் 13 ஆழ் துளைக் கிணறுகள் அமைத்து, அதிலிருந்து பெறப்படும் குடிநீர் நீர் ஏற்றிகள் மூலம் பல்வேறு இடங்களிலே இருக்கும் நீர்த் தேக்கத் தொட்டிகளுக்குக் குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வேதாரண்யம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி கடலோரப்பகுதிகளில் உள்ள நீர், உப்பு நிறைந்திருப்பதால், முத்துப்பேட்டை அருகிலுள்ள நம்பிவயலிருந்து 64 கிலோ மீட்டர் நீளமுள்ள குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்று? எல்லாத் திட்டங்களுக்கும் செலவு எவ்வளவு? இந்தத் திட்டங்கள் எப்போது நிறைவு அடையும் ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் சொன்ன திட்டம் பட்டுக்கோட்டை ராசாமடம் சாலையில் 13 ஆழ் துளைக் கிணறுகள் அமைத்து, அதிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதாகும். இந்தத் திட்டத்திற்கு வாரியம் மதிப்பிடு ரூபாய் 978 லட்சம் ஆகும். இதுதான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

## *Backward Classes List.*

* 177 *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTHOHSAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to amend the List of Backward Classes; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (இ) உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு பிற்பட்டோர் பட்டியலை ஆய்வு செய்து தொகுக்க இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவை ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் முன்னாள் தலைவருமான திரு. ஜே. எ. அம்பாசங்கர், அவர்கள் தலைமையின் கீழ் அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இக்குழு தனது அறிக்கையினை ஓர் ஆண்டிற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின் அரசு முடிவு எடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ்: மத்திய அரசுகூட மண்டல் கமிஷன் என்ற முறையிலே ஒரு குழு அமைத்து ஆய்வு செய்திருக்கிறார்கள். அதனுடைய பரிந்துரைகள் மாநில அரசினுடைய பரிந்துரைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா? அதை நினைத்துத்தான் நாம் திருத்தியிருக்கிறோமா? அதன் நிலை என்ன? மக்களுடைய அடிப்படையிலே, இந்த மக்களுடைய பிரதிநிதித்துவ அடிப்படையிலே செய்யும் வேலைவாய்ப்பு இல்லை என்ற கருத்து நிலவி வருகிறது. இது குறித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்புகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளைப் பற்றியும் ஒவ்வொரு மாநில அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மாநில அரசுகளினுடைய பரிந்துரைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழுவை திரு. அம்பாசங்கர் அவர்கள் தலைமையின் கீழ் வைத்திருக்கிறோம். அந்தக் குழுவை முழுவதையும் ஆராயும்படி கேட்டுக்

கொண்டிருக்கிறோம். மண்டல் கமிஷன் உறுப்பினராக இருந்த ஒருவரை இந்தக் கமிஷனிலேயும் உறுப்பினராகப் போட்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், பல்வேறு பரிந்துரைகளைப் பொறுத்துப் பார்ப்போமானால், மண்டல கமிஷன் கூறியிருக்கின்றதைவிட அதிகமாக, மாறாகத்தான் தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாக பல்வேறு முறைகளை நாம் கடைப்பிடித்துக்கொண்டு வருகிறோம். பல்வேறு மாநிலங்களிலேயும் அதைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவர்கள் பிற்பட்டவர்களுக்கு 28 சதம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். நாம் இப்போது 50 சதம் ஒதுக்குகின்ற கட்டம் இருக்கிறது. அது தனியாக இருக்கும். ஆனால் இப்போது திரு. அம்பாசங்கர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கும் குழுவை ஆராயும்படியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது 25 முற்பட்டிருக்கின்ற வகுப்பினர் பிற்பட்ட நிலையிலே இல்லாதவர்களாக இருந்தும், தங்களைப் பிற்பட்டவர்கள் வகுப்பிலே சேர்க்க வேண்டும் என்று சொல்லி பட்டியலைத் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் ஆராயும்படியாக இந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மண்டல் கமிஷன் உறுப்பினராக இருப்பவர் இந்தக் குழுவிலேயும் இருக்கின்றார் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர் யார்? அந்த மண்டல் கமிஷன் சொல்லியிருப்பதைவிட அதிகமாக, சிறப்பாக நாம் செய்திருக்கிறோம். அதை மக்களுக்கு அறிவிக்கின்ற அளவில் விளம்பரப்படுத்துவார்களா? பின்தங்கியவர்கள் பட்டியலில் எவ்வளவு வகுப்பார்கள் இருக்கின்றார்கள்? ஒரு வேளை பின்தங்கி முன்னேறியவர்கள் பட்டியலை நாம் வெளியிட இருக்கிறோமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** திரு. ஜனார்த்தனன் ராஜு என்ற பெயருடையவர், வழக்கறிஞராக இருப்பவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் அதிலே இருக்கிறார்கள். அவரை அந்தக் குழுவிலே சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே அரசாணை 7273, சமூக நலம், தேதி 1—2—1980-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை பொதுப்பணி மற்றும் கல்வி நிறுவனங்களில் இருந்தி அமைத்திருக்கிறது. பிற்பட்டோருக்கு 31 சதமாக இருந்தது. அதை 50 சதவிகிதமாக உயர்த்தி அமைத்தோம். அந்த முறையை எதிர்த்து இன்று உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் போட்டிருக்கிறார்கள். 31 என்பதை 50 ஆக உயர்த்தியிருக்கக்கூடாது என்றும் சில வகுப்பாரை அந்தப் பிற்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கவேண்டும் என்றும் போட்டிருக்கிறார்கள். அதற்கு உச்ச நீதி மன்றத்தினர் அதை மறுபடியும் மாற்றியமைக்க தமிழக அரசு ஆயத்தமாக இருக்கிறதா என்று கோரியிருக்கின்றது. அந்த அளவில் மறுபடியும் தமிழக அரசு தற்போது வழக்கில் இருக்கும் பிற்படுத்தப்





பட்டோர் பட்டியலில் ஆய்வு செய்து நோக்க இசைவை அளித்தது. அதை உச்ச நீதிமன்றம் ஏற்றிருக்கிறது. ஒரு ஆணை 14—10—1982 அன்று போடப்பட்டது. நாம் அதை அமுல் செய்ய ஒரு குழு திரு. அம்பாசங்கர் தலைமையில் அமைத்திருக்கிறோம். அவர்கள் ஓராண்டிற்குள்ளாக அறிக்கையை குழு தந்திடும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடம் உச்ச நீதிமன்றம் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளை இந்தக் குழுவிலே தந்து அதைப்பற்றி அறிக்கை தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு, உச்ச நீதிமன்றத்தில் வைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, லப்பை வகுப்பைச் சேர்ந்த ஒருவரும் மதம் மாறி திருமணம் செய்துகொண்டால், அதாவது ஒரு பிள்ளை வகுப்பைச் சேர்ந்த ஒருவரும் அப்படித் திருமணம் செய்துகொண்டால், பின்தங்கியவர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று நீதிமன்றம் தீர்ப்பை அளித்திருக்கிறது. இதை நாம் பத்திரிகையிலே பார்த்தோம். அந்த அடிப்படையிலே ஒருவேளை பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த ஒருவர், முன்தங்கிய வகுப்பைச் சார்ந்தவரைத் திருமணம் செய்துகொண்டால், அவர்களை பின்தங்கிய வகுப்பினைச் சார்ந்தவராகச் சொல்கின்றார்கள். இப்படி திருமணத்தின் மூலமாக பின்தங்கியவர் வகுப்பைச் சேர்ந்தவர் அல்லது முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர் என்று மாற்றும் கருத்துரு அரசிடம் உள்ளதா? இந்தக் கருத்தை தம்முடைய பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கூடிய நிலையில் ஆய்வு செய்ய இதையும் சேர்க்கலாம் அல்லவா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபொறுத்து என்ன விதிமுறைகள் என்பது எனக்குத் தெளிவாக இல்லை. அதிலே சிக்கல்கள் இருந்தால், அதையும் இந்தக் குழுவிடம் கொடுத்து ஆராயும்படி கொடுக்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்? இன்னும் இந்தக் குழுவை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா? முற்பட்டோர் பட்டியலில் தற்போது இருந்து தங்கள் பொருளாதார நிலையிலே, சமூக நிலையிலே பிற்பட்டு இருப்பதால் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கின்ற சமூகத்தினைச் சேர்ந்தவர் யாரேனும் இந்தக் குழுவில் இருக்கின்றார்களா? அவர்களைச் சேர்த்துக்கொள்கின்ற உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதிலே கடைசியாகச் சேர்த்தவர்களையும் சேர்த்து, ... 16, 17 உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அதிலே

பெரும்பகுதியினர் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதிலே இரண்டொருவர் வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இப்போது கேட்டுக்கொண்டிருக்கின்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. அது எதுவாக இருந்தாலும், இந்தக் குழுவினுடைய மொத்த அறிக்கையைப் பெற்ற பிறகுதான், அந்த அறிக்கை வந்த பிறகுதான், அந்த அறிக்கையின் மீது அரசு முடிவெடுக்க வேண்டியிருக்கும். அதன் பரிந்துரைகளே முடிவாகிவிடாது. அந்தப் பரிந்துரைகளை அடிப்படையாக வைத்து முடிவு கட்டவேண்டும். அதாவது உச்ச நீதிமன்றத்தினர் ஆராயவேண்டும் என்று சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே இக்குழு ஆராயவேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

(முற்பகல் 9-50)

1. தற்போது பிற்பட்ட இனத்தவர் என்று அறிவித்து அரசு வெளியிட்டுள்ள பட்டியலை உச்சநீதி மன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்வது.

2. மாநிலத்திலுள்ள பிற்பட்ட சமுதாயத்தினருடைய நிலைமை குறித்து ஆழ்ந்த தீர்க்கமான ஆய்வு நடத்தி அந்த பிற்பட்ட சமுதாயத்தினர் மேம்பாட்டுக்காக உறுதியான யோசனைகளை அரசுக்கு அளிப்பது.

3. பிற்பட்ட சமுதாயத்திலிருந்து இதுவரையில் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எந்த அளவுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது; அவற்றின் பலன்கள் என்ன? குறிப்பாக கல்வி, அரசுப் பணிகளில் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு கிடைத்துள்ள சலுகைகள்.

4. மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு அளித்துள்ள சலுகைகள் எந்த அளவுக்கு கல்வித் துறையிலும், இதர வகைகளிலும் பயன் அளித்துள்ளன.

5. பிற்பட்ட சமுதாயத்தினருக்கு இன்றுள்ள நிலையில் வேறு என்ன சலுகைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தொழிற் கல்விகளிலும், மேல் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளில்கூட இட ஒதுக்கீடு, வர்த்தகம், தொழில் ஆகியவற்றில் இந்த பிற்பட்ட சமுதாயத்தினருக்கு இன்னின்ன சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்; கிராமக் கடன் வழங்கும் திட்டம் கூட்டுறவு மற்றும் மார்கெட்டிங் இனங்களில் அளித்துள்ள மேம்பாடு ஆகியவற்றில் என்ன ஏற்பாடுகள் செய்வது.





6. நியமிக்கப்பட்டுள்ள இந்த உயர் மட்டக் குழு எந்தெந்த இனங்களில் குறுகிய கால நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; எந்தெந்த இடங்களில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் மேம்பாட்டிற்காக நீண்ட காலத் திட்டங்கள் வகுத்து அமுல்படுத்த வேண்டும் என்பதை சிபாரிசு செய்ய வேண்டும்.

7. 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதி பிறப்பிக்கப்பட்ட பிற்பட்ட சமுதாயத்தினர் இட ஒதுக்கீடு முறை நீடிக்கலாமா அல்லது அதில் ஏதேனும் மாற்றம் தேவையா என்பதை ஆராய்ந்து அறிவிக்க வேண்டும்.

8. பிற்பட்ட சமுதாயத்தினர் யார் யார் என்று பட்டியலிட்டு, வகைப்படுத்தி, அந்த சமுதாய மக்கள் தொகை பற்றிய கணக்கெடுப்பது ஆகியவை குறித்தும் ஆராயலாம் என்ற அளவிற்கு 8 கோரிக்கைகள் இந்தக் குழுவிடம் உள்ளன.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, சமீபத்திலே முதலமைச்சரவர்கள் பொருளாதார அடிப்படையிலே இத்தகைய சலுகைகள் வழங்குவது பற்றிச் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறதென்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே அப்படி வழங்கியபோது, தமிழகத்திலே மாதாமாதம் கையெழுத்திட்டு சம்பளம் பெறக்கூடியவர்கள் மட்டுமே அதனால் கஷ்டப்பட வேண்டியதாக இருந்ததே தவிர, மற்றவர்கள் எல்லாம் தப்பித்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்போது, அத்தகைய ஆபத்து ஏற்படுமென்று சொல்லி, ஏற்கெனவே தந்தை பெரியார் அவர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் நிலைமைகளே நீடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதுபற்றி எல்லாம் குழு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கும். ஒரு நூற்றாண்டு அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு வகுப்பைப் பொறுத்துத்தான் பிற்பட்டவர்கள், முற்பட்டவர்கள் என்ற நிலை இருந்தது. வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்குப் பிறகு கல்விச் சலுகைகள் பலருக்கு வந்ததற்குப் பிறகு, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டோர் மட்டுமல்ல, கல்வியில் பிற்படுத்தப்பட்டோர் என்று கான்ஸ்டிட்யூஷனில் வந்தது. இப்போது சமுதாயத்தில் பிற்பட்டோர், கல்வியிலே பிற்பட்டோர் என்பது மட்டுமல்ல, பொருளாதாரத்திலே பிற்பட்டோரையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மண்டல் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. அதையும் ஆராய வேண்டுமென்று குழுவிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல சிலபல இடர்ப்பாடுகள் உண்டு. அவற்றைத் தவிர்க்க என்ன வழிகள் என்பதைக் காணவேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, பிற்பட்டோர் வகுப்பினருடைய சமூக நலன்களை ஆராய உள்ள குழுவிலே உறுப்பினர்களை நியமிக்கும் போது, எந்த அடிப்படையிலே நியமிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அரசியல் கட்சிகள் அடிப்படையிலா, பிற்பட்டோர் வகுப்பிலிருந்து வந்தவர்கள் என்ற அடிப்படையிலா? மாதம் ஒருவர் என்று பட்டியல் நீட்டிக்கப்படுகிறதே, அது எப்போது முடிவுறும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தக் குழுவிலே உறுப்பினர்களாகப் போடப்பட்டிருப்பவர்கள் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் அல்ல. பிற்பட்டோர் நலன்களுக்காகப் பாடுபட்டவர்கள், பல்வேறு நிலைமைகளை அறிந்தவர்கள், தெரிந்தவர்கள்; கூடுமானவரையில் மிகவும் பிற்பட்டோர் இனத்தில் இருந்து அதுபற்றி ஆலோசனை சொல்லக் கூடும் என்பதால், அந்த அடிப்படையிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே ஒரு குறிப்பிட்ட கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே நியமிக்கப்படவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, முன்பு நடைமுறையில் இருந்தபோது பின்தங்கிய வகுப்பினர்களில் மிகவும் பின்தங்கியவர்கள் என்ற பட்டியலை ஏற்படுத்தி, அவர்களுக்கு சில ஒதுக்கீடுகளைச் செய்யலாமா என்ற கருத்து அரசினுடைய சார்பில் இருப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் மேலவையில் நடைபெற்ற விவாதத்தில் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சொன்ன கருத்து, மிகவும் பின்தங்கியவர்களுக்குத் தனி ஒதுக்கீடு என்ற கருத்து, மதிப்பிற்குரிய அம்பாசங்கர் குழுவினால் ஆராய்ந்து, ஏற்றுக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பிற மாநிலங்களில் 2 டையர்—2 தட்டுதான் இருக்கிறது. ஒன்று பிற்பட்டவர்கள், மற்றொன்று மற்றவர்கள். பிற்பட்டோர் என்பதற்கு அங்கே கொடுக்கப்படும் விளக்கமே தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள்தான். அதற்குப் பிறகு மற்றவர்கள் எல்லோரும் ஒரே தட்டுதான். தமிழகத்திலும் மற்றும் ஒருசில மாநிலங்களிலும் மட்டும்தான் 3 தட்டுகள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மற்றவர்கள் என்று இருக்கிறது. இந்த நிலை வேண்டுமென்று பீகார், குஜராத் மாநிலங்களில் கிளர்ச்சி நடந்து, அதற்கு எதிர்க் கிளர்ச்சி எல்லாம் நடந்தது. எனவே மண்டல் கமிஷன் அமைத்து, அவர்களும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில், நீண்ட



நெடுங்காலமாக இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டது. பல்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும், இந்தக் கொள்கையில் மாற்றம் இல்லாத அளவிற்கு 1927-28-லே நீதிக் கட்சி கொண்டுவந்த அடிப்படையிலேயே காங்கிரஸ் கட்சியும், அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழகமும், அதற்குப் பிறகு உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன. எல்லாவற்றையும் ஆராயும்படி சொல்லியிருக்கிறோம். பிற்பட்ட வகுப்பினருக்கு நாம் இப்போது 50 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம் என்றால், அதிலே உள்ளவர்களிலே மிகவும் பின்தங்கியவர்கள்—மோஸ்ட் பேக்வார்ட் கிளாஸ்—என்று 37 பிரிவினரைச் சொல்லுகிறோம். பிற்பட்டோர் 178, 173 பிரிவுகள் என்று சொல்லுகிறோம். இவர்களைப் பிரித்து, மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இன்னொரு தட்டை ஏற்படுத்த இன்றைக்கு இயலுமா என்பதை ஆராய வேண்டும். அதிலே சட்டப் பிரச்சினை வருகிறதா என்பதை ஆராய வேண்டும். திரு. அம்பாசங்கர் குழுவிடம், இதுபற்றிச் சிந்தித்துச் சொன்னால், மிகவும் பிற்பட்டவர்களுக்கு நலம் பயக்கும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஆராய்ந்து சொல்லுவார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, அம்பாசங்கர் குழுவிலே உறுப்பினர்களை நியமிக்கும்போது, பிற்போக்கு சமூகத்தில் ஞானம் உள்ளவர்களை நியமித்துள்ளோம் என்று சொன்னார்கள். தமிழ் நாடு சட்டமன்றத்திலே உள்ள 2 கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தவிர, மற்ற எல்லோருக்கும் அதிலே பிரதிநிதித்துவம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நீங்கள் ரொம்ப முற்பட்டவர்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** எனவே பிற்பட்டோர் சமுதாயப் பிரச்சினையை ஆராய்ந்து சொல்ல, 2 கம்யூனிஸ்ட் கட்சியிலும் யாருமில்லை என்று மாநில அரசு முடிவு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, யாரையும் கூடாது என்று புறக்கணிக்கவில்லை. இந்தக் குழுவிலே 14 பேர்கள் என்று ஆரம்பித்து, 15 பேர்களாகி, 16 பேர்களாகி, 17 பேர்களாக இப்போது நின்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோல் ஆராய்ந்தால், ஏராளமானவர்களைப் போட வேண்டும். எங்கள் வகுப்புக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்று கோரிக்கை வரும்; அதைப்போலவே பல கட்சிக்காரர்களும் வந்து கொண்டிருப்பார்கள்; எங்கள் பகுதிக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்று கோரிக்கை வரும். அதை ஆராயும்போது, வாய்ப்பு ஏற்படும். அப்போது அதை ஆராய்ந்து தக்க முடிவுகளைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும்.

# RURAL INCENTIVE ALLOWANCE.

*178 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. Minister for Finance be pleased to state—

(a) whether the Graduate and Post-Graduate Teachers' Association has been made an appeal to the Government to enhance the Rural Incentive Allowance to Rs. 50; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர வர்கள் கிராமப்புற ஊக்கப்படியை 50 ரூபாயாக உயர்த்த எண்ணமில்லை என்று ஒருவேளை சொன்னார்களோ என்னவோ தெரியாது. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் அரசுக்கு இத்தகைய முறையீடு தந்திருக் கிறது. அதன் நியாயத்தை அவர்களே ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக் கிறேன். அதை ஏற்றுக்கொண்டு, அதை அறிவிக்க முயற்சி எடுப்பார்களா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கிராமப் பகுதிகளில் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் கிராமப்புற ஊக்கப்படி என்கிற சிறப்புப்படி நிதித் துறை ஆணை நாள் 25—10—1979-ல் வெளியிடப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் அரசு குடியிருப்பில் குடியிருக்காத வர்கள், முழு நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிற அரசுப் பணியா ளர்கள், மானியம் பெறும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோர் இந்த ஊக்கப்படியைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள். இதற்கு அப்பாற்பட்டு பட்டதாரி-பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களுக்கு வழங்குவதுபற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் வினா எழுப்பினார். இல்லை என்று தான் சொன்னேன். அப்படிப்பட்ட செயற்குறிப்பும் அரசிடம் இல்லை. ஆனால் படி வழங்குகின்ற பல்வேறு தன்மைகளை ஆராய்கின்ற போது, இதுபற்றியும் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கிராம ஊக்கப்படி தருகின்ற நிலைமை ஏற்பட்டபோது, ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் தங்களுக்கு வீட்டு வாடகைப் படி வேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்தார்கள். மற்ற அரசு



ஊழியர்களுக்கு நகரங்களில் தருவதுபோல் தரவேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்தார்கள். ஆனால் வீட்டு வாடகைப் படி என்கிற பேரில் அரசு இவர் களுக்கும் தந்தால், மற்றவர்களுக்குத் தருவதுபோல் இவர்களுக்கும் பின்னால் தர வேண்டியிருக்கும் என்று கருதித்தான் புதிதாக 10 ரூபாய் ஊக்கப் படி என்கிற பெயரில் தந்தார்கள் என்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வீட்டு வாடகைப் படி என்கிற பெயரில் வழங்கப்பட்டிருந்தால், பெர்சன்டேஜ் அடிப்படையில் அதிகமாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும். இப்போதுகூட பெயர் எப்படி இருந்தாலும், மற்றவர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப் படும் அளவுக்கு இவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நகரங்களைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுதான் நிலைமை. ஆனால் கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரையில், ஊக்கப் படி என்று முடிவெடுத் திருக்கிறோம். இதை மாற்றியமைக்கின்ற செயற்குறிப்பு இப்போது இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கிராமங்கள் உயர வேண்டும், வளர வேண்டும் என்று அரசு சொல்கிறது. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், மருத்துவர் களும் கிராமங்களுக்குப் போய் வேலை பார்க்க வேண்டுமென்று அரசு அறிவுறுத்துகிறது. கிராமங்களிலும் நகரங்களில் இருப்பதுபோல் வீட்டு வாடகைப் படி வழங்கப்பட்டால், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மருத்துவர்களும் அங்கு போய் பணிபுரிய விரும்புவார்கள். அத்தகைய ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்துமா? அப்படி ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தினால், இப்போது பல்வேறு இலாக்காக்களில் நகரங்களை நோக்கி டிரான்ஸ்பர் வேண்டுமென்று கேட்கின்ற தொல்லைகள் நீங்குவதோடு, இலாக்காக்களும் நல்ல முறையில் செயல்பட உதவி செய்தவர்களாக ஆவோம். அந்த அடிப்படையிலாவது இது பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்மிடம் இருக்கின்ற நிதி வசதி, வாய்ப்புகள், மற்றுமுள்ள சூழ்நிலைகள் இவைகளை எல்லாம் மனதிலே வைத்துத்தான் முடிவெடுக்க வேண்டும். ஏற்கெனவே ஒன்றுமில்லாத நிலையில் கொஞ்சம் கொஞ்சமாக, சிலபல வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சில முடிவுகளை எடுத்துள்ளோம். நிதி நிலையையொட்டி மற்றவைகளைப் பற்றி ஆராயும்போது, இந்தப் பிரச்சினையையும் நாம் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

[1983 மார்ச் 15

**திரு. செ. முத்துசாமி:** இன்றைக்கு எந்த கிராமத்திலும் 50 ரூபாய் வாடகைக்குக் குறைவாக வீடுகள் கிடைப்பதில்லை. இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இதுபற்றி ஆராயும் நிலை வரும்போது, இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று சற்று முன்பு சொன்னார்கள். இன்றைக்கு 'பே கமிஷன்' போடப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஊக்கப்படியைப் பொறுத்தவரையில், இது தனியாக வழங்கப்பட்டதாகும். ஊக்கப் படி வழங்குவதை உயர்த்தி வழங்குவது பற்றி எப்போது ஆய்வு செய்ய இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதோடு இது விரைந்து செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முதலிலேயே நான் இப்போது இதுபற்றி செயற்குறிப்பு இல்லை என்று குறிப்பிட்டேன். ஆகவேதான் இது பற்றி முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும், அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படும்போது, இதுபற்றி ஆராயலாம் என்றும் சொன்னேன். அதையேதான் இப்போதும் சொல்கிறேன்.

### திருச்சிராப்பள்ளி அருகில் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள்.

* 179 வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் திருச்சிராப்பள்ளி அருகே சூரியனூர் கிராமத்தில் சுமார் 150 வீடுகள் தீக்கிரையானது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(உ) அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உதவி ஏதும் அளித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) மற்றும் (இ) திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், குழுமணி கிராமத்திலுள்ள திரையரங்கில் 16—7—1982 அன்று சினிமா டிக்கெட் வாங்குவது பற்றி சூரியனூர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், திருச்சி வட்டம். கோப்பு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையே பூசல் ஏற்பட்டது. இதன் காரணமாகவும், பின்பு எட்டாரை, கோப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இரு இளைஞர்கள் 18—7—1982 அன்று தாக்கப்பட்டதன் விளைவாகவும், எட்டரை,



1983 மார்ச் 15]

கோப்பு ஆகிய கிராமங்களிலிருந்து 18—7—1982 அன்று சுமார் 500 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று சூரியனூர் கிராமத்தில் சில வீடுகளைத் தீக்கிரையாக்கியதால் அத் தீ காற்றினால் பரவி 81 வீடுகளுக்குச் சேதம் விளைவித்தது.

(உ) பாதிக்கப்பட்ட 81 குடும்பங்களுக்கும் தலா ரூ. 200 ரொக்கப் பணமும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் 1 வேட்டி, 1 புடவை வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 81 வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டிருக்கின்றன. 200 ரூபாய் வீதம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு எரிக்கப்பட்ட வீடு மாதிரி ஒரு வீட்டை நிர்மாணிக்க குறைந்தது 3,000 ரூபாய் ஆகும். அவர்கள் ஒருவரும் யாருக்கும் எந்தவிதமான தவறையும் செய்யவில்லை. இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே சண்டை ஏற்பட்டு, தாக்கப்பட்டு, இவர்களுடைய வீடுகள் தீக்கிரையாகி இருக்கின்றன. அவர்களுடைய வீட்டைத் திருப்பிக் கட்டுவதற்காக கூடுதல் தொகை கொடுக்கப்படுமா? அப்படி உதவி கொடுக்க முடியாவிட்டால், கடன் வழங்கியாவது அவர்களுடைய வீட்டை அவர்கள் கட்டிக்கொள்ள ஆவன செய்யப்படுமா? இவ்வாறு தாக்கியவர்கள் மீது என்ன வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது? எத்தனை பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இ. பி. கோ. 49-ன்படி அங்குள்ள காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு 51 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு கோஷ்டியினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 200 ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதைக் கொண்டு அவர்கள் எரிந்து போன வீட்டைக் கட்ட முடியாது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. கடன் வேண்டுமென்று மனு தந்தால், அதுபற்றி அரசு ஆராயும்.

### சென்னை நகரில் சில வழித்தடங்களில் பேருந்துகள் குறைப்பு

*183. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை நகரில் 18, 21 மற்றும் 21 என் ( ) போன்ற வழித்தடங்களில் பல்லவன் பேருந்துகள் குறைக்கப்பட்டுள்ளன என்பதும் அதனால் பொதுமக்கள் அவதியுறுகின்றார்கள் என்பதையும் அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[1983 மார்ச் 15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தடம் 18-ல் 25 பேருந்துகளும்,
21-ல் 18 பேருந்துகளும், 21-என்-ல் 7 பேருந்துகளும் உள்ளன. இதில் எந்தத்
தடத்திலும் பேருந்துகள் குறைக்கப்படவில்லை. நெரிசல் அல்லாத நேரங்
களில் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை மட்டும் சில தடங்களில்
ஆய்வுக்குப்பின் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த வழித் தடங்களிலே உள்ள பேருந்து
களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதாகவும், அதே நேரத்தில் பேருந்து
களுடைய இடைவெளி நேரத்தை அதிகப்படுத்தியிருப்பதாகவும் தொடர்
புள்ள அதிகாரி கூறி, அது பத்திரிகையில் கூட வந்தது. டீசல் தட்டுப்பாடு
காரணமாக அவ்வாறு செய்யப்பட்டது என்றும் அந்த அதிகாரி சொல்லி
யிருந்தார். அப்படி இல்லை என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொன்னால் மகிழ்ச்சியை அளிக்கும். போக்குவரத்தைப் பொறுத்தவரையில்,
பேருந்துகளின் இடைவெளி நேரத்தை அதிகப்படுத்தியிருந்தால், அதை
மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவந்தால், பஸ் பயணிகளுடைய
எண்ணிக்கை பேருந்துகளில் குறையும். அதன் காரணமாகப் படிக்கட்டு
களில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறையும்.
ஆகவே பேருந்துகளின் இடைவெளி நேரத்தைக் குறைக்கின்ற உத்தேசம்
அரசுக்கு உண்டா ? கூடுதலாக அந்த வழித்தடங்களில் பேருந்துகளை
விடுகின்ற உத்தேசமும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதற்குக் காரணம் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் டீசல் தட்டுப்பாடு அல்ல. டீசல்
விலை உயர்வு தான் காரணம். மேலும் நாம் பேருந்துகள் அத்தனையையும்
நிறுத்திவிடவில்லை. உதாரணத்திற்கு தடம் 18-ல் ஓடிக்கொண்டிருந்தப்
பேருந்துகளை, நெரிசல் அல்லாத நேரங்களில் ஓடிக்கொண்டிருந்த எண்ணிக்
கையின் அளவை மட்டும் குறைத்திருக்கிறோம். அப்படியே எந்தப்
பேருந்தையும் நிறுத்தவில்லை. அதுபோல் நெரிசல் நிறைந்த நேரங்களில்
கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படும் எண்ணிக்கையை அதிகரிக்கிறோம்.
நெரிசல் நேரங்களில் படிக்கட்டுகளில் பயணம் செய்வது இதனால் ஓரளவுக்குத்
தவிர்க்கப்படுகிறது. சாதாரணமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கேகூட
நன்றாகத் தெரியும். அதிகாலை 5 மணி, மத்தியானம் 1 மணி, 2 மணி,
இரவு 8 மணி, 9 மணி ஆகிய நேரங்களில் பேருந்துகள் காலியாகப் போகும்.
அந்த மாதிரி நேரங்களில் மட்டும் சில வழித்தடங்களில் உள்ள எண்ணிக்
கையின் அளவைக் குறைத்திருக்கிறோம். எந்த இடத்திலும் அத்தனை



1983 மார்ச் 15]

பேருந்துகளையும் நிறுத்திவிடவில்லை. பேருந்துகள் நிற்கும் இடங்களில்
பேருந்துகளையும் நிறுத்திவிடவில்லை. பேருந்துகள் நிற்கும் இடங்களில்
சாதாரணமாக ஐந்து நிமிடம் காத்து நின்று செல்பவர்கள் இதன் காரணமாக
நெரிசல் இல்லாத நேரங்களில், இன்னும் ஒரு ஐந்து நிமிடம் அதாவது பத்து
நிமிடம் காத்து நின்று பேருந்தில் செல்ல வேண்டியிருக்கும். ஆகவே நெரிசல்
நேரத்தில் பேருந்துகள் இயக்கப்படும் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டுள்ளது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய
திலிருந்து பயணிகள் இன்னும் கூடுதலாக ஐந்து நிமிடம் அதாவது பத்து
நிமிடம் காத்து நின்று பேருந்தில் செல்லவேண்டிய நிலை இருப்பதாகத்
தெரிகிறது. ஆனால் அவசரமாகச் செல்லவேண்டிய பயணிகள் காத்து
நின்று பஸ்களில் ஏறுவதில்லை. அவசரமாக அப்போது எந்தப் பேருந்து
வருகிறதோ அதிலே ஏறிக்கொள்கிறார்கள். இதனால் படிக்கட்டுகளில் தொத்தி
பயணம் செய்ய வேண்டிய நிலை பயணிகளுக்கு ஏற்படுகிறது. அவர்களை
இறங்குமாறு நடத்துநர் சொல்லும்போதுதான், அவர்களுக்கும் பயணி
களுக்கும் மோதல் ஏற்படுகிறது. ஆனால் அதே பயணிகள் படிக்கட்டிலிருந்து
இறங்காமலிருந்தால், நடத்துநர்களுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்படு
கிறது. இப்படி நெரிசல் அல்லாத நேரங்களில் இயக்கப்படும் பேருந்துகளின்
எண்ணிக்கை சில தடங்களில் ஆய்வுக்குப் பின் குறைக்கப்பட்டுள்ளதால்,
பயணிகள் அவசரமாகப் படிக்கட்டுகளில் தொத்துகின்ற நிலையும், அதைத்
தொடர்ந்து நடத்துநர்களுக்கும் பயணிகளுக்கும் மோதல் ஏற்படுகிற நிலையும்
அவர்கள் படிக்கட்டுகளை விட்டு இறங்காவிட்டால் நடத்துநர் அபராதம்
கட்டுகின்ற நிலையும் இருப்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறதா ? இதற்கு
மாற்று ஏற்பாடு செய்யப்படுமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே நான் விளக்கமாகச்
சொல்லியிருக்கிறேன். கூட்டமே இல்லாத நேரத்திலேதான் நிறுத்தியிருக்
கிறோம். வண்டியிலே இடம் இல்லாமல் இருந்தாலும், அதற்காக யாரும்
இப்போது காத்து நிற்பதில்லை. ஒரு வண்டிக்குப் பின் அடுத்த வண்டி ஐந்து
நிமிடத்தில் வரும் என்றால், இப்போது அது பத்து நிமிடத்திற்குள் வரும்.
ஆனால் அப்படி வருவது நெரிசல் இல்லாத காலை நேரங்களிலேதான். ஆகவே,
அந்தப் பிரச்சினை எழவில்லை. மேலும், நெரிசல் உள்ள நேரங்களிலே
பார்த்தால்கூட, அவர்கள் நெரிசலாக இருக்கிறது என்பதால் அடுத்த
வண்டியில் போவதில்லை. நெரிசலாக இருந்தாலும் பஸ்சுக்கு மேலே ஏறி
உட்கார்ந்து கொள்கிறார்களே தவிர, அடுத்த வண்டிக்குப் போகலாம் என்று

காத்து நின்று போகும் நிலைமை இல்லை. ஆகவே, வண்டிகள் காலியாகப் போகும் நேரத்தில்தான், இப்போது இருக்கும் டீசல் விலை உயர்வின் காரணத்தாலும், நாட்டினுடைய ஒட்டுமொத்தமான நன்மையைக் கருதியும் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இதனால் பயணிகளுக்கு எந்த விதத்திலும் கஷ்டம் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நெரிசல் குறைவான நேரங்களிலே, பஸ்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைக் காட்டிலும் அந்த நேரங்களில் மினி பஸ்களை விட்டு, படிக்கட்டில் பயணம் செய்வதைத் தவிர்க்க படிக் கட்டுகளே இல்லாமல் (சிரிப்பு) இல்லை, படிக்கட்டிலே கதவுகளை வைத்தால் தவிர்க்க முடியும். ஆகவே, அப்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** படிக்கட்டு நிச்சயமாக அவசியம். படிக்கட்டுகள் இருந்தால் பலர் முன்னேற முடியும். இப்போது மினி பஸ் களையும் விட ஏற்பாடு செய்திருக்கிறோம். அவைகள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. நெரிசல் உள்ள நேரங்களில் மினி பஸ் விடத் தேவையில்லை. பெரிய பஸ் வேண்டும் என்று சொன்னால், அதையும் செய்யும். ஆகவே, பயணிகளுக்கு வசதியாகத் தான், இந்த அரசு காரியங்களைச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** வழித்தடம் 21 மற்றும் 21-என் போன்ற பஸ்கள், டெர்மினஸ்லே இரண்டு அல்லது மூன்று வண்டிகள் ஒரே சமயத்தில் வந்து நிற்கின்றன. அந்த இரண்டு மூன்று பஸ்களிலே எந்த பஸ் முதலிலே போகும் என்பது தெரியாமல் ஒரு பஸ்ஸிலே பயணிகள் ஏறிய பிறகு, பின்னர் அடுத்த பஸ்தான் முதலில் புறப்படப் போகிறது என்று சொல்லி, அந்தப் பஸ்ஸில் ஏறிய பயணிகள் எல்லாம் அவசரப்பட்டு அதிலிருந்து இறங்கி இந்தப் பஸ்ஸிலே ஏறிக்கொள்ளும் நிலைமைகள் எல்லாம் இருக் கின்றன. ஆகவே, இந்தக் குழப்பத்தைத் தவிர்க்க இப்படி இரண்டு மூன்று பஸ்கள் நிற்கும்போது, அவற்றிலே எந்த பஸ் முதலிலே புறப்படும் என்று தெரிந்துகொள்ளும் அளவுக்கு ஒரு இன்டிகேட்டர் வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



**மாண்புமிகு திரு.. சு. முத்துசாமி :** இவ்வாறு இரண்டு மூன்று பஸ்கள் நிற்கும்போது, முன்னாலே நிற்கும் பஸ்கள்தான் முதலில் போகும் என்பது நியதி. அப்படி இல்லாமல் இருந்தால், இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த விஷயத் தையே ஒரு புகாராக எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** எம்.எல்.ஏ.-க்கள் டிரெயின்களுக்குப் போக வேண்டுமென்றால் அதிலும் குறிப்பாக இரவு ஒன்பது மணிக்கு மேலே போகும் இரயிலுக்குப் போக வேண்டும் என்றால், அப்போது ஆட்டோ அல்லது டாக்சி போன்றவைகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே போகும் பஸ்களை இந்த எம்.எல்.ஏ. விடுதிக்குப் பக்கத்திலே, அதாவது விடுதிக்கு வடபுறத்திலே வந்து போகும் நிலைமையை ஏற்படுத்தினால் எங்களுக்கு இரயில்வே ஸ்டேஷன் களுக்குப் போக மிகவும் வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதைக் கவனிப்பார்களா ? நான் இதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆகவே, இரயில்வே ஸ்டேஷன் பக்கம் செல்லும் பஸ்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே சுற்றி வர ஒரு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அந்தப் பஸ்களிலே எவ்வளவு பயணிகள் பயணம் செய்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இப்படிச் சுற்றி வரும்போது அந்தப் பஸ்களிலே பயணம் செய்யும் பயணி களுக்கு மிகவும் கஷ்டம் வரும். எம்.எல்.ஏ.-க்களுக்காக இந்தப் பக்கம் சுற்றி வரவேண்டியிருக்கிறதே என்ற எண்ணம் வரும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சட்டமன்றம் தொடங்குகிற நாட்களில் இரயில்வே ஸ்டேஷனுக்கு பஸ் அனுப்பி இரயில் வரும்போது அங்கே மைக்கிலே எம்.எல்.ஏ.க்களுக்கு என்று தனியாக பஸ் நிற்கிறது என்று முன்பு அறிவிப்பு செய்வார்கள். சட்டமன்றம் முடிந்து போகும்போது அப்படிச் செய்யும் வழக்கம் இருந்தது. சட்டமன்றம் முடிந்து போகும் நாட்களில் பஸ் இரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும். ஆகவே சட்டமன்றம் நடக்கும் இந்த நாட்களில் எங்களுக்கு பஸ்கள் விடப்படுவதைப்போல, சட்டமன்றம் முடியும்போதும், இரயில்வே ஸ்டேஷனுக்கு என்று தனியாக ஒரு மினி பஸ்ஸையாவது விட்டால், நாங்கள் இந்த ஆட்டோ அல்லது டாக்சிகாரர்களிடம் 10 அல்லது 15 ரூபாய் பேரம் பேசிக்கொண்டு இரயில்வே ஸ்டேஷன்களுக்குப் போகும் நிலைமை யைத் தவிர்க்க வசதியாக இருக்கும். ஆகவே, அந்த வசதியைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

142168
Y21.32'N83

[1983 மார்ச் 15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அந்த வசதியைப் பயன்படுத்துவதாக இருந்தால், அந்த ஏற்பாட்டைச் செய்யலாம். சமீபத்திலே அப்படி விட்டபோது, அந்த வசதியினை யாரும் பயன்படுத்தவில்லை என்ற நிலைமை இருந்ததால்தான், அதை மாற்றியிருக்கிறோம். அதைச் செய்தால் நிச்சயமாகப் பயனுடையதாக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பயன்படுத்துவதாக இருந்தால், அதற்கான ஏற்பாட்டைத் தொடர்ந்து செய்து, அப்படி விட நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது இடையில் விட்ட வினாவை எடுத்துக் கொள்ளலாம். வினா எண் 180.

## *Lease of Government Property*

*180. Q.—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of THIRU A. R. DAMODARAN) Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether any property belonging to the Government of Tamil Nadu has been leased out to the Officers' Club in Pudukkottai Taluk;

(*b*) the terms and conditions of the lease; and

(*c*) whether any representation has been received from any other welfare organisation in Pudukkottai regarding this matter?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) குத்தகையின் வரையறைகளும் நிபந்தனைகளும் வாரிய நிலை ஆணை எண் 24-ன் கீழ் குத்தகைதாரராகிய "அதிகாரிகள் கழகம்" எழுதிக் கொடுத்த குத்தகைப் பத்திரத்திற்கிணங்க உள்ளன.

(உ) தற்போது முறையீடு ஏதுமில்லை. ஆனால் புதுக்கோட்டையில் உள்ள 'மகளிர் மன்றம்' அதிகாரிகள் கழகத்தினிடமுள்ள மனை, கட்டிடங்கள் முதலியவற்றைத் தங்களது நல மன்றத்திற்கு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. அம்மன்றத்தின் கோரிக்கையை ஏற்க இயலாதென அம்மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.



1983 மார்ச் 15]

## மிகச்சிரிய பெருமக்களுக்கு இலவச ஓய்வறை

*184. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சென்னை நகரப் பேருந்துகள் புறப்படும் நிலையத்தில் கட்டப்பட்டுள்ள பயணிகள் ஓய்வு அறையில், மிகச் சிரிய பெருமக்களுக்கு நுழைவு இலவசமாக்கப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னை பேருந்து நிலையத்திலே பயணிகள் தங்குவதற்கு என்று ஒரு அறை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அறை ஏ. சி. செய்யப்பட்டிருக்கிறது. அந்த அறைக்கு உள்ளே சென்று தங்குவதற்குப் போனால், அதற்கு உள்ளே போக நுழைவு சீட்டு வைத்திருக்கிறார்கள். உள்ளே போக வேண்டும் என்று சொன்னால், அதை வாங்கி வாருங்கள் என்று சொல்கிறார்கள். நுழைவுச் சீட்டின் விலை ரூபாய் இரண்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே தங்க வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு அந்த நுழைவுச் சீட்டு வாங்க வேண்டிய தேவை இல்லை. மற்றவர்கள் வி.ஐ.பி.-யாக இருந்தாலும், அல்லது சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அந்தக் கட்டணம் உண்டு என்று சொல்கிறார்கள். நான்கு மணி நேரம் தங்குவதற்கு வைத்திருக்கும் கட்டணம் ரூபாய் 2. ஒரு பயணி அங்கே செல்கிறார் என்று சொன்னால், அவருக்கு அங்கே 4 மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ தங்கியிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, அதற்கென்று வைத்திருக்கும் கட்டணம் ரூபாய் இரண்டு மிகவும் அதிகம். அங்கே தங்குவதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சலுகை வழங்கலாம். அல்லது ஒரு மணி நேரத்திற்கு எட்டணா என்ற வகையிலாவது அந்தத் தொகையைக் குறைக்கலாம். மேலும் நுழைவுச் சீட்டை வேறொரு இடத்திலே சென்று வாங்காமல் அந்த அறை என்ட்ரன்சிலே கூட கொடுக்கலாம். இதைச் செய்ய அரசு முன்வருமா ?

[1983 மார்ச் 15

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** நுழைவுச் சீட்டை வேண்டுமானால் அந்த அறையின் வாயிலிலே வைத்துக் கொடுக்கத் தேவையான ஏற்பாட்டைச் செய்யலாம். இரண்டு மணி நேரத்திற்கு இரண்டு ரூபாய், ஒரு மணி நேரத்திற்கு ஒரு ரூபாய் என்றெல்லாம் வைத்தால் நன்றாக இருக்காது. இப்படி நாம் வைத்திருப்பதற்குக் காரணமே தேவையில்லாமல் யாரும் உள்ளே வரக்கூடாது என்பதுதான். உண்மையான முறையில் தேவைப் படுவோர் இதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் கட்டணத்தை வைத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர்களுக்கு அந்தக் கட்டணம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அப்படி உறுப் பினர்களிடமிருந்து வசூலிக்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இனிமேல் மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்தும் அந்தக் கட்டணம் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கட்டணத்தைக் குறைத்தால் எல்லோரும் அங்கே சென்று அசிங்கப்படுத்தி விடுவார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தச் சலுகையைத் தர வேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கம். மேலும் எல்லோரும் அங்கே சென்று அசிங்கப் படுத்தி விடுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு ரூபாய் கட்டணம் என்று வைத்திருக்கும்போது மிகச் சிலர்தான் அங்கே செல்கிறார்கள். இரண்டு மணி நேரத்திற்கு இரண்டு ரூபாய் என்று இருக்கிறது. குறைந்த பட்சம் அரை மணி நேரம் என்று வைத்து, அதற்கு இவ்வளவு தொகை என்று நிர்ணயம் செய்தால், இதை பலரும் பயன்படுத்த வசதியாக இருக்கும். இப்போது யாரும் செல்லாமல் அந்த அறை சும்மா தான் இருக்கிறது. அதை நிர்வகிக்கக்கூட வசூலாகாமல் இருக்கும் நிலைமை தான் இருக்கிறது. ஆகவே, இப்படிச் செய்தால் தேவையான அளவுக்கு வசூல் பெருகும். ஆகவே, இப்போது நிர்ணயம் செய்திருக்கும் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அந்த அறை இப்போது பயன்படுத்தப் வில்லை என்று சொல்வது சரியாக இல்லை. ஒவ்வொரு மாதமும் முந்நூறு அல்லது நானூறு பேர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். யார் உண்மை யிலே பயன்படுத்த வேண்டுமோ, யாருக்குத் தேவை இருக்கிறதோ அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அரை மணி நேரத்திற்கு கட்டணம் என்று வைத்தால், அங்கே கூட்டம் அதிகமாக வந்துவிடும். அங்கே ஒரே சமயத்தில் இருபத்தி



1983 மார்ச் 15]

நான்கு பயணிகள் தங்குவதற்குத்தான் வசதி இருக்கிறது. அதிக தூரம் பயணம் செய்பவர்களும், அதிக நேரம் அங்கே தங்குபவர்களும் தான் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று இப்படி வைத்திருக்கிறோம். அரை மணி நேரம் என்று சொன்னால், அந்த அரை மணி நேரத்தைக் கழிக்க வெளியிலே ஒரு காப்பி குடித்தால்கூட அந்த நேரம் போய்விடும். அங்கே 24 பயணிகள் மட்டும்தான் ஒரே நேரத்திலே தங்கக்கூடிய வசதி இருப்பதாலும், சென்னை தலைநகராக இருப்பதாலும், இங்கே 234 சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து போகும் நிலைமை இருப்பதாலும், மேலவையின் உறுப்பினர்கள் வந்து போகும் நிலைமை இருப்பதாலும், இந்த நிலைமை களையும் நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது, மற்றவர் களுக்கு இதிலே வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்ற முறையிலேதான் 2 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் செய்யலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாவட்டத் தலைநகரங்களிலே இருக்கும் பயணிகள் தங்கும் அறைகளையும் மேலும் வசதி படைத்த அறைகளாகச் செய்து, அங்கே வரும் பயணிகள் ஓய்வு எடுத்துவிட்டு, வேண்டுமானால் அங்கேயே குளித்துவிட்டு செல்லக்கூடிய அளவுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா ? வெளிநாடுகளில் அந்த அளவுக்கு வசதிசெய்துகொடுக்கி றார்கள். அதையும் கவனத்தில் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தினுடைய பேருந்து நிலையங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்த அளவிலே வசதிகளைச் செய்ய தயாராக இருக்கிறோம். வெளிநாடுகளில் இருப்பதை விடவும் அதிக வசதிகளைக் கொண்டதாகக்கூட செய்து கொடுக்க தயார். ஆனால் அதேசமயத்தில் மேல்நாடுகளில் போல அவற்றைப் பயன் படுத்தவும் தயாராக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 10—3—1983ஆம் நாள் அன்று வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள்.

### நில ஆக்கிரமிப்பு.

* 145. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக, கேரள எல்லையில் நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா

வில் சுமார் 3,000 ஏக்கர் வனத்துறையைச் சார்ந்த இடத்தை 'சத்திய குமார் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட்' கம்பெனியினர் ஆக்கிரமித்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (இ) கேள்வியில் கண்டுள்ள இடம் நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா ஓவேலி கிராமத்தைச் சார்ந்ததாகும். அக்கிராமம் 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 24/1969)ன்படி தமிழக அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமமாகும். ஆனால் இச்சட்டத்தின் கீழ் இக்கிராமத்தை அரசு எடுத்துக் கொள்வதை எதிர்த்து பாதிக்கப்பட்ட நிலச்சுவான்தாரர்கள் டில்லி உச்சநீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கியுள்ளார்கள். சத்தியகுமார் எஸ்டேட் கம்பெனியினரை சுமார் 2321.34 ஏக்கர் (928.53.5 ஹெக்டேர்) நிலத்திற்கு உரிமம் கொண்டாடுகிறார்கள். ஆக்கிரமிப்பு என்ற சொல்லுக்கு இடமில்லை. பாத்தியமில்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால்தான் ஆக்கிரமிப்பு என்று சொல்லலாம்.

(முற்பகல் 10—20)

**திரு. ம. சங்கரலிங்கம் :** நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் சத்திய குமார் எஸ்டேட் என்பது கேரளத்திலுள்ள நிலாம்பூர் மகாராஜா குடும்பத்தைச் சார்ந்ததாகும். மாநிலப் புனரமைப்புக்குப் பிறகு (ஸ்டேட்ஸ் ரீ ஆர்கனைசேஷன்) அதன் ஒரு பகுதி கேரளத்திற்கும் ஒரு பகுதி தமிழ் நாட்டிற்கும் என்று வந்திருக்கிறது. ஆனால் மொத்தப் பகுதியையும் பிர்லா கம்பனியார் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு மஞ்சுஸ்ரீ பிளான்ட்டேஷன் என்ற பெயரில் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் பிர்லா கம்பெனியாரிடமிருந்து கருநாடகத்தைச் சார்ந்த எப். எம். கான் என்பவர் "சத்திய குமார் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட்" என்ற பெயரில் குத்தகைக்கு அந்த இடத்தை எடுத்துக் கொண்டு அதன் காரணமாக தமிழக அரசுக்குச் சொந்தமான அதையொட்டி அமைந்துள்ள பகுதியையும் ஆக்கிரமித்துக்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள நல்ல விலையுயர்ந்த மரங்களை வெட்டிக்கொண்டு போவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இதன் காரணமாக வனத்துறைக்கும் அவருக்கும் எப்போதும் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீலாம்பூர் மகாராஜாவுக்குச் சொந்தமான கேரளப் பகுதி 'ஜென்மி அபாலிஷன் ஆக்ட்' படி அரசாங்கத்தாலேயே எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால் தமிழ் நாட்டில் அந்தச் சட்டத்தை அமுல் படுத்தும்போது, அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச்





சென்று தடையுத்தரவை வாங்கியிருக்கிறார்கள். எனவே அந்தத் தடையை நீக்க நமது அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது? சுப்ரீம் கோர்ட்டில் அந்தத் தடையை நீக்க வேண்டும் என்று நமது அரசின் சார்பில் மனு போடப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அங்கே விவாதிக்கப்பட்டு வருகிறதா? தற்போது கர்நாடகத்தைச் சார்ந்த எப். எம். கான் என்பவரால் நமது எல்லைக்குள் உள்ள வனத் துறை மரங்களில் விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படும் முயற்சியைத் தடுக்கவும், அந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றவும் ஒரு விஜிலன்ஸ் கமிட்டி என்று ஒரு உயர் அதிகாரியின் தலைமையில் போட்டு, அந்த மரங்களையெல்லாம் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** குத்தகைக்காக விடப்பட்ட நிலம் பிறகு அவர்களுக்கே கொடுக்கப்பட்டது. 1929 ஆம் ஆண்டில் ஜென்மியில் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு 324.24 சதுர கிலோ மீட்டர் நிலத்தை நாம் எடுத்துக் கொள்வதற்காக முறைப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கு விரைவில் விசாரணைக்கு வர வேண்டும் என்று அரசுத் தரப்பில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் அங்குள்ள விலையுயர்ந்த மரங்களை யாரும் வெட்டாத வகையில் அரசும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. வனத் துறையும் தேவையான போதெல்லாம் வேண்டிய அளவுக்கு கண்காணிப்பையும் செய்து வருகிறது என்பதோடு, எந்த மரமும் அங்கே வெட்டப்படவில்லை என்றும், அப்படிப்பட்ட தகவல் குறித்து அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், அதை அரசு கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அந்த நிலங்களை யாருக்கும் உரிமைப்படுத்துவதற்கு சட்டம் கிடையாது. நிலாம்பூர் மகாராஜாவுக்கு முன்பு சொந்தமாக இருந்த அந்த நிலங்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி கேரளத்திற்கும் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்படி தமிழக மக்களுக்கும் சொந்தமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நிலங்களை பிர்லா கம்பெனியார் குத்தகைக்கு எடுத்திருந்தார்கள். அவர்கள் குத்தகைக்கு எடுத்த அந்த நிலங்களை இப்போது விலைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது சத்தியகுமார் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு விற்றிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் விற்பதற்கும் உரிமையில்லை. சத்தியகுமார் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட் இதை வாங்குவதற்கு உரிமையில்லை. நாட்டு

மக்களுக்குச் சொந்தமான அந்த நிலங்களையெல்லாம் அவர்களுக்கே சொந்தம் என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் விற்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதை அரசு பரிசீலனை செய்து இனாம் ஒழிப்பு ஆக்ட்-படி நடவடிக்கை எடுக்க முன்வருமா? சுப்ரீம் கோர்ட்டில் உள்ள வழக்கில் உரிய முறையில் வாதாடி அந்த நிலங்களைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** யார் எப்படி முயற்சி செய்தாலும், அரசு அதற்கு நிச்சயமாக சம்மதிக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற வழக்கை விரைவில் முடித்து அந்த நிலங்களையெல்லாம் அரசுக்கே சொந்தமாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரசின் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக தற்போது புதிய ஆக்கிரமிப்புகள் இல்லாமல் இருக்கின்றன. நீதிமன்றங்களுக்கும் கருணை ஏற்பட்டு ஒரு காலத்தில் நல்ல முறையில் நீதியை நிலைநாட்டும்போது, அந்தகைய இடங்களை இலங்கையிலிருந்து இங்கே குடியேறியுள்ள தமிழர்களுக்கு பட்டாவாக வழங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அப்படி எடுக்கப்பட்ட நிலங்கள் இதற்கு முன்னதாகவே கூட இலங்கையிலிருந்து வந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வருவோரில் யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று சில நியதிகளை அரசு வைத்திருக்கிறது. அதன் அடிப்படையில் தான் கொடுத்து வருகிறோம்.

### தென் ஆற்காடு மாவட்டத்தைப் பிரித்தல்.

*146. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, அந்த இரு மாவட்டங்களுக்கும் தனித்தனியாக ஏதேனும் பெரியவர்களின் பெயரைச் சூட்ட அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா? அதற்குரிய தலைநகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனவா? எப்போது இவைகளுக்கான பரிசீலனை முடிந்து, இவை அமுலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களை எவ்வப்போது பிரிக்க வேண்டும் என்பதைப்பற்றி அந்தந்த நேரத்திற்கு உகந்தவாறு, நிதி வசதிக்கு ஏற்றவாறு அரசு முடிவு செய்யும். ஒரு மாவட்டத்தைப் புதிதாகப் பிரிக்க வேண்டுமென்றால், தொடராச் செலவு ஏறக்குறைய ரூ. 367 லட்சமும், தொடரும் செலவு ரூ. 36 லட்சமும் ஆகிக் கொண்டிருக்கிறது. இவைகளை எண்ணிப் பார்த்து அரசு தேவையானபோது மாவட்டங்களைப் பிரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த மாவட்டத்தையும் பிரிப்பதற்கு முன்னாலேயே பெயரை வைப்பது பற்றியோ அல்லது தலைநகர் எதுவென்று முடிவெடுப்பது பற்றியோ சொல்லிவிட்டால், அது நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வேறு பல மாவட்டங்களையும் பிரிப்பதற்குரிய சூழ்நிலை இருக்கிறது என்று தெரிகிறது. எனவே எந்தெந்த மாவட்டங்களை அவ்வாறு பிரிப்பதாக அரசுக்கு உத்தேசம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** வேறு மாவட்டங்கள் என்றல்ல. பெரிய மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று அரசு பரிசீலித்து வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படுவது குறித்த செய்தி பத்திரிகைகளில் கூட வந்தது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஓராண்டுக்கு முன்னதாகவே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்று மாவட்டங்களைப் பிரிக்கும் கருத்து அரசின் தீவிரப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். முதற் கட்டமாக கோவை மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் பிரிப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று அவர் சொன்ன செய்தி, பல செய்தி ஏடுகளிலும் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டது. தற்போது தேவை ஏற்படும்போது மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கூடுதலாக, ஆகக்கூடிய நிதிச் சுமையைக் கணக்கில் கொள்ள வேண்டியது அவசியம் என்றாலும்கூட, நிர்வாக வசதியின் அடிப்

படையிலும், அரசின் திட்டங்கள் ஏழை எளிய மக்களை விரைவாகச் சென்றடையவும் தற்போது பெரிய தடையாக விளங்கும் பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரிக்க வேண்டியது அவசியம் என்பதை அரசே அறியும். எனவே, அத்தகைய பெரிய மாவட்டங்களைப் பொறுத்தவரையிலாவது அரசு அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை விரைவில் இரண்டாகப் பிரிப்பதற்கு முன்வந்து, அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு உதவ முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாவட்டங்களைப் பிரிப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் குறிப்பாக முகவை, தஞ்சை போன்ற மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.. அதிலிருந்து அரசு பின்வாங்கவில்லை என்றாலும், நேரம் காலம் பார்க்க வேண்டியிருக்கிறது. பிரச்சினைகள் உருவாகிவிடாமல், மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டிய சூழ்நிலையையும் இருக்கிற காரணத்தால், நிதியையும் மதியையும் வைத்து எச்சரிக்கையோடு இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவேதான் நேரமும் காலமும் பார்த்து இது செய்யப்படும் என்று தெரிவித்திருக்கிறோம்.

**திரு. செ. முத்துசாமி :** பெரிய மாவட்டங்கள் என்ற பட்டியலில் சேலம் மாவட்டமும் வந்து விடுகிறது. மாவட்டமும் பெரிதாக இருக்கிறது. அதன் நிர்வாகமும் பெரிதாக இருக்கிறது. எனவே சேலம் மாவட்டம் பெரிய மாவட்டம் என்ற பெயரில் வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நிர்வாகம் திறமையாக நடைபெறுவதற்கு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மாவட்டத்தின் நிர்வாகம் சரியாக நடக்க வேண்டும் என்றால், கீழ் மட்டத்தில் இதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். இதனால்தான் 774 பிர்காக்களாக இருந்ததை மாற்றி 1,097 பிர்காக்களாக ஆக்கியிருக்கிறோம். வட்டங்களையும் 166 ஆக ஆக்கியிருக்கிறோம். அதைப்போலவே கோட்டங்களையும் 52 ஆக ஆக்கியிருக்கிறோம். எனவே நிர்வாகம் நன்றாக நடைபெற வேண்டும் என்பதன் காரணமாக, அரசு கீழ்மட்டங்களில் உள்ள பிர்காக்களையும், வட்டங்களையும், கோட்டங்களையும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. சேலம் மாவட்டத்தை ஏற்கெனவே 1965—66 ஆம் ஆண்டிலேயே இரண்டாகப் பிரித்து சேலம்—தர்மபுரி மாவட்டங்களாக ஆக்கியிருக்கிறார்கள். எனவே அரசு அடுத்து பெரிய மாவட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துப் பரிசீலனை செய்யும்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (* ) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் அறிவிப்பில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே அறிவித்த அவை அலுவலில் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

11—4—1983 அன்று தொழில்கள் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் என்பதற்குப் பதிலாக ஊரகத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் எடுத்துக் கொள்ளப்படும்.

13—4—1983 அன்று தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மேலவை விவாதத்தை எடுத்துக் கொள்ளும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

## 3. தகவல் கோரல்.

### 14—3—1983 அன்று அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையில் வெளிவந்த செய்தி குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து தமிழக அரசின் நிலைமைகளை எடுத்துச் சொல்லும் வகையில் நான் குறுக்கீடு செய்ய வேண்டி வந்தது. அந்த நேரத்தில் நான் வருகின்ற 25ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் டில்லி சென்று காவிரி பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளவிருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். பத்திரிகையில் பெங்களூரில் கூட்டம் நடப்பதாகவும், கர்நாடக முதல்வரே அழைப்பு விட்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. ஒருவேளை குறுக்கீடுகள் வேகமாக நடந்த காரணத்தினால், நிருபர்களுக்குச் செய்தி சரியாகக் கிடைக்காமல் இருந்திருக்கலாம். நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காக இப்போது சொல்கிறேன். 25 அல்லது 26ஆம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறோம் என்று மத்திய அரசிடமிருந்து வந்த

[திரு. கா. இராசா முகமது] [1983 மார்ச் 15

தலைவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25-ஆம் தேதியன்றே உறுதியாகக் கலந்து கொள்வேன் என்று தகவல் தெரிவித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் அந்த தகவலின்படி, அதுவேளை ஒத்தி வைத்தாலும் வைக்கலாம் என்று இருக்கிறது. கூட்டம் நடப்பதாக இருந்தது டில்லியில். மத்திய அரசுதான் அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தது. அதிலே கலந்து கொள்ள இசைவு தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேதி கொடுத்தார்கள். நேற்றைய தினம் வந்த செய்தியையும் தலைவருக்காகச் சொல்ல விரும்புகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (1) திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த புத்தானத்தம் கிராமத்தில் இரு குழுவினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

" திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த புத்தானத்தம் என்ற கிராமத்தில் இரு குழுவினரிடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக மதக் கலவரம் தோன்றும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அப் பகுதியொழ் பொது மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து ".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விவர அறிக்கையிலே அங்கே நடந்த நிகழ்ச்சிகளுக்கான காரணங்களையும், அதை நிவர்த்தி செய்ய அரசு மேற்கொண்ட நிலைமைகளையும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு தீவிர முயற்சி செய்தாலும் அந்தப் பகுதியிலே அடிக்கடி அமைதி கெடுவதற்கான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று விவர அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. அங்கே அமைதி கெடுவதற்கான காரணங்கள் என்ன ? மத வேறுபாடுகள், கசப்புணர்ச்சிகள் அங்கே உருவாவதற்கு அடிப்படையாக உள்ளவர்கள் யார் எனக் கண்டறிந்து அவைகளை நீக்குவதற்கும்,

@ 409-410 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 15] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறதா அல்லது மேற்கொள்ளவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஏற்கெனவே மேலவையில் இது குறித்துகூடத் தன்னிலை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அங்கே மிகுந்த எச்சரிக்கையோடும், கவனத்தோடும், மோதல்கள் ஏற்படாதவண்ணம் தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அனைத்துத் தரப்பினரும் ஒருவருக்கொருவர் விருந்து பரிமாறிக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, இரண்டு விருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் அரசு நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள நான் சென்றபோது, அவர்களுக்கு அறிவுரை சொல்லி, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்து சகோதரத்துவமாக இருக்கிறார்கள். ஒரு சிலர் தீவிரவாதியாக இருப்பதை மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் பார்த்துக்கொண்டு வருகிறோம். அந்தப் பகுதியிலே மதக் கலவரம் தோன்றக் கூடாது என்பதற்காக அரசு நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு எடுத்திருக்கிற முயற்சி, அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகள், உண்மையிலேயே வரவேற்கத் தக்கவை. என்றாலும் அதற்கு மேலும் அனைத்து மதத்தினரும் வணங்கத் தக்க வகையில், அனைத்து மதத் தலைவர்களும் கலந்து கொள்ளத் தக்க முறையில் ஏதேனும் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, அவர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அவர்கள் மூலமாக அந்தப் பகுதியில் பிரச்சாரம் செய்து, மத வேறுபாடுகள் இன்றி நட்புணர்ச்சியோடு வாழ வேண்டிய மனமாற்றத்தை ஏற்படுத்தினால், நலமாக இருக்கும். அதற்கு ஊர்வலப் பாதையைப் பொறுத்தவரையில், எந்தவிதமான குறுக்கீடும் இல்லாத வகையில் நிரந்தரமான தனிப்பாதையை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். அந்த வகையிலும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, யோசனை நன்மை பயக்கத்தக்கதுதான். இது தமிழ் நாடு முழுவதற்கும் உள்ள பிரச்சினை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எங்கெங்கே இப்படிப்பட்ட உணர்வுகள் வெளி வருகின்றனவோ அங்கெல்லாம் பிரச்சினைகள் உருவாகின்றன. இதுபோன்ற பாதைகளை அமைப்பது மட்டுமல்லாமல், வேறு சில காரியத்திற்காகவும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 மார்ச் 15

பாதைகளை அமைத்துத் தர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். முதலிலே இதற்காக மதத்தைச் சேர்ந்த பெரியவர்களும் அக்கறை எடுத்துக் கொண்டு மக்கள் மத்தியிலே தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒற்றுமை யாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் செயல்படுவார்களேயானால், நன்மை உடனடியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அரசு எந்த அளவிற்கு ஒத்துழைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஒத்துழைப்பைத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) தேர்வாணைக் குழுவின் சிறப்புத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 1,200 பட்டதாரி ஆசிரியர்களுடைய பணி வரன்முறை செய்யப் படாதது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தேர்வாணைக் குழுவின் சிறப்புத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 1,200 பட்டதாரி ஆசிரியர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாததால் பாதிப்புக்குள்ளாகியுள்ள பட்டதாரி ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து."

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு கல்வியமைச்சரின் சார்பில்) : பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 1979-81-ல் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியை, சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுற்ற பின்னரே, வரன்முறை செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது என்று இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த அறிக்கை அளித்ததற்கு பின்னே எழுந்துள்ள நிலைமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யூ.எம்.பி.12730/1982 மற்றும் டபிள்யூ. பி. 598/1979 என்ற வழக்குகளில் தீர்ப்பு அளிக்கும்போது

@ 410 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 15] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

"It is stated that petitioners have already, secured orders of this Court for reserving two seats and, therefore, there would be no need to prevent others being regularised in the services, subject, of course, to the condition that such regularisation would be subject to the ultimate result in the Writ Petitions."

என்று உயர்நீதிமன்றம் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. ஆகவே தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுடைய பணியை வரன்முறை செய்வதற்கு உயர்நீதி மன்றம் பச்சைக் கொடி காட்டியிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே தேக்க நிலையில் உள்ள இரண்டு ஆசிரியர்களுடைய வழக்கு முடிவிற்கு அது கட்டுப் படும் என்று சொல்லியிருக்கிறது. அந்த இரண்டு ஆசிரியர்களுக்கும் பணி கொடுப்பதாகத் தேர்வாணைக் குழு ஏற்கெனவே உறுதிமொழி அளித்து விட்டது. ஆகவே பணி கொடுப்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. அந்த இரண்டு ஆசிரியர்களுக்குப் பணி கொடுக்கப்பட்ட பிறகு வரிசை எண்ணில் இரண்டு மாறும், வேறு எந்த மாற்றமும் இருக்காது. பணி வரன்முறை என்பது வேறு, பணி மூப்பு வரிசை என்பது வேறு. பணி வரன்முறையைப் பள்ளிக் கல்வி இயக்குநர் செய்ய வேண்டும் என்ற காரணத்தால், உயர்நீதிமன்றம் அனுமதித்தபடி, அதன் அறிவுரைகளைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் இப் போது புதிய செய்தியாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை வாசித்துக் காட்டினார். அதிலேகூட Subject to the result in the Writ Petition என்று வந்திருக்கிறபோது, நீதிமன்றம் எப்படித் தீர்ப்பு அளிக்கிறதோ அந்த அடிப்படையிலே நிச்சயமாக அரசு இந்தக் கருத்தைப் பரிசீலிக்கும்.

திரு. செ. முத்துசாமி : நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில், இரண்டு பேர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டது. அதற்கு மேல் எந்தத் தீர்ப்பு வந்தாலும் மற்றவர்களை வரன்முறை செய்வதைப் பொறுத்த வரையில், எந்த பாதகமும் ஏற்படுத்தாது. மற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய வேண்டாம் என்று தேர்வாணைக் குழு சொல்லியிருப்பதற்குக் காரணம், அந்த இரண்டு பேருடைய வழக்கில் தீர்ப்பு என்ன வருமோ என்ற சந்தேகத் தால்தான். இப்போது அந்த இரண்டு பேருக்கும் இடம் ஒதுக்க வேண்டும் என்று நீதிமன்றம் சொல்லிவிட்டால், இவர்களுக்குப் பாதகம் வரப்போவ தில்லை. நீதிமன்றத்திலிருந்து முழு தீர்ப்பு வராவிட்டாலும், இப்போதுள்ள வர்களுடைய பணியை வரன்முறை செய்வதில் எந்தவிதத் தடையும் இருப்ப

[திரு. செ. முத்துசாமி] [1983 மார்ச் 15

தாகத் தெரியவில்லை. இந்தத் தீர்ப்பு வந்த பிறகும் தேர்வாணைக் குழு அவர்களுடைய பணியை வரன்முறை செய்யாமல் இருக்கிறது. இதிலே காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் தேர்வாணைக் குழுவாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக இருந்தாலும் சரி, சிப்பநாடா முறையை நிர்வாகத்திலிருந்து நீக்குவதற்கு ஆசிரியர்கள் சார்பில் நாங்கள் முன்வந்திருக்கிறோம். அவர்களுடைய பணியை உடனடியாக வரன்முறை செய்யாததால், பதவி உயர்வு, மாறுதல் போன்ற விஷயத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பணியை ஓரிரு மாதங்களுக்குள் வரன்முறை செய்ய அரசு உத்தரவு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.40)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கையை அளித்தல்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

## 6. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை நான் எடுத்து வைக்க விழைகிறேன். இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கில் வருவாய் 1,774.88 கோடி ரூபாயும், செலவு கணக்கில் 1,653.581 கோடி ரூபாயாகவும், வருவாய்க் கணக்கில் உபரி ரூ. 121.07 கோடியாகவும் இருந்தாலும், அரசு மூலதனக் கணக்கில் உள்ள செலவு 'கடன் கணக்கில் உள்ள நிகர வருவாய்' கடன்களும் முன்பணமும் உள்ள செலவு பற்றவையும்கூட 1983-84 இறுதியில் நாம் எதிர்பார்க்கக்கூடிய பற்றாக்குறை எல்லாம் சேர்ந்து 184.55 கோடி பற்றாக்குறை அமையும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அப்படி



1983 மார்ச் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

ரூ. 184.55 கோடி பற்றாக்குறை வரும் என்று எதிர்பார்த்து இந்த பட்ஜெட்டில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வரியினுடைய பளு தெரியாமல் விதிக்க முயன்றிருக்கிறார்கள் என்பதுதான் நாம் பார்க்கின்ற நிலையில் எனக்குத் தெரிகிறது. இப்போது மத்திய அரசு கூட ஒரு பெரிய பற்றாக்குறை பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கின்றபோது, வறட்சியால் பீடிக்கப்பட்டு குடிநீர் கொடுக்கக்கூட பல கோடி ரூபாய்களைச் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே, நாம் ரூ. 300 கோடிக்குக் கூட பற்றாக்குறை பட்ஜெட் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும்கூட, அதைப்பற்றி யாரும் குறை சொல்ல முடியாது. அது நம்முடைய குறைபாடு அல்ல. இந்தப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கொஞ்சம் வரியைப் போடுவதாகச் சொல்லி, ஒரு பெரிய பளுவான வரியை எல்லாத் தரப்பினரையும் தாக்குகின்ற வகையில் சாதாரண பொருளுக்குக்கூட விலை அதிகமாகின்ற வகையில், ஒரு பெரிய, ஆனால் அதனுடைய பூதாகாரத்தை உணர்ந்துகொள்ள முடியாத அல்லது அதை முறையாக உணர்த்தாத நுழைவு வரியை இந்த அரசு போட்டிருக்கிறது. அதைப் போடுகின்றபோது அதனுடைய பளுவையும் தாங்குகின்ற ஆற்றலையும் மக்கள் அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்றபோது, பல ஐடம்கள் பேர்களைச் சொல்லி ஒரு கோடி ரூபாய் வரிச் சலுகை கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சாதாரணமாக பாமரர்களுக்குச் சொல்கின்ற ஒரு கதை இருக்கின்றது. ஒட்டகத்தின் மீது பளுவை ஏற்றி கடைசியாக அதனுடைய கண் எதிரில் மெலிதாகக் காட்சி அளிக்கின்ற அல்லது எடை குறைந்த ஆனால் பெரியதாகத் தெரிகின்ற ஒரு பொருளை அதன் கண் முன்னாலே எடுத்து இறக்கி வைத்துவிட்டு, அதை எழுந்திருக்கச் சொல்லி பாலைவனத்திலே நடக்கச் சொல்கின்ற கதையை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அது போல் இப்போது ரூ. 25 கோடிக்கு நுழைவு வரி போட்டிருக்கின்றார்கள். அதைப் பார்த்தாலே வரிப் புத்தகத்தில் அது ஒரு இலேசான வரியாகத் தெரிகிறது. ஆனால் அது மக்களுடைய ஒவ்வொரு பர்சுக்குள்ளே நுழைகின்ற இலேசான வரி மாதிரி தோன்றுகிறது. இப்படி நுழைவு வரி போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போட்ட பொருள்களிலே சிலருக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்று சொல்லி, மண்ணெண்ணெய் விளக்கு, சிம்னி, மண்ணெண்ணெய் விளக்கு திரி ஆகிய இந்த மூன்று பொருள்களுக்கும் வரியை எடுத்து விட்டார்கள். இந்தப் பொருள்கள் எண்ணிக்கையை மிகச் சாமர்த்தியமாக சொல்லி ஒரு பட்ஜெட்டை நமக்குத் தந்திருக்கிறார்கள். மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். வணிகத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற, இந்த அவையில் நீண்ட கால அனுபவத்துடன் நடுநிலைமை தவறாத என்றுமே ஒவ்வொரு பிரச்சினையையும் நடுநிலைமையில் ஆராய்ந்து ஒரு எடுத்துக்

காட்டாக விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆர். தாமோதரன் அவர்கள் தனக்கிருக்கிற ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த அரசு போடுகின்ற வரியினுடைய கடுமையை விவரித்துக் காட்டினார்கள். நான் அதையே மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். நமது உறுப்பினர் திரு. வி.வி. ஆனந்தம் அவர்கள் கூட வணிகத் துறையிலே நீண்ட அனுபவம் உடையவர்கள். அவர்கள் எல்லாம் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எடுத்துச் சொல்லியிருந்தாலும் கூட, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய பட்ஜெட் உரையிலே "இது வணிகர்களை ஒன்றும் செய்யாது. வணிகர்களுக்கு எந்தவிதமான தீமையும் வராது, ஆகவே நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று அவர்களுக்கு உறுதி மொழியை அளித்திருக்கிறார்கள். ஆனால் வணிகர்கள் உட்பட அத்தனை தரப்பு மக்களுடைய வாழ்விலே பற்றும் பாசமும் காட்டுகின்ற, அக்கறையோடு இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு அப்பாலும் இருந்து இதை ஆராய்ந்து இது எங்கெங்கே, யார் யாரை பாதிக்கிறது என்று பார்த்தது. அது அங்கிங்கெனாதபடி எல்லா ஏழைகளின் தலையையும் தடவி, அவர்கள் பணத்தை எடுத்து, அவர்களுடைய அன்றாடத் தேவைக்கான பொருள்கள் மீது, அவர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் மீது, அவர்கள் பயன்படுத்துகின்ற பொருள்கள் மீது வரியாகப் போடப்பட்டு வசூல் ஆகப் போகின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய உள்ளத்திற்கு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 13 பொருள்கள் என்று சொன்னார்கள். இவ்வளவு அழுத்தமான, ஆணித்தரமான முறையில் அன்போடும், பண்போடும், உரிமையோடும் இரு மன்றத்திலும் உள்ள தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன பிறகு, அவர்களும் அதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு 3 பொருள்கள் மீது வரிவிலக்கு என்று சொல்லி, சர்க்கரையிலே மிட்டாய் மாத்திரம், மருந்திலே நாட்டு மருந்து மாத்திரம், அதே மாதிரி விற்பனையில்லாத நாட்டு மருந்து மாத்திரம். அதே மாதிரி துணியிலே கைத்தறித் துணிக்கு மாத்திரம் இப்படி மூன்று பொருள்களுக்கு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். வைக்கோல் பொதிந்த சாக்குப் பையை ஒட்டகத்தின் கண் முன்னால் மாற்றுவது மாதிரி எடுத்து மாற்றியிருக்கிறார்கள். இது இந்த பாரத்தை இந்த ஒட்டகம் தாங்குகின்ற நேரம் அல்ல. தமிழகத்திலே இருக்கக் கூடிய தண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம், மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய



அவற்றை இவைகளையெல்லாம் கணக்கிலே வைத்துக்கொண்டு இந்த அரசு 25 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறது. இந்த ஆண்டு வரி போடாத நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று நாட்டு மக்களும் நாங்களும் எதிர்பார்த்தோம். மகாராஷ்ட்ரா அரசு எந்தப் புது வரியும் இல்லாத ஒரு நிதி நிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அப்படி பல மாநில அரசுகள் கொடுத்திருக்கின்றன. இப்படியெல்லாம் கொடுத்திருக்கின்றபோது, இந்த அரசு 25 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறார்கள். வணிகர்கள் கணக்கிட்டால் 250 கோடி ரூபாய் வரும் என்று சொல்கிறார்கள். பொருளாதார நிபுணர்கள் ரூ. 100 கோடி வரும் என்று சொல்கிறார்கள். எப்படியும் 75 கோடி ரூபாய்க்குக் கீழே இல்லை என்று சொல்கின்றார்கள். அப்படி இருக்கும்போது, அப்படிப்பட்ட வரியை இந்த நேரத்திலாவது போடாமல் இருக்கவேண்டாமா? அதுவும் எப்படி என்றால், மிகவும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. 16 பெரிய நகரங்களுக்கு மாத்திரம்தான், 3 மாநகராட்சிகள், செலக்ஷன் கிரேட் முனிசிபாலிட்டிகள் ஆகியவற்றிற்கு என்று சொல்கின்றார்கள். செலக்ஷன் கிரேட் முனிசிபாலிட்டி, அதாவது தேர்வு நிலை முனிசிபாலிட்டிகள் இவைகளுக்குத்தான் என்று சொல்கிறார்கள். மொத்தத்திலே 16 ஊர்களிலே இருக்கக் கூடிய அவர்களுக்குத் தான் இது போகும் என்று சொல்கிறார்கள். இதை இந்த நாட்டு மக்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். மணலி சுத்திகரிப்பு ஆலையிலிருந்து பெட்ரோல் புறப்படுகிறது. சென்னைக்கு வந்துதான் வெளியே போக வேண்டும். அதாவது பில்லிங் பாயிண்ட் என்று சொல்கின்றார்கள். எங்கே பில் போடுகின்றார்களோ அங்கேயே போட்டாகிறது. அப்படியானால் சென்னைக்கு வரும்போது 2 பர்செண்ட் உயர்ந்து விடுகிறது. 13 பைசா உயருகிறது, பெட்ரோலுக்கு. கோயம்புத்தூரிலிருந்து பில் தாணி மதுரை வருகிறது. 2 பர்செண்ட் உயர்ந்து விடுகிறது. சென்னையை விட்டுச் செல்கின்ற பெட்ரோல் மதுராந்தகத்திற்கும் போகும், செங்கற்பட்டுக்கும் போகும். அப்படிப் போனால் அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற கிராமத்திற்குப் போகும். திண்டிவனத்திற்குப் போகும். பிறகு பேரூராட்சிக்குப் போகும், கிராமத்திற்குப் போகும். இப்படிப் போகும்போது இந்த 13 பைசா ஏறித்தானே ஆகவேண்டும். இந்த நிலைமையில் நமக்கெல்லாம் இந்த வரி வராது என்று சொல்கின்ற நிலைமை எப்படி அரசுக்கு வந்தது? இந்த நாட்டு மக்களுக்கு இந்த வரிகளை போட்டிருக்கிறோம் என்று துணிவோடு சொல்லுங்கள். வெஸ்டர்ன் இகானாமிக் தியரி என்றும் ஒன்று இருக்கிறது. அதுபோல கம்யூனிஸ்ட் இகானாமிக் தியரி என்றும் ஒன்று இருக்கிறது. இந்த வெஸ்டர்ன் இகானாமிக் தியரியில் என்ன சொல்கின்றார்கள் என்றால், உணர்வுக்குத் தெரியாதவாறு வரியைப் போட வேண்டும். அது ஒரு நல்ல தத்துவம் தான். ஒரு ஊசி போடுகின்றபோது, ஒரு பக்கத்திலே மறக்க வைத்துவிட்டு ஊசியைப் போடுவார்கள். அந்த மாதிரி 16 நகரங்

களுக்கு வரி போடுவதாகச் சொல்கின்றார்கள். நகரங்களுக்குத்தானே வரி போட்டிருக்கிறார்கள் என்று கிராமத்து மக்கள் நினைக்கட்டும் என்று கருதுகி றார்கள். ஆனால் இது கிராமத்து மக்களையும் பாதிக்கிறது. சர்க்கரையில் இருக்கிறது. கோயம்புத்தூரிலிருந்து துணி மதுரைக்கு வருகிறது. மதுரை யிலே இருக்கின்ற டீலர்களுக்குப் போகிறது. அங்கிருந்து திருப்பரங் குன்றத்தில் உள்ள வியாபாரிகள் வாங்கிக்கொண்டு போகிறார்கள். பிறகு உசிலம்பட்டிக்குப் போகிறது. அங்குள்ளவர்கள் வந்து வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

(முற்பகல் 10-50)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அங்கே மதுரையிலிருந்து விருதுநகர் போகிறது. மீண்டும் 2 % பில்லிங் பாயின்டில். அது இல்லை என்றால் விட்டுவிடுவோம். பில்லில் சேரும்போது, அது விலையோடு சேருகிறது. 2 சதவிகிதம் சர்க்கரை விலை, துணி விலை ஆகியவற்றோடு சேருகிறது. அதற்குப் பிறகு சேல்ஸ் டாக்ஸ், சர்சார்ஜ் ஒர்க்-அவுட் பண்ணி, எவ்வளவு கூட்டியிருக்கிறார்கள் என்பதைக் கணக்குப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பொருள் அல்ல. இரும்புக் குப் போட்டிருக்கிறார்கள். நிலக்கரிக்குப் போட்டிருக்கிறார்கள், மின்சாரப் பொருள்களுக்குப் போட்டிருக்கிறார்கள். அதில் பல்ப், ஒயர் ஆகியவற்றுக்கு நீக்கியிருக்கிறார்கள். மோட்டார் வாகனங்களுக்குப் போட்டிருக்கிறார்கள். இதனால் வசதியுள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா ? பட்ஜெட்டுக்கு முன்னாலேயே மத்திய அரசு பெட்ரோலுக்கு வரியை உயர்த்தியிருக்கிறது. இந்த அரசு 13 பைசா உயர்த்தியிருக்கிறது. லாரி வாடகை உயர்ந்தால் அதில் ஏற்றி வரும் பொருள்களின் விலை என்னவாகும் ? அரிசியை ஏற்றிச் செல்லும் லாரியின் வாடகை அரிசியின் தலையிலேதான் ஏறும். அந்த உணவுப் பொருள்களின்மீது தான் வரி சுமத்தப்படுகிறது. இதில் லீட் வியாபாரிகள் எடுக்கிறார்கள். அதை மக்கள் உணர்வார்கள். சாதாரண மக்களுக்கு 'ஆர்கனைஸ்' பண்ண ஆற்றல் இல்லை. இதை இணைத்துச் சொல்லும் ஆற்றல் இல்லை. வியாபாரிகளிடம், இது உங்களைப் பாதிக்காது என்று ஏமாற்றலாம். அதற்கு நாங்கள் துணை நிற்கலாம். நீங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்காதீர்கள் என்று சொல்லிப் பார்த்தால், அவர்கள் உங்களோடு ஒரு வேளை ஒத்துழைத்திருக்கலாம். அவர்கள் சமுதாய நீதிக்கேற்ப ஈடுபடு கிறவர்கள் என்று சொல்பவன் நானல்ல. அவர்களை எப்போதும் பாராட்டு கிறவனல்ல. அவர்களும் இதை ஒத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களை நல்ல முறையில் ஏமாற்ற முயற்சித்தார்கள், யாரை ஏமாற்றினாலும்





ஏமாற்றலாம், வியாபாரிகளை ஏமாற்ற முடியாது. அவர்களிடம் பில்லிங் பாயின்டில்தான் வரி என்று சொன்னார்கள். அதனால் பில் போடாமல் இருக்கலாம் என்று நினைத்து, அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் அதை பில்லிங் பாயின்டில் வசூலிக்க முடியாது. ஏனென்றால் கோவையிலிருந்து அனுப்பும்போது, வேறொரு இடத்தில் பில்லிங் பாயின்டில் வரி போடுவார்கள். இரண்டாம் மாதத்திலேயே ஏமாற்ற ஆரம்பித்துவிட்டார்கள், மூன்று, நான்கு கேஸ்கள் பிடித்திருக்கிறோம், ஆகவே சோதனைச் சாவடியில்தான் 'செக்' பண்ண முடியும் என்று சொல்லுவார்கள். சோதனைச் சாவடியைத் தவிர வேறு எங்கு இந்த வரியைச் 'செக்' பண்ண முடியும் ? நுழைகிற இடத்தில் வரியைப் போட்டுவிட்டு, அதற்குச் சோதனைச் சாவடி இல்லை என்றால் எப்படி ? பில்லிங் பாயிண்டில் தான் வரி என்றால் தர்மர்கள்தான் வியாபாரிகளாக இருக்கிறார்களா ? அதர் மத்தைத் தவிர வேறு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் ? அப்படி இல்லை என்று சொல்லவில்லை. அப்படி அவர்கள் செய்கிறபோது, அவர்களைக் கட்டுப்படுத்த கடைசியிலே பொதுமக்களிடம் சென்று, ஏமாற்றுகிறார்கள், உங்கள் பணம் போகிறது, அதனால்தான் சோதனைச் சாவடி என்று சொல்லு வார்கள். சோதனைச் சாவடிதான் வேதனைச் சாவடி என்று மிக வேதனை யோடு அழுத்தமாகச சொன்னார்கள். அந்த ஆர்கியூமென்டை அப்படியே இருக்க விட்டுவிட்டு, அத்தனை வரிகளையும் சாதாரண மக்கள், ஏழை மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள் களின்மேல் ஏற்றியிருக்கிறார்கள். நுழைவு வரி மூலம்——பெட்ரோலுக்குப் போட்டுள்ள வரியின் மூலம், மோட்டார் வாகனங்களின் மீது போடப் பட்டுள்ள வரியின் மூலம், எலக்ட்ரிசிட்டி சாமான்களின் மீது விதித்துள்ள வரியின் மூலம், அரிசியின் விலை ஏறுகிறது என்று மாத்திரம் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரியைக் கண்டுபிடித்தவர்கள்கூட இதை மோசமான வரி என்று சொல்லுகிறார்கள். வரி விதிப்பின் மூலம் மக்களுக்கு சமுதாய நீதியைச் செய்து கொண்டிருக்க முடியும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் தத்துவம் இருக்கிறது. அதே மாதிரி கம்யூனிச சித்தாந்தம் இருக்கிறது. அது வரி விதிப்பு இல்லாமல், இருக்கிற சொத்துக் களை எடுத்து டிஸ்டிரிபியூஷன்பண்ணுவது என்ற சித்தாநதம். எல்லோரும் எல்லாத் தொழில்களும் செய்து, அதில் வரி போட்டு, எல்லோருக்கும் நன்மை செய்வது என்பது ஒன்று. எல்லோருடைய உழைப்பும் இந்த நாட்டுக்குச் சொந்தம், அதைப் பரவலாக்குகிறோம் என்று சொல்லும் சித்தாந்தமும் இருக் கிறது. ஆகவே வெஸ்டர்ன் எக்கனாமிஸ்ட்ஸ்கூட ஆக்ட்ராய் வரியைப் பிற் போக்கானது என்றும், வரி விதிப்பிலேயே ஒரு அநாகரிகமான வரி என்றும் சொல்லி, பல இடங்களில் அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று

கேட்டிருக்கிறார்கள். அதைச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சோதனைச் சாவடிக்கு லாரிகள் [illegible] வேறு வேலை இல்லை என்று சொல்லி, சோதனைச் சாவடிகளால் ஏற்படும் வேதனையை விளக்கமாகச் சொன்னார்கள். அகில இந்திய செம்பர் ஆப் காமர்ஸ் இதைப்பற்றித் தீவிரமாக ஆய்வு செய்து 1982 இறுதியில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதிலே நம்முடைய நாட்டிலே இருக்கும் சோதனைச் சாவடிகளை நீக்கிவிட்டால், 15 சதவிகிதம் பெட்ரோலை மிச்சப்படுத்தலாம். லாரிகளை எல்லாம் அங்கே நிறுத்தி நிறுத்தி அனுப்புவதால் பெட்ரோல் வீணாகிறது என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வியாபாரிகள் எல்லாம் அதை மிகைப்படுத்திச் சொல்வதாக நான் நினைத்தேன். ஆனால் 16—9—1980-லே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பிரதம அமைச்சர் அவர்கள் நகர நுழைவு சுங்க வரி மிகப் பிற்போக்கானது, அதன் காரணமாக பலவிதத் தொல்லைகள் வருகின்றன என்றார்கள். எல்லா மாநிலங்களும் அதை ரத்து செய்யவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டு மகாராட்டிரம், குஜராத், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு அறிவுரை சொல்லும்போது, நம்முடைய முதலமைச்சரவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அப்போது கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. பூட்டாசிங் அவர்கள் இந்த வரி பற்றிச் சொல்லும்போது, ஒரு ரூபாய் வசூல் செய்ய 83 காசு சோதனைச் சாவடிகள் வழியாகவும், அதிகாரிகள் வழியாகவும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது, ஆகவே இதை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லியதோடு, சோதனைச் சாவடிகளை அகற்றி, வேறு அமைப்பு முறையைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் பெட்ரோலியம் பொருட்களை இறக்குமதி செய்வதில் 236 கோடி அந்நிய செலவாணி இதனால் மிச்சமாகும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டிச் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, இந்த வரியை நமது மாநிலத்தில் எதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே இந்த நாட்டு மக்கள்மீது கொண்டுள்ள பற்றுதல் காரணமாக, தமிழகத்தில் உள்ள விசேடமான சூழ்நிலையை முன்னிட்டு, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் ஒருவேளை ஒரு மரபு இருக்கிறது, இந்த விதிப்பு முறைப்பு எல்லாம் சட்டப் பேரவையில்தான் சொல்ல வேண்டும், நிதி அதிகாரம் அங்கேதான் இருக்கிறது, மேலவையில் அப்படி மரபு இல்லை, இப்போது மனம் அதை வேண்டாம் என்று எண்ணினாலும், அதை இங்கே சொல்ல மரபு இல்லையே என்று எண்ணாமல் அந்த வரி விதிப்பை இங்கே பின் வாங்கும்போது, அது எங்கு நடந்தாலும், எல்லோரும் போற்றுவார்கள் என்ற நிலையிலே அதை இந்த அவையிலே அறிவிப்பதில் தவறில்லை என்று நான் நினைக்கிறேன்.



அதைச் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். ஒருவேளை உடனடியாக அதைச் செய்யவில்லை என்றாலும், இந்த வரி விதிப்பை 4 மாதங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டும். வறட்சி நீங்கும் வரை இந்த வரி விதிப்பை நிறுத்தி வைத்து, அதனால் வரக்கூடிய இம்பேக்ட், விளைவுகள், அமைப்பு முறைகள், பாதிக்கப்படக்கூடிய முறைகள் இவற்றை ஆராய பொருளாதார வல்லுநர்கள் அடங்கிய குழுவை நியமித்து, அந்தக் குழுவின் அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் பெற்று, வறட்சி நீங்கிய பின்னர், உணவுப் பற்றாக்குறை, தண்ணீர்ப் பற்றாக்குறை தீர்ந்த பின்னர், அதைப் பற்றி ஆலோசித்து, அமுல்படுத்த ஆராய வேண்டுமென்று இந்த நாட்டு மக்கள்மீது உள்ள பற்றுதலாலும், பாசத்தாலும், நிதி அமைச்சர் அவர்களிடம் உள்ள உரிமையாலும் நான் இதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது, நிதிநிலை அறிக்கையிலே இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகளுக்குள்ளே நான் இந்த முறை செல்ல விரும்பவில்லை. காரணம் அதற்குரிய காலம் இல்லை. இப்போது நம் முன்னால் உள்ள பிரச்சினை எல்லாம் இங்கு இருக்கக்கூடிய வறட்சி, மக்களுடைய துயர், தண்ணீர் இல்லாத நிலை, உணவு இல்லாத நிலை ஆகியவைதான். இதை எப்படி நாம் சமாளிப்பது என்பதுதான் நம் முன்னுள்ள பிரச்சனை. எப்படி மக்களுடைய துயரைத் தணிப்பது என்பது ஒன்றுதான் நாம் நினைக்க வேண்டியதாகும். நான் ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசும்போதுகூட அழுத்தமாகச் சொன்னேன். இப்போது இருக்கக்கூடிய வறட்சியைப் பற்றி, துயரைப் பற்றி, அதனுடைய முழு கோர நிலையைப்பற்றி நாம் இன்னும் சரியாக உணரவில்லை என்று சொன்னேன். ஆட்சியும், ஆளுகிற அமைப்பும் சேர்ந்து நாம் எல்லோரும் சேர்ந்துதான் ஆட்சி அமைப்பு, ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி எல்லோரும் சேர்ந்து இருப்பதுதான் ஆட்சி அமைப்பு ஜனநாயக முறையிலே மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில், மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை சரிவர உணரவில்லை என்று சொன்னேன். இப்போது உச்ச கட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்குரிய செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும். அதைப் பற்றி விவாதிக்க வேண்டும். அதைப்பற்றி நடவடிக்கைகளை போர்க்கால வேகத்தோடு, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற உணர்வு இல்லாமல், தமிழ் நாட்டில் உள்ள அத்தனை பேரும், கட்சி சார்பற்ற முறையில் உள்ள அமைப்புகளும் துயர் தணிப்புப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இப்போது ஏற்பட்டுள்ள ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் சுட்டிக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 15

(முற்பகல் 11-00)

தண்ணீர் பிரச்சினை முதலில். உணவுப் பிரச்சினைக்கு பின்னால் வருகிறேன். உணவு இல்லாமல் 4, 5 நாட்கள் சமாளிக்கலாம். தண்ணீர் இல்லாமல் ஒரு நாள் கூட தள்ள முடியாது. தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், சென்னை நகரில் இருக்கக்கூடிய நிலைமையைப் பார்ப்போம். வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களிலுள்ள நிலைமைக்குப் பின்னால் வருகிறேன். சென்னை நகரில் இருக்கக்கூடிய நிலைமையை மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரியம் அமைச்சர் மிகவும் நன்றாக அறி வார்கள். ஆட்சியில் உள்ளவர்களுக்கும் இதுபற்றி உணர்ந்துகொள்ள வேண்டும். இதற்கான பொறுப்பை இன்றைக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட வேண்டும். மேற்கு மாம்பலத்தில் அசோக் நகர் பகுதியில் 5 அல்லது 7 நாட்களுக்கு ஒரு நாள்தான் தண்ணீர் வருகிறது. மேலும் ஆரிய கவுடா தெரு, ஜெய்சங்கர் தெரு, வேலு நாயக்கன் தெரு, திருவேங்கடன் தெரு, ஆர். கே. புரம் தெரு போன்ற பகுதிகளில் வாரத்தில் இரண்டு நாட்கள்தான் தண்ணீர் வருகிறது. இதை நான் நன்கு அறிந்து தெளிவாகச் சொல்கிறேன்.

அதுபோல், குடிநீர் வடிகால் வாரியம் இரண்டு இரும்புத் தொட்டிகளை ஆர். கே. புரத்தில் வைத்து தண்ணீர் கொடுக்கிறது. மற்ற இடங்களிலே அந்தத் தண்ணீர் கூட இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரை விட்டு இறங்கி இந்த இடங்களைப் பார்வையிட வேண்டும். வெளிர் காலத்தின் பாதிப்பு யாமலிருப்பதற்காக காரில் குளு குளு கண்ணாடி பொருத்தியிருக்கிறார்கள். கண்ணாடி இல்லாத காரில் சென்றால்தான் இதுபற்றித் தெரிய வாய்ப்பு உண்டு. இதற்காக ஸ்பெஷல் கார் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து அதில் செல்ல வேண்டும். குளு குளு கண்ணாடி இல்லாத காரைப் பார்த்து அதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செல்ல வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அந்தக் கண்ணாடியையும் இறக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** கண்ணாடி இருந்தாலாவது கொஞ்சம் பாதுகாப்பு அந்தப் பகுதியில் இருக்கும். ஆனால் கண்ணாடி இல்லாவிட்டால், அந்தப் பாதுகாப்பு கூட இராது.



1983 மார்ச் 15]

**திரு. ம. சங்கரலிங்கம்:** மக்கள் படுகிற பாட்டை அமைச்சர் அவர்கள் அறிய வேண்டுமென்கிற எண்ணத்தில்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அப்படிப்பட்ட காரியத்திற்கு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் துணை போக மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு).

**திரு. ம. சங்கரலிங்கம்:** அங்கு போய்ப் பார்த்தால், நீண்ட க்யூ நிற்கிறது. எப்போது தண்ணீர் வரும் என்று முன் அறிவிப்பு இல்லை. எவ்வளவு நேரம் தண்ணீர் வரும் என்றும் தெரியாது. ஒரு ஆளுக்கு ஒரு குடமாவது கிடைக்குமா என்றால், இல்லை. குழாய்ச் சண்டை, தெருச் சண்டை வேறு. தண்ணீர் பிரச்சினை இப்படிப்பட்ட சண்டைகளை வேறு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. "க்யூவில் நிற்பதை நான்தான் இதுவரை பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகவே குடத்துக்கு 10 காசு வீதம் கொடுங்கள்" என்று சொல்கிற குண்டர் தொல்லை வேறு இருக்கிறது. கொடுக்காவிட்டால், தண்ணீர் கொடுக்க மாட்டார்கள். இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியும் கொடுக்கிற தண்ணீர் எப்படி இருக்கிறது என்றால், ஒன்றை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு காலையில் நான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியிலிருந்து இரண்டு லிட்டர் தண்ணீர் பிடித்து, குடிப்பதற்காக அதனை நோக்கி இரண்டு ஜக்குகளில் வைத்திருந்தேன். அது ஆறின பிறகுதான் குடிப்பேன். ஆறின பிறகு பார்த்தால் தண்ணீரின் கடைசியில் இரண்டு அவுன்ஸ் அளவுக்கு பருப்பு கஷாயம் மாதிரி அவ்வளவும் மண்ணும் கல்லுமாக இருந்தது. அதை நான் அவைக்குக் கொண்டு வந்து தலைவரவர்களின் அனுமதியோடு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்களிடம் தர வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் இந்த அவையின் கண்ணியத்தைக் காக்க வேண்டி, மாபு காக்கப்பட வேண்டும் என்பதைக் கருதி, அதை நான் எடுத்து வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களே கூட ஒரு பாட்டிலில் கொஞ்சம் தண்ணீர் பிடித்து வைத்து 2 அல்லது 3 மணி நேரம் கழித்துப் பார்த்தால், கடையில் மண் கலந்த, சாக்கடை நீர்போல் தண்ணீர் அடியில் உறைந்திருப்பதைப் பார்க்கலாம். இதை நீங்கள் போடவில்லை. உங்கள் பேரில் தவறு இல்லை. ஆனால் இப்படி இருக்கிற நிலைமையைத் தவிர்க்க மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நீதி மன்றத்தில் இது சம்பந்தமாக 10—3—1983 அன்று வாசுதேவன் என்பவர் வழக்கு போட்டார். அசுத்தமான தண்ணீர் வருவதால், இன்னின்ன நோய் வருகிறது, நல்ல தண்ணீரைத் தர அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று அவர் நீதிமன்றத்திற்குப் போனார்,

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 15

ஆனால் அதை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. ஆனால் ஒரு வழிகாட்டி நெறி முறையை அரசுக்கு நீதிமன்றம் சொன்னது. அரசு குடிநீர் வழங்குகின்ற பல்வேறு இடங்களுக்கும் வாரத்திற்கு ஒரு முறை சென்று தண்ணீர் பிடித்து அதை டெஸ்டுக்கு அனுப்ப வேண்டும். டெஸ்டில் சொல்லப் பட்ட ரிப்போர்ட்டை அப்படியே பத்திரிகையில் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னது. இவ்வளவு பாதுகாப்பாக குடிநீர் வழங்கப்படு கிறது என்பதை சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதனை நான் சொன்னேன். இன்றைக்கு சென்னை நகரைப் பொறுத்தவரையில், அமைச்சர்கள் எல்லாம் இருக்கிற தலைநகரம் இது. தவிரவும் இப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர் களும் இங்கே இருக்கிறார்கள். வாரியமும் இப்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும், குறிப்பாக 15 ஆம் தேதி வரையிலாவது ஒழுங்காக பணி களைச் செய்யுங்கள் என்று அறிவுரை வேறு வழங்கியிருப்பார்கள். இருந்தும் இந்த நிலையிலேயே இப்படி சென்னை நகர குடிநீர் வழங்கலின் தன்மை இருக்குமானால், பிற நகரங்கள், பிற கிராமங்கள், இப்படிப்பட்ட இடங்களி லுள்ள அவல நிலை எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட ஓரிரண்டு நாட்களுக்கு முன்பு சட்டமன்றப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதில் சொல்லும்போது இது குறித்து சொல்லியிருக்கிறார்கள். அசுத்தம் பரவக்கூடாது. அப்படி பரவினால், அது தொத்து நோய்க்கு ஏதுவாக ஆகிவிடும். தொத்து நோயைக் கட்டுப் படுத்த 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அசுத் தத்தைத் தவிர்க்க, மருந்து வாங்கவே 17 கோடி ரூபாய் செலவாகுமென்றால், சுத்தமான தண்ணீரை வழங்க எவ்வளவு கோடி செலவாகுமோ? இதற்கு ஆகின்ற செலவை மத்திய அரசு நமக்குத் தர வேண்டும். நாம் இதற்காக எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதல்ல பிரச்சினை. தண்ணீர் பஞ்சத்தைப் போக்க சென்னை நகருக்கு இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். ஏற்கெனவே சென்னைக்குக் காவிரி தண்ணீர் வருவதாக இருந்தது. நான் அந்தப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் இப்போது எழுப்ப விரும்பவில்லை. மேலும் இப்போது நம் முன் இருக்கிற பிரச்சினை எல்லாம் வீராணமா, கட்டளையா, இல்லை கிருஷ்ணாவா என்பதல்ல. எந்த விதத்தி லாவது விரைவில் சென்னை நகருக்கு ஏற்பட்டிருக்கிற தண்ணீர் பஞ்சத்தைப் போக்க ஒரு நிரந்தரமான நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும். இன்னமும் பழையவைகளையே பேசிக் கொண்டிருக்காமல் இப்போது அவர்கள் சொல்லுகின்ற கிருஷ்ணா திட்டத்தின் மூலமாவது விரைவில்



1983 மார்ச் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

சென்னை நகருக்குத் தண்ணீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான திட் டத்தைத் திட்டமிட்டு ஒரு தொலைநோக்குடைய திட்டமாக நிறைவேற்ற வேண்டும். வீராணம் திட்டம் கைவிடப்பட்டு எவ்வளவோ ஆண்டுகள் ஆகி விட்டன. அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்தும் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இன்னமும் வீராணம் ஊழல் பற்றி அவர்களுடைய பெயரையும், என்னுடைய பெயரையும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, இதற்கான திட்டம் சம்பந்தமாக எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்பட வில்லை. எப்போது ஒப்பந்தம் செய்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொடுக்கப் போகிறார்கள்? அதுவரை இருந்து எதாவது இன்னும் மாற்று ஏற்பாடு செய்ய இருக்கிறார்களோ என்னவோ? ஆனால் இனியும் காலம் கடத்தாமல் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி நான் சொல்லும்போது, மாண்புமிகு குடிநீர் வாரியத் துறை அமைச்சர் அவர்கள், "நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தி.மு.க. முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 1975 ஆம் ஆண்டு ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் கொடுக்க வில்லையா?" என்று கேட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் அவ்வாறு தெரிவித்ததை ஒட்டி சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்து, 2, 3 நாட் களாகக் கேட்டேன். நான் அறிந்தவரையில் 1975 ஆம் ஆண்டு சென்னை நகரிலேயும், தமிழகத்திலேயும் பொதுவாக வறட்சி நிலையும், பஞ்ச நிலையும் இருந்தது. மதுராந்தகம் ஏரி வறண்டு இருந்தது. இந்திய அரசாங்கம் அந்த ஏரியைச் சுற்றிப் பார்த்தார்கள். தமிழ் நாடு பூராவும் வறட்சி நிலைமையை அறிவித்தார்கள். வறட்சி நிவாரணம் அதிகமாக வேண்டுமென்று இதைக் காங்கிரஸ்காரர்கள் ஏற்க மறுத் தார்கள். ஆனால் அதை அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் ஏற்க மறுத் தார்கள். அவர்கள் இங்கே வறட்சி இல்லையென்றுதான் சொன்னார்கள். தோழர் காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் அவர்களைத் தொடர்ந்து இருந்த ஒரு காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழமையைப் பகுதியில் வறட்சி இருந்ததற்குப் பிறகுகூட வறட்சி இல்லையென்று தகவல் கொடுத்தார். அவ்வளவு வறட்சி இருந்த நிலையிலும், வறட்சியும், பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடிய நேரத்திலும், சென்னை நகரைப் பொறுத்த வரையில், காலையில் கொடுத்த இடத்தில் மாலையில் தண்ணீர் கொடுக்க வில்லை. ஆனால் எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் ஒருநாள் பூராவும் தண்ணீர் வராமல்கூட இருந்திருக்கலாம். இப்போது நிலைமை என்னவென் றால், ஒருநாள் விட்டு ஒருநாள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வாரத்தில் 5 நாள் தண்ணீர் வராத சிக்கலான பகுதிகளை நான் ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். ஆகவே நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால்,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது அப்படி நடந்தது, ஆகவே இப்போது இப்படி நடக்கிறது என்கிற ஆராய்ச்சியில் இறங்கி, அதைச் சொல்லி தப்பித்துக்கொள்கிற முயற்சியில் இறங்கக்கூடாது.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 1975 ஆண்டு பிப்ரவரி 21 தேதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் கொடுக்கப்பட்டிருப்பது உண்மை. எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற புள்ளிவிவரமும் இருக்கிறது. அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, வறட்சி ஏற்பட்டபோது வழங்கப்பட்ட தண்ணீர் எவ்வளவு, இந்த அரசு வந்ததற்குப் பிறகு 1982 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை வழங்கப்பட்டிருக்கும் தண்ணீரின் அளவு என்ன என்பது போன்ற புள்ளி விவரங்களைத் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் படித்துப் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இது வரை படித்துப் பார்க்கவில்லையென்றால், அதைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் விட்டது உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN: I hope, Sir, that the citizens of Madras will now feel happy that both the Governments have failed to give water. If that is the solution to the problem. God help us.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இதற்கு யார் பொறுப்பு என்பதல்ல. மழை பெய்யவில்லை. அதனால் தண்ணீர் இல்லை. இருக்கும் தண்ணீரை புத்திசாலித்தனமாகச் சேகரித்து, 45 மில்லியன், 50 மில்லியன் என்று இருப்பதை ஒரு மாத காலத்திலேயே கொடுத்துவிட்டு, பின்னர் ஏப்ரல் போன்ற மாதங்களில் 'தண்ணீர் இல்லை என்று சொல்லும் நிலைமை இல்லாமல், இருக்கும் தண்ணீரையே ஒரு மூன்று அல்லது நான்கு மாத காலமாக கொஞ்சம் நிதானமாகக் கொடுத்து வரவேண்டும் என்ற நிலைமை இருப்பதன் காரணத்தினால்தான்'. இப்போது ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் கொடுத்துக்கொண்டு வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி கொடுத்திருக்கிறார்கள் என்பதை எழுத்து மூலமாக அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி:** 1974-லே வறட்சி வந்து, அப்போது ஏற்பட்ட அனுபவத்திலிருந்து, இனிமேல் வறட்சி வந்தால் சென்னைக்கு எவ்வளவு பஞ்சம் வரும் என்று ஒரு நிலையை அனுபவித்துவிட்ட பிறகு கூட 10 ஆண்டு கால அளவிலே திட்டமிட்டு செயற்படுத்தாமல் இருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 1976-லே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்லிவிட்டுப் போனதை அவர்கள் உடனடியாகச் செயல்படுத்தியிருந்தால்—கிருஷ்ணா நதி திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால்—சென்னைக்குத் தண்ணீர் வந்திருக்கும். இப்போது விரைவிலே இந்த அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்து அதற்கென்று எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு மத்திய அரசு எல்லாவிதமான உதவியும் செய்யும், அதற்கு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தும் என்று இந்த அரசு நம்புகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** பிரதமர் அவர்கள் அன்றைக்குச் சொல்லிவிட்டுச் சென்றதற்குப் பிறகு உடனடியாக ஆட்சிக்கு வந்தவர்கள் நீங்கள் தான். அவர்கள் சொன்ன திட்டத்தை நிறைவேற்றாமல், கைவிட்டவர்கள் நீங்கள் தான். கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை அறிவித்தவர்கள் நீங்கள்தான். அதையும் கைவிட்டதாகச் சொன்னவர்கள் நீங்கள்தான். இன்றைய நிலைக்குக் காரணமானவர்களும் நீங்கள்தான்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மழை பெய்வதும், பெய்யாததும் ஒரு ஆட்சியைப் பொறுத்த நிலை அல்ல. சேர-சோழ பாண்டியர் காலத்திலேயிருந்து பார்த்தால் கூட தெரியும். அப்போது இருந்தே ஆண்டுக்காண்டு மழை இருப்பதும், மழையில்லாமல் வறட்சி இருப்பதும் மாறிமாறி இருந்திருக்கின்றன. அப்போதெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் எப்படி நடந்து கொண்டார்கள் என்று பார்த்து அப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் என்ற நிலைமை இல்லாமல், அவ்வப்போது என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன, நமக்கு என்னென்ன வாய்ப்புகள் கிடைக்கின்றன, கிடைக்கும் அந்த வாய்ப்புக்களை நல்ல முறையிலே பயன்படுத்துகிறோமோ, அப்படி பயன்படுத்துவதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமே தவிர, முன்பு அப்படி இருந்தால், இப்போது இப்படி இருக்கிறது என்ற அளவிலே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கக்கூடாது. ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுத்தார்கள் முன்பு. நாங்கள் தினமும் கொடுத்து வந்தோம் என்றெல்லாம் இல்லாமல் இருக்கும் நிலை வேண்டும். 1978-79-லே ஏராளமான மழை பெய்ததன் காரணமாக வீடுகளுக்கு உள்ளேயே தண்ணீர் புகுந்த நிலைமை இருந்தது. அப்போது வீடுகளிலிருந்து தண்ணீரை வெளியேற்ற வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது ஒவ்வொரு நாளும் கொடுப்பதற்கு வேண்டிய அளவிலே தண்ணீர் இருந்தால், அப்படி கொடுத்திருப்போம்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

இப்போது இருக்கும் நிலையில், இப்போது இருப்பதை வைத்தே மே திங்கள் வரை நாம் கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதாலும், மேலும் கோடை மழை பெய்யுமா, பெய்யாதா என்ற நிலைமை இருப்பதாலும், இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் இப்போது நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற வகையிலே திட்டமிட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, குறைபாடுகள் இருந்தால். சொல்லலாமே தவிர ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது பொருந்தாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** குடிநீர் வடிகால் துறைக்குப் பொறுப்பு ஏற்றிருக்கும் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்களுக்கு இதுபற்றி எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி எழுதிக் கொடுத்திருப்பதையே ஒரு அறிக்கையாக இந்த மன்றத்திலே வைத்தால், ஒரு பொது ரெக்கார்ட் என்ற அளவிலே இருக்கும். அப்படி வைத்தால், அந்த அறிக்கையிலே தவறு இருந்தால், எடுத்துச் சொல்ல முடியும். நான் சொல்வது தவறா அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது தவறா என்று ஒப்பிட்டுப் பார்க்க அது வசதியாக இருக்கும். ஆகவே, அதை ரோனியோ போட்டு இந்த அவையில் சமர்ப்பிக்க வேண்டும். இப்போது சென்னை நகரைப்பற்றிச் சொன்னார்கள். மதுரையிலே ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் கொடுப்பதாக ஒரு மாதத்திற்கு முன்பே அறிவித்தார்கள். இப்போது 5 நாட்களுக்கு ஒருமுறை கூட தண்ணீர் அங்கே வரவில்லை. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் கிளர்ச்சி செய்து, ஒரு கார்ப்பரேஷன் மெம்பர் வீட்டிலே போய், அங்கே உள்ள பெண்கள் வெறும் குடத்தை வைத்துப் போராடி, பின்னர் அவரே மதுரை மேயருக்கு போன் செய்து, பின்னர் உடனடியாக அங்கே லாரிகளிலே தண்ணீர் கொண்டு வந்தார்கள். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் இருக்கிறார்கள். இங்கே அந்த நிலைமைகூட இல்லை. மதுரையிலே மட்டுமல்ல, தமிழகத்தில் அனைத்து நகரங்களிலேயும், கிராமப்புறங்களிலேயும் இந்த நிலைமைதான் இருக்கிறது. நாகர்கோவிலிலேயும் இந்த நிலைமைதான் இப்போது இருக்கிறது. எல்லா காலங்களிலேயும் கன்னியாகுமரி மாவட்டத்திலே மழை கிடைக்கும் சென்னையை எடுத்துக்கொண்டால், வடகிழக்குப் பருவ மழை பெய்தால்தான் உண்டு. ஆனால் கன்னியாகுமரியிலே அந்த நிலைமை இல்லை. அங்கே எப்போதும் மழை பெய்யும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரையைப்பற்றிச் சொன்னார்கள். மதுரையைப் பொறுத்தவரை யில், அங்கே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்பினால், அதுபற்றி என்னிடம் இருக்கும் இந்த அறிக்கையைப் படிக்கத் தயாராக இருக்கிறேன்.



1983 மார்ச் 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

An infiltration well in Thachampudur will be commissioned for supply of 3 lakhs gallons of water per day. Necessary pipelines are being laid and the work will be completed in a week's time. This will augment the supply of water at Melakkal which is the normal source of supply to Madurai City.

(2) TWAD has already dug up a sort of collector well in Manalur about 16 KM from Madurai. As the laying of pipe-line for 17 KM will take considerable time, I have issued instructions to the Commissioner, Madurai Corporation to lay P. V. C. pipe line along the bed of river and rush at least about 2 to 3 lakh gallons of additional water per day. This laying of P. V. C. pipe line will be completed in about a week's time.

(3) Corporation of Madurai has suggested the sinking of 650 borewells at the rate of 10 per ward and the TWAD Board is studying the proposal and I think it will expedite the matter. The M.D., TWAD Board has, however, been instructed to take up this work immediately. The site for drilling will be identified in consultation with the geologist attached to the TWAB Board.

(4) As the spring of Vaigai bed has gone down very badly, we have requested the P.W.D. to release some water from Vaigai Dam to wet the river bed to improve the spring. The Secretary, P.W.D., has agreed to discuss with the C.E., Irrigation and issue instructions to local P.W.D. officials.

(5) There is some water in Periyar dam which is considered as dead storage. Arrangements are being made to release this water into Vaigai Dam so that the release of water from Vaigai to Madurai City will not affect the agriculturists' interests. I am keeping a close watch on the water-supply position in Madurai and I will watch the problem still closer.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மதுரையிலே நிலவிய கொடிய தண்ணீர் பஞ்சத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதாவது உணர்ந்து, அதற்கெல்லாம் தேவையான ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு வாரத்திற்குள் போட்டுவிட முடியும் என்றெல்லாம் சொன்னார்கள். அதையெல்லாம் பார்ப்போம். வறட்சி இருக்கிறது என்று இப்போது ஒத்துக் கொண்டதற்காக மகிழ்ச்சி. ரிப்போர்ட்டிலே இப்படி இருக்கிறது, இப்படி இப்படி எல்லாம் பண்ணச் சொல்லியிருக்கிறேன் என்று சொல்லியிருப்பதற்கு மகிழ்ச்சி. நான் இந்த அவையிலே 8-ஆம் தேதி ஆளுநர் அவர்களின் உரையிலே பேசும்போது சொல்லியிருக்கிறேன். அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது

என்று சொன்னால், அரிசியை நாம் வெளி நாடுகளிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். சிமெண்ட் கிடைக்கவில்லை என்று சொன்னால், கொரியா போன்ற நாடுகளிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். ஆனால் தண்ணீரை எங்கேயிருந்து வாங்குவது? ஆகவே, தண்ணீருக்காக ஒரு வழியைக் கண்டாக வேண்டும். ஆற்றுப் படுகைகளிலேயிருந்து தண்ணீர் எடுக்கலாமா என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும். இப்போது இயந்திரங்களை வைத்து குழாய் கிணறுகள் எல்லாம் போடுகிறார்கள். இப்படிப் போடும்போது மேலே இருக்கும் சூவேஜ் வாட்டர்தான் கிடைக்குமே தவிர, ஒரு 'பொலியல் சோர்ஸ்' என்ற வகையிலே தண்ணீர் இதனால் கிடைக்க வாய்ப்பில்லை. ஆகவே, ஆற்றுப் படுகைகள், கண்மாய் போன்றவைகளிலே, அந்தப் பகுதியிலே ஆழமான கிணறுகளைத் தோண்டி, அதிலிருந்து தண்ணீர் எடுத்து, அந்தத் தண்ணீரை கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் கொடுக்கும் முயற்சியை ஒரு வார காலத்திற்குள் எடுக்கவில்லை என்று சொன்னால், இப்போது இருக்கும் தண்ணீர் பஞ்சத்தை சமாளிக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். நான் இந்த அவையிலே பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி பேசியிருக்கிறேன். இப்போது ஒரு மாதம் 5 நாட்கள் கழித்துப் பேசுகிறேன். நாம் இன்னும் குறைந்தது 4 மாத காலப் பஞ்சத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய இரு அவைகளும் அடுத்த மாதம் 15 ஆம் தேதி வரை நடக்கவிருக்கிறது. "டி. டபிள்யூ. எ. டியிடம் இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம், வைகைப் படுகையிலேயிருந்து தண்ணீர் எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்" என்றெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமே என்று அதிகாரிகளிடம் சொல்லும்போது, அவர்கள் தங்களுக்குக் கீழே இருக்கும் அதிகாரிகளிடம்தான் இதைச் சொல்வார்கள். பின்னர் அவர்களிடமிருந்து அதற்கும் கீழே இருப்பவர்களுக்குப் போகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொன்னால், அவர்களுக்குக் கீழே இருக்கும் தாசில்தார்களுக்கு அவர்கள் சொல்லி, அந்தத் தாசில்தார்கள் அவர்கள் கீழ் இருக்கும் வில்லேஜ் ஆபீசர்களிடம் சொல்லும் நிலைமைகள்தான் இருக்கின்றன. இப்போது தமிழகம் பூராவும் இருக்கும் குடிநீர் பிரச்சினையைத் தவிர்க்க நாங்கள் சொல்லும் ஒரே யோசனை என்னவென்றால், இந்த நாட்டிலே இருக்கும் எல்லா நகரங்களுக்கும் என்று ஒரு திட்டம் அமைத்து, கிராமங்களுக்கு என்று தனியாக திட்டம் அமைத்து, எப்படியாவது வரும் மூன்று மாதங்களுக்கு எல்லா இடங்களிலும் தண்ணீர் கிடைக்கும் அளவுக்கு காரியமாற்ற வேண்டும்.





அதுவரையில் தமிழ் நாட்டை ஒரு நான்கு அல்லது ஐந்து ரீஜின்களாகப் பிரித்து, அங்கெல்லாம் தேவைப்படும் இடங்களில் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் லாரிகளை 'மொபிலைஸ்' பண்ணி, முடிந்த அளவுக்கு லாரிகளை வைத்துக் கொடுக்க வேண்டும். நம்மிடம் இருக்கும் லாரிகள் போதவில்லை என்று சொன்னால், பிற மாநிலங்களிலேயிருந்து தேவைப்படும் அளவுக்கு லாரிகளைப் பெற்றுச் செய்யலாம். இன்னும் வேண்டுமானால் பத்திய அரசிடமிருந்து இராணுவ லாரிகளை வாங்கி இந்தப் பணிக்குப் பயன்படுத்தலாம். இந்த அவை அடுத்த மாதம் 15 ஆம் தேதி வரையிலும் நடக்கப் போகிறது. நமக்கு இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் இன்னும் குறைந்தது ஒரு 5 மாத காலமாவது இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆகவே, இந்த அவையிலே தனித் நடவடிக்கை எடுத்து, 15 நாட்களுக்குள்ளாக தமிழ்நாடு பூராவும் இந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்லி, ஒரு அறிக்கை தரும் அளவுக்கு காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர் ஏப்ரல் 1, 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் இந்த இரு அவைகளுக்கும் விடுமுறையாக இருக்கிறது. அந்த விடுமுறை நாட்களில் எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதிகளுக்குச் சென்று தொகுதியில் இருக்கும் நிலைமையைக் கண்டறிந்துவிட்டு இங்கே வந்து, அதன்மீது ஒருநாள் விவாதத்தை வைக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்வார்களா? அப்படி ஒருநாள் விவாதம் வைத்தால்தான் இந்தப் பிரச்சினையை அரசால் சமாளிக்க முடியும்.

(முற்பகல் 11.20)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணம் என்ற முறையில் உடனடியாக மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர் வழங்குவதற்காக என்று இந்த அரசு ரூ. 10 கோடி அனுமதித்து, அதன் அடிப்படையில் தற்போது வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது டெல்லியிலிருந்து வரும் என்று அந்தப் பணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்காமல் மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்தே ரூ. 10 கோடி அளவுக்கு அனுமதி அளித்து அதற்காக வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக இந்த அவையில் ஒரு முறை கையாளப்பட்டு வருகிறது. எதிர்க் கட்சியிலிருந்து உறுப்பினர்கள் சொல்லுகிற கருத்துக்களை மறுத்து தவறான தகவல்கள் இங்கே தரப்பட்டு வருகின்றன. திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியின்போது இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப் பட்டது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். நான் எப்போது அப்படி நடந்தது என்று கேட்டேன். 1975 ஆம் ஆண்டில் அப்படி நடந்தது என்று சொன்னார். ஆனால் அதிகாரிகளை நான் கேட்டுப் பார்த்ததில் 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் கொடுத்ததாகத் தகவல் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப் பினர் திரு. நீலநாராயனன் அவர்களுக்கு ஒரு விளக்கம் கொடுக்கப் பட்டிருக் கிறது. அந்த விளக்கத்தில் ஒவ்வொரு நாளைக்கும் எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட்டது என்ற புள்ளிவிவரம்தான் இருக்கிறது. திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் 2 நாளைக்கு ஒருமுறை தண்ணீர் இன்னின்ன தேதியில் வழங்கப்பட்டது என்று எந்தக் குறிப்பும் அதில் இல்லை. . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதில் கடைசியில் இருப்பதை தயவு செய்து பார்க்க வேண்டும். இறுதியில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விடப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆல்டர்நேட்டிவ் டேஸில்" தண்ணீர் விடப்பட்டது என்ற வார்த்தைகளோடுதான் அந்த ரிப்போர்ட் முடிகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் அதைத்தான் படித்துக் கொண்டிருக் கிறேன். 1974 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு இவ்வளவு காலன் என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1975 பிப்ரவரி 21 ஆன்வர்ட்ஸ் என்று சொல்லி ஒரு விளக்கம் சொல்லப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அதை முழுவதும் படிக்க வேண்டும். அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** "1975 பிப்ரவரி 21 ஆன்வர்ட்ஸ் 30 மில்லியன் கேலன் ஆல்டர்நேட்டிவ் டேஸ்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதைத்தான் சொல்கிறேன். இது குறித்து அதிகாரிகளிடம் கேட்ட போது, இப்படி நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்னுங்கூட கேட் டேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒருபோதும் இரண்டு நாட் களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே அது சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் இருக்குமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைகளை இந்த அவையிலே கொண்டுவந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அந்தப் புள்ளிவிவரமே அரசு கொடுத்ததுதான். இதற்கு மேலும் என்ன புள்ளிவிவரம் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. "1975 பிப்ரவரி 21 ஆன்வர்ட்ஸ் அப் டு 30 ஆகஸ்ட்—ஆல்ட்டர்நேட்டிவ் டேஸ் சப்ளை" என்று கொடுக்கப்பட்டுள்ளது. 30 மில்லியன் காலன் தண்ணீர் ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுக்கப்பட்டது. இதை நான்கூட நேரில் கொடுக்கவில்லை. செயலாளர் அவர்களிடம் கொடுத்து கொடுக்கச் சொன்னேன். காரணம் நான் அவையில் அப்போது கொடுக்கிறேன் என்று ஏற்றுக்கொண்ட தன் காரணமாக இதைக் கொடுத்தேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு நிதியமைச்சர்** அவர்கள் இதற்கு விளக்கத்தைச் சொல்லி ஏற்கெனவே முடித்து வைத்திருப்ப தால், இதை இதோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** அப்போது ஆல்ட்டர்நேட்டிவ் டேஸில்தான் கொடுக்கப்பட்டது. வறட்சி வந்தால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டும் எல்லா நாளும் தண்ணீர் வரும் என்றால், எனக்கே அது ஆச்சர்யமாக இருக்கிறது. வறட்சியின்போது அவர்களுக்கு மட்டும் எப்படி தண்ணீர் வரும்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் நம்மில் பெரும்பாலோர் சென்னையில்தான் குடியிருக்கிறோம். நான் சென் னையில் குடியிருக்கிறேன். 1975ஆம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு வறட்சி ஏற்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே கூட சென்னையில்தான் இருந்தார்கள். 1975ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விடப்படவில்லை. உள்ளபடியே 1975ஆம் ஆண்டு குடிநீர்ப் பற்றாக் குறை பிரச்சினையே வரவில்லை. அந்த அளவுக்கு அப்போது வறட்சியும் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்க வேண்டிய சூழ்நிலையே இல்லை. எனவே இதைத் தீர விசாரித்து ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தப் பிரச்சினையைப்பற்றி நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அல்லது நாங்கள் என்ன செய்தோம் என்பதல்ல முக்கியம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தபோது இருந்ததை விட மிகக் கொடிய வறட்சி இப்போது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். நாங்கள் ஆட்சி செய்திருந்தபோது ஏற் பட்டதை விட மிகப் பெரிய வறட்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது. அது நாட்டு

மக்களுடைய துர்பாக்கியமே தவிர, உங்களுடைய துர்பாக்கியும் அல்ல. அந்தப் பிரச்சினையைச் சந்திக்க, அதனால் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்க்க, ஆட்சிக்கு நாங்கள் உதவி செய்கிறோம் என்று நாங்கள் சொல்லுகிறபோது, எதிர்க் கட்சியில் இருக்கிற இவர்கள் யார் நமக்குச் சொல்வதற்கு? இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இவர்கள் எப்படி ஆட்சி நடத்தினார்கள் என்று நமக்குத் தெரியாதா?' என்று கேட்காமல் நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், இந்தப் பிரச்சினையின் கொடுமையிலிருந்து நாட்டு மக்களைக் காக்க வேண்டும் என்று எங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் பயன்படுத்திக்கொண்டு மக்களின் துயரைத் தணிக்க முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதைச் சொல்வது ஏதோ பிரச்சினையை வேண்டுமென்றே மிகைப் படுத்திச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. இதில் ஏதோ ஒரு அரசியல் ஆதாயம் தேடச் சொல்லவில்லை. மக்களுக்கு மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. மற்ற பிரச்சினைகள் என்றால் 4, 5 நாட்கள் கழித்துகூட தீர்க்க முடியும். தண்ணீர்ப் பிரச்சினை என்று வந்துவிட்டால், அப்படித் தீர்க்க முடியாது. எனவே அந்தப் பிரச்சினை வரும் முன்னர் காப்பதற்குரிய அறிகுறியாக நான் இதைச் சொல்லுகிறேன். வேறல்ல என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பசி வந்திடப் பத்தும் பறநதும்பாம் என்று சொன்னார்கள். இப்போது தண்ணீர் தாகம் வந்தால் தாணியே நிற்காது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு வரலாறு நன்கு தெரியும் என்று நம்புகிறேன். இறையனார் அகப்பொருளுரையில் "பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடம் சென்றது; செலவே அரசன் தம் சிட்டரையெல்லாம் கூவி அழைத்து" யான் உமைப் புரந்தரகில்லேன் . . . நாடு நாடாயின ஞான்று எம்மை உள்ளி வம்மின்" என்று அன்றைய பாண்டிய மன்னன் குறிப்பிட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இறையனார் அகப் பொருளுரை என்பது தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது. கால வரையறை சொல்ல முடியாத அளவுக்குத் தொன்மை வாய்ந்தது.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது தமிழகத்தில் தொடர்ந்து வறட்சி இருந்து வருகிறது என்றார். இவ்வாறு தமிழகத்தில் மக்களாட்சி வருவதற்கு முன்னாலேயே பாண்டிய நாட்டில் மன்னர் ஆட்சி இருந்தபோது





மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டது, அதன் காரணமாக மன்னன் தன்னுடைய சிட்டர்களை எல்லாம்—சிட்டர்கள் என்றால் அறிஞர்கள்—கூவி அழைத்து "யான் உம்மை புரந்தரகில்லேன்" அதாவது "என்னால் உங்களைக் காப்பாற்ற முடியாது. உங்களை நான் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கிறேன். ஆக்வே நீவிர் உங்களுக்குத் தெரிந்தவாறு எங்கே போக வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அங்கே சென்று மீண்டும் நாடு நாடான பிறகு இங்கே என்னை நினைத்து வாருங்கள்" என்று குறிப்பிட்டான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: "பாண்டிநாடு பன்னீரியாண்டு வற்கடம் சென்றது; செலவே மன்னன் தம் சிட்டரையெல்லாம் கூவி அழைத்து, யான் உம்மைப் புரந்தரகில்லேன், நீவிர் அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று, எம்மை உள்ளி வம்மின்" என்று குறிப்பிட்டான்.

திரு. ம. சங்கரலிங்கம்: ஆமாம். "நீவிர் அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று, எம்மை உள்ளி வம்மின்" என்றான். அதாவது "நீங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தவாறு எங்கே வேண்டுமென்றாலும் செல்லுங்கள். பஞ்சம் நீங்கி நாடு நாடாயின பிறகு நீங்கள் அனைவரும் என்னை நினைத்து இங்கே வாருங்கள்" என்று குறிப்பிட்டான்.

என்னாலே உங்களுக்கு இப்போது ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே நீங்களெல்லாம் உங்களுக்குத் தெரிந்தவாறு செல்லுங்கள் என்றான். அது மன்னராட்சிக் காலம். இப்போது நடப்பது மக்களாட்சிக் காலம். மக்களைப் பார்த்து நாம் "உங்களுக்கு என்னாலே ஒன்றும் செய்ய முடியாது" என்றால், உடனே அவர்கள் நம்மைப் பார்த்து, "அப்படியானால் நீங்கள் போங்கள்" என்று சொல்லிவிடுவார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லுகிற நிலையில் நான் இல்லை. இந்த நிலைமையில் நாம் அனைவரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றுதான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டை 5 அல்லது 6 பகுதிகளாகப் பிரித்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இன்ன திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அவையில் ஒரு அறிக்கையை வைத்து, அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த வேண்டும். அறிக்கையைக் கொடுத்துவிட்டு, சும்மா குழாய்களைப் போட்டுவிட்டோம் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. இன்னின்ன நாளில் இன்னின்ன தெருக்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும் என்ற திட்டம் போட்டு அறிவிக்கப்பட வேண்டும். எங்களையெல்லாம் 3 நாட்களுக்கு ஒருக்கு அனுப்பி அந்தப் பார்த்து வரச் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு அதை இங்கே

விவாதிக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாக மட்டும்தான் இந்தப் பிரச்சினையை அரசு தீர்க்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் சென்னையில் ஒரு லாரி தண்ணீர் ரூ. 200க்கு விற்கப்படுகிறது. அவர்கள்கூட ஒரு வகையில் ஏற்பட்டுவிட்ட நெருக்கடியைத்தான் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் ஒரு லாரி தண்ணீர் ரூ. 150க்குக் கூட கொடுக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு நான் இந்த நாட்டில் உள்ள எல்லோருக்கும் இந்த அவையின் மூலம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இந்த நாட்டில் உள்ள அற நிலையங்கள், அரசியல் தொடர்பற்ற ஸ்தாபனங்கள், மற்றும் பொதுநல எண்ணம் உடையவர்கள் எல்லோரும் இந்தப் பிரச்சினையில் ஒத்துழைக்க முன்வர வேண்டும். நம் . வீட்டில் ஒரு வண்டியிருந்தால், 2 பீப்பாய் தண்ணீர் இருந்தால், ஒரு குடம் தண்ணீரை மற்றவர்களுக்குக் கொடுக்க முன்வர வேண்டும். ஒரு லாரி இருந்தால், அவர்கள் அதில் எவ்வளவு எடுத்துக் கொண்டு போனாலும் சரி, ஒரு லாரி தண்ணீரை அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அறநிலைய அமைப்பு இருந்தால், அதன் மூலமாக அந்த வட்டார மக்களுக்குத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் அனைவரும் முன்வரவேண்டும். எல்லா ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு உதவி செய்ய முன்வர வேண்டும். முன்பெல்லாம் நாட்டில் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்கள். இதை இப்போது 4 மாதகாலத்திற்கு அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டும். அரசு வெறும் அறிக்கையை மட்டும் வைக்காமல் நாட்டில் என்ன நடக்கிறது என்பதையும் சொல்ல வேண்டும். எனவே தண்ணீர்ப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்தது, உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இதற்கு முன்னால் சந்திக்காத அளவிற்கு இன்றைக்கு பிரச்சினை இருக்கிறது. இதைப்பற்றி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசும்போது நீண்ட நேரம் விவாதித்தோம். மத்திய அரசு நமக்கு உதவ வேண்டும். அதற்குக் காரணங்களைச் சொல்வதற்கு





நேரம் இதுவல்ல என்று மத்திய அரசுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு கையாண்ட முறைகள் சரியா, தப்பா என்று பிரச்சினைகளை எல்லாம் பஞ்சம் தீர்ந்த பிறகு, வறட்சி நிலை தீர்ந்த பிறகு, உணவு வந்து மக்களுடைய குறைகள் தீர்ந்த பிறகு, இந்த அரசும் அந்த அரசும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். இப்போது தமிழகத்திலே உணவு நிலை தண்ணீர் அளவிற்குக் கடுமையாக வரவில்லை என்றாலும், இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மோசமாகும் நிலை இருக்கிறது. இன்று வெளிச் சந்தையில் அரிசி கிலோ ஒன்று ஐந்து ரூபாய்க்குக் விற்கப்படுகிறது. அப்படியென்றால் படி பத்து ரூபாய் ஆகிறது. நியாய விலைக் கடைகளில் போதுமான அளவு அரிசி கொடுக்க முடியவில்லை. வயது வந்தவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி என்றும், சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு அரை கிலோ அரிசி என்றும் ஆக மொத்தம் ஒரு குடும்ப கார்டுக்கு மொத்தத்தில் 20 கிலோ அல்லது எது குறைவோ அதை நியாயவிலைக் கடைகளிலும், கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் கொடுக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம். ஆனால் எந்த இடத்திலும் 20 கிலோ அரிசி கொடுக்க முடியவில்லை. கொடுக்க ஆரம்பிக்கிறார்கள், பிறகு நான்கு நாட்களுக்குள்ளேயே தீர்ந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அதனால் பல பேருக்கு அரிசி கிடைக்கவில்லை. வரிசையில் நிற்பவர்களில் கொஞ்ச பேருக்குத் தான் கொடுக்கிறார்கள். மற்றவர்கள் அரிசி இல்லையென்று வருகிறார்கள். 20 கிலோ என்று சொல்லியிருந்தாலும், 10 கிலோ தான் தர முடியும் என்று தருகிறார்கள். ஆகவே மாநில முழுவதும் வெளிச் சந்தையில் கிலோ அரிசி ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதாவது படி பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில நகரப் பகுதிகளில் அரிசியே கிடைப்பதில்லை. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்த மார்ச் மாத ஆரம்பத்தில் ஏழு நாளும் கிலோவுக்கு 7 ரூபாய் கொடுத்தால்தான் அரிசி கிடைத்தது. அரிசிக்குப் பஞ்சம் இல்லை. நிறைய நெல் இருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு வெளிச் சந்தையில் 130 ரூபாய் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்து அவர்கள் . வாங்கினாலும், வெளிச் சந்தையில் அரிசியின் விலை ஐந்து ரூபாயாக இருக்கிறது. இதற்குக் காரணம் அரிசி ஆலைகளுக்கு 10ஆம் தேதி வரை மின்சாரம் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் அரவை வேலை செய்ய முடியவில்லை. அதற்கு முன்பு அவர்கள் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்திவிட்டார்கள் என்று சொல்லி, எல்லோருக்கும் மின்சார வெட்டு என்று அறிவித்துவிட்டார்கள். அதனால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகளில் மார்ச் மாதம் 1 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை நெல் அரைக்கவில்லை. மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில்தான் ரூபாய் இருக்கும். அந்த மாதத்திற்குரிய அரிசியை வாங்கும்போது, கிலோ

ஒன்றுக்கு 6 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. நெல் விற்பவர்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 150 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதுவே அரிசியாக விற்கும்போது 400 ரூபாயாக ஆகிறது. இடையிலுள்ள வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், எல்லா மாவட்டங்களிலும், எல்லா நகரங்களிலும் இருக்கின்றது. குறிப்பிட்ட இரண்டு மூன்று நாட்களில் அரிசியே கிடைப்பதில்லை. அதற்கு அந்தந்த மாவட்டங்களுக்கேற்ப காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாகச் சொல்லுகிறேன். திருச்சியிலே அரிசி ஆலை அதிபர்களிடம் 2,100 டன் தேங்கியிருக்கிறது. அவர்கள் 50 சதவீதம் லெவி கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். ஆகவே சட்டப்படி அவர்கள் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லலாம். அப்படி வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு போவதற்காக சிவில் சப்ளைஸ் அதிகாரிகளிடத்திலே அனுமதி கேட்டிருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் அனுமதி கொடுக்கவில்லை. கடந்த 15, 20 நாட்களாக அனுமதியைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே 2,100 டன் அரிசி ஆலைகளிலே தேங்கியிருக்கிறது. ஆகவே வெளிச் சந்தையில் அரிசி வாங்க முடியவில்லை. திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வெளிச் சந்தையில் வாங்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆலை அதிபர்கள், வியாபாரிகள் வெளிச் சந்தையில் நேரிடையாகக் கொள்முதல் செய்யக் கூடாது, அரசேதான் கொள்முதல் செய்ய வேண்டும் என்று தஞ்சையில் சனவரி மாதத்திலிருந்தும், திருச்சியில் 4 தாலுக்காக்களில் பிப்ரவரியிலிருந்தும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே ஆந்திர மாநிலத்திலிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பிற அரிசி ஆலை அதிபர்கள் ஆந்திர மாநில வெளிச் சந்தையிலிருந்து வாங்கி வருகிறார்கள். ஆனால் இந்த இரு மாவட்டங்களிலே இருப்பவர்கள் ஏன் வாங்கவில்லையென்றால் அவர்கள் லெவி முறைப்படி அரசுக்கு 50 சதவீதம் லெவி கொடுத்துவிட்டு கொள்முதல் செய்து அரிசியாக்கி 2,100 டன் அரிசியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களிடமிருந்து பணத்தையெல்லாம் போட்டு அதை வாங்கியிருப்பதால், அதை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு போக அனுமதி அளிக்காததால், அரிசி தேங்கிவிட்டது. அவர்களிடத்திலே பணம் இல்லை. அதனாலே ஆந்திராவிற்குப் போய் அரிசி வாங்க முடியவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் வெளிச் சந்தையில் விலையேறிப் போனதற்குக் காரணம் கேட்டால், இப்படி எதையாவது சொல்லுகிறார்கள். இந்தக் காரணத்தாலே பொது மக்கள் ஏழு ரூபாய், எட்டு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. இதிலே ஒரேயொரு வழியுண்டு. நாமே ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும், பஞ்சாப், அரியானா மாநில வெளிச் சந்தையிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். அங்கே வெளிச் சந்தையில்



கொள்முதல் செய்வதில் தடை ஒன்றுமில்லை. அங்குள்ள சிவில் சப்ளைஸ் துறை நமக்கு வாங்கித் தருவதில் தகராறு கிடையாது. ஆகவே ஆந்திராவில் போய் வெளிச் சந்தையில் நெல் வாங்கி, பஞ்சாப், அரியானாவுக்குச் சென்று நெல் வாங்கி, அதற்காக 50 கோடி ரூபாயை சப்சிடைஸ் செய்து அரிசியை இங்குள்ள நியாய விலைக் கடைகளின் மூலமாகக் கொடுக்க வேண்டும். இதற்காக நிதிநிலை அறிக்கையில் 50 கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசு தனக்கேற்ற ஆற்றலோடு, அக்கறையோடு தங்களோடு வாழ்ந்து வருகிற மக்களைக் காப்பாற்ற இந்த முறையை ஏற்றுக் கொள்வதோடு இந்த மாநிலத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்றிருக்கக்கூடிய அத்தனை கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும் சேர்ந்து டில்லியில் உள்ள அதிகாரிகளை நேரிடையாகக் கண்டு தமிழகத்திற்கு இன்னும் தேவையான அரிசியையும், கோதுமையையும் பெற வேண்டும். "அப்படி பெற்றால்தான் நாங்கள் வருவோம்" என்று நிதியமைச்சர் அவர்கள் அங்கேயே இருக்க வேண்டும். இங்குள்ள நிதித் துறையை வேறு சிலர் நிர்வகித்துக்கொள்வார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், பாராளுமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்துகொண்டு டில்லியில் உள்ள அமைச்சர்களைச் சந்தித்து, "நாங்கள் ஊரில் இருக்க முடியவில்லை. நீங்கள் அரிசி தராத வரையில் நாங்கள் போகமாட்டோம்" என்று கூறி தினந்தோறும் கேட்க வேண்டும். அப்படிக் கேட்பதற்கு சத்தியாகிரகம் என்று சொன்னாலும் பரவாயில்லை அல்லது வேறு பெயரிட்டாலும் கவலையில்லை. அப்படிக் கேட்கிற நிலை வர வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் மக்களுடைய உயிரோடும் உணவோடும் விளையாடக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது வரை மக்களுக்குள்ள உணவுப் பிரச்சினையைப்பற்றியும், தண்ணீர் பிரச்சினையைப்பற்றியும் சொன்னேன். கால்நடைகளுக்குக் கூட வைக்கோல் இல்லாத நிலை இருக்கிறது. தஞ்சாவூரில் கூட வைக்கோல் கிடையாது. வைக்கோல் இல்லாததால் இரண்டு மாதங்களில் அங்குள்ள கால்நடைகளை கேரளாவிற்கு இறைச்சிக்காக ஓட்டிப் போகக் கூடிய நிலை உருவாகிவிடும். ஆகவே கால்நடைகளைக் காப்பாற்றாவிட்டால், நான்கு மாதங்களுக்குப் பிறகு மழை பெய்தால், "நாடு நாடாயினு ஞான்று எம்மை உள்ளி வம்மின்" என்றாகும். கால்நடைகள் இல்லையென்றால், யாரை வைத்து விவசாயம் செய்ய முடியும்? கால்நடைச் செல்வங்களை வைத்துத்தானே விவசாயம் செய்ய வேண்டும்? கால்நடைகள், தென்னாற்காடு, வட ஆற்காடு, திருச்சி, தஞ்சாவூர்,

திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம் போன்ற விவசாயம் கூடுதலாக உள்ள மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்குப் பாதுகாப்பு என்ன நிலை என்பதை ஆராய்ந்து திட்டமிட்டு ஆந்திராவிலிருந்து வைக்கோல் வாங்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறேன். இந்த அரசின் மீது குற்றச்சாட்டு சொல்வதாகக் கருதி, வறட்சியை மிக எளிதாக பிரச்சினை என்று நினைத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மிகத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களிடத்திலே இருந்த அத்தனை உடைமைகளையும் விவசாயத்தில் போட்டுவிட்டார்கள். நகைகளையெல்லாம் கூட வங்கியில் அடகு வைத்து பணம் வாங்கி விவசாயம் செய்தார்கள். ஆனால் நெல் விளையவில்லை. தஞ்சாவூரில், திருச்சியில் 50 சதவீதம்கூட விளையவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 சதவீதம் கூட விளையவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு விளையவில்லை என்பதை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசும் போது தெரிவித்தேன். விவசாயிகள் உடைமைகளையும் இழந்து, வருவாயையும் இழந்து என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். வருகின்ற ஐந்து மாதங்களுக்கு அவர்கள் குடும்பம் வாழ பஞ்சப்படி கொடுக்க வேண்டும்; உணவு கொடுக்க வேண்டும். மேலும் பயிரேற்ற கடன் கொடுக்க வேண்டும். திருப்பிக் கேட்காத நிவாரணங்களை எல்லாப் பகுதிகளிலும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-40)

வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டத்திலே வேலை வாய்ப்புகள் இல்லாமல் போய் விடுகிறது. இதற்கு முன்னால் எல்லாம் தமிழ் நாட்டிலே பஞ்சம் வரும். மதுரை இராமநாதபுரத்திலே பஞ்சம் வரும். வட ஆற்காட்டிலே வரும். தென் ஆற்காட்டிலே கொஞ்சம் வரும். எல்லோரும் தஞ்சாவூருக்குப் போவார்கள். அங்கு பிழைப்பார்கள். தஞ்சாவூரிலே விவசாய வேலைகள், கூலி வேலைகள் செய்வார்கள். அதுபோலவே திருநெல்வேலி, இராமநாதபுரம் பகுதிகளில் வறட்சி ஏற்பட்டால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருவார்கள். ஆனால்





கன்னியாகுமரி மாவட்டத்திலும் 60 பெர்சென்ட் மழை பெய்யாமல் அங்கே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகிப் போயிருக்கின்றன என்றால், தமிழகம் பூராவும் வறட்சிப் பிரதேசம் என்றுதான் இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசு தயங்காமல் அறிவிக்க வேண்டும். வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்க வெள்ளைக்காரன் காலத்தில் சட்டம் வைத்திருந்தார்கள். அதாவது வறட்சியால் மாடுகள் சாக வேண்டும். இப்போது இங்கு சாகாத நிலைதான் இருக்கிறது. 4, 5 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் விடப்படுகிறது. ஒரு குடம் தண்ணீர் கொடுக்கின்ற நிலை வந்த பிறகு, இந்த மாநிலத்தைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கலாம். தமிழகத்திலே எல்லா மாவட்டத்திலும் தண்ணீர் இருக்கிறதா? அவைகள் தண்ணீர் வசதியோடு இருக்கின்றனவா? மொத்தப் பிரதேசத்தையும் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிப்பதிலே தடையில்லை. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி அறிவித்திருந்தால் தீர வேண்டும். பஞ்சப் பிரதேசம் என்ற நிலைக்கு ஏற்ப நிதிநிலை அறிக்கை இருக்க வேண்டும். மத்திய அரசு பஞ்சப் பிரதேசமாக அறிவித்த பிறகு மற்ற மாநிலங்களுக்கு அடிக்கடி உதவி செய்கின்றார்கள். நம்முடைய மாநிலத்திற்கு எப்போதாவது தான் அப்படி உதவி செய்கின்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த மாநிலங்களில் அடிக்கடி வறட்சி வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் அல்லது வறட்சி என்று வருகிறது. மத்திய அரசு நிதியிலிருந்து அந்த மாநிலத்திற்கு உதவி செய்கின்றது. இந்தியா சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் இயற்கை உற்பாதம் ஏற்படும்போது, அந்த மாநிலத்திற்கு நிவாரணம் அளிக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அப்படி அளிக்கப்பட்ட அளவில் 5 பெர்சென்ட் கூட நாம் பெறவில்லை. அதை உத்தேசித்து மத்திய அரசு இந்த நிலைமைகளை உணர்ந்து, இந்த அரசு கேட்கின்ற தொகையை, என்ன நிதி கேட்கிறதோ அதைக் கொடுக்க வேண்டும். இந்த அரசும் அந்த நிவாரணப் பணிகளைச் செய்கின்றபோது, அங்காங்கு மக்கள் கமிட்டிகளை நியமித்துக் கொண்டு செயல்பட வேண்டும். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதிகாரிகள் தான் அங்கே ஆட்சி பண்ணுகிறார்கள். அதிகாரிகள் தான் [illegible] அதிகாரம் செய்கிறார்கள். அது அரசுக்குத் தெரிந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. அதிகாரிகள் எவ்வளவு நேர்மையாக இருக்கிறார்கள் என்று நான் சொல்லத் தேவையில்லை. அதிகாரிகள் எல்லாம் ஆளுங்கட்சிக்காரர்கள் சொல்வதைச் செய்கிறார்கள். அவர்களுக்கு பயப்படுகிறார்கள். ஆளுங்கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்களோ அதைச் செய்கிறார்கள். இது மக்கள் பிரச்சினை, வறட்சிப் பிரச்சினை. அங்கே ஒரு கமிட்டி போட்டால், எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னால் செய்யாமல் [illegible]

கட்சிக்காரர்கள் சொன்னால் அதைச் செய்கிறார்கள். அந்தச் சூழ்நிலை இருக்கக்கூடாது. தன்னிறைவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லி நிதி பெற்று செலவழித்து வருகிறார்கள். இந்த் யூனியனிலே இந்த வேலைகள் செய்ய வேண்டும் என்று வார்த்தையில் நான் முதலிலேயே எழுதிக் கொடுத்து விடுவேன். நாம் எதைச் சொன்னால் செய்யாமல் விட்டுவிடுவார் களோ அதைச் சொல்லாமல் எதிர்விதமாக எழுதிக் கொடுப்பேன். அதை ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் சொல்வார்கள். அதை அவர்கள் நிறைவேற்று வார்கள். அந்த முறையில் எப்படி எழுதிக் கொடுக்க வேண்டுமோ அப்படிச் செய்வேன். ஆக கட்சி உணர்வு இல்லாமல் இதில் செயல்பட வேண்டும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்வதைச் செய்வது என்று கருதாமல் செய்ய வேண்டும். இது மக்கள் பிரச்சினை, கட்சிப் பிரச்சினையல்ல என்ற உணர் வுடன் இந்தப் பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டுமோ அப்படி அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மக்கள் கமிட்டி என்று போடுகின்றபோது எல்லாக் கட்சிக் காரர்களையும்தான் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. வறட்சி உள்ள மாவட்டத் திலே போடுகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நீங்கள் போடுகிறீர்கள். இல்லை என்று சொல்ல வில்லை. அதிகாரிகள் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொல்வது என்ன என்று கேட்டு செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அவர்கள் தவறு செய்வதாக ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அப்படி இல்லை. சட்டசபை யிலே சொல்கின்றபோது சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன். அதற்குக் காரணம் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே பங்கு கொண்டால், அங்கே ஏதாவது தவறு நடந்தால், அவர்கள் தவறு நடந்துவிட்டது என்று சொல்வார்கள். அந்தத் தவறுக்கு அவர்களும் பொறுப்பு ஏற்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். அவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன்.





**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு இவர்கள் டைரக்ஷன் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சி யினைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளுக்கு டைரக்ஷன் கொடுப்பது குறித்து திருச்சியிலே நடந்தது பற்றி 'இந்து' பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். அதிலே வந்திருக்கிறது. திருச்சி டிவிஷனல் இன்சினியர் அவர்களை அடித்து காயப்படுத்தியிருக்கின்றார்கள். இது அந்தப் பத்திரிகையில் 9-வது பக்கத்தில் வந்திருக்கிறது. அதுவும் இல்லாமல் பார்த்துக்கொண்டால் நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். குளங் களை ஆழப்படுத்துவது, வறட்சி நிவாரணத்திலே வேலை வாய்ப்பு கொடுப்பது எல்லாம் சீராகச் செய்ய வேண்டும். எல்லா மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கு கிறோம். கன்னியாகுமரிக்கு 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அந்தப் பகுதி யில் குளங்களை ஆழப்படுத்துவது என்று சொன்னால், அந்த வேலையைச் செய்வதற்கு டெண்டர் கேட்கவில்லை. 'நாமினேஷன்' என்று வந்தால் என்ன வாகும்? நான் அவர்களிடம் சொன்னேன். அந்தக் கூட்டத்திலேயே சொன்னேன். அந்தந்தக் குளங்களை, எங்கள் பக்கத்திலே உள்ள கண்மாய் களை ஆழப்படுத்தும்போது, அந்தந்தப் பகுதியில் பயிரிடுபவர்களுடைய சங்கங்கள் என்று இருந்தால், அவர்களிடம் கொடுத்துச் செய்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களுக்கு வாயாலே சொல்கிறார்கள். வாயாலே சொன்னால், அவர்கள் நம்புகிறதாக இல்லை. அதற்கு 30 ஆயிரம் என்று சொன்னால், அந்தப் பணம் எப்போதாவது வந்தாலும் போதும் என்று சொல்வார்கள். முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தக் கிணறு வேலைகளை விவசாயிகளிடத்திலே ஒப்படைத்தால், அவர்கள் செய் வார்கள். அவர்கள் வேலையை ஆரம்பித்த உடனே, 'அக்ரிமெண்ட்' என்பது எல்லாம் முடியாது, நம்பிச் செய்யுங்கள் என்று சொல்கின்றார்கள். அப்படிச் செய்ய யாரும் தயாராக இல்லை. அவர்களை நம்பிச் செய்தால், எப்படி ஆகும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஆலோசனை செய்து அந்தந்தப் பகுதி விவசாயப் பிரதிநிதிகளிடம் கொடுக்க வேண்டும். அவர்களிடம் அக்ரி மெண்ட் போட்டுக் கொடுத்தால், அந்த அதிகாரிகள் தப்பு செய்தால் கோர்ட் டிலே போய்க்கூட வாங்குகின்ற நிலைமைகள் இருக்கும். அடுத்து, அங்கு வேலை செய்கின்றவர்களுக்குச் சம்பளம் நிர்ணயிக்க வேண்டியதாக இருக் கிறது. இப்போது நாம் வரிகளைப் போட்டிருக்கிறோம். அதனால் உணவுப் பொருள்களின் விலைகள் ஏறுகின்றன. அதற்கு ஏற்ப சம்பளம் ரூ. 15-க்கு கீழே இருந்தால், கிராமத்திலே இருப்பவர்கள் வேலைக்கு வருவதில்லை.

குறைந்த கூலிக்கு வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. நாம் வைத்திருக்கின்ற ரூ. 7 கூலி என்பது எந்த இடத்திலும் இல்லை. பெண்கள் கூட யாரும் வரமாட்டார்கள். ஒருவேளை அந்தக் கிணற்று வேலைகளைச் செய்கின்றவர் விவசாயிகளாக இருந்தால், அவர்களுக்காகப் பராமரிக்கிறோம் என்ற எண்ணத்தோடு இருந்துதான் செய்துகொள்ள வேண்டும். ஆகவே எவ்வளவு புல்டோசர்கள் இந்த மாவட்டத்தில் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற புல்டோசர்களையும் இங்கு வரவழைத்து பயன்படுத்த வேண்டும். பெரிய குளங்களை ஆழப்படுத்த இவைகளை வைத்துக்கொள்ளலாம். சிறிய கிணறுகள், குளங்களை ஆழப்படுத்த விவசாயிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் நேரிலே பேசியபோது, அது நல்ல முறைதான் என்றும் சீப் என்சீனியருடன் கலந்து பேசி ஆவன செய்கிறேன் என்றும் அவர்கள் தனியாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஆயக்கட்டுதாரர்கள் இந்தக் கண்மாய்களில் பயன் பெறக்கூடிய அளவுக்கு, அந்தப் பகுதி விவசாயிகள் அவர்களுடைய கிணறுகளை ஆழப்படுத்திக் கொள்ளும் பணிகளை, குளங்கள், ஏரிகள் ஆகியவற்றின் கரைகளை உயர்த்திக் கொள்ளும் பணிகளை அவர்களிடம் ஒப்படைத்து அதிலே வரக்கூடிய பலன்களை அவர்கள் அனுபவிக்கலாம். அதற்கு கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டும் என்று சொல்லி, நம்முடைய பாசனத் துறையில் 'கன்சல்ட்டேடிவ் கமிட்டி.' என்று வைத்திருக்கிறார்கள். அது அவ்வப்போது 6 மாதத்திற்குள் கண்டிப்பாகக் கூடி விவாதித்து நிதியை ஒதுக்கலாம். அந்த முறை பற்றிப் பேசியிருக்கிறார்கள். இந்த வறட்சியைப் பொறுத்த அளவிலே, 2 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி செலவு செய்வது என்று கருதப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருத்தின் அடிப்படையிலே அது எந்த வேலையாக இருந்தாலும், அந்தக் கமிட்டி பரிசிலனை செய்து ஆயக்கட்டுதாரர்களிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் 'நாமினேஷன்' என்று கொடுக்கின்றபோது ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு செய்யலாம். அவர்கள் அப்படிச் செய்துகொண்டால் தைரியமாகச் செய்யலாம். உதாரணத்திற்குச் சொல்வதென்றால், ஒரு என்ஜினியர் ஒரு வேலை எடுத்துக்கொண்டு செய்கின்றபோது வேறு இடத்திற்குப் போய்விடுகின்ற நிலைமைகள் வருகின்றன. அந்த வேலை பாதிக்கப்படுகிறது. இதைப்பற்





சீப் இன்ஜினியர் அவர்களிடம் பேசி இந்தக் காரியங்கள் உடனடியாக நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற காரியங்கள் எல்லாம் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இறுதியாக இந்த அவைக்குச் சொல்கிறேன். நிவாரண வேலைகளை, துயர் தணிப்பு வேலைகளைத் தொடங்கி நடத்துகின்ற இந்த நேரத்திலே நாட்டிலே காவல் துறையில் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இப்போது இருப்பதைவிட பெரும் மாற்றம் தேவைப்படுகிறது. இதை நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். உதாரணமாக நம் காவல் துறையில் நாம் எண்ணிக்கையைப் பெருக்குவதிலே இருக்கிறோம். மேல் மட்ட அதிகாரிகள் எண்ணிக்கையைப் பெருக்குவதிலே அதிக ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். ஒரு ஐ. ஜி. இருந்த இடத்தில் இப்போது 5 ஐ.ஜி.க்கள் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒரு டைரக்டர் ஜெனரல் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருந்தாலும், அவர்களுடைய பணியைப் பொறுத்த வரையில், பாதுகாப்பு முறைகள் திருந்தப் பெற்றிருக்கின்றனவா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குக் கொடுத்த ஒரு மனுவின் நகலை, தலைவரவர்களே, நான் உங்கள் அனுமதியோடு படிக்கிறேன். முகம்மது ஜப்பார், இன்னும் 5 பேர்கள் முதலமைச்சரவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். நாங்கள் 26—8—1980 ல் காவல் துறையின் உயர் அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்டு, சர்ட்டிபிகேட்டுகளையும் காவல் துறையினர் வாங்கி வைத்துக் கொண்டு சுமார் 2 வருடங்கள் 4 மாதங்கள் ஆகின்றன—மனுவின் தேதி 31—12—1982—ஆனால் இதுவரை வேலை தரவில்லை. சர்ட்டிபிகேட் அங்கேயே இருந்தது. இப்போது சர்ட்டிபிகேட்டைத் திருப்பித் தருகிறார்கள். எங்களுடைய நிலை என்ன என்று கேட்கிறார்கள். காவல் துறையினரின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்ற முயற்சி 1980-லே எடுக்கப் பட்டு, இன்னும் காவலர் எண்ணிக்கை பெருகாமல், எஸ். ஐ. நியமனம் பேர்களை அமர்த்த எடுத்த முயற்சி நிறுத்தப்பட்டு, மேல் மட்டத்திலே, அதிகாரிகள் மட்டத்திலே 5 ஐ. ஜி.க்கள், 6 சீப் செக்ரட்டரிஸ் என்று பதவிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களே, அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, காவல் துறையினர் அணுகு முறை எல்லா இடங்களிலும் எப்படி இருக்க வேண்டுமென்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னால் இருந்தது போலீஸ் ராஜ்யம். இப்போது இருப்பது மக்களுக்கு உதவி செய்யும் அவர்களுடைய தொண்டர்கள். அந்த சமயத்தில் மக்களுக்குப் பாதகம் ஏற்படும்போது, அவர்கள் சக்தி வாய்ந்த போலீசாராக இருக்க வேண்டும். இந்த நிலை இருக்கிறதா என்றால் இல்லை. இப்போது இதை பல சம்பவங்களை வைத்து சுட்டிக்காட்ட முடியவில்லை. என்றாலும், ஒரு சம்பவத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில்கூட சென்ற தொடரிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே 13—2—1983 நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும், அதையொட்டி உயிரிழந்த ஒருவரின் நிலையைப் பற்றியும் ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோதுகூட, அங்கேயுள்ள பதட்ட நிலையை எச்சரிக்கையோடு மனதிலே கொண்டு, அதற்குள்ளே செல்லாமல், வெளியே உள்ள கோர நிலையை உணர்த்த, அரசின் கவனத்தை ஈர்த்தோம். அந்த நிலை எப்படி உருவானது என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலம் பிற மாவட்டங்களிலும், பிற இடங்களிலும், இப்படிப்பட்ட சந்தர்ப்பம் வராமல் இருக்க முறையாக அமையும் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஓராண்டாக ஒற்றுமை இல்லாத அளவிற்கு மதச் சார்பான சண்டைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் உறுதியாகச் சொல்லுகிறேன், அங்கே உள்ள மக்களிலே 100க்கு 95 பேர்கள் மத வெறியோ, மதக் காழ்ப்புணர்ச்சியோ இல்லாமல் வாழ்கிறார்கள். ஏதோ ஒருசிலர், 2 சதவிகிதம்கூட இருக்க மாட்டார்கள், இது போன்ற நிகழ்ச்சிகள் காரணமாக சில பிரச்சினைகளை வைத்து, மதக் கிளர்ச்சியை உருவாக்க சதித் திட்டமிட்டு, ஒருசிலர் அதை உருவாக்க முயற்சிக்கிறார்கள். அதனுடைய விளைவு தெரியாமல், சிலர் பலியாகிறார்கள். இந்த ஒன்றுதான் அங்கு இருக்கிறது. ஆனால், போலீசார் அணுகுமுறை சரியாக இருந்தால், அந்த 2 சதவிகிதம் பேர்களை அடையாளம் காட்டி, அவர்களை முன் எச்சரிக்கையாகத் தடுத்து திருத்தி, அவர்களுடைய செயலைக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். அதை அப்படியே விட்டுவிட்டு, கடைசியில் பூகம்பம் ஆகும்போது இவர்கள் போய் சந்திக்கிறார்கள். பூகம்பத்தைச் சந்திக்கும்போது, பெரும் பயலாகச் சந்திக்க வேண்டியிருக்கிறது. 13—2—1983-லே ஒரு துப்பாக்கிப் பிரயோகம் அதில் 20 வயதுள்ள அரிசன வாலிபர் குமார் என்பவர் இறந்தார். 30 பேருக்கு மேலே படுகாயப்பட்டு மருத்துவ மனையில் சேர்த்தார்கள். இப்போது அமைதி இருக்கிறது. அந்தச் சம்பவம் ஏன் நடைபெற வேண்டும்? இங்கே சொல்லும்போது பல காரணங்கள் சொன்னார்கள். நான் மிகத் தெளிவாகச் சொல்ல





விரும்புகிறேன். இந்த நாட்டில் பிறந்தவர், எந்த மதத்தினராக இருந்தாலும், பிறர் மனம் புண்படாமல் அவரவர் கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அண்ணாவின் கொள்கையைத்தான் முந்தைய அரசும், இந்த அரசும் கைக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அப்படி கைக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். பல காரணங்களால் இதில் தவறி விடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 13—2—1982 இந்து முன்னணி மாநாடு என்று சொல்லி, அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அது தடை செய்யப் பட்டது. அனுமதி பெறாமல் மாநாடு நடத்தினார்கள்; அதைப் போலீசார் தடுத்தார்கள்; பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று சொல்லப் படுகிறது. அது உண்மையா? அனுமதியோடுதான் அந்த மாநாடு நடை பெற இருந்தது. தலைவர் அனுமதியோடு நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 27—12—1982 அன்று ஜி. நாராயணன் என்பவர் போலீசாருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய போட்டோஸ்டாட் காப்பி இருக்கிறது. அதிலே சொல்லுகிறார். 1983 பிப்ரவரி 13 ஆம் தேதி ஞாயிறு அன்று காலை 6 மணி முதல் இரவு 11 மணி முடிய நாகராஜா திடலில் வைத்து நடைபெற இருக்கும் இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டுக்கு அனுமதி தர வேண்டுமென்று எழுதிக் கொடுத்து, ஒலி-ஒளிக்கு அனுமதி தர வேண்டும். மேடை போட அனுமதி தர வேண்டும் என்று அவர்கள் எழுதிக் கொடுத்த மனுவின் நகலை வைத்திருக்கிறேன். அதை ஒட்டி 8—1—1983-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரானேஷ், ஐ.ஏ.எஸ். அவர்கள், அதன் அமைப்பாளர் திரு. நாராயணனுக்குக் கடிதம் எழுதி, 13—1—1983-ல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேச வாருங்கள் என்று எழுதி அனுப்பிய கடிதத்தின் புகைப் பட நகல் வைத்திருக்கிறேன். அவர்கள் கையெழுத்து போட்டு 5—1—1983ல் அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி விவாதம் நடைபெற்றது. 13—1—1983 மாநாடு நடத்துவது என்று விவாதிக்கப்பட்டு, அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் எஸ். பி. எல்லாம் இருந்து, அனுமதி அளித்து விட்டார்கள். அதற்குப் பிறகு அந்த மாநாட்டினுடைய நிர்வாகக் குழுவினர் எஸ்.பி. இடம் மைக் வைத்து எல்லா இடங்களிலும் அறிவிக்க அனுமதி கேட் கிறார்கள். அப்படி அனுமதி கேட்டபோது, முதலிலே ஒரு அனுமதி கேட்கப் பட்டது. பிப்ரவரி 1 முதல் 5-ஆம் தேதி வரை அனுமதி கேட்கப்பட்டது. அந்த அனுமதி முடிந்த பிறகு, திரும்பவும் அனுமதி கோரி மனு செய்கிறார்கள். ஒலிபெருக்கி மூலம் 10 ஆம் தேதி வரை விளம்பரப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதைப் படிக்கிறேன்.

Proceedings of the Superintendent of Police, Kanyakumari District at Nagercoil, dated 1st February 1983.

## PRESENT: THIRU R. N. SAWANI, I.P.S.

Permission is granted to Thiru Narayanan for use of loudspeaker fixed in vehicle No. MDT 4988 in the municipal and non-municipal areas of Kanyakumari District from 2nd February 1983 to 4th February 1983 and from 9 A.M. to 8 P.M. with the following conditions.

நிறைய கண்டிஷன் போட்டு, அவரே கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறார்கள். அதன்படி அவர்கள் மைக் வைத்து 10 ஆம் தேதி வரை அவர்கள் விளம்பரப்படுத்துகிறார்கள். 11 ஆம் தேதி மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அழைக்கிறார். 11 ஆம் தேதிக்கு முன்னாலேயே கன்னியாகுமரி இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் தக்கார் அவர்களிடம் மனு கொடுத்து, ஊர்வலத்திற்கு யானை கேட்கிறார்கள். அந்த யானை கொடுக்கப்பட்டிருக்கிறது. 9—2—1983-ல் அந்த ஆணையைப் பிறப்பிக்கிறார்கள். பெயர்—செயல் அலுவலர், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில், சுசீந்திரம்; நாள் 9—2—1983; பொருள்: யானை வழங்கல்; பார்வை அவர்கள் கடிதம்; என்று சொல்லிவிட்டு, 13—2—1983 அன்று நாகர்கோவிலில் நடக்க இருக்கும் இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டு ஊர்வலத்தில் காவிக் கொடி ஏந்தி செல்ல நெற்றி பட்டையுடன் கோபாலன் யானையை இலாக்கா சட்ட திட்டத்திற்குட்பட்ட வாடகைக்குக் கொடுக்கவும், அன்று பிற்பகல் 2 மணி அளவில் நாகர்கோவில் இந்துக் கல்லூரி வளைவுக்குள் கொண்டு செல்லவும் அனுமதி வழங்கப்படுகிறது; அதற்கு வேண்டிய ரூபாய் கட்டி, யானையும் வந்தாகி விட்டது. 13 ஆம் தேதி கலெக்டர் கூப்பிடுகிறார். அங்கே எஸ். பி. எல்லாம் இருந்து, மாநாட்டில் என்னென்ன கோஷங்கள் போடலாமென்று வரையறை செய்து சொல்லுகிறார்கள். அதை அச்சடித்துக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர வேறு எந்த கோஷத்தையும் சொல்லக்கூடாது. ஊர்வலத்திற்கு ரூட் சொல்லுகிறார்கள். அதைத் தவிர வேறு இடங்களில் ஊர்வலம் வரக்கூடாது என்று சொல்லுகிறார்கள். எல்லோரும் 2 மணிக்குள் இந்துக் கல்லூரி வளைவுக்குள் வருக என்று அறிவிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஊர்வலத்திற்கு வருகிறவர்கள் எப்படி வர வேண்டும்—லாரி, டிராக்டர்களில் வந்தால் எப்படி முன் அனுமதி வாங்க வேண்டுமென்று ஒரு ப்ரொபார்மா கொடுக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

அவர்கள் புரொபார்மாவைத் தாக்கல் பண்ணியிருக்கிறார்கள். அங்கு நடைபெறுகின்ற மாநாட்டிற்கு, ஊர்வலத்திற்கு, மக்கள் பாதுகாப்பாக வந்து போவதற்கு, வாகனங்களுக்கு, நாங்கள் முழுப் பொறுப்பு. பொது மக்களுக்கு





மற்றவர்கள் ஆட்கள் இல்லாமல் அவர்களைத் திரும்பவும் அவர்களுடைய சொந்த வாகனத்தில் கொண்டு சேர்த்து, சட்டம் ஒழுங்கை முழுமையாகப் பாதுகாப்போம் என்றெல்லாம் சொல்லி, அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்படி எல்லாம் வரையறை செய்ததற்குப் பிறகு மனு கொடுத்ததற்குப் பிறகு 12 ஆம் தேதி இரவு, நள்ளிரவு தடைச் சட்டம் அமுலுக்கு வருகிறது. அதற்கான உத்தரவைப் பிறப்பிக்கிறார்கள். 13 ஆம் தேதி மாநாடு நடைபெற இருக்கிறது. 12 ஆம் தேதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வருவதாக உத்தரவு போடுகிறார்கள்.

Proceedings of the Superintendent of Police, Kanyakumari district at Nagercoil.

## PRESENT: THIRU R. N. SAWANI, I.P.S., dated, 12th February 1983.

Since order under section 144, Cr. P.C. has been promulgated banning all processions or meetings of persons by Collector, Kanyakumari district with effect from 11th and 12th February 1983 midnight the question of issue of licence under the Police Act does not arise.

நான் கேட்கிறேன், இந்த நாட்டிலே ஜனநாயக ரீதியான ஒரு நாட்டிலே, பேச்சு சுதந்திரம் உள்ள நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படலாமா? அதுபோல் மண்டைக் காட்டிலே அதற்கு முன்பு துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. நான் 56 ஆண்டு காலமாக இருந்து வாழ்ந்து கொண்டிருப்பது கன்னியாகுமரி மாவட்டத்திலே தான். இருந்தாலும் மண்டைக்காடு கோவிலுக்கு துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு முன்பு நான் சென்றதில்லை. துப்பாக்கிச் சூடு நடைபெற்றதற்குப் பின்பு நான் அங்கு போனேன். தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவு பாசறையிலே, தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வைக்கம் போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைக்குச் சென்றவர்தான் என்னுடைய தந்தையார். அவ்வளவு பெருமைக்குரிய பெரியாருடைய குடும்பத்திலே பிறந்தவன் நான். அதுபோல் கோவிலில் நடைபெற்ற பகுத்தறிவாளர் சங்க ஆண்டு விழா என் தந்தையார் தலைமையில் தான் நடைபெற்றது. இது அங்கேயுள்ள திரு. ஆர். ஆர். இராமலிங்கம் போன்றவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அவர்களும் அங்கு இருந்திருக்கிறார்கள். என் தலைவர் அதன் தலைவராக இருந்தார்கள். நேற்றைக்கு இங்கே மாண்புமிகு நமது தலைவர் அவர்கள் சொல்கிறபோது, எங்களுக்கும் தேசியத்துக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். நான் பகுத்தறிவு பாசறையில் பிறந்து, தேசியம் என்னும் தொட்டிலிலே வளர்ந்த பாரம்பரியத்தை உடையவன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதனை தாங்கள் இதுவரை அவையில் சொல்லவில்லையே என்று நான் கவலையடைந்திருந்தேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : எந்தக் கட்சி தேசியக் கட்சி என்பதல்ல பிரச்சினை. 1947 ஆம் ஆண்டு வரைதான் நமக்கு இந்திய தேசியம் தேவை யாயிருந்தது. இன்று தேவை தமிழ் தேசியம். யாரிடம் இன்று தமிழ் நாடு, தமிழ் என்கிற தேசியம் இல்லையோ அவர்களிடம் உண்மையான தேசியம் இல்லையென்று அர்த்தம். தமிழ் நாட்டுக்காக வேண்டி யார் யாரிடம் தேசியம் இல்லையோ அவர்கள் எல்லாம் உண்மையான தேசியவாதிகள் அல்ல. அது போல் 1947க்கு முன்னால் நடைபெற்ற போராட்டங்களிலே கலந்து கொள்ளா தவர்கள் எல்லாம் தேசியவாதிகள் அல்ல. 1947க்குப் பிறகு உண்மையான தேசியம் என்பது மாநிலங்களைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற தேசியம் மட்டும்தான். ஆனால் அதே சமயத்தில் 1947க்குப் பிறகு கூட, இந்தியாவுக்கு ஆபத்து என்று ஏற்பட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக தேசியத்தைச் சிறிது காலத்திற்கு மறந்து, இந்திய தேசியவாதியாக மாறினார் கள். இன்னும் சொல்லப் போனால், மற்ற எல்லா மாநிலங்களையும் விட மிக உயர்ந்து நின்று, முன்னணியில் நின்று உதவி புரிந்தார்கள். ஆகவேதான் நான் திரும்பவும் சொல்கிறேன், இந்திய தேசியத்திற்கு ஆபத்து என்கிற ஒரு நிலை வருமேயானால், தமிழ் நாடு என்றைக்கும் இந்திய தேசியத்திற்குத் துணை நிற்க பின்தங்காது. இன்றைக்கு தமிழ் நாட்டிலே வாழ்கிற அத்தனை மக்களுக்கும் தமிழ் தேசியம்தான் இருக்க வேண்டும். எனக்கு இப்போது 56 வயதாகிறது. 1942 ஆம் ஆண்டிலே என்று சொன்னால், எனது 14 ஆவது வயது ஆகும்போதே வெள்ளையனே வெளியேறு என்கிற போராட்டத்தில் ஈடு பட்டு, பிறகு 1957 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தை தாய் தமிழகத் துடன் இணைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு—அதற்குப் பிறகு 1962 ஆம் ஆண்டில் இந்தியைத் திணித்தபோது, நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டு, அதற்குப் பிறகு பக்தவத்சலம் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1967 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு, இந்த அணிக்கு வந்தவன் நான். ஆக, எந்த ஒரு போராட்டமாக இருந்தாலும், நான் போராட்டங்களில் கலந்து கொள்ள பின்தங்கியதில்லை. அந்த வகையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் அனைவரும் தமிழ் தேசியத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் இந்திய தேசியத் திற்கு ஆபத்து என்று வருமானால், அனைவரும் தமிழ் தேசியத்தை மறந்து விட்டு, இந்திய தேசியத்திற்குச் செல்ல வேண்டும். இந்தியாவில் வாழ்கின்ற இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகிய அனைவருக்கும் பாதுகாப்பு





கொடுக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு. இன்றைக்கு அது இல்லாமல் ஒரு பிளவை உண்டாக்க ஒரு சிலர் முயற்சிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த சாரார்கள், இந்துக்களைத் துணிந்து போக விட்டால்—அவர்களுக்குப் பாதுகாப்பாக இல்லாமல், பேசாமல் இருந்து விட்டால்—அங்கு தான் போய்ச் சேர்வார்கள். 11 ஆம் தேதிவரை மாநாடு நடத்துவதற்கு அனுமதி கொடுத்து விட்டு, 12 ஆம் தேதி மறுத்தால், யார்தான் பொறுப்பார்கள்? சுயமரியாதை உள்ளவர்கள் கடைசி நேரத்தில் இவ்வாறு தடை செய்தால், தடையை மீறி ஊர்வலத்தையும், மாநாட்டையும் நடத்தத்தான் செய்வார்கள். அவ்வாறு நடத்துவதைத் தவிர, வேறு வழி இருக்க முடியாது. இவ்வாறு கடைசி நேரத்தில் தடுப்பதை எல்லோருமே மீறுவதுதான் இயல்பு. அந்த வகையில் இவர்களும் மீறினார்கள். 11ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்துப் பேருந்துகள் மருந்துக்குக்கூட ஓட முடியாதவாறு ஏற்பாடு செய்திருந்தார்கள். அரசு தன் முழு சக்தியையும் பயன்படுத்தி 12ஆம் தேதி இரவே பஸ் சர்வீஸ் ஓரிடத்திற்கும் கிடையாது என்று சொல்லி நிறுத்தியது. அதுபோல் லாரிகள் ஓரிடத்திலும் ஓடாமல் பார்த்துக்கொண்டது. நகரின் எல்லைகள் பூராவும் ஒருவரும் வராதவாறு பார்த்துக்கொள்ள போலீசார் நிறுத்தப்பட்டார்கள். அப்படி இருந்தும்கூட, நாகர்கோவில் இந்து கல்லூரி வளைவுக்குள் இத்தனை தடைகளையும் மீறிக் கொண்டு மக்கள் கூட்டம் 50,000, ஒரு லட்சம் என்று வருகிறது என்றால், அப்படிப்பட்ட மக்கள் சக்தியை மதிக்க வேண்டாமா? கூட்டத்தின் தலைவர் திரு. தாணுலிங்கம் உட்பட பலர் தடையை மீறியதற்காக கைது செய்யப்படு கிறார்கள். ஒரு கல் எறி சம்பவம்கூட நடக்கவில்லை. ஒரு தவறான காரியம் கூட இத்தனைக்குப் பிறகும் நடக்கவில்லை. மக்கள் கூட்டம் எங்களையும் கைது செய்யுங்கள் என்றுதான் சொன்னது. இதில் அரசு என்ன செய்திருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 50 ஆயிரத்திற்கு மேல் 1 லட்சம் மக்கள் வரை வந்து கூடிவிட்டார்கள். அவ்வளவு பேரையும் கைது செய்ய முடியாது. அங்கு 700 டிரான்ஸ்போர்ட் பஸ்கள் உள்ளன. அவ்வளவு வண்டிகளையும் கொண்டுவந்து இவர்கள் அனைவரையும் ஏற்றி, ஒரு 10 மைலுக்கு அப்பால், தள்ளி இறக்கியிருக்க வேண்டாமா? தடை விதித்து விட்டார்கள். அதற்கு மாறாக தடையை மீறி கூடிவிட்டார்கள் என்றால், அதையும் சந்திக்கின்ற நிலை அரசுக்கு இருக்க வேண்டாமா? இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். அவ்வளவு பேரையும் கைது செய்யச் சொன்னபோது, "நடந்து வாருங்கள், போலீஸ் ஸ்டேஷனில் கைது செய்வோம்" என்றார்கள். ஒரு மைல் வரை நடந்து வந்தார்கள். எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை. தலைவரைக் கைது செய்ததற்குப் பிறகும், அவர்களுடைய உணர்வு வளமாக்கப்பட்ட நிலை

யிலும் அவர்கள், அந்தக் கூட்டம் எந்தவிதமான தவறையும் செய்யவில்லை. சவரியார் கோயில் சந்திப்புக்கு அந்தக் கூட்டம் வந்திருக்கிறது. அது ஒரு குறுகலான பாதை. அந்த இடத்தில் மக்கள் கூட்டம் வந்ததும், போலீசார் அவர்களை நிறுத்தி வைத்து, அவர்களுடைய பலத்தையெல்லாம் பிரயோகித்து, துப்பாக்கிச் சூடும் நடத்தினார்கள். ஒரு ஜாலியன்வாலா பாக் சம்பவமே அங்கு நடைபெற்றது. ஒருவர் ஸ்தலத்திலேயே இறந்தார். இவ்வளவுக்குப் பிறகும் நாகர்கோவில் நகர மக்கள் அமைதி காத்துக்கொண்டு அமைதியாகத் தான் இருந்தார்கள். பல பேர்களுடைய வீடுகளில் போலீசார் புகுந்து அட்டூழியம் செய்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். நாகராஜா கோயிலில் அந்திமாலை பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, போலீசார் பூட்ஸ் காலுடன் விக்ரகம் இருக்கும் இடம்வரை சென்று அங்கு இருந்தவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இன்னமும் கூட அங்கு இருந்தவர்கள் தாக்கப்பட்டதால் சிந்திய ரத்தம் சொட்டு சொட்டாக இருக்கிறது. இவ்வளவு சம்பவத்திற்குப் பிறகும் நாகர்கோவிலில் உள்ள நாகராஜா கோயில் தாக்கப்பட்டது என்றால், நான் மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதியோடு அவைக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்துக்கள் சட்டை அணியாமல் தான் கோயிலுக்குப் போவார்கள். அது அங்குள்ளவர்களின் பழக்கம். ஆனால் இங்கேயுள்ளவர்கள் சட்டை போட்டுக்கொண்டு, செருப்பு அணிந்து கொண்டு கோயிலுக்குள் போகலாம். அங்கே உள்ளவர்கள் சட்டை அணியக்கூடாது, செருப்பு அணியக் கூடாது. வெறும் துண்டு உடுத்திக்கொண்டு தான் கோயிலுக்குள் செல்லலாம். காரணம் கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூர் மகாராஜாவினுடைய ஆளுகைக்கு உட்பட்ட சமஸ்தானத்தில் ஓர் பகுதியாக அந்தக் காலத்தில் இருந்தது. மார்த்தாண்டவர்ம மகாராஜாவே அந்த நாட்டினுடைய ரிலிஜியஸ் தலைவராகவும், அதாவது மதத் தலைவராகவும் இருந்து வந்தார். அப்படிப் பட்ட பாரம்பரியத்தில் அந்தக் கோயில் வந்ததாகையால் இன்னமும் அதற்கு 'சாங்டிடி' அதாவது புனிதத் தன்மை இருக்கிறது. மார்த்தாண்டவர்ம மகா ராஜாவை அவருடைய விரோதிகள் கொலை செய்வதற்காக குதிரையில் துரத்திக்கொண்டு வந்தார்கள். களியங்காடு என்ற இடத்தில்தான் மகாராஜா நின்றார். பப்பு தம்பி, இராமன் தம்பி ஆகிய இருவரும்தான் மகாராஜாவைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற குதிரையிலே துரத்திக்கொண்டு வந்தவர்கள். உயிருக்குத் தப்பித்துக்கொண்டு ஓடி வந்த அந்த மதத் தலைவருக்கு களியங் காடு கோயில்தான் அபயம் அளித்தது. அவர் அங்கு வந்தபோது, கோயிலுக்கு வெளியே பூட்சைக் கழற்றிப் போட்டு விட்டுத்தான் அந்த நிலையிலும்





கோயிலுக்கு உள்ளே போனார். அவருடைய பூட்ஸ்கள்தான் அவரை விரோதிகளுக்கு அவர் இங்குதான் இருக்கிறார் என்பதைக் காட்டிக் கொடுத்தன. அப்படியும் பழி பாவத்திற்கு, கொலைக்கு அஞ்சாத அந்தக் கொலைக்காரர்கள் கூட மகாராஜா வரட்டும் என்று சொல்லி உள்ளே செல்ல வில்லை, வெளியே காத்திருந்தார்கள்.

(பிற்பகல் 12-10))

மகாராஜா உள்ளே போனவர் பூசாரியினுடைய உடையைப் போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார். பிறகு பூசாரி வெளியே வந்தார். இது வரலாறு. அந்தப் பகுதியிலே வாழும் மக்கள் கோயிலையும், அங்கே இருக்கும் விக்கிரகத்தையும், மிகவும் புனிதமானதாகக் கருதும்போது, மிகவும் சாங்டிட்டி யுள்ளதாகக் கருதும்போது—சிக்கியர்கள் கோயிலுக்கு உள்ளே கொலைகாரன் போனாலும், உள்ளே சென்று அவனைப் பிடிக்க முடியாது என்ற அளவிலே நிலைமை இருக்கும்போது—அங்கே கோயிலுக்கு உள்ளே போலீசார் பூட்ஸ் கால்களோடு போயிருக்கிறார்கள். இந்த மாதிரி அநீதிகள் அங்கே நடந்திருக் கின்றன. நான் இந்துக்கள் சார்பாக இங்கே பேசவில்லை. அங்கே இருக்கும் கிறிஸ்தவர்கள் சார்பாகப் பேசவில்லை. ஆனால் மக்கள் சார்பாகப் பேசு கிறேன். அங்கே இந்துக்கள் அல்லது கிறிஸ்தவர்கள் என்ற வித்தியாசமே இல்லை. அங்கே இருக்கும் கிறிஸ்தவர்கள் எல்லாம் இப்போது கண்ணீர் விட்டு அழும் நிலைமைதான் இருக்கிறது. இந்தப் போலீஸ்காரர்கள் எல்லாம் இப்படிச் செய்ததன் காரணத்தால், இங்கே இருக்கும் இந்துக்கள் எல்லாம் எங்கள் மீது சந்தேகப்படுகிறார்கள் என்று சொல்லி அவர்கள் மிகவும் வேதனை படுகிறார்கள். அங்கே போலீஸ்காரர்கள் மிகவும் தவறு செய்திருக்கிறார்கள். அங்கு ஒரு வருஷத்திற்கு முன்பு ஏற்பட்ட நெருக்கடிக்கும், அதன் காரணமாக விளைந்த விளைவுகளுக்கும் காரணம் கிருஸ்துவர்களுக்கும், போலீஸ்காரர் களுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சிதான். அங்கேயும் போலீஸ்காரர்கள் தான் தவறைச் செய்தார்கள். இந்த நிகழ்ச்சி நடந்த மறுநாள் இப்போது இரயில்வே ஸ்டேஷனிலே போய் 'அட்டாக்' செய்திருக்கிறார்கள். அதுபற்றி அந்த ஸ்டேஷன் மாஸ்டர் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி யின் செயலாளர் திரு. பரமேஸ்வரன் நாயர் அவர்கள்கூட 16—2—1983-லே ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்கள். Hindu, dated 16th February 1983

"The promulgation of ban order under Section 144, Cr. P.C., throughout Kanniyakumari district a day before the Hindu conference was scheduled to be held at Nagercoil was in complete violation of democratic norms".

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 15

இப்படிப்பட்ட ஜனநாயக விரோதமான ஒரு காரியத்தை அங்கே இருக்கும்
அதிகாரிகள் செய்தார்களா, அல்லது இங்கே இருந்து அறிக்கை போய் அங்கே
இருந்தவர்கள் செய்தார்களா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்தப்
பகுதியிலே போலீசாரின் அணுகுமுறை மிகவும் தவறு. இன்றைக்குக் கூட
'இந்து' பத்திரிகையிலே 9-வது பக்கத்திலே அறிக்கை வந்திருக்கிறது.
போலீஸ் ராஜ்யமாக தமிழகம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று நக்சல்பாரி
நடவடிக்கைகளைப்பற்றி ஆராய வந்த திரு. சுரேந்திர மோஹன் அவர்களைக்
கொண்ட ஒரு கமிட்டி தன்னுடைய கருத்தாகச் சொல்லியிருக்கிறது. தர்மபுரி,
மற்றும் வடாற்காடு மாவட்டங்களைப் பற்றி இப்படியெல்லாம் சொல்லியிருக்
கிறார்கள். நான் அமைதியாக இருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி
சொல்கிறேன். அமைதியாக இருந்த மாவட்டத்தில் இப்போது பிரச்சினை
கள் எழுந்திருக்கின்றன. இந்த ஜாதி, சமய சண்டைகளைத் தூண்டிவிடும்,
அதிலே ஈடுபடும் முக்கியமான இரண்டொரு நபரைக் கண்டுபிடித்து அவர்கள்
மீது தக்க நேரத்திலே நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிலைமைகளைத்
தவிர்த்திருக்க முடியும். போலீசாரைப் பொறுத்தவரையில், எந்தக் காரியங்
களை யார் எப்படிச் செய்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்து
விட்டு, பின்னர் அந்த நிகழ்ச்சிகள் பெரிய பூகம்பம் என்ற அளவிலே உருவெடுக்
கும்போது, கர்நாடக போலீசாரை வைத்து அடித்து உதைப்பது என்ற
நிலைமைகள் எல்லாம் இப்போது இருக்கின்றன. இப்போது நாட்டிலே
வறட்சி நிலைமை இருக்கின்றது, மக்கள் வறுமையிலே இருக்கிறார்கள்.
அன்றாட செலவுக்குக்கூட அவர்களிடத்திலே காசு இல்லை. அப்படி
அவர்கள் இருக்கும் இந்த நேரத்தில் நீங்கள் அவர்களை இப்படிச் செய்தால்
எப்படி? திருச்செந்தூர் தேர்தல் முடிந்து, பின்னர் 2 ஆம் தேதி ஓட்டு
எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த
வரையில், செண்பகராமன் புதூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்
திலே இருக்கும் 100-க்கு 100 கிராம நிலங்களும், அங்கே இருக்கும் பயிர்களும்
தண்ணீர் இல்லாமல் கருகிவிடும் நிலைமையிலேதான் இருக்கின்றன. அதைப்
பொறுத்தவரையில், எந்தவிதமான நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்பட
வில்லை. அங்கே உள்ள மக்கள் திருச்செந்தூர் தொகுதியிலே திராவிட
முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெற்றது என்று சொல்லி மாலை 4 மணி
யளவில் ஊர்வலம் போனார்கள். அவர்கள் அப்படி ஊர்வலம் ...



1983 மார்ச் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

யாரோ போலீசாருக்குத் தகவல் கொடுத்தார்கள். யார் தலைமையேற்றுச் சென்றார்களோ அவர்களை மட்டும் அழைத்துச் சென்று விசாரித்து நடவடிக்கை எடுத்திருக்கலாம். அல்லது யார் அதை முன்னின்று நடத்தினார்கள் என்று அவர்களின் விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பின்னர் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல், தகவல் கிடைத்த உடனே போலீசார் வந்தார்கள். போலீசுக்கு இந்தக் கூட்டத்தைப் பற்றித் தகவல் கொடுத்ததே அந்தப் பகுதி அ.தி.மு.க தலைவர். போலீசார் வருவதைப் பார்த்தவுடனே, கூட்டத்தினர் அனைவரும் ஓடிவிட்டார்கள். போலீசாருக்கு முன்னரே கொடுத்திருந்த உத்தரவு என்னவென்றால், அவர்கள் மீது கேஸ் போட்டால் தள்ளுபடியாகி விடும். ஆகவே, போனவுடனே முடிந்த அளவுக்கு அவர்களை அடித்துவிட்டு வரவேண்டும் என்று சொல்லி அனுப்பி யிருந்தார்கள். அங்கேயிருந்த ஒரு கார் டிரைவர் என்னிடம் நடந்த நிகழ்ச்சி யைப் பற்றியெல்லாம் சொன்னார். அவருடைய கார் உடைத்து நொறுக்கப் பட்டது. ஊர்வலமாகப் போகின்றவர்களை ஒரு விரட்டு விரட்டிவிட்டு, அதாவது சடு சடு என்று கிடைத்தவரை அடித்து விரட்டிவிட்டு வந்துவிட வேண்டும் என்று வந்தவுடன் எல்லோரையும் அடித்து விரட்டி விட்டார்கள். எல்லோரும் ஓடிவிட்டார்கள். ஆனால் ஒரேயொருவர் மட்டும் போலீசைக் கண்டு பயப்படாமல் அங்கேயே மிகவும் கம்பீரமாக நின்றார். அவன் யார் என்றால், அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தம்பி. அவர் மிலிட்டரியிலே இருக்கிறார். சிறிது நாளைக்கு முன்புதான் அவர் ஹைதராபாத்திலிருந்து வந்திருந்தார். லீவிலே வந்திருந்தார். தகவல் கொடுத்த அ.தி.மு.க. தலைவர் தம்பி, அவர்தான் ஓடாமல் அங்கே கம்பீரமாக நின்று கொண்டிருந்தார். ஹெட் கான்ஸ்டபிளுக்கு இவர் யார் என்று புரிய வில்லை. ஹெட் கான்ஸ்டபிள் அவரை நோக்கி ஓடி அவர் கையிலே வைத் திருந்த தடியை ஓங்கி அந்த ஆளை அடித்தார். அவனோ மிலிட்டரிக்காரன். ஹெட் கான்ஸ்டபிள் ஓங்கிய அந்தத் தடியைப் பிடித்தே, அதைக் கொண்டு அவரைக் கீழே தள்ளி சரியாக அடித்தார். அடித்துவிட்டு அவர் உடனடியாக வீட்டுக்குச் சென்று அவருடைய சாமான்கள் மற்றும் பாஸ் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டிலேயிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு சைக்கிளிலே வந்து, பின்னர் பஸ் ஏறி ஹைதராபாத்திற்குப் போய்விட்டார். 'இப்போது அங்கே என்ன நடக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே அந்த நிகழ்ச்சி நடந்ததற்கு போலீசார் ஊரிலே புகுந்து ஊர் மக்கள் எல்லோரையும் அடிக்கிறார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த மக்கள் இப்போது மிகவும் வறுமையில் இருக்கிறார்கள். போலீசார் கேஸ் போடும்போது, வெளியே ஜாமீனில் வர அவர்களிடம் காசுகூட இல்லை. அங்குள்ள விவசாயிகள் எல்லாம் அடி வாங்கியிருக்கிறார்கள். இப்போது யார் மீது கேஸ் போடுவது என்ற பிரச்சினை இருக்கிறது. டி.எம்.கே. ஊர்வலம் என்று சொல்லி,

ஏ.டி.எம்.கே.காரர்கள் மீது கேஸ் போட்டால் நிற்காது. ஆணையிடாமல்
லத்தி சார்ஜ் செய்வது என்பது எப்படி, அப்படிச் செய்தால் என்ன நடக்கும்
இந்த நாட்டிலே என்பதைப் பார்க்க வேண்டும். வறட்சியில்,
வாடி, கையில் காசு இல்லாமல் இருக்கும் இந்த நிலைமையிலே இந்த அணுகு
முறையை அரசு கையாண்டால், நிச்சயமாக இந்தக் குமுறல் பூகம்பமாக
வெடிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை
மூலம் போட்டிருக்கும் நுழைவு வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டு,
நான் சொன்ன மற்ற கருத்துக்களும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே
சொல்லப்பட்ட கருத்துக்கள்தான் என்ற வகையிலே எடுத்துக்கொண்டு, அவை
களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமை
கிறேன்.

## 7. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை.
## நகராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
13—3—1983 ஆம் தேதியன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்
பெரும்பான்மைக் கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில்
வருகிற ஏப்ரல் மாதத்திலிருந்து 4 மாத காலத்தில் நகராட்சிகள், மாநகராட்சி
கள் தேர்தல்கள் ஆகஸ்ட் மாத வாக்கில் நடத்தலாம் என்று தெரிவிக்கிறேன்.
அதே நேரத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்களில் ஆதிதிராவிடர், மலைவாழ்
மக்களுக்கும், பெண்களுக்கும் கடைப்பிடித்த இட ஒதுக்கீடுகளை இந்தத்
தேர்தலிலும் கடைப்பிடிக்க அரசு விரும்புகிறது. இதை அனைத்துக் கட்சி
யினரும் ஏற்றுச் கொள்வார்கள் என திடமாக நம்புகிறேன். இதிலே இரண்டு
விதமான கருத்துக்கள் இருக்காது எனவும் நம்புகிறேன். ஆகவே, அனைத்து
அரசியல் கட்சித் தலைவர்களும் வழக்கு மன்றத்திற்குச் சென்று எந்தவிதமான
தடையும் பெறாமல், தேர்தல் சுமுகமாக நடைபெற எல்லாக் கட்சியினரும்
ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். நகராட்சி, மாநக
ராட்சி தேர்தல்கள் நடத்தப்படும் குறிப்பிட்ட தேதியை அரசு பின்னர்
அறிவிக்கும்.





## 6. 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்
களே, தமிழக அரசின் சார்பாக இந்த அவையின் ஏற்புக்காக வைக்கப்பட்ட
1982-83 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள், மற்றும் 1983-84 ஆம்
ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் மீது நடை
பெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு
தத்தமக்குரிய கொள்கையின் அடிப்படையிலே, தங்களுடைய நோக்கத்தின்
அடிப்படையிலே, தங்களுடைய போக்கின் அடிப்படையிலே இங்கே கருத்துக்
களை வழங்கியிருக்கிறார்கள். நான் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச்
சொன்னதற்கு இணங்க நல்ல எண்ணத்துடனும், நல்ல நோக்கத்துடனும்,
நாட்டின் நலன் கருதியும், மக்களின் நல்வாழ்வு கருதியும் சிறிய கருத்துக்களை
வழங்குமாறும் மக்களின் நல்வாழ்வுத் திட்டத்திற்கும், பொருளாதார திட்டத்திற்கும்
உரிய ஆதரவு தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து நான் நிதிநிலை
அறிக்கையை முடித்தேன். அந்த வகையிலே சிறிய கருத்துரைகள் பலவற்றை
வழங்கி இந்த அரசு மேற்கொண்டிருக்கும் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவு
தரும் வகையிலே இந்த அரசு போட்டிருக்கும் திட்டங்களுக்கு உறுதுணையாக
இருந்து அவைகளை புரிந்து அவைகளை நிறைவேற்றும் வகையில், அதற்கு தங்களுடைய
ஆதரவைத் தரும் வகையிலே கருத்துக்களை வழங்கியிருக்கும் உறுப்பினர்கள்
அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர்
இதிலே இருக்கும் சில கருத்துக்களை ஆதரிக்க இயலாத நிலையிலே இருப்ப
தால், தங்களுக்கு உள்ள கொள்கைக்கு ஏற்ப பல்வேறு வகையில் எதிர்க்
கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்
படையிலே தங்களுடைய சிந்தனையைத் தூண்டவும், கவனத்தை ஈர்க்கவும்
பல்வேறு நிலைமைகளிலே கருத்துக்களை வழங்கியதற்காக அத்தனை பேருக்
கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சி வரிசையிலே
இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இறுதியிலே
பேசுகிறபோதும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

அதைப் போன்றே பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் தங்களுடைய
கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் அனைத்திற்கும்
நீண்ட நேரத்திற்கு விடையிறுக்கத் தக்க வகையில் போதுமான அளவுக்கு
நேரமில்லை என்றாலுங்கூட, ஒருசில கருத்துக்களுக்காவது நான் இன்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

பதிலளிக்க விரும்புகிறேன். இந்தக் கருத்துக்களைப் பொறுத்த வரையில், எழுப்பப்பட்ட ஐய வினாக்களுக்கும், அறியா வினாக்களுக்கும், அறியும் வினாக்களுக்கும் விளக்கம் தந்து தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இங்கே வேடிக்கையாகப் பேசியவர்களும் இருக்கிறார்கள், வினையோடு பேசியவர்களும் இருக்கிறார்கள், வேதனையோடு பேசியவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகிறபோது, இந்த நிதி நிலை அறிக்கை பசியிலே தொடங்கி பற்றாக்குறையில் முடிந்திருக்கிறது என்று பேசியிருப்பதைக் கண்டேன். இந்த நிதிநிலை அறிக்கை, திருவள்ளுவரின் தெளிவுரையோடு துவக்கப்பட்டு, பிறகு திருவள்ளுவர் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு துறைகளின் மூலம் ஆற்ற வேண்டிய பணிகளுக்காக அதில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடங்கப்பட்டு முடிவுறாமல் இருக்கிற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. புதிய திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வறட்சிப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அப்பால் நாட்டு மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே முன்பணம், கடன் வழங்குதல் ஆகியவற்றிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

என்று திருவள்ளுவர் கூறியதை உணர்ந்து, ஏறத்தாழ 2,000 கோடி ரூபாயைச் செலவினங்களுக்காக என்று ஒதுக்கீடு செய்ய வரிவகை செய்கிற வகையில்தான் முடித்திருக்கிறேன்.

இந்த நிதிநிலையைப் பொறுத்தவரையில், இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று சொன்னார்கள். இன்றைய தினம் இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களின் நிதிநிலை அறிக்கைகளையும் பார்த்தாலும் சரி, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையைப் பார்த்தாலும் சரி, அவையெல்லாம் கூட அநேகமாகப் பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் இருக்கின்றன என்பதை நாம் உணர முடியும். அந்த அளவுக்குப் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்களாக அவை



1983 மார்ச் 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அனைத்தும் அமையத் தக்க அளவுக்குத்தான் அண்மைக் காலத்தில் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய அரசேகூட தன்னுடைய நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது, அதை ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாகத் தயாரித்து, அதற்குப் பிறகு சுமார் ரூபாய் 716 கோடி அளவுக்குப் புதிய வரிகளைப் போட்டு, பின்னாலே ரூபாய் 1,555 கோடிக்குப் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையைத்தான் தாக்கல் செய்திருக்கிறது. மேற்கு வங்கத்தில்கூட அவர்களும் பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் தயாரித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 67 கோடி ரூபாய் அளவுக்கு ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அங்கே புதிதாக வரி போட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதன் காரணமாக சுமார் ரூ. 28.16 கோடி அளவுக்கு இன்றியமையாப் பொருள்களின் மீது வரி போட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலவே வளம் கொழிக்கும் மாநிலம் என்று கருதப்படுகிற ஆந்திரத்தில்கூட ரூ. 115 கோடி அளவுக்கு ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் தயாரித்து அளித்திருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் ரூ. 121 கோடிக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மகாராட்டிர மாநிலத்தில் ஏறத்தாழ 51 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறை பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். ஹரியானா மாநிலத்தில் ரூபாய் 32 கோடி அளவுக்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். அதோடு புதிதாக ரூபாய் 29 கோடியே 59 லட்சம் அளவுக்கு வரிகளைப் போட்டிருக்கிறார்கள். நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், மாநிலங்கள் அனைத்துமே தங்களின் நிதியாதாரங்களைச் சரிக்கட்டி தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு செல்ல வேண்டிய நிலைமையில் அவைகள் வளர்ந்த மாநிலங்களானாலும் சரி, வளருகிற மாநிலங்களானாலும் சரி, புதிய வரி விதிப்புகளை மேற்கொள்வதோடு, பற்றாக்குறை பட்ஜெட்டையும் தயாரித்து அளிக்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றன என்ற தன்மையை நாம் கவனிக்க வேண்டும்.

நமது நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். முக்கியமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசும்போது, மானியக் கோரிக்கைகள் 4, 7, 8, 13, 41 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகைகளுக்கும் அவையில் கோரப்பட்டுள்ள தொகைகளுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றும், இதற்கு ஒரு விளக்கம் தர வேண்டும் என்றும் கேட்டிருந்தார். விரிவான மானியக் கோரிக்கைகளில் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை என்பது அனுமதிக்கப்பட்ட தொகை எனப்படும் 'ஓட்டட்' மற்றும் சாட்டியது என்று சொல்லப்படும்

'சார்ஜ்டு' தொகைகளைக் குறிக்கும். சாட்டிய செலவுத் தொகை, பொதுவாக மானியக் கோரிக்கையில் இடம் பெறுவதில்லை. காரணம், சாட்டிய தொகையைப் பொறுத்தவரையில், அது சட்டமன்றங்களின் அனுமதியைப் பெறத் தேவையில்லை. அதன் காரணமாக மானியக் கோரிக்கை எண் 4-ல் அனுமதித்த தொகை ரூ. 10,38,57,000 என்றும் சாட்டிய தொகை ரூ. 15,000 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அறிக்கையில் அனுமதித்த தொகையான ரூ. 10,38,57,000 மட்டுமே காட்டப்பட்டிருக்கிறது. எனவே, மொத்தத் தொகையில் அனுமதிக்கப்பட்ட தொகையும் சாட்டிய தொகையும் சேர்த்துக் காட்டப்படும், அதாவது ஓட்டட் மற்றும் சார்ஜ்டு அமவுண்ட் வரும். ஆனால் சாட்டிய தொகை என்று சொல்லும்போது, அதில் அனுமதிக்கப்பட்ட தொகை வராது. சாட்டிய தொகை மட்டுமே அதில் குறிப்பிடப்படும். இது தான் இந்த வித்தியாசத்திற்குக் காரணம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படியானால் மானியக் கோரிக்கைகளில் வழங்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களும், செயலாளர் கையொப்பமிட்டு கொடுத்துள்ள புள்ளிவிவரங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவே. அங்கே சாட்டிய தொகையும் இருக்கிறது. சாட்டாத தொகையும் இருக்கிறது. மானியக் கோரிக்கை 41-ஐ எடுத்துக் கொண்டால், அரசாங்கம் நிதி ஒதுக்கியிருப்பது ரூ. 8.76 கோடி. ஆனால் நம் செயலாளர் கொடுத்திருப்பது ரூ. 17 லட்சம் மட்டும்தான். எனவே இவ்வளவு பெரிய தொகை வித்தியாசம் இருப்பதற்கான நியாயம் என்ன என்று தெரியவில்லை. நிதிநிலைக் குறிப்பில் ரூ. 8.76 கோடி என்று இருக்கிறது. இதில் 17 லட்சம் ரூபாய் என்றிருக்கிறது. இந்த வித்தியாசம் ஏன் என்றுதான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கணக்கில் ஓட்டட் என்றும் சார்ஜ்டு என்றும் இரண்டு வகைகள் இருக்கின்றன. அதாவது அனுமதிக்கப்பட்ட தொகை என்றும் சாட்டிய தொகை என்றும் இரண்டு வகைகள் இருக்கின்றன. மொத்தத் தொகை என்று சொல்லப்படும்போது அனுமதிக்கப்பட்ட தொகையோடு சாட்டிய தொகையும் சேர்ந்து வரும். சில இனங்களில் சார்ஜ்டு என்று சொல்லப்படும் சாட்டிய தொகை மட்டும் இருந்தால், அது மட்டுமே குறிப்பிடப்படும். அதாவது சாட்டிய தொகை தனியாக வரும்போது, சாட்டிய தொகை மட்டும்தான் இருக்கும். அதோடு அனுமதிக்கப்பட்ட தொகை சேர்ந்து வராது. சில இனங்களில் இரண்டும் ஒரே மாதிரியாக இருப்பதற்குக் காரணம் அதில் சாட்டிய தொகை ஏதுமில்லை என்பதாகும். இது



குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தப் பின்னாலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதில் ஏதாவது ஐயப்பாடு இருந்தாலும், அதற்கான விளக்கத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு என்று ரூ. 57 கோடி அரசு ஒதுக்கியிருக்கும் அந்தத் தொகையைச் செலவழிக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ருக்குசாமி அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது குற்றம் சாட்டியிருக்கிறார். இந்தத் தொகை ஆசிரியர்களுக்கு என்று இல்லை.

7-வது நிதிக் கமிஷனிடம் நமது மாநில அரசின் சார்பில் பல்வேறு இனங்களுக்காகத் தொகையைக் கேட்டோம். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 7-வது நிதிக் கமிஷனிடம் திட்டமில்லாத இனங்களுக்கான செலவு—நான்-பிளான் எக்ஸ்பென்டிச்சர்—மற்றும் பல்வேறு இனங்களில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைக் கணித்து மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய பங்கை நிர்ணயம் செய்யும்போது, நமக்கு ஒதுக்க வேண்டிய தொகை குறித்து கேட்டோம். அந்த அடிப்படையில் அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுக்காக என்று இந்த அரசு ரூ. 275 கோடி கேட்டிருந்தது. ஆனால் 7-வது நிதிக் குழு 1978—1983 ஆம் ஆண்டுகளுக்கு அதாவது 5 ஆண்டுக் காலத்திற்கு என்று மொத்தமாக ரூ. 252 கோடிதான் ஒதுக்கியது. எனவே இந்தத் தொகை இதற்காக என்று தனியாகக் கொடுக்கப்படும் தொகை அல்ல. மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு, அதாவது மத்திய அரசின் வரியிலிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கிற பங்காக இது கிடைக்கிறது. 3-வது சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளை அமுல்படுத்த ஆண்டுக்கு ரூ. 84 கோடி தேவைப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு அதாவது 1978 முதல் 1983 வரை இதற்காகவே நமக்கு ரூ. 170 கோடி வேண்டியிருக்கிறது. மேலும் நாம இதுவரை 17 தவணை அகவிலைப்படி கொடுத்திருக்கிறோம். இந்த வகையில்கூட ஆண்டுக்கு 12 கோடி தேவைப்படுகிறது. இதற்கு மேல் இடையில் கொடுக்கிற சூழ்நிலை வந்தால், அதற்காக ஒரு 8 கோடி ரூபாய் அளவுக்குத் தேவைப்படுகிற காரணத்தால் மொத்தத்தில் ரூ. 130 கோடிக்கு மேல் ஆகிறது.

3-வது சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளை அமுல்படுத்த மற்றும் 17 தவணை அகவிலைப் படியைக் கொடுக்க மட்டும் ரூ. 30 கோடி அதிகமாகச் செலவாகிறது. மத்திய அரசு நமக்குக் கொடுத்தது ரூ. 251 கோடிதான். என்றாலும் நமக்குச் செலவாகியிருப்பது அதற்கு மேலாக இருக்கிறது. எனவே இந்த ஒதுக்கீடு என்பது குறிப்பிட்ட ஒரு இனத்திற்காக மட்டுமல்ல என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில், நிதி ஒதுக்கீடு பற்றியும், அவைகளைச் செலவழிக்கும் வகையில் நாம் பணியாற்றி வருகிற முறைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நிதியைக் கண்காணிக்கிற வகையிலும், அதனைப் பயன்படுத்துகிற வகையிலும் கூடுமான வரையில் நாம் எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்தோமோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் பணியாற்றி வருகிறோம். அதில் ஓரளவுக்கு நாம் வெற்றியும் பெற்றிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடிக்கும் வரை, அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30.)

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** சில பல குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியபடி சிலபல தன்மைகள் இருக்கலாமே தவிர, பொதுவாக நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இந்த மாநிலம் மகிழத்தக்க அளவுக்கு அது அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பாராட்டாவிட்டாலும் கூட, பாராட்ட வேண்டியவர்களும், மற்றவர்களும் செம்மையாகப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

13—7—1982 அன்று இந்திய பாராளுமன்றத்திலுடைய மாநிலங்கள் அவையில் பேசிய இந்திய நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் "தமிழக அரசு நிதி நிர்வாகத்தைச் செம்மையாக நிர்வகிக்கிறது. அதற்காக தமிழக அரசைப் பாராட்டுகிறேன். மாநிலங்கள் அதிகப் பற்று (ஓவர்-டிராப்ட்) வாங்குவதில் கண்டிப்பான முறையை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டியதிருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில், இதற்குத் தேவையில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பாராட்டிற்குரியது" என்று தெளிவுபடக் கூறியிருக்கிறார்கள்.

ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் 13—10—1982 அன்று சென்னை நிருபர்கள் கூட்டத்திலே பேசும்போது, மாநிலத்தின் நிதி நிலைமைகளை எடுத்துச் சொல்லுகிறபோது; வெகு சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். "தமிழக அரசு பொருளாதாரத் திட்டங்கள் மற்ற மாநிலங்களைவிட [illegible]





வகையில் செயல்படுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழகம் எல்லா வகையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் உதவி அளிப்பது, கடனை வசூலிப்பது, பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகியவற்றில் தமிழக அரசு திறம்படச் செயல்பட்டு வருவதைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவிலேயே அதிகப் பற்று வாங்காத மாநிலம் தமிழகம் தான் என்பது பாராட்டுக்குரியது. இந்த நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னராக இருந்த திரு. ஐ. ஜி. பட்டேல் ஐதராபாத் கூட்டத்திலே பேசுகின்றபோது, "தமிழகத்திற்கு அதிக அளவு தொகையை திட்டக் குழு ஒதுக்கியுள்ளது. அதே நேரத்தில் தமிழகத்தில் நிதி நிர்வாகம் சிறப்பாக விளங்குகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்த 20 அம்சத் திட்டத்தை எல்லா மாநிலங்களும் நிறைவேற்ற வேண்டும் என்று எடுத்துக் கூறியதன் அடிப்படையில், நம்முடைய மாநிலம் அதிலும் முன்னணியில் நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே மத்திய அரசு போடுகிற திட்டங்களானாலும், அதற்கு மதிப்புத் தந்து, ஆதரவு தந்து, முழு முயற்சியோடு நிறைவேற்றுவதிலே ஈடுபட்டிருக்கிறோம். மத்திய அரசுத் திட்டங்கள், மாநில அரசுத் திட்டங்கள் என்று மாச்சரியங்கள் அடிப்படையிலே திட்டங்களை நாம் வைத்துக்கொண்டிருக்கவில்லை. மத்திய திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு, அக்கறை நமக்குக் கிடையாது என்ற அலட்சியப் போக்கு நம்மிடத்திலே இல்லை. 1982 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் உள்ள காலத்திலே உள்ள நிலைமையை மத்திய திட்டக் குழு ஆராய்ந்து "இருபது அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது" என்று சொல்லக்கூடிய அளவிற்கு செம்மையாகப் பணியாற்றியிருக்கிறோம். தேசிய கிராம வளர்ச்சித் திட்டத்தில் 150 சதவிகிதம் வளர்ச்சியும், ஒருங்கிணைந்த கிராமப்புறத் திட்டத்தில் 75 சதவிகிதம் வளர்ச்சியும், கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டத்தில் 100 சதவிகிதம் வளர்ச்சியும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் 100 சதவிகிதம் வளர்ச்சியும், மலைவாழ் மக்களுக்குரிய திட்டத்தில் 80 சதவிகிதம் வளர்ச்சியும், உபரி நிலம் வழங்குவதில் 79 சதவிகிதம் வளர்ச்சியும், மரம் நடுதலில் 73 சதவிகிதம் வளர்ச்சியும், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கலில் 72 சதவிகிதம் வளர்ச்சியும் ஈட்டியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

சிறுசேமிப்பு இயக்கத்தை மத்திய அரசு வற்புறுத்தி ஒவ்வொரு மாநிலமும் ஆண்டுதோறும் அதிக ஈடுபாடு கொண்டு சிறப்பான ஆதரவைத் தர வேண்டும் என்று கூறுகிற வகையில் தமிழக அரசு தன்னுடைய பங்கைச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறது என்பதை இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு வந்த செய்திகளின்படி மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாக அறிவார்கள். சிறுசேமிப்பு வசூலில் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டில் ரூபாய் 213.15 இலட்சம் வசூல் செய்து பெரிய சாதனையை நிகழ்த்தியுள்ளது என்றும் இவ்வளவு பெரிய தொகை இதுவரை வசூல் செய்யப்படவில்லை என்றும் மத்திய அரசு சொல்லுகிற அளவிற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே காவல் துறையினுடைய அணுகுமுறையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள் 55 ஆயிரம் காவலர்களை வைத்துக்கொண்டு, நாடெங்கும் காவல் நிலையங்களை வைத்துக்கொண்டு, கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்களைக் கொண்டுள்ள மாநில நிர்வாகத்தை நடத்துகிறபோது, அங்குமிங்கும் சிலபல குறைபாடுகள் இருக்கக்கூடும். ஆனால் குறைபாடுகள் அறவேயின்றி நூற்றுக்கு நூறு சிறப்பாக நடைபெறுகிறது என்று நான் வாதாட வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் நாகர்கோவில் சம்பவத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். முழு விவரங்களையும் அளித்தார்கள். அந்த விபரங்களின் அடிப்படையில் ஆராயப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த மகாநாட்டை பண்ணைக்காடு திருவிழாவிற்குப் பிறகு நடத்த வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் அதை மறுத்து விட்டார்கள் என்ற தகவலைக்கூட அன்றைக்குச் சொன்னேன். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிற விவரங்களில் பல்வேறு தன்மைகள் இருப்பதன் காரணமாக, அது ஆராயப்பட வேண்டிய ஒன்று என்று கூறிக் கொள்கிறேன். தமிழக காவல் துறையைப் பொறுத்தவரையில், "தமிழ்நாடு போலீஸ் ஈஸ் தி பெஸ்ட்" என்று சொல்லத்தக்க அளவிற்கு நிலைமைகள் எல்லா ஆட்சிகளிலும் தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வருகிறது. அசாமைப் பொறுத்தவரையில், போலீஸ் ஆட்சியே நடத்த முடியாத அளவிற்கு வந்து இராணுவ ஆட்சியை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். 6 ஆயிரம் வீடுகள் காலியாகிற அளவிற்கு பத்து நாட்களில் கிட்டத்தட்ட 2,600 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் அங்கே. உ.பி., பீகார், ராஜஸ்தான், ம.பி. ஆகிய மாநிலங்களில் உள்ள நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் கூடுமானவரையில் நாம் இந்தத் தன்மையைக் காப்பாற்றி வருகிறோம். ஆகவே செம்மைப்படுத்தப்பட வேண்டிய நிலை இல்லையென்று சொல்லவில்லை.



1983 மார்ச் 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமும், கேள்விகளின் மூலமும் எடுத்துக்காட்டுகிற கருத்துக்களை அடிப்படையாக வைத்து, சிலபல இடங்களில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஒழுங்காக நடக்கவில்லை என்று எடுத்துப் பேசப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வாடிப்பட்டி நிகழ்ச்சியை அதற்கு உதாரணமாகக் கூறலாம். கூடுமான வரையில் சிறப்பாகச் செய்து வருகிறோம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தேசிய போலீஸ் கமிஷனரான திரு. தரம்வீரா சொல்லுகிறபோது, "குற்றங்களில் ஈடுபடுதல், சட்டத்தை மீறுதல், வன்முறையில் ஈடுபடுதல் ஆகியவை உலகெங்கும் அதிகரித்து வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு, அதற்கடுத்து மகாராஷ்டிரம், அதற்கடுத்து கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மக்களின் உரிமைகள் அதிக அளவிற்கு மீறப்படுவதில்லை. மற்ற பகுதிகளில் அதிக அளவிற்கு மீறப்படுகின்றன" என்று தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல இடங்களில் சுட்டிக்காட்டிய தன்மைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு நீதி வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிலைமையைப்பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். வறட்சி நிலைமையைப் பொறுத்தவரையில், மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய காலத்திலே தெரிவிக்கத் தவறிவிட்டது, தூங்கிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பார்த்த பார்வையில் அப்படித்தான் சொல்லத் தோன்றும், சொல்ல வேண்டும் என்ற எண்ணம் வரும். அது தவறு. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கணக்கெடுத்தால், 1901 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரையில் 82 ஆண்டுகளில் மொத்தத்தில் 39 ஆண்டுகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆண்டுகளாக விட்டு விட்டு வந்திருக்கின்றன. அந்த 39 ஆண்டுகளில் கணக்கெடுத்தால், 'சிவியர் அண்டு டிஸாஸ்ட்ரஸ்' என்று சொல்லத்தக்க அளவிற்கு கடுமையும் கொடுமையும் வாய்ந்த ஆண்டுகள் 12 ஆண்டுகள். அதிலே "மாடரேட் அண்டு லார்ஜ் லெவல்" என்று சொல்லத்தக்க சுமாரான வகையிலே பெருமளவிலே பாதிக்கப்பட்ட ஆண்டுகள் 27 ஆண்டுகள். வறட்சி நிலைமையைப் பொறுத்த வரையில், அறிக்கைகள் உடனடியாகத் தரவில்லை. அப்போதே தந்திருக்கலாம். காலம் கடந்து தரப்பட்டிருக்கிறது என்ற கருத்தை பலர் தெரிவித்திருக்கிறார்கள். வறட்சி நிலைமையைப் பற்றிய தகவல்களை அவ்வப்போது தந்திருக்கிறோம். வறட்சி ஏற்பட்டவுடனே வாரத்திற்கு ஒரு முறை ரிப்போர்ட் போகிறது. மாதத்திற்கு ஒரு முறை ரிப்போர்ட் போகிறது. அது மட்டு

மல்லாமல், ஆளுநர் மூலமாக எல்லா நிலைமைகளைப் பற்றியும் மாதந்தோறும் ஒரு ரிப்போர்ட் போகிறது. அரசுத் துறையிலிருந்து தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு எவ்வளவு மழை, இந்த ஆண்டு எவ்வளவு மழை என்பதும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், தென்மேற்குப் பருவக் காற்று மழையை நம்பி வாழ வேண்டிய அளவிற்கு நாம் இருக்கிறோம். தென்மேற்குப் பருவக் காற்று மழை ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 3 மாதங்களில் தக்க அளவிற்கும் ஆகஸ்டில் ஓரளவிற்கும் பெய்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் தண்ணீர் வருகிற அளவிற்கு காவிரியில் தண்ணீர் வருகிற அளவிற்கு இருந்தது. இந்த ஆண்டிலே மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிற ஆறுகளின் மூலமாக தமிழகம் பயன்பெறுகிற வகையிலே உள்ள இடங்கள் எல்லாம் தென்மேற்குப் பருவக் காற்று மழையைப் பெற வேண்டும். அது முடிந்தவுடனே, வடகிழக்குப் பருவக் காற்று மழை டிசம்பரில் வரும்போது, கிழக்குக் கடற்கரை மாவட்டங்கள் எல்லாம் பலன் பெறக் கூடிய அளவிற்கு இருக்கும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியதுமாதிரி, கன்னியாகுமரி மாவட்டம் தென்மேற்குப் பருவக் காற்று மழையால் பயன்பெற்றிருப்பதால், மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அது அதிகமாக பாதிக்கப்படாத மாவட்டமாக இருக்கிறது. "அதிகமாக பாதிக்கப்படாத மாவட்டம்" என்ற அளவுகோலைத் தந்திருக்கிறேன். ஆனால் சென்ற ஆண்டு பெய்ய வேண்டிய மழையில் தென்மேற்குப் பருவக் காற்று மழை 60 சதவிகிதம்தான் பெய்தது. அதற்கும் குறைவாகப் பெய்தது. பெய்ய வேண்டிய அளவிற்குப் பெய்யவில்லை.

(பிற்பகல் 12-40)

வடகிழக்குப் பருவக்காற்று மழையை அக்டோபரிலே பார்த்து, நவம்பரிலே பார்த்து, டிசம்பரிலே பார்த்து, அது பெய்யுமா பெய்யாதா என்று பார்த்துக் கொண்டிருந்தோம். அதைப் பற்றிச் சொல்லமுடியாத நிலை இருந்தது. ஆனால் எவ்வளவுக்குப் பெய்தது, எப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய தகவல்களையெல்லாம் நாம் அனுப்பிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் மழை பெய்யாத சூழ்நிலை இருந்தது. ஆனால் சென்னையிலே நவம்பரிலேகூட மழை பெய்தது. சென்னையிலே ஓரளவுக்கு ஒரு வாரகாலம் விட்டுவிட்டுப் பெய்தது. கடற்கரை ஓரங்களிலே இருக்கின்ற பல பகுதிகளிலே பெய்தது. இராமநாதபுரம் மாவட்டத்திலே பெய்தது. கடற்





கரை ஓரமாக உள்ள பல்வேறு மாவட்டப் பகுதிகளில் மழை பெய்தது. ஆனால் நவம்பர் முதல் இரண்டு வாரத்திற்குள் முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு எதிர்பார்க்கப்பட்ட மழை பெய்யவே இல்லை. தகவலைத்தான் நாம் தந்து கொண்டிருந்தோம். வறட்சியிலிருக்கின்ற தகவல்கள் பற்றி அவ்வப்போது மத்திய அரசுக்குப் போய்க்கொண்டுதான் இருந்தன. ஆனால் வறட்சியினால் பாதிக்கப்பட்ட அளவு என்ன, அதற்கு மத்திய அரசு எவ்வளவு ஈடு கட்ட வேண்டும், நாம் அதற்கு எவ்வளவு செலவழிக்க வேண்டுமென்ற புள்ளி விவரங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னால்தான், நமக்கு முழுத் தொகையும் கிடைக்கக்கூடும். நாம் அவசரப்பட்டு அக்டோபரிலே, நவம்பரிலே அல்லது டிசம்பரிலே நடந்த வறட்சி இவ்வளவுதான் என்று சொல்லி, ரூ. 40 கோடி அல்லது ரூ. 50 கோடி என்று சொல்லிவிட்டால், நாம் இவ்வளவுதானே கேட்டோம் என்று மத்திய அரசு தரும் என்பது மட்டுமல்லாமல், அதற்குப் பிறகு ஏற்படுகின்ற, வறட்சியினால் வரும் தன்மைகளை நம்மால் எடுத்துத் தெரிவிக்க முடியாது. இந்த முறை இன்றல்ல, என்றைக்கும் கடைப்பிடிக்கின்ற முறைதான். உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். 1969 ஆம் ஆண்டு வறட்சி நிலை ஏற்பட்டது. 1969 வறட்சி நிலை ஏற்பட்டபோதுகூட, 1968-69 ஆம் ஆண்டிலே வறட்சி நிலை ஆரம்பித்தது. அப்போதே வறட்சி நிலை இருந்தது. அப்போதுகூட வறட்சி நிலையைப்பற்றி மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்ட நாள் 19—2—1969. அவ்வளவு காலம் ஆகியது. அது தப்பு என்று சொல்லவில்லை. அதுதான் முறையாக இருந்து வந்திருக்கிறது என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். காலந்தாழ்த்தி நாம் அறிக்கை தரவில்லை என்பதைக் கூறுவதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். வறட்சி நிலைபற்றி அறிவிக்கப்பட்ட நாள் 19—2—1969.

A decision was taken at a high level meeting and the Government of India were informed of the drought situation on 19th February 1969.

ஆக அமைச்சரவை முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையிலே மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட நாள் 19—2—1969. மத்திய அரசு ஆய்வுக் குழு தமிழகத்திற்கு வந்து வறட்சி நிலையைச் சுற்றிப்பார்க்க அந்த அறிக்கையின்மீது அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை 1969 மார்ச் இறுதி வாரத்தில். இந்திய அரசு முதலிலே ஒதுக்கீடு செய்தது ரூ. 1.25 கோடி. முழு விவரமும் அடங்கிய நிதிநிலை அறிக்கையை அளிக்க தமிழக அரசு முடிவு எடுத்த நாள் 9—4—1969. இந்திய பிரதமரிடம் முழு விவர அறிக்கையைக் கொடுத்த நாள் 17—4—1969. தமிழக அரசால் வறட்சி நிலை துயர் தணிப்புக்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 22.24 கோடி. அதற்குப் பிறகு ஒரு

இரண்டாவது ஆய்வுக் குழு வந்து 1968-69-ல் இருந்த வறட்சியை 1969 ஜூலையில் ஆராய வேண்டிய நிலை வந்தது. அந்தக் கட்டத்தில் மத்திய அரசு இரண்டாவது ஆய்வுக் குழுவை இங்கே அனுப்பியது. அவர்கள் சிபாரிசு செய்தது ரூ. 15.74 கோடி. ஆனால் எல்லாவற்றிற்கும் சேர்த்து மத்திய அரசு மொத்தமாக ஒதுக்கீடு செய்த தொகை ரூ. 11.25 கோடிதான். மீதித் தொகையை மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் வந்தது.

1974-75-ல் ஏற்பட்ட வறட்சி நிலையைப் பார்த்தால்கூட, அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்து சேர்ந்தது 9—12—1974. அதற்குப் பிறகு அறிக்கையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்பளிக்கப்பட்ட நாள் 12—12—1974. மாநில அரசு குடிநீர் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் ஒரு கோடி. நிவாரணத்திற்கு உடனடியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கியது. வருவாய் வாரியத்தில் உள்ள குழு அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 23—1—1975. (ஜனவரி மாதம்). 1974-75-லே வந்த வறட்சி நிலைபற்றி நாம் மத்திய அரசுக்கு அறிவித்தது ஜனவரி மாதம் 23 ஆம் தேதி தான். அதற்குப் பிறகு மத்திய அரசு ரூபாய் 7.50 கோடிதான் ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைகளை எல்லாம் வைத்துக் கூடுதலாகக் கோடி அவர்கள் கணக்குப் பார்த்துவிட்டு, கணக்குக் காட்டினால்தான் தருவோம் என்று அவர்கள் சொல்லி இவர்கள் கணக்கைக் காட்டும்போது காட்டுவோம் என்று பதில் சொல்லி, அவர்கள் கணக்குத் தராவிட்டால் தரமாட்டோம் என்று சொல்லி, அந்த ரூ. 7½ கோடியோடு இந்த வறட்சி நிவாரணத்திற்குக் கிடைப்பது நின்றுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், வறட்சி நிலையைப் பற்றி அறிவிப்பதற்கான காலம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதமாகத்தான் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறதே தவிர, இதிலே காலத்தாழ்வு ஏற்படவில்லை என்று சொல்கிறேன். இந்த ஆய்வுக் குழுத் தலைவராக இருக்கின்ற ஸ்ரீவத்சவா அவர்கள் திருச்சியிலே நடைபெற்ற கூட்டத்திலே, காலத்தாழ்வோடு வறட்சி நிலை அறிக்கை வரவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. ராவ் பீரேந்திர சிங் ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அவர்கள் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதை நான் சொல்லியிருக்கிறார்கள். "நாங்கள் ஆய்வுக் குழுவை அனுப்பி வைக்கிறோம் என்று சொன்னோம். ஆனால் மாநில அரசு அனுப்ப வேண்டாம் என்று



சொல்லிவிட்டது. பின்னால் அனுபவங்கள் என்று சொல்லிவிட்டார்கள்" என்று சொன்னார்கள். அது உண்மையல்ல. ஆனால் அந்த ஆய்வுக் குழுவை அனுப்புவதற்கு திட்டம் போட்டுவிட்டார்கள். அந்த ஆய்வுக் குழுவினர் நம்முடைய மாநில அரசினுடைய அதிகாரிகளோடு கலந்து பேசியபோது, எப்போது வந்தால் நல்லது என்று கேட்டார்கள். அப்போது சொல்கின்றபோது, "மார்ச் 1 ஆம் தேதி வாக்கில் வாருங்கள்" என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மார்ச் 1 ஆம் தேதி அவர்கள் வந்தார்கள். அதிலே ஒன்றும் காலத்தாழ்வு ஏற்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றைய வறட்சி நிலைகளைப் பொறுத்தவரையிலே, முதலிலே 191 கோடி ரூபாய் வேண்டுமென்று நாம் அறிக்கை அனுப்பும்போது கேட்டோம். அதற்குப் பிறகு இருந்த சூழ்நிலையை வைத்து ரூ. 217.73 கோடி இதற்கு மத்திய அரசு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மற்றொரு விவரத்தையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் 191 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு ரூ. 217.73 கோடி ரூபாய் நாம் கேட்டிருக்கிறோம் என்றவுடனே முழுவதும் நாம் மத்திய அரசிடமிருந்து தான் பெறுகிறோம் என்ற எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளக்கூடாது என்பதற்காக நான் சொல்லிக்கொள்கிறேன். இதிலே இருக்கின்ற திட்டத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நம் பொது மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே மத்திய அரசு விதித்திருக்கின்ற விதியின்படி, ஆண்டுதோறும் நாம் வறட்சி நிவாரணத்திற்கோ, வெள்ள நிவாரணத்திற்கோ ரூ. 8.59 கோடி ஒதுக்கித் தர வேண்டும் என்று விதி இருக்கிறது. அதிலே 1982-83-க்கு ரூ. 8.59 கோடி. 1983-84க்கு ரூ. 8.59 கோடி. ஆக ரூ. 17.18 கோடி இந்த வறட்சி நிவாரணத்திற்கு நாம் செலவிடத் தொடங்கிவிடலாம் என்று கணக்கை வைத்துக்கொண்டு செலவழிக்கலாம். அந்த ரூ. 17 கோடியைத் தாண்டி இந்த நிவாரணப் பணிகள் போகுமானால், அதற்கு மத்திய அரசு வைத்திருக்கின்ற ஒரு முறை இந்த ஆண்டினுடைய திட்ட ஒதுக்கீடு எவ்வளவு என்று ஒதுக்குகின்றார்களோ அதிலே 5 சதவிகிதம் தொகை மாநில அரசு இதற்குச் செலவழிக்கலாம் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ. 542 கோடி என்றால், அதிலே இந்த வறட்சிப் பணிகளுக்கு நாம் எவ்வளவு செலவழிக்கலாம் என்று வைத்திருப்பது 42.25 கோடி ரூபாய். ஆக முதலிலே வறட்சிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 17 கோடி. திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை கணக்குக் காட்டி ரூ. 42.25 கோடி. ஆக ரூ. 59.43 கோடி. அதாவது கிட்டத்தட்ட ரூ. 60 கோடிக்கு இந்த வறட்சிப் பணி முடிந்துவிடுமென்றால், இந்தச் செலவு முழுவதையும் நாம் தான் தாங்க வேண்டும்.

இந்தத் திட்டச் செலவிற்கு ஒதுக்குகின்ற பணம் இருக்கிறதே, இது வந்த பிறகு, தருகின்ற திட்டச் செலவிலே இதைக் கழித்துக் கொள்ளலாமே தவிர, இதை நாம் தான் ஈடுகட்ட வேண்டும் என்று விட்டுவிடுகிறார்கள். ஆகவே நாம் கழித்துக்கொள்ள வேண்டிய ஒன்று. அந்த 60 கோடி ரூபாயைத் தாண்டிப் போகும் என்றால், உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். நாம் கேட்பது ரூ. 217 கோடி. 200 கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் தருவார்கள் என்ற ஆசையினால் சொல்கிறேன். அப்படி ரூ. 200 கோடி தருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இன்றைய நிலைமைகளை வைத்து, அந்தக் குழுவினர் அறிக்கையை வைத்துப் பார்த்து இதை அனுமதிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்களும், குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க விரைவாகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும், பணிகளை எல்லாம் நாம் எடுக்க வேண்டும் என்ற கருத்தையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதாக இருக்கிறது என்பதை குழுவினரும் உணர்ந்திருக்கிறார்கள். அது வேலை வாய்ப்புக்கும் பயன்பட வேண்டும் என்று பார்க்க வேண்டும். இப்போது வேலைவாய்ப்பு இல்லாமல் பல குடும்பங்கள் இருக்கின்றன. வருமானமே இல்லாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு வேலை வேண்டும், அவர்களுக்கு வருமானம் இருக்க வேண்டும். அந்தக் குடும்பங்களை அவர்கள் சமாளிக்க வேண்டும் என்று ரூபாய் 200 கோடி அனுமதிக்கிறார்கள் என்றால், அதிலே இந்த 60 கோடி ரூபாயைக் கழித்து விடுகிறார்கள். அப்படி கழித்தால், மீதி 140 கோடி ரூபாய் வரும். அந்த 140 கோடி ரூபாயிலே இருக்கின்ற விதிமுறைப்படி, ரூ. 70 கோடிதான் மானியமாகக் கிடைக்கும். ரூ. 70 கோடி கடனாக அளிப்பார்கள். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அவர்கள் ரூ. 200 கோடி அனுமதிக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே நாம் ரூ. 70 கோடி, அந்த ரூபாய் 50 கோடி, ஆக மொத்தம் 130 கோடி ரூபாய் மாநில அரசினுடைய செலவாகத்தான் இருக்கும். மத்திய அரசு உதவி அந்த ரூ. 70 கோடியாகத்தான் அமையும். அந்த வகையிலேதான் நாம் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு விரைவிலே வழங்கும் என்று இருக்கிறோம். விரைவிலே அதைப் பற்றி மத்திய அரசு முடிவு செய்ய வேண்டும். ஏனென்றால் குழுவினரும் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். மத்திய அரசு முடிவு செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்



கிறோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதுபோல இதை விரைவுபடுத்த வேண்டும் என்று கருதுகிறேன். குடிநீர் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது நாங்கள் எல்லாம் அதில் எக்ஸ்பர்ட்கள் இல்லை. அங்கே உள்ள அதிகாரிகள் என்ன யோசனை சொல்கின்றார்களோ அதைத் தான் கேட்க வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 12-50)

யோசனை சொல்பவர்கள் பொறியாளர்கள்தான். அவ்வளவு பேர்களும் நாம் நியமித்தவர்கள்கூட அல்ல. ஏற்கெனவே இருந்த ஆட்சியில் நியமிக்கப்பட்டு, இன்றைக்கு ரிடையர் ஆகும் நிலைமையில் இருக்கிறவர்கள், ரிடையர் ஆகப் போகிறவர்கள். மாண்புமிகு திரு. காமராஜ் அவர்கள் காலத்திலேயிருந்து நியமிக்கப்பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் கூறும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கிறோம். இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல, ஆங்காங்குள்ள அதிகாரிகள் கையில் மட்டுமே விட்டுவிடாமல், உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடும், ஆதரவோடும் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்ன கருத்தின் அடிப்படையிலேதான் ஆங்காங்கே குழுக்களை அமைக்க வேண்டுமென்று வருவாய்த் துறை அமைச்சரவர்கள் எண்ணியிருக்கிறார்கள். சில மாவட்டங்களில் வறட்சி நிலைமையைப் பொறுத்து, அங்கே வரிகளை எல்லாம் நீக்குவதும், அங்கே குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதும், மத்திய காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றுவதும் போன்ற நடவடிக்கைகளை எடுத்து, அறிவித்திருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நிதி அமைச்சர் பதில் சொல்லும்போது வறட்சி நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நிலைமையைப் பற்றி நேற்றைய தினம் நான் குறிப்பாக ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை எடுத்துச் சொன்னேன். ஆளுநர் அவர்கள் உரை மீதான விவாதத்தின் போதும் எடுத்துச் சொன்னேன். வட ஆற்காடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே 3 வட்டங்கள்—ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம்—சேர்க்கப்படவில்லை. இந்த மன்றத்திலே நான் எடுத்துச் சொன்ன பிறகு, அங்கே உள்ள அதிகாரிகள் வேகமாக நடவடிக்கை எடுக்க முனைந்தார்கள். ஆனால்

நேற்றைய தினம் வரை உத்தரவு வரவில்லை என்று சொன்னார்கள். இருக்கிற உண்மையை அறிந்து, பாதிக்கப்பட்ட அந்த வட்டங்களையும் சேர்த்துக்கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்க ஒரு 'நார்ம்' வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்குப்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுக்கும் அறிக்கையை வைத்துக் கொண்டு, அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வகைகளிலே இப்போது 2, 5 வட்டங்களையும் சேர்க்க முனைகிறார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து, முறைப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்கள். சாதாரணமாக மழை பொய்த்துவிட்டது, நீர் நிலைகள் வறண்டு விட்டன என்னும்போது எங்களுடைய பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவியுங்கள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய விருப்பம் ஒரு புறம் இருக்க, அதற்கு நாங்கள் "நார்ம்ஸ்" கையாள வேண்டியிருக்கிறது. வருவாய்த் துறை அதை ஆராய்ந்து, மாவட்டம் மாவட்டமாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதோடு முடிந்து விட்டது என்று பொருளல்ல. நான் முதலிலேயே கூறியபடி, சென்ற ஆண்டு வறட்சி நிலையைப் பார்த்தால், தெரியும். டிசம்பர் வரையில் 6 மாவட்டங்கள் என்று இருந்தது. ஜனவரியில் 8 மாவட்டங்களாகி, பிப்ரவரியில் 9, 10 மாவட்டமாகி, மார்ச்சில் 13, 14 மாவட்டங்களில் வறட்சி நிலை ஏற்பட்டது என்பதைக் கண்டோம். மறுபடியும் சேர்க்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, முறைப்படி சேர்க்கப்பட வேண்டுமென்றால், வருவாய்த் துறை அமைச்சரவர்கள் அதைப்பற்றி கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு நிலைமையைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உணவு நிலையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தில் கிட்டத்தட்ட சரிக்கட்டும் நிலைமைதான் எப்போதும் பார்த்தாலும் இருந்திருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே பர்மா அரிசி தமிழகத்திற்கு வரும். அதற்குப் பிறகு சாதாரண நாட்களில், ரேஷன், பங்கீட்டு முறைகள் இல்லாதபோதுகூட, ஆந்திரா அரிசி சென்னை, வட ஆற்காடு பகுதிகளுக்கு ஏராளமாக வரும். சென்னை வாழ் மக்கள் அத்தனை பேரும் நெல்லூர் அரிசி சாப்பிட்டு, சாப்பிட்டு பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்குத்



தஞ்சாவூர் அரிசி பிடிப்பதில்லை. நெல்லூர் அரிசிதான் வேண்டுமென்று சொல்லும் பழக்கம் இருக்கிறது. எனவே அந்த அரிசி வந்தும், சரிக்கட்டும் அளவிற்குத்தான் இருந்தது. அந்த முறையில், சாதாரண காலத்தில், மழை எல்லாம் பெய்து, ஆந்திரா அரிசியும் வந்து, நம்முடைய குறுவை கேரளாவிற்குப் போய், நம்மிடத்திலே விளைவது நம்மிடத்திலேயே தங்கும்போது, மார்ஜினல் சர்ப்பிளஸ் என்று சொல்லும் அளவிற்கு தமிழகத்தில் நிலைமை வரும். கொஞ்சம் வறட்சி வந்தாலும், மார்ஜினல் டெபிசிட் வந்துவிடும். கடுமையான வறட்சி என்றால், தமிழ் நாட்டில் கடுமையான பாதிப்பு ஏற்படும். 1977-78-ல் தமிழகத்தில் உற்பத்தியான அரிசியின் அளவு 57 லட்சத்து 5 ஆயிரம் டன், 1979-80-ல் 58 லட்சம் டன், 1981-82லே 55 லட்சத்து 78 ஆயிரம் டன், ஆனால் 1982-83லே விளைவு மதிப்பீடு 33 லட்சம் டன்கள்தான். கிட்டத்தட்ட 60 60 லட்சம் டன்கள் விளைகின்ற நிலை இருந்தால், நாம் இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய நிலை இராது. பருவ மழை பொய்த்தாலும், வேறு பல நிலைமைகளாலும் காவிரி ஆற்றுப் பிரச்சினை ஒரு பக்கம் இருப்பதாலும், விளைவு மதிப்பீடு 33 லட்சம் டன்கள் என்று ஆனால் மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி பெற வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறோம். மாண்புமிகு முதல்வரவர்கள்கூட ஆளுநர் அவர்கள் உரை விவாதத்தில் பதிலுரை ஆற்றும்போது, தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். மீண்டும் அதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் வசதியாக இருக்கும்போது, எங்கள் மாநிலத்தை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், நீங்கள் தர வேண்டியதில்லை என்று மத்திய அரசிடம் எந்தச் சமயத்திலும் சொல்லவில்லை, எழுதவில்லை. அப்படிப்பட்ட தவறான கருத்து பரப்பப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் மிதப்பட்ட சூழ்நிலையில், தமிழகத்தின் தேவை நிறைவேற்றப்பட்ட பிறகு, கொள்முதல் செய்ததில் மிதம் இருந்தால், மத்தியத் தொகுப்புக்குக் கொடுக்கும் நிலையை நாம் வைத்திருக்கிறோம். வளம் மிக்க பகுதியிலிருந்து பெற்று, வறட்சிப் பகுதிகளுக்குக் கொடுக்கும் முறை இல்லாவிட்டால், நாம் மிகவும் கஷ்டப்படுவோம். அதை மிகமிக ஆதரிக்கிறோம். நாம் பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் வைத்திருக்கிறோம். குவிண்டால் 122 ரூபாய்க்குக் கொள்முதல் செய்வதனால்தான், ஓரளவிற்குக் குறைத்துக் கொடுக்க முடிகிறது. வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இந்தியா முழுவதும் குவிண்டால் 122 ரூபாய் என்று ஆக்கியதால், ஒரே நிலைமை ஏற்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் 30 லட்சம் டன் விளைகிறது. ஆனால் அதைப் பயன்படுத்துகிறவர்கள் அங்கே யாரும் கிடையாது. அங்கே கோதுமைதான் பயன்படுத்துவார்கள். எனவே அங்கே நெல் கமர்சியல் கிராப். பற்றாக்குறையாக உள்ள மேற்கு வங்கம், குஜராத், கேரளம், தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டுமென்றால், அவர்களிடம், 122

ரூபாய்க்குக் கொள்முதல் செய்து, இந்தத் தொகுப்பில் வைத்து, கொடுப்பதால் தான் நமக்குக் குறைந்த விலையில் கிடைக்கிறது. மத்தியத் தொகுப்பு, மாநிலத் தொகுப்பு முறை இல்லாவிட்டால், வியாபார நோக்கின் அடிப்படையில் பஞ்சாப் மாநிலம் விற்பது என்று முடிவு செய்தால், குவிண்டால் 160 ரூபாய், 170 ரூபாய் என்று விற்பார்கள். அரிசியைப் பயன்படுத்தும் தமிழகத்தில் 122 ரூபாய் குவிண்டால், அதைப் பயன்படுத்தும் ஆந்திராவில் குவிண்டால் 122 ரூபாய், பயன்படுத்தாத பஞ்சாபிலும் 122 ரூபாய். அவர்களுக்கு அத்தனையும் லாபம்தான். எனவே இந்த சிஸ்டம் வரவேற்கத்தக்க சிஸ்டம் என்பதால் தான், ஒத்துழைப்பு தந்தோம். மீண்டும் ஒன்றை நினைவு படுத்த விரும்பு கிறேன். இதிலே தவறு எதுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

1971-72ல் 50 ஆயிரம் டன் மத்தியத் தொகுப்புக்கு தமிழக அரசு தந்திருக் கிறது. 1972-73ல் 1 லட்சத்து 11 ஆயிரம் டன் தந்திருக்கிறோம். 1973-74ல் தர முடியவில்லை. காரணம் அப்போது வறட்சி ஏற்பட்டு விட்டது. நாம் பெறும் நிலையில்தான் இருந்தோம். தரும் நிலையில் இல்லை. 1974-75ல் கொடுக்கும் நிலையில் இல்லை. 1975-76-ல் வளம் பெருகியதால், 2 லட்சத்து 93 ஆயிரம் டன் கொடுக்கும் நிலையில் இருந்தோம். 1976-77ல் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறுகிறது. அப்போதுகூட மத்திய அரசுத் தொகுப்புக்கு கொடுக்கும் நிலையில்லை. நாம்தான் கொடுக்காத பாவிகள் என்றாலும், குடியரசுத் தலைவர் ஆட்சியில் கொடுக்கக்கூடாதா என்றால், இருக்கிறவர்களை பொறுத்து அல்ல, இருக்கிற சூழ்நிலைகளை வைத்துக் கொடுக்கவில்லை. 1977-78ல் கொடுக்கவில்லை. 1978-79ல் 2 லட்சம் டன்கள் ஒதுக்கீடு செய்ய முடிந்தது. அதற்குப் பின் தொடர்ந்து இல்லை. ஆனால் இப்போதுகூட இன்னொரு கருத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டும்தான் கொள்முதல் செய்யும் அதிகாரம் படைத்தது அல்ல. இந்திய நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் இந்த மாநிலத்தில் கொள்முதல் செய்யும் உரிமை இருக்கிறது. அவர்கள் 1981-82லே 11 ஆயிரம் டன் அரிசியைக் கொள்முதல் செய்தார்கள். அதற்கு அடுத்த ஆண்டு நீங்கள் கொள்முதல் செய்யலாம் என்று சொன்னோம். நாங்கள் ஒரு பக்கம் செய்கிறோம், நீங்கள் ஒரு பக்கம் செய்யுங்கள் என்றோம். அவர்களைத் தடுக்கவே இல்லை. ஆனால் அவர்கள் கொள்முதல் செய்ய



வில்லை. நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது. 1 கோடியே 17 லட்சம் குடும்ப அட்டைகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு அட்டைக்கு 28 கிலோ போட்டுக் கொண்டு வந்தோம். அரிசி இருப்பு குறைந்ததால், 24 கிலோவாகி, இப்போது 20 கிலோ என்ற அளவிற்கு இருப்பதை பங்கிட்டுத் தர வேண்டுமென்று, அப்படிக் கொடுக் கிறோம். 1 கோடியே 17 லட்சம் கார்டுகளுக்கும் 20 கிலோ வாங்குவது என்றால், அவ்வளவு பேர்களும் ரேஷன் கடைகளுக்கு வருவது என்றால், நமக்கு மாதம் ஒன்றுக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் டன் விநியோகத்திற்கு வேண்டும்.

(பிற்பகல் 1-00)

ஆனால் 90 ஆயிரம் டன் நாம் தருகிறோம் என்றால், பல்வேறு இடங்களிலே குறிப்பாக தஞ்சை போன்ற மாவட்டங்களிலே கூலி வேலை செய்பவர்கள் கூலியை நெல்லாக வாங்கி விடுகிற காரணத்தால், அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுபோல் நிலச்சுவான்தாரர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட காரணங்களால் 90 ஆயிரம் டன் அல்லது 95 ஆயிரம் டன் என்கிற நிலைக்கு நாம் வந்து விடு கிறோம்.

அடுத்து, நமக்கு 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் மாதந்தோறும் தேவை என்று கேட்க வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டது. 1982 மே மாதம் வரை மாதந்தோறும் 30, 35, 40, 50, 55 ஆயிரம் டன் என்கிற அளவில் நாம் கேட்காமலேயே தந்து கொண்டிருந்தார்கள். இன்னும் சில மாதங்களில் 15 ஆயிரம், 20 ஆயிரம் என்றும் தந்திருக்கிறார்கள். அப்படித் தருகிறபோது குறைவாகத் தந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் கொடுக்கா ததை அடுத்த மாதத்தில் பழைய பாக்கி என்கிற வகையில் கேட்கக் கூடாது. அது அந்தந்த மாதத்தோடன் முடிந்து விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் சென்ற ஆண்டு மே மாதம் வரை கொடுத்து வந்தது மாதிரி இந்த ஆண்டும் கொடுத்திருந்தால், நமக்குப் பற்றாக்குறை இருந்தாலும் கூட, வறட்சி இருந்தாலும் கூட, அதை வைத்து ஓரளவு நாம் சமாளித்திருக்க லாம். ஆனால் சென்ற ஆண்டு மே மாதத்திலிருந்து அவர்கள் நமக்குத் தர வில்லை. தவிரவும் நமக்குக் கடுமையான வறட்சி வந்ததால், நாமே அவர் களிடம் கேட்க வேண்டிய நிலை வந்தது. இப்போது வளம் மிக்க மாநிலங் களிலிருந்து லெவி மூலம் கொள்முதல் செய்து வளமில்லாத மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற உணவு அமைச்சர்கள் மாநாட்டில் கூட, மேற்கு வங்காள உணவு

அமைச்சர் கூறும்போது, அவர்களுக்கு 3¾ லட்சம் டன் மாதந்தோறும் தேவைப்
படுகின்றது என்றும், ஆனால் 1½ லட்சம் டன் வழங்கப்படுவதால் அதை
வைத்துக்கொண்டு பங்கீடு செய்வது கஷ்டமாக இருக்கிறது என்றும் குறிப்
பிட்டார். அதுபோல் கேரளாவிற்கு மாதந்தோறும் 2 லட்சம் டன் தேவை
என்றும், ஆனால் 1 லட்சம் டன் தரப்படுவதாகவும் குறைபட்டுக் கொண்டார்.
அதுபோல் நேற்றைக்கு மகாராஷ்டிரா முதலமைச்சர் பேசியது இன்றைக்கு
பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதாவது "தமிழக முதலமைச்சர் மாண்பு
மிகு திரு. எம். ஜி. ஆர். மாதிரி நாங்களும் உண்ணாவிரதம் இருந்து கொண்டு
மத்திய அரசிடம் கேட்கத் தயார்" என்று சொல்லியிருக்கிறார். (சிரிப்பு).
ஆகவே இந்தியா முழுவதும் ஒருவகையில் இன்றைக்கு தட்டுப்பாடு இருக்கிறது
என்பதை நாம் அறிகிறோம். இருக்கிற சூழ்நிலைப்படி 44 லட்சம் டன் அல்லது
48 லட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்கிற ஒரு கணக்கைச்
சொல்கிறார்கள். நாம் மட்டும் தான் 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம்
டன் கோதுமையும் மாதந்தோறும் கேட்கிறோமா என்றால் இல்லை. எல்லோ
ரும் கேட்கிறார்கள். ஆனால் ஒரு நியாயம் வேண்டும். அதுதான் எங்களுடைய
நிலைமை. இதிலே பிடிவாதம் எதுவும் கிடையாது. கேட்கிற நிலைமை
என்று வருகிறபோது, ஒரு மாநிலம் சற்று கூட்டி கேட்கலாம். அதற்காகத்
தான் ஆய்வுக் குழுக்களை இவ்வாறு கேட்கிற மாநிலங்களுக்கு மத்திய அரசு
அனுப்பி அங்குள்ள உண்மை நிலையைக் கண்டறிந்து, உண்மையிலே இந்த
மாநிலத்திற்கு இவ்வளவு தேவை என்று சொல்லக்கூடிய நிலைமை வர வேண்டும்
உதாரணமாக 80 ஆயிரம் டன் கேட்பவர்களுக்கு அவர்களின் உண்மையான
தேவை 60 ஆயிரம் டன் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்க வேண்டும்.
அதேபோல மேற்கு வங்காளம் 3½ லட்சம் டன் கேட்கிறது என்றால், அவர்
களுடைய உண்மை நிலையைக் கண்டறிந்து 3 லட்சம் கொடுக்கப்படும்
நிலைமை வரவேண்டும். அந்த வகையில் மத்திய அரசிடம் கேட்கப்படுகிறது
என்று சொன்னால், அவர்கள் சென்ட் பெர்சன்ட் கொடுக்க முடியவில்லை
யென்றால் கூட, ஒரு 80 பெர்சன்ட் கொடுக்கக்கூடிய நிலைமை வர வேண்டும்.
அந்த வகையில் இருக்கின்ற அளவிற்கு ஏற்ப மாதந்தோறும் தமிழ் நாட்டுக்கு
கேட்டதில் இத்தனை பெர்சன்ட் கிடைக்கும், மேற்கு வங்காளத்திற்கு
இத்தனை பெர்சன்ட் கிடைக்கும், கேரளாவிற்கு இத்தனை பெர்சன்ட் கிடைக்
கும் என்கிற அளவில் இதனை நிர்ணயிக்கலாம். இந்தக் கருத்தையும்
நாங்கள் மத்திய அரசிடம் சொல்லிவிட்டோம். சங்கடங்கள் இருப்பதால்
தான், இதைச் சொல்கிறோம்.





இன்றைக்கு 5 ஆயிரம் டன்தான் என்று சொல்லுகிறார்கள். அதுவும்
எப்ரல் திங்களுக்கான கோட்டா என்று எழுதி அனுப்புகிறார்கள். ஆகவே
அவர்கள் தந்திருப்பது கூட மார்ச் மாதத்திற்கான கோட்டா அல்ல, எப்ரல்
மாதத்திற்கானது. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால்,
மத்திய அரசு மே 1982-க்கு முன்னால் நாக்குத் தந்து கொண்டிருந்ததை
தொடர்ந்து தந்துகொண்டிருந்தால், நாம் நூற்றுக்கு நூறு லெவி கொள்முதல்
செய்ய வேண்டிய நிலை வந்திருக்காது. நன்றாக விளையக்கூடிய தஞ்சை
போன்ற மாவட்டங்களில் நாம் 50 பெர்சன்ட் லெவி என்று நிர்ணயித்து கொள்
முதல் செய்திருந்தோமானால், மீதமுள்ள 50 பெர்சன்ட் நெல்லும் வியாபாரிகள்
மூலம் பற்றாக்குறை மாவட்டங்களுக்குச் சென்றிருக்கும். ஆனால் நூற்றுக்கு
நூறு அங்கு விளைந்த நெல் அனைத்தையும் நாம் நுகர்பொருள் கழகத்தின்
மூலமாகக் கொள்முதல் செய்துவிட்ட காரணத்தாலும், காவிரி டெல்டா, திருச்சி
யில் விளையக்கூடிய தாலுகாக்கள் போன்ற இடங்களில் உள்ள நெல்லையும் நாம்
கொள்முதல் செய்த காரணத்தாலும், அங்கிருந்து சேலம் போன்ற மாவட்டங்
களுக்கு நெல் தாராளமாகப் போக முடியாத நிலை ஏற்பட்டது. அதனால்
தான் அரிசி விலை 4½ ரூபாய்க்கு ஏறிவிட்டது. வெளிச்சந்தையில் நெல்
செல்லாமல் இருந்ததுதான் இந்த விலை உயர்வுக்குக் காரணம். ஆந்திராவி
லிருந்து நம்முடைய அதிகாரிகள் அங்கிருக்கும் நுகர் பொருள் கழகம் மூலம்
கொள்முதல் செய்வதற்கு அனுமதி கேட்டோம். அதனையும் மறுத்து விட்டார்
கள். இன்றுள்ள நிலையில் நாம் அங்குள்ள வியாபாரிகளிடமிருந்து வெளி
மார்க்கெட் விலையில்தான் வாங்க முடியும். தவிரவும் ஆந்திராவில் கூட
இப்போது மேற்கொண்டும் 25 பெர்சன்ட் லெவியைக் கூட்டி விட்டார்கள். 122
ரூபாய்க்கு அவர்கள் லெவி மூலம் நெல்லை கொள்முதல் செய்கிறார்கள். நாம்
இப்போது வாங்கச் சென்றால் கூட, வியாபாரிகள் அதிக அளவில் நெல்லைக்
குறைந்த விலைக்கு லெவி கொடுத்துவிட்ட காரணத்தால், அந்த நஷ்டத்தை
ஈடுகட்ட அதிக விலைக்கு நெல்லை விற்கின்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்
கிறது. இதனையும் நாம் சமாளித்தாக வேண்டும். இதற்கெல்லாம் என்ன
வழிவகை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் கூறி பத்திரிகையில்
ஒரு செய்தி வந்திருக்கிறது. இதை நான் குறிப்பிட காரணம் இருக்கிறது.
யாரும் அவரைப் போல சொல்வது எளிது. ஆனால் உண்மை நிலைமை என்ன
என்று பார்க்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் ஏற்கெனவே சம்பந்தப்
பட்டவர்களைச் சென்று பார்த்திருக்கிறார்கள். மத்திய வேளாண்மை அமைச்
சரையும் இன்னும் சம்பந்தப்பட்டவர்களையும் நானும் போய் பார்த்தேன். திரு.
பகவத் ஜா ஆசாத் அவர்கள் ஏற்கெனவே சிவில் சப்ளைஸ் அமைச்சராக இருந்

தவர், ஆனால் அரிசியைப் பொறுத்தவரை, அதனைக் கொடுக்கின்ற அதிகாரம் வேளாண்மைத் துறை அமைச்சரிடம் தான் இருக்கிறது. சிவில் சப்ளைஸ் அமைச்சர்களைக் கூட்டியிருந்த மாநாட்டுக்கு நானும் எண்ணெய், கோதுமை, அரிசி எல்லாம் கேட்கலாம், கிடைக்கும் என்று தான் போனேன். ஆனால் அங்கு போனபிறகு தான் நிலைமை புரிந்தது. அவர் வேடிக்கையாக ஒன்றைச் சொன்னார். "நான் பெயருக்குத் தான் சிவில் சப்ளைஸ் அமைச்சரே தவிர, இரும்பு வேண்டுமென்றால் ஒரு அமைச்சர் இருக்கிறார். கோதுமை வேண்டுமென்றால் வேளாண்மை அமைச்சரைக் கேட்க வேண்டும். சிமெண்ட் வேண்டுமென்றால் அதற்கென்று இருக்கிற அமைச்சரைக் கேட்க வேண்டும். கெரோசின் வேண்டுமென்றால் அதற்கென்று இருக்கிற அமைச்சரிடம் கேட்க வேண்டும். வனஸ்பதி வேண்டுமானால் மட்டும்தான் அதற்கான அதிகாரம் என்னிடம் இருக்கிறது" என்று அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார். சுருங்கக் கூறின், அவருடைய மனக் குறையை எங்களிடத்தில் சொல்லி முடித்து விட்டார். அந்த மாநாடு முடிந்தவுடன் சென்று வாருங்கள் என்று சொன்னார்கள். இங்கே வந்து சேர்ந்தேன். நான் அப்படிச் சென்று வந்தபோது ஒன்றைச் சொல்லிவிட்டு வந்தேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் போய் உட்கார்ந்து இந்தப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்க்கலாமே என்று குறிப்பிட்டேன். இன்னும் பல்வேறு நல்ல ஆலோசனைகளை எடுத்துக் கூறியிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உணவு அமைச்சரும், நிதியமைச்சருமான டாக்டர் நாவலர் அவர்கள் மிக விளக்கமாக உணவு நிலைமை பற்றி இங்கே விளக்கம் அளித்தார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு அது குறித்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அரசு நமக்குத் தரப்போகிறதா இல்லையா என்கிற சந்தேகம் இன்னமும் இருக்கிற காரணத்தால், இன்னும் குறைந்தது 4 மாதமாவது உணவுப் பிரச்சினையை நாமே சரிக்கட்ட வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் எவ்வளவு தர இருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும்படி சொல்ல வேண்டும். அவர்கள் தருவது எவ்வளவு என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டால், எஞ்சிய தேவையை நாம் கொரியா போன்ற நாடுகளிலிருந்து நம்முடைய நிதியிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பார்களா என்பதை அறிய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு செயல்பாட்டுக்கு வர இந்த அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?



ப் ச் ச்



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள கருத்தையும் தெரிவித்து விட்டேன். அவர்களிடம் இல்லாவிட்டாலும் கூட, தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து—1974-75-ஆம் ஆண்டில் நாம் இறக்குமதி செய்ய அனுமதி தந்தது போல்—வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி தர வேண்டுமென்று தெரிவித்துள்ளேன். நாமே நிலைமையைச் செம்மைப்படுத்த முயன்றால், அதுவும் முடியவில்லை. அவர்களாலும் செம்மைப்படுத்த முடியவில்லை. அதற்கான அனுமதியைக் கேட்டால், அதையும் தரவில்லை. இந்நிலையில் வேறு மாநிலங்களிலிருந்து குறைந்த விலையில் வாங்குகின்ற சூழ்நிலையும் இப்போது இல்லை. இப்படிப்பட்ட நிலையில் வேறு மாநிலங்களிலிருந்து வாங்கினால் கூட, அதிக விலை கொடுத்து வாங்கி நஷ்டத்தைக் கட்டுவது தவிர வேறு வழியும் இல்லை. நாமே இதனைச் சரிக்கட்ட வேண்டுமென்கிற முறையில் ஜனவரி 10ஆம் தேதி மத்திய வேளாண்மை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் கடிதத்தின் வாயிலாக ஒன்றைச் சொன்னார்கள். அதில் அவர்கள் "நலிந்த மக்களுக்கு மட்டும் இருப்பதைப் பங்கீடு செய்யுங்கள்" என்று ஆலோசனை சொன்னார்கள். அந்த யோசனையின்படி நலிந்த பிரிவினர் என்று வரும்போது, ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ளவர்கள் என்று நாம் ஆக்கியிருக்கிறோம். ஏன் அப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

"உண்டெனில் கொடுக்கலாம்
திருவரங்க கோமானே"

என்று ஔவையார் பாடியது போல, நம்மிடம் உண்டு என்றால், எல்லோருக்கும் பங்கு கொடுக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-10)

இல்லாவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக பெருமாள் கோயிலில் சுண்டல் கொடுப்பது போல கொடுக்கலாம். ஒன்று, ரேஷன் அளவைக் குறைக்க வேண்டும். அல்லது இப்போது திரு. என். டி. ஆர். அவர்கள் 500 ரூபாய்க்குக் கீழே வருமானம் இருப்பவர்களுக்கு 2 ரூபாய்க்கு அரிசி போடும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் ஆயிரம் ரூபாய் என்று வைத்திருக்கிறோம். 20 கிலோ தரவேண்டும் என்ற திட்டத்தை மாற்றியிருக்கிறோம். இப்போது சில இடங்களிலே குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. 15 நாட்களுக்கு ஒருமுறை 10 கிலோ என்றுகூட கொடுக்கிறோம்.

முன்பு 20 கிலோவும் ஒரே தடவையாகக் கூட கொடுத்தோம். தஞ்சாவூரிலே கொள்முதல் பண்ணிப் பண்ணி அரவை ஆலையிலே அரவை செய்து செய்து அவ்வப்போது மாவட்டங்களுக்கு அரிசி கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருப்பதால்தான், எல்லாவற்றையும் ஒரே சமயத்திலே கொடுக்காமல் 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது 7 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவிலே கொடுக்கிறோம். ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போது, நாம் கொடுக்கும் அளவைக் குறைக்கவில்லை. அளவும் குறைந்துவிட்டது என்று புகார் வந்திருக்கிறது. அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தஞ்சாவூரிலே அரிசியை நேரடியாகக் கொள்முதல் செய்கின்றபோது, கொள்முதல் விலைக்கு மேலே 15 ரூபாய் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்துக்கூட விவசாயிகள் தரும் நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த 15 ரூபாயை 30 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால், இன்னும் அதிக அளவிலே அரிசி கொள்முதல் செய்ய வாய்ப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் சூழ்நிலை இருந்தது. அதற்குப் பிறகு வியாபாரிகள் வாங்கக்கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்திய தால், அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு கட்டம் வந்தால், அதுபற்றி யோசித்து முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த நுழைவு வரியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் இங்கே அதுபற்றி அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஏற்படுகின்ற சங்கடங்களைப் பற்றிச் சொன்னார்கள். மற்றவர்களும் அவைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆனாலும்கூட, இருக்கிற நிலைமைகளைச் சமாளிக்க வேண்டுமென்றால், இந்த வரியைப் போட்டேதான் தீர வேண்டும் என்ற எண்ணத்திலே போடவில்லை. அவ்வாறு போடுவதிலே எனக்கு மகிழ்ச்சியில்லை. வரி இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருந்தால், நிதியமைச்சர் என்ற முறையிலே எனக்குப் புகழ், பெருமை, பாராட்டு. ஆனால் வரி போடாத காலத்திலே ஏன் வரி போடவில்லை என்று கேட்டவர்களும் உண்டு. ஏன் பற்றாக்குறை இருக்கிறது என்று கேட்டவர்களும் உண்டு. செலவினை வரவு அதை ஈடுகட்ட வேண்டிய அவசியம் வரும். அதற்கு பல்வேறு யோசனைகளைச் சொல்லலாம். இப்போது 144 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்குச் செலவாகிறதே, அதை நிறுத்தலாமே என்றுகூட





யோசனை சொல்லலாம். அந்த 144 கோடி ரூபாயும் அப்படியே செலவாகாமல் இருந்தால், இப்போது வரி போட வேண்டிய தேவையே இல்லையே என்றுகூட சொல்லலாம். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு கொள்கையாக அதை வைத்து இந்த அரசு நிறைவேற்றுகிறது. அதனால்தான் நான் இன்றைக்கு அந்த அளவுக்குத் தொகை அதற்கு ஒதுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து, ரூ. 183 கோடிக்கு பற்றாக்குறை வரும்போது நாம் ஓரளவுக்கு வரி போட்டு சமாளித்து, இப்போது திட்டத்தட்ட 139 கோடி சில்லறை ரூபாய் பற்றாக்குறையாக இருக்கும் தன்மையைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல், இங்கே பல கருத்துக்களையும் சொன்னார்கள். இருக்கிற உண்மை நிலைகளை நான் சொல்கிறேன். இது மக்கிரமமான வரி, அநியாயமான வரி, அநாகரிகமான வரி, பழங்கால வரி, பிற்போக்கான வரி, மற்றவர்கள் கைவிட்டுவிட்ட வரி, கைவிட வற்புறுத்தப்படும் வரி. கைவிட வேண்டும் என்று எண்ணுகின்ற வரி என்றெல்லாம் கூட சொன்னார்கள். ஏழாவது நிதிக் குழுவிற்கு அறிக்கை அனுப்பும்போது சொல்லியிருக்கிறோம். கூடுமானவரையில் இந்த வரிகளைப் போட வேண்டாம் என்ற அடிப்படையிலேதான் 1980-லே யோசித்து பின்னர் விட்டு, 1981-82-லே மற்றும் 1982-83-லே கூட வேண்டாம் என்று விட்டேன். அந்த அளவிலே அப்போது ஏழாவது நிதிக் குழுவிற்குக் கொடுத்திருக்கும் அறிக்கையிலே கூட

In this connection we may also point out that unlike many other States, octroi is not levied in Tamil Nadu. This revenue is a significant source to other States such as Maharashtra, Gujarat, West Bengal, Madhya Pradesh, Karnataka and Uttar Pradesh. It is against this background that we would urge the Finance Commission to give special weightage to urban population in the Scheme of devolution of shareable taxes and duties.

என்ற அளவுக்கு ஏழாவது நிதிக்குழுவிலே கூட நாம் இதற்குப் போடவில்லை என்ற காரணத்தினாலே, இதன் காரணமாக வரும் வருவாய்க்குப் பதிலாக மத்திய அரசு நமக்கு ஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் சொன்னோம். ஆனால், இந்தத் தன்மையைப் பரிசீலிக்கும்போது, ஜார் கமிட்டி பரிந்துரை செய்ததைப் பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜார் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்று கேட்டால்

The Jha Committee recommended that octroi entry tax should be abolished in States and that alternative source of revenue would have to be found for the replacement.

ஆகவே, 'ஆக்ட்ராய்' என்று சொல்லப்படும் வரி ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் அது எவ்வளவு இழப்பு ஏற்படுத்துகிறதோ அதை ஈடுகட்டும் அளவுக்கு வேறு சில நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

அதற்குப் பிறகு இந்தப் பரிந்துரையின் அடிப்படையில், ஜனதா ஆட்சி இருந்த போது, அப்போது நிதியமைச்சராக இருந்த திரு. பட்டேல் அவர்கள் இதுபற்றி கொள்கை விளக்கமாக வரவு-செலவுத் திட்ட உரையாற்றும்போது 20—2—1978லே குறிப்பிட்டார்கள்.

Octroi revenues are at present going to the local authority and undersandably they will seek from the State Government reimbursement for the loss of revenue and in turn the State Government will no doubt claim compensation from the Centre.

என்று திரு. எச். எம். பட்டேல் அவர்கள் சொன்னார்கள். 'ஆக்ட்ராய்' வரி வருமானங்கள் இப்போது உள்ளூர் மன்றங்களுக்குப் போகின்றன. அவை களால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு மாநிலங்களுக்கு ஈடு கட்டும் வகையில் தொகை கொடுக்க வேண்டும் என்ற நிலை உணரப்பட வேண்டிய ஒன்று. ஐயத் திற்கு இடமில்லாமல் இழப்பை ஈடுசெய்ய மத்திய அரசிலிருந்து மாநில அரசு கள் ஈட்டுத்தொகை எதிர்பார்ப்பதும் உணர வேண்டிய ஒன்று என்று சொன் னார்கள். அதின் அடிப்படையிலே செயல்படும் முன்பு, ஜனதா அரசு போய், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. அதற்குப் பிறகு மாநாடு கூடும்போது, எல்லா மாநில முதலமைச்சர்களும் சேர்ந்துகொண்டு முடிவு எடுத்தார்கள்.

On the basis of the suggestion, a meeting of the Chief Ministers was held.

அந்தக் கூட்டத்தில் அனைத்து முதலமைச்சர்களும் சேர்ந்துகொண்டு எடுத்த முடிவு என்னவென்றால்,

Then all the Chief Ministers stated that the Central Government should compensate the State Government for the loss of revenue due to the abolition of Octroi

இந்த வகையிலே இன்ன இன்ன மாவட்டம், மாநிலம் என்று இல்லாமல் மாநிலத் தின் நிதியை நிர்வகிக்கும் முறையில் எல்லா நிதி அமைச்சர்களும், முதலமைச்சர் கள் என்ற முறையில் எல்லா முதலமைச்சர்களும் ஒன்று சேர்ந்து "இதை ஒழிக்க நாங்கள் தயார், ஆனால் இதற்கு மத்திய அரசு இழப்பீட்டுத் தொகை தரவேண்டும்" என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. வெங்கடராமன் அவர்கள் நிதியமைச்சராக இருந்தபோது, அவர் அதுபற்றிக் குறிப்பிடும் போது

There is no point in the suggestion that the Centre should compensate the State for the abolition

என்று சொன்னார். ஆகவே, நுழைவு வரியை நீக்கும் வகையில் மாநில அரசு களுக்கு மத்திய அரசு இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டும் என்று சொல்



1983 மார்ச் 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வதில் பொருள் இல்லை என்று சொல்லி முற்றுப்புள்ளி வைத்தார். அதற்குப் பிறகு Therefore, the proposal for abolition of Octroi was dropped and the State which levied Octroi continued to levy Octroi.

என்ற அளவிலே யார் யார் 'ஆக்ட்ராய்' தொடர்ந்து வைத்துக்கொண்டிருக் கிறார்களோ அதை நீக்க வேண்டியது இல்லை என்றும் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் எல்லோரும் சேர்ந்து முடிவு எடுத்ததன் அடிப் படையில் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

Thiru A. R. DAMODARAN: Sir, what is the relevance of this argument in so far as Tamil Nadu is concerned? While I appreciate the eloquence of the Hon. the Finance Minister, what is the point in quoting the argument about a tax that has never been levied in Tamil Nadu and in quoting the argument of the Union Finance Minister in his reply to the Finance Minister of other States, who are asked to reduce the octroi? There is absolutely no relevance here. The Toll gates were given up even in 1933. I do not see the relevance of quoting what the Union Finance Minister stated to the other States.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 12 மாநிலங்கள் எப்படி 'ஆக்ட்ராய்' போட்டு, என்ட்ரன்ஸ் டாக்ஸ் போட்டு நிர்வகிக்கிறார்களோ அந்த நிலைமைக்குச் சென்று தமிழகத்திற்கும் நிதி வர வேண்டும், எனக்கு நிதி வேண்டியிருக்கிறது என்ற காரணத்திற்காகச் செய்ய வேண்டிய நிலை வந்தது.

Thiru A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has realised Rs. 295 crores as excise in the past. The Additional Surcharge and Surcharge on Sales Tax have already been introduced in 1970-71. What we are asking for is: Why don't you raise the surcharge? Why do you introduce this wretched new tax as Entry Tax?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனக்கு நிதி வேண்டும் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியின் சார்பிலே சட்டமன்றத்திலே மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நானும் எடுத்துச் சொன்னேன். நம்முடைய மாண்புமிகு செய்தி அமைச்சர் அவர்கள் நினைத்தால், இதற்கு வழி காணலாம். நாம் ஏற் கெனவே மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறோம். ப்ளெண்டிங் யூனிட், ஹோல் சேல் அர்ராக் போன்றவைகளில் 10 அல்லது 15 குடும்பங்கள் இன்றைய தினம் 25 அல்லது 30 கோடி ரூபாய் இந்த மாநிலத்திலே சம்பாதிக்கிறார்கள். இந்தப் பணம் முழுவதும் அவர்கள் கஜானாவுக்குப் போவதற்குப் பதிலாக நம்முடைய

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1983 மார்ச் 15

அரசாங்கக் கஜானாவிற்கு வரும் அளவுக்கு கூட்டுறவுத் துறை மூலம் அரசு பரிசீலிக்கலாம். இதுவரை பரிசீலிக்கவில்லை என்றால், இப்படி அரசு செய்ய பரிசீலிக்குமா ?

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையையும், மாண்புமிகு பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய யோசனையையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறிய யோசனையையும் தற்போது மிதி யிருக்கிற பற்றாக்குறையைப் போக்குவதற்காக சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், முதலிலிருந்தே நாம் இந்த வரியைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை. ஆனால் இப்போது அப்படிப்பட்ட ஒரு கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது இத் தகைய வரி மற்ற மாநிலங்களில் அநியாயம் என்று கருதப்படவில்லை. கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சிகள் ஆளுகிற மாநிலங்களில் இது அநியாய மாகக் கருதப்படாதபோது, நாம் மட்டும் இதை அநியாயம் என்று சொல்லிப் போடாமல் இருக்க வேண்டாம் என்றுதான் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, ஆக்ட்ராய்க்கு பதிலாக ஒரு காம்பன்சேஷன் தருவது என்று மத்திய அரசு எப்போதாவது ஒரு முடிவெடுத்து, யார் யார் இத்தகைய ஆக்ட் ராய் வரியை போடுகிறார்களோ அவர்களுக்கு நாங்கள் காம்பன்சேஷன் தருகிறோம், அந்த மாநிலங்கள் இந்த வரிவிதிப்பைக் கைவிட வேண்டும் என்று சொல்லுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அதன் அடிப்படையில் எல்லா மாநிலங் களும் இந்த ஆக்ட்ராய் வரியை ஒழிக்கிறபோது, நாமும் சேர்ந்து ஒழித்து விடலாம். அதன் காரணமாக நமக்கும் வருவாய் வரும். இப்போது அந்த வரியை நாம் விதிக்காமல் காம்பன்சேஷன் மட்டும் கேட்டால், அப்போது மத்திய அரசு நம்மைப் பார்த்து, "நீங்கள்தான் ஆக்ட்ராய் வரியே போடவில்லையே, எண்ட்ரி டாக்ஸ் போடவில்லையே, உங்களுக்கு ஏன் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும்?" என்று கேட்கலாம். யார் அத்தகைய வரியைப் போட்டிருந்தார் களோ அவர்களுக்கு மட்டும்தான் காம்பன்சேஷன் என்று சொல்லுகிற நிலை வரலாம் . . .



1983 மார்ச் 15]

* திரு. க. இராமமூர்த்தி : மற்ற மாநிலங்கள் எல்லாம் அதிகமான அளவுக்கு ஓவர்டிராப்ட் வாங்கும்போது, நமது மாநிலம் மட்டும் ஓவர்டிராப்ட் வாங்குவதில்லை. அப்படி அதிகமான ஓவர்டிராப்ட் வாங்கிய மாநிலங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு பின்னாலே அந்தத் தொகைகளையெல்லாம் தள்ளி விட்டது. இதன் காரணமாக நாமும் ஓவர்டிராப்ட் வாங்கினால், பின்னாலே ஒருவேளை மத்திய அரசு நம்முடைய ஓவர்டிராப்ட் கடனையும் தள்ளுபடி செய்யும் என்ற எண்ணத்தில் நாம் வாங்க முயல்வது என்பது முறையா? அதைப் போலவே பின்னாலே மத்திய அரசு இந்த வரியைத் தள்ளு படி செய்துவிட்டு, அதற்கான காம்பன்சேஷன் கொடுக்கலாம் என்று எண்ணிக் கொண்டு இப்போது இந்த வரியை மக்கள் மீது திணித்து வசூலிக்கலாம் என்று சொல்லுவது எந்த வகையிலும் நியாயமாக இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓவர்டிராப்ட் வாங்காமல் நாம் எப்படிச் சமாளிக்கிறோம் என்பது வேறு விஷயம். இந்த வரியைப் பொறுத்தவரையில், மற்றவர்கள் நியாயம் என்று கருதித்தான் போட்டிருக்கிறார் கள். மற்ற மாநிலங்களில் போட்டிருப்பதை நியாயம் என்று சொல்லிவிட்டு நாம் போட்டால் மட்டும் அதை அநியாயம் என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்க முடியும் ? 7—3—1983-ல் 'டைம்ஸ் ஆப் இண்டியா' என்ற பத்திரிகை யில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. அதில்

*"Octroi Levy:—*

*The other source that the Municipal Commissioner has sought to tap is octroi which along with property taxes account for over 82 per cent of the total income of the Corporation of Bombay and which together are its financial mainstay. Octroi has consistently yielded a higher revenue over the years.. Without it to lean on the civic body would have found it hard to function. .......... under the latest proposals, the octroi is sought to be applied as well to petrol and diesel on ad valorem (value of goods) basis.*

இப்படி ஆக்ட்ராய் வரி போட்டிருக்கிற மாநிலங்களைப் பார்த்தால், ஒன்று தெரிய வருகிறது. அதாவது கர்நாடகம், மகாராட்டிரம், குஜராத், ராஜஸ் தான், உத்திரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், மேற்கு வங்கம், மணிப்பூர், இமாச்சல பிரதேசம் போன்ற 12 மாநிலங்களில் 'என்ட்ரி டாக்ஸ்' அல்லது 'ஆக்ட்ராய்' போடப்பட்டிருக்கிறது. 'ஆக்ட்ராய்' என்று பெயர் இருப்பதை மாற்றி 'என்ட்ரி டாக்ஸ்' என்று போட்டிருக்கிறார்கள்.

கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள எல்லா முனிசிபாலிடிகளிலும் 'என்ட்ரி டாக்ஸ்' உண்டு மகாராட்டிரத்தில் ½ சதவீதத்தில் ஆரம்பித்து 6 சதவீதம் வரை வசூலிக்கிற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. கல்கத்தா நகரிலும் மற்ற நகரங்களிலும் 1½ சதவீதம் என்று தொடங்கி தற்போது 8 சதவீதம் வரை 'என்ட்ரி டாக்ஸ்' வசூலிக்கிற நிலைமை இருந்து வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், நாம் 2 சதவீதம் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதுவும் ஒரு குறிப்பிட்ட 13 பொருள்கள் மீது மட்டுமே போட்டிருக்கிறோம். பல மாநிலங்களைப் பார்த்தால், 15 பொருள்களிலிருந்து சுமார் 60 பொருள்கள் வரை இந்த வரியைப் போட்டிருக்கிறார்கள். நாம் வெறும் 13 இனங்களில் மட்டும்தான் போட்டிருக்கிறோம், அதுவும் சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளிலும், ஈரோடு, சேலம், திருச்சி, வேலூர் போன்ற சிறப்பு நகராட்சிகளிலும் பொள்ளாச்சி, திருப்பூர், நாகர்கோயில், திண்டுக்கல், கும்பகோணம், தஞ்சை, ஊட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற 16 நகராட்சிகளிலும் மட்டுமே போட்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் எல்லா நகரங்களிலேயும் போட்டிருக்கிறார்கள். அதுவும் 2 சதவீத நுழைவு வரி மட்டும்தான் நாம் போட்டிருக்கிறோம். எனவே இது சாதாரண நகரங்களையும் சிற்றூர்களையும், பேரூர்களையும் பாதிக்காது. 2 சதவீத வரி என்பது வளர்ந்து உயரும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்தத் தன்மையின் அடிப்படையில் பார்க்கும்போது, 6½ சதவீதம் முதல் 8 சதவீதம் வரை மற்ற மாநிலங்களில் போட்டிருக்கிறார்கள். கல்கத்தா நகரில் 3 சதவீதம் போட்டிருக்கிறார்கள். டெல்லியில் குவிண்டால் கணக்கில்—எடைக் கணக்கில் போடுகிறார்கள். அங்கே பருத்திக்கு குவிண்டாலுக்கு 1.18 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். பட்டுக்கு 3.68 ரூபாய் என்றும் பாலியஸ்டருக்கு ரூ. 3.86 என்றும் போட்டிருக்கிறார்கள். அரியானாவில் மொத்தத்திற்கும் குவிண்டாலுக்கு ரூ. 8¼ போட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் மட்டும்தான் 2 சதவீதம் போட்டிருக்கிறோம். இதற்குக் காரணம் வியாபாரிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான். அவர்களைச் சரிப்படுத்த அல்ல—வேறு பல நிலைமைகளைக் கணக்கில் கொண்டு போட்டிருக்கிறோம்—அவர்களை நான் பார்க்கவும் இல்லை—பார்க்க விடுவதாகவும் இல்லை. அவர்களே கூட ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதில் அவர்களே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா வியாபார சங்கங்களின் தலைவர் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதாவது நுழைவு வரியால் ஏற்படுகிற சுமையை நுகர்வோர்தான் சுமக்க வேண்டி வருமே தவிர, வியாபாரிகள் அல்ல என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் வியாபாரிகள் எல்லோரும் இதனால் நாங்கள் எல்லோரும் கஷ்டப்படுகிறோம் என்று சொல்லி இதை





எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 26 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் இந்த இனத்தின் கீழ் வரும் என்று நாம் இந்த வரிவிதிப்பைச் செய்திருக்கிறோம். இந்தத் தொகையைக்கூட வேறு வழிகளில் ஈட்டிக் கொள்ள முடியும் என்று சொல்லுகிறார்கள். அதற்காக வழிகள் என்ன என்று அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள இருக்கிறேன். காரணம் இன்னும் ஒரு ரூ. 180 கோடி அளவுக்கு நிதிப் பற்றாக்குறையை நாம் சரிக்கட்ட வேண்டியிருப்பதால், அந்த சுலபமான வழிகளையும் அவர்களிடத்திலேயிருந்து கேட்டுத் தெரிந்துகொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும் போது, பொருள்கள் பல இடங்களுக்குச் செல்லும்போது, இந்த நுழைவு வரி என்பதேகூட பலமுனை விற்பனை வரியாக ஆகிவிடும் என்று தெரிவித்தார்கள். 2 சதவீதம் என்பதே கூட இறுதியில் 8 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்ற அளவுக்கு உயர்ந்துவிடும் என்று குறிப்பிட்டார்கள். நான் இது குறித்து ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். இந்தப் பொருள்கள் மீதான நுழைவு வரி என்பது ஒரே ஒரு கட்டத்தில் மட்டும் ஒரு இடத்தில் மட்டும் 2 சதவீதம் என்றுதான் இருக்கும். எனவே இந்த வகையில் அதிகமான சுமை ஏற்படுவதற்கான சாத்தியமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சிலபல பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டு இவைகளாலே ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது. அதன் அடிப்படையில்தான் நான் ஏற்கெனவே சிலபல பொருள்களுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து விலக்களித்திருக்கிறேன். அதாவது ஏழை எளிய மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் இதன் காரணமாக அதிகமாக விலை உயரும் என்று கருத்து சொல்லப்பட்டது. இதன் காரணமாக மண்ணெண்ணெயைப் பொறுத்த வரையில், அதற்கு நுழைவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே சர்க்கரைப் பொருள்கள் என்ற தலைப்பில் சர்க்கரை, மிட்டாய், சாக்லேட், கன்பெக்ஷனரி போன்றவைகளுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மின்சாரப் பொருள்கள் என்ற தலைப்பின் கீழ், மின்சார பல்பு, குழாய் விளக்குகள், ஒயர், ஹோல்டர், ஸ்விட்ச் போன்றவைகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. மருந்து வகைகள் என்ற தலைப்பின்கீழ் சித்த மருத்துவ மருந்துகள், யுனானி மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், அரிஷ்டம் போன்ற பொருள்களுக்கும் வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே துணி வகைகள் என்ற தலைப்பின் கீழ், கைத்தறி, பட்டு வகைகள், கதர் ஆகியவைகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

மகாராட்டிரம், குஜராத், நியூ டெல்லி, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங் களில் பருத்தித் துணிகளுக்கும் நைந்தறித் துணிகளுக்கும்கூட இந்த வரியைப் போட்டிருக்கிறார்கள். கோரைப்பெட்கள் ஆலையாகத் தயாரிக்கப்படும் துணி களுக்குக்கூட அந்த மாநிலங்களில் இத்தகைய வரி போடப்பட்டிருக்கிறது.

தற்போது போடப்பட்டிருக்கும் வரி சில இனங்களில் 6 சதவீதம் முதல் 7 சதவீதம் போகிற அளவுக்குக்கூட உயரும் என்பதை நான் மறுக்கவில்லை. வரி என்று போட்டால், பிறகு அது உயரத்தான் செய்யும். ஆனால் எங்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம், போயும் போயும் ஒரு 13 இனங்களுக்கு மட்டும் போட்டதற்கே இவ்வளவு எதிர்ப்பு கோஷம் இருக்க வேண்டுமா என்பதுதான். சிலபல பொருள்களைக் குறித்து நாம் ஏற்கனவே வரிவிலக்களித்திருக்கிறோம். இன்னும் சிலபல பொருள்களில்கூட அதை எடுத்து விடலாம் என்று சொன்னார். அந்த வகையில் சிலபல இன்றியமையாத பொருள்களைப் பற்றி யோசிக்கக்கூட நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர் களால் படிக்கப்பட்ட பட்டியலில் பள்ளி மாணவர்கள் பயன்படுத்துகிற காகிதம், காகித அட்டைகள் போன்றவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்ப தாகத் தெரியவில்லை. எனவே மாணவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இந்தப் பொருள்களின் மீதான நுழைவு வரியை எடுப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைக் குறித்து தனியாக யோசிக்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே போகின்ற காகிதங் கள், காகித அட்டைகள் என்று தனியாகக் கணக்கு வைக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் தனியாக எடுத்துக் கொள்ள வழியிருந்தால், இதைப்பற்றி யோசிக்க இயலும். அதுவல்லாமல் மொத்தமாக இந்த இனத்திற்கு வரி விலக்களிப்பது என்பது சரியாக இருக் காது. இதில் சங்கடம் இருக்கிறது என்பதை மட்டும் நான் ஒப்புக்கொள் கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப் பிட்டதைப்போல், இந்த நோக்கம் நிறைவேறுவதில் சிலபல சங்கடங்கள் ஏற் பட்டால், அவைகளை நீக்குவதற்கு இந்த அரசு எப்போதும் ஆயத்தமாக இருக் கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரி விதிப்பின் மூலமாக சுமார் ரூ. 26 கோடி அளவுக்கு வருவாய் வரும் என்றுதான் எதிர்பார்த்தோம். இன்றைய தினம் சில கன்செஷன்களைக் கொடுத்தால், அது வெகுவாகக் குறையக்கூடும். அதைப் பின்னால்தான்





கணக்குப் பார்க்க இயலும். இந்த நேரத்தில் நாம் மத்திய அரசு போட்டிருக் கிற வரியை மட்டும் கணக்கெடுத்துப் பார்த்தால், ஏற்கனவே பெட்ரோல் போன்ற பொருள்களின் விலையை உயர்த்தியது, அதற்குப் பிறகு ரூ. 716 கோடிக்கு வரியைப் போட்டது, அதற்குப் பிறகு ரூ. 488 கோடி அளவுக்கு ரெயில்வே கட்டணத்தை உயர்த்தியது, பிறகு அதிலே ஒரு ரூ. 57 கோடி அளவுக்குக் குறைத்துக் கொண்டது அதற்குப் பிறகு சுமார் 70 கோடி வரை யிலும் தபால் தந்தி கட்டணங்களை உயர்த்திய வகையில் போட்டது என்று இப்படி எல்லா வகையான வரி விதிப்புகளையும் கணக்குப் பார்த்தால், அது சுமார் 2,400 கோடி அளவுக்கு வருகிறது. இந்த வரிகளால் உண்மையிலேயே வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

ஆக 2,400 கோடி டில்லிக்குப் போகிறது என்றால், இந்த மாநிலம் மட்டும் மொத்தத்தில் கொடுக்க வேண்டியது ரூபாய் 250 கோடியாக இருக்கும். இந்த ரூ. 250 கோடிக்கு மேல். இரயில்வே கட்டணம் உயர்த்தியதற்காகவும், தபால் தந்தி கட்டணங்களை உயர்த்தியதற்காகவும், மற்ற கட்டணங்களை உயர்த்திய தற்காகவும் எல்லாம் சேர்த்து இந்த அரசு 45 கோடி ரூபாய் உயர்வு பண்ண வேண்டும். நாம் பட்ஜெட்டைப் போடுவதற்கு முன்னாலேயே அவர்கள் வரி யைப் போட்டுவிட்டதால், அதையும் சேர்த்து சமாளிக்க வேண்டிய ஒரு பொறுப் பு எங்களுக்கு வந்து சேர்கிறது. இவ்வளவு பெரிய வரிகளை, இரயில்வே கட்டணம், தபால் தந்தி கட்டணம் ஆகியவைகளையெல்லாம் தாங்கிக்கொண்ட வியாபாரிகள் இந்த 13 பொருள்களுக்கு மட்டும், 16 நகராட்சிகளுக்கு மட்டும் போட்டதற்கு இவ்வளவு பெரிய கடையடைப்பு, ஊர்வலம், உண்ணாவிரதம் எல்லாம் இருக்கிறார்களே, இது எதற்கு? "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பதைப் போல இந்த 20 கோடி ரூபாய் வரிக்கு மட்டும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இதனால் நேரிடையாக ஒரு ரூபாய்க்கு 2 காசு கள்தான் உயரும், பத்து ரூபாய்க்கு 20 காசுகள், நூறு ரூபாய்க்கு இரண்டு ரூபாய்தான் உயரும். மற்றவர்கள் வரியைப் போட்டுப் போட்டு விலைவாசியை ஏற்றுகிறார்கள். ஒரு வரியும் போடாத பொருள்களுக்குக் கூட ஏற்றியிருக் கிறார்கள். தேங்காய்க்கு விலை ஏற்றிவிட்டார்கள். யாரைக் கேட்டுவிட்டு ஏற்றினார்கள். அதையெல்லாம் ஏற்றாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாட்டில் போடப்படுகிற எந்த வரியானாலும் மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள், வியாபாரிகள் அல்ல என்பது தெரிந்த விஷயம். வியாபாரிகள் பாதிக்கப்படுவது மத்திய அரசி னுடைய வரியால், மாநில அரசின் வரியால் அல்லது என்பதைப்போல சோ

னார்கள். இதற்கு என்ன பொருள் என்று தெரியவில்லை. எந்த வரியை அரசு விதித்தாலும் வாங்குபவர்கள் தலை மீது சுமத்துவதை நாம் பார்க்கிறோம். மக்கள் தலை மேல் விழக்கூடியதாகத்தான் இரண்டு வரிகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வியாபாரிகள் எந்த விதத்திலே இந்த வரியால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கூற வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே விளக்கினேன். அப்படி பாதிக்கப்படாதவர்கள் ஏன் ஊர் ஊராக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கேட்பார்களேயானால், மிக நன்றாக இருக்கும். இந்தச் சிறிய தொகைக்கு இவ்வளவு எதிர்ப்பு என்றால், என்னமோ பின்னாலே இருக்கிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது.

THIRU J. M. MIAKHAN : Perhaps this is the last straw on the camel's back.

THIRU A. R. DAMODARAN : The Hon. Minister has raised a significant point. It is not as if we have accepted the Central taxes. The only point is that all of us cannot go to Delhi and stage a hunger strike. The other point is this. Delhi taxes are customs duties and excise duties which are straightforward taxes. The State tax is not a straightforward tax but a crooked tax and this is supposed to be levied in 16 Municipalities whereas it is going to extend to 90 per cent of the area in Tamil Nadu. I only request the Hon. Minister to do one thing. He says that he does not propose to meet the business community and have a discussion. This is a very wrong attitude. It may please the Members of this House. But I can definitely tell him on behalf of the business community that if this is his attitude, there is no need to have any discussion at all. Because of this attitude of the Hon. Minister that he would not meet the business community and discuss about their problems, they were driven out and they have gone to the streets. Why does not he meet the business community and hear what they want to say?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வியாபாரிகளைப் பார்க்க மாட்டேன் என்றோ அவர்களோடு கலந்து பேசமாட்டேன் என்றோ நான் சொல்லவில்லை. யார் கூப்பிட்டாலும் பேசுகிறோம். எந்தச் சமயத்தில் அவர்கள் வந்தார்கள்? இப்போது சட்டமன்றப் பேரவையும், மேலவையும் நடக்கிறபோது, ஊர்வலம் வந்து ஒரு மகஜரை என்னுடைய அலுவலகத்திலே





கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். யாரையும் பார்க்கமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. திரு. தாமோதரன் அவர்கள் கிரோசின் வியாபாரிகள் மாநாட்டிற்கு என்னை அழைத்தபோது, நான் வரத்தான் செய்தேன். வியாபாரிகளைப் பார்க்கக் கூடாது, பேசக்கூடாது என்பதல்ல. பேசிப் பார்க்கிறோம். எங்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லுகிறோம். அவர்கள் அவர்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். பிரதிநிதிகள் வந்து உட்கார்ந்தால் மேலும் விளக்கமாக எடுத்துச் சொல்லுவதற்கு வழியைச் சொல்லுங்கள் என்று கேட்கிறேன். வேண்டுமானால் வெஸ்ட் பெங்காலுக்கு இரண்டு பேர்களை அனுப்பி அங்கே எப்படி ஒழுங்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து நடைமுறைப்படுத்துகிறோம். காங்கிரஸ் மாநிலத்திற்கு அனுப்பி அங்கு எப்படி ஒழுங்காக நடத்துகிறார்கள் என்பதைக் கண்டறிந்து இங்கே செம்மைப்படுத்த முயற்சி செய்கிறேன். இதைவிட அதிகமான வருமானங்கள் வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், இதைப் பற்றிச் சிந்திப்பதற்கு இடம் இருக்கிறது. இப்போதும் சொல்லுகிறேன், சிலபல பொருள்களுக்கு விலக்கு அளிக்கலாம். மேலும் பேச வாய்ப்பு இருக்கிறது. பேரவையிலேயே சொன்னேன். சிலபல பொருள்களின் மீது இந்த வரியை விதிப்பதால் கஷ்டங்கள் ஏற்படும் என்று சொன்னால், அதைப்பற்றிச் சிந்தித்து முடிவுக்கு வர அரசு ஆயத்தமாக இருக்கிறது. சென்ற வருடம் மல்டி-பாயின்ட் டாக்ஸ் 33 கோடி ரூபாய் அளவிற்குப் போட்டபோது கூட இவ்வளவு எதிர்ப்பு இல்லை. இப்போது ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்று தெரியவில்லை. பேசுவதற்கு இடமிருக்கிறது. பேசலாம். பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இத்தகைய நிலைமைகள் இருக்கிறபோது, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன். வேறு எந்த நிலைமையிலும், அடிப்படையிலும் நான் பேசவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நுழைவு வரி எப்படி பிற மாநிலத்தில் முதலில் ஒன்றரை சதவீதமாக நுழைந்து பிறகு பத்து சதவீதமாக ஆகியது என்பதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இங்கேயும் நுழையும்போது 2 சதவீதம் என்ற வீதத்தில் நுழைகிறது. மற்ற மாநிலங்களைப் போல 10 சதவீதம் உயரும் என்று சொல்லுகிறார்கள். பிற்போக்கான வரி என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட இந்த வரி ஏற்கெனவே போட்ட மாநிலங்களில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது நாம் போடுவதில் எந்தவிதமான நியாயமும் இல்லை. மத்திய அரசு போட்டிருக்கிற வரிகளையெல்லாம் நாங்கள் ஏற்றுக் கொண்டோம்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 15

என்று பொருள் அல்ல. மத்திய அரசினா் வரியைப் போடுகிற போது அதி லிருந்து கூடுதல் சதவீதத்தை நம்முடைய மாநிலத்திற்குத் தர வேண்டும் என்று அரசோடு ஒன்றாக நின்று குரல் எழுப்பத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "வேறு வழியில்லை, நுழையத்தான் போகிறோம்" என்று சொல்வதால், இது மக்களின் தலைமேல் விழப்போகிற வரி, வணிகர்மேல் விழப்போகிற வரி இல்லை என்பதால், சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய வரி என்பதால், அதை அவர் பின்வாங்காத நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறு கிறது என்று சொல்லுகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. க. இராமமூர்த்தி : மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி இருந்த போது இந்த மாநிலத்திலிருந்த காங்கிரஸ் ஆட்சி ஆக்ட்ராய் வரி விதிக்க வில்லை. இந்த மாநிலத்தில் நுழைவு வரி இல்லாமல் காங்கிரஸ் ஆட்சி செய் திருக்கிறது. இந்த நிலையிலே இது ஒரு தேவையற்ற வரி என்பதோடு இது விலைவாசியை உயர்த்தும், ஊழலுக்கு இடம் கொடுக்கும். மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே இந்த வரியை வலியுறுத்துவதால், அது நிறைவேற்றப்படுகிற நிலையில் இந்த அவையிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறோம். ஆகவே காங்கிரஸ் கட்சி வெளி நடப்பு செய்கிறது.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன் னுடைய பதிலுரையை முடித்துவிட்டாரா என்று புரியவில்லை.

**Thiru J. M. MIAKHAN:** Sir, on behalf of our Party, I have already said that this Entry Tax is an obnoxious tax. I also suggested that the Hon. the Finance Minister could increase the tax on some other commodity and make up this amount of Rs. 26 crores. Since he insists and says that he wants to have this tax, I also join the walk-out.

(Thiru J. M. Miakhan staged a walk-out.)

**Thiru A. R. DAMODARAN:** Sir, I have to inform you this with considerable regret. Last year, when the Hon. Minister imposed taxes for Rs. 36 crores, we did not object. This year, he is himself



1983 மார்ச் 15] [Thiru A. R. Damodaran]

puzzled and asks, "When I have imposed tax for only Rs. 24 crores, why is the business community agitating?" Sir, I wanted the Government to study the implications of the new tax. It is because of the harassment involved, the corruption that is likely to take place, the diversion of trade that will take place, that the trade has pleaded that this tax be postponed by two months so that the Hon. Minister may have a discussion with the trade and commerce about the difficulties involved in the collection of the tax. But, unfortunately, the Hon. Minister has said that he does not propose to make even one alteration, excepting some announcements that he has made with regard to cerain commodities like sugar-candy 'kalkandu' etc. which are of no material importance to us. I am afraid that, much against my wish, my conscience will not permit me to remain in the House and, thereforce, have to join my friends in the walk-out.

(Thiru A. R. Damodaran staged a walk-out.)

(பிற்பகல் 1-40)

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த வரியைப்பற்றிப் பேசும்போது அடிக்கடி மேற்கு வங்காளத்தைப் பற்றிக் குறிப் பிடுகிறார்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தில் 1975 ஆம் ஆண்டிலே இந்த வரியைக் கொண்டு வந்தார்கள். அப்போது எங்களுடைய கட்சி ஆட்சியிலே இல்லை. அந்தப் பணத்தைக்கூட நாங்கள் பின்னாலே 9 கோடி ரூபாய் அளவுக்கு வேலையில்லாத வாலிபர்களுக்கு நிவாரணம் என்று கொடுத்திருக் கிறோம். வரி போடுவதை மட்டும் மேற்கோளாகக் காட்டுகின்ற நீங்கள், பொதுமக்களுக்கு நாங்கள் நிவாரணமாகக் கொடுத்ததை மேற்கோளாகச் சொல்லவே மாட்டேன் என்கிறீர்கள். அது சரியல்ல. இந்த நிலையிலே தமிழகத்திலே ஆக்ட்ராய் வரியைப் பொதுமக்கள் மேல் போட்டிருக்கிறார்கள். அவர்கள் வறட்சியிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இந்த 2 பர் சென்ட் வரியைப் போட்டு, அதை வசூலிக்க முயற்சி செய்வதன் காரணமாக, நான் இதை எதிர்த்து வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் வெளிநடப்பு செய்தார்).

திரு. என். ஆர். இராதா : மேற்கு வங்காளத்திலே இந்த ஆண்டு கூட வரி போட்டிருக்கிறார்கள்.

[1983 மார்ச் 15

திரு. வி. வி. வி. ஆனந்தம் : இந்த நுழைவு வரி ஏழை மக்களை பாதிக்
றது. அது மட்டுமல்லாமல், ஊழலுக்கும் வழி வகுக்கும். நேர்மையாக
வணிகம் செய்யும் வியாபாரிகளை இது பாதிக்கும் என்பதால்தான் அவர்கள்
நேற்று கடை அடைப்பு செய்து எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். விற்பனை
வரியைப் போல, இது மக்களிடம் வாங்கி வசூலித்துக் கொடுப்பது அல்ல. ஆகவே
இந்த நுழைவு வரியை அறவே நீக்க வேண்டும் என்று கேட்கிறோம். அப்படி
அறவே நீக்கம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்யா
தது குறித்து நான் எங்கள் காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில்
கண்டனத்தைத் தெரிவித்து, இந்த சபையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. வி. வி. வி. ஆனந்தம் வெளிநடப்பு செய்தார்).

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 54
கோடி அளவுக்கு 1977 ஆம் ஆண்டில், ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக இருக்
கின்றவர்களுக்கு இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் குறைந்த சம்பளமாக
இருந்ததால், அதை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசு மானியமாகத் தந்திருக்
கிறது. அந்த ரூ. 54 கோடி என்ன ஆயிற்று என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் எடுத்த எடுப்பிலேயே அதற்கு விளக்கம் சொல்லி
விட்டேன். அதற்கு என்று ஒதுக்கப்படவில்லை. 5 ஆண்டுகளுக்குச்
சேர்த்து கேட்ட தொகைக்காக ரூ. 251 கோடி ஒதுக்கினார்கள்.
மொத்தத்தில் அதற்கு ஆகியிருக்கின்ற தொகை ரூ. 300 கோடி. ஆனால்
முதலிலேயே அந்த ஐயத்திற்கு விளக்கம் தந்திருக்கிறேன். சில்லரை என்று

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மிகக்
குறைந்த சம்பளம் இந்தியாவிலேயே 14-வது மாநிலமாக தந்து கொண்டிருக்
கிறது என்பதை வலியுறுத்தியும், தென் மாநிலங்களிலேயே மிகக் குறைந்த
சம்பளம் தருகிறது என்பதைச் சொல்லியும் இருக்கிறோம். அப்படி இருந்
தும் இரண்டு பட்ஜெட்டுகளிலும் 10 ஆயிரம் ரூபாய் தருவது பற்றி வெளி
யிடாதது குறித்தும், அதற்கு என்று ஒரு கமிட்டி அமைத்தும் அது பற்றி
இதுவரை வெளியிடாதது குறித்தும் அதற்கு எங்களுடைய வருத்தத்தைத்
தெரிவித்திருக்கிறோம். இப்போதும் எந்தவிதமான அறிவிப்புமே இந்த
பட்ஜெட்டிலே வராதது குறித்து அதற்கு வருத்தம் தெரிவிக்கக்கூடிய அளவில்
இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லாததால் நானும் வெளிநடப்பு
செய்கிறேன்.

(திரு. செ. முத்துசாமி வெளிநடப்பு செய்தார்).



1983 மார்ச் 15]

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் நலம் என்ற தலைப்பே இந்த நிதிநிலை அறிக்கையிலே நீக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருப்பது குறித்து நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அரசு ஊழியர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் சேர்ந்து ஏறத்தாழ 160 சங்கங்கள் வைத்திருக்கின்றார்கள். அவைகள் இணைந்து ஒரு கூட்டுக் குழு ஏற்படுத்தியிருக்கின்றன. அதன் மூலம் பல கோரிக்கைகளை வலியுறுத்தி கேட்டிருக்கிறார்கள். அதில் ஒன்று இரண்டையாவது ஏற்றுக்கொள்ளவில்லையே என்று கேட்டும்கூட, பள்ளியாசிரியர்கள்கூட 17 கோரிக்கைகள் வைத்தும், அதிலே ஒன்று இரண்டைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லையே என்று கேட்டும்கூட, எதையுமே ஏற்றுக்கொள்ளவில்லை. ரூபாய் 10,000, அகவிலைப் படி, மினிமம் பென்ஷன் ஏதேதோ இருக்கின்றன. அதிலேயாவது ஒன்றிரண்டு ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கலாம். எதுவுமே இல்லாமல் இருக்கிறது. 'நோ ஓர்க், நோ பே' என்பது குறித்த ஜி. ஓ.வை ரத்து செய்ய வேண்டுமென ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையாவது செய்திருக்கலாம். ஒரு சின்ன அறிவிப்புகூட தராதது வருத்தமளிக்கிறது. எந்த நிதிநிலை அறிக்கையிலுமே இதுமாதிரி புறக்கணிப்பு இல்லை. அந்த அளவுக்கு ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் வர்க்கம் புறக்கணிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, அதற்கு அவர்கள் பரிகாரம் தேடாததனாலே, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அலுவலர்கள் சார்பிலே அதற்குக் கண்டனம் தெரிவித்து நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள், பல்கலைக் கழக, கல்லூரி, பள்ளிக்கூடங்கள் இவைகளில் பணி புரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் இடையிலே சில முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளைப் பற்றி ஒரு அறிவிப்பையாவது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலுரையிலே சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அதைப்பற்றி நான் முன்பே சொன்னேன். ஆனால் அதைப்பற்றி அவர்கள் ஒன்றும் சுட்டிக்காட்டாத காரணத்தினால், அந்த ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள். அலுவலர்கள் உணர்வுகளுடன் நாங்களும் ஒன்றிக்கொள்கின்ற வகையில். எங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்ற வகையில் ஆசிரியர்கள், பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி சார்பாக நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் வெளிநடப்பு செய்தார்).

[1983 மார்ச் 15

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களிலே நுழைவு வரி போட்டு. கைத்தறி விற்பனைக்கு இடம் கொடுக்காமல் இருக்கின்ற சூழ்நிலையில், தமிழ் நாட்டில் மட்டும் அந்த நுழைவு வரியை எடுத்துவிட்டு கைத்தறி, பட்டு, கதர் மற்ற துணிகளுக்கெல்லாம் விதிவிலக்கு அளித்ததற்காக கைத்தறி நெசவாளர்கள் சங்கம் சார்பில், 5½ லட்சம் நெசவாளர்கள் சார்பில், வியாபாரிகள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி குறித்து முழு விளக்கங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த வரியைப் போட்டுத்தான் தீரவேண்டும் என்ற ஒரு விருப்பத்தின் அடிப்படையிலே செய்யவில்லை. நிலைமையினுடைய அவசியத்தை ஒட்டித்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்பதற்கான காரண காரியங்களை எல்லாம் எடுத்துச் சொன்னேன். இதைவிட வேறு பல மாநிலங்களில் போட்டுவிட்டார்கள் என்ற காரணத்திற்காக இது இருக்கலாம் என்றும், இதுவரையில் போடாமல் இப்போதுதான் போடுகிறோம் என்பதற் காகப் போடப்பட்டது என்ற வாதம் எப்படிப்பட்டது என்பது பொதுமக்க ளுக்குத் தெளிவாகப் புரியும் என்று கருதுகிறேன். வேறு எந்த மாநிலத்தி லும் இல்லாத அளவுக்குக் குறைவாகத்தான் போட்டிருக்கிறோம். 12 மாநிலங் களை ஒப்பிட்டுப் பார்த்தால், நுழைவு வரி, ஆக்ட்ராய் வரிகளைக் குறைந்த அளவுக்குப் போட்டிருக்கின்ற மாநிலம் தமிழகம் தான். குறைந்த இடங்களில் நடைமுறைப்படுத்துகிற . மாநிலம் தமிழகம்தான். குறைந்த அளவு அளவுக்கு 2 பர்சென்ட் அளவுக்கு வரி போடுவது ஒரு இடத்திலேதான் என்று சொல்கின்ற அளவுக்கு போட்டிருக்கிற மாநிலம் தமிழகம்தான். ஆகவே மற்ற சூழ்நிலைகள் வருகின்றன. மற்றவைகள் எல்லாம் இருக்கின்றபோது, தமிழக மாநிலத்தில் இந்த வரியை முழு மூச்சோடு எதிர்ப்பது என்ற நோக்கத்தை வைத்திருக்கிறார்கள். என்றாலும்கூட இதனுடைய நியாயத்தை எடுத்துச் சொன்னேன். அது மட்டுமல்லாமல், மேற்கு வங்காளத்தில் இந்த வரியைப் போட்டு, அதிலிருந்து நிவாரணத்திற்கு எடுத்துச் செலவிடுகிறது என்றார்கள். இந்த அரசும் அந்த வரியைக் கணக்கிட்டு, அந்த வரியின் மூலம் எவ்வளவு வருகிறது என்று பார்த்து, ஏதேனும் நல்வாழ்வுத் திட்டத்திற்குச் செலவிட வேண்டுமானால் அதிலிருந்து செலவிடலாம். அந்த வழியில் இந்த நிதிகளை ஒதுக்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நம் தமிழக நல்வாழ்வுத் திட்டத்திற்கு, வெல்பேர் ஸ்கீம்களுக்குச் செலவழிக்கலாம். அகில இந்திய அளவிலே இருக்கின்ற எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்



1983 மார்ச் 15] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தாலும், தமிழக மாநிலம்தான் நல்வாழ்வுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், அதிகமாகச் செலவிடுகிறது. நாம் இரண்டு லட்சம் பேர்களுக்கு ஓய்வூதியம் என்று கொடுக்கிறோம். ஒரு கிலோ அரிசியும் தருகின்ற நிலைமை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. விதவைகளுக்கு, பெண்களுக்கு, மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவுக்கு இருக்கிறோம். சத்துணவுத் திட்டத்திலே ரூ. 134 கோடிக்கு செலவு என்றால், அதன் மூலம் 1,80,000 பேர்களுக்கு நாம் வேலை வாய்ப்பைத் தருகின்றோம். அந்த அளவுக்கு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்திற்கு ரூ. 15 கோடி என்று சொல்லியிருக்கிறோம். என் இந்த 15 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று கேட்டால், வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று ஒதுக்கியிருக்கிறோம். 1983-84 ஆம் ஆண்டிலேயே போட்டு முடிந்து விடுகிற அடிப்படையிலே போடவில்லை. ஒருவர் கூட வேலை செய்யாமல் இருக்கின்ற குடும்பங்கள் இருக்கின்றன. சிலபல குடும்பங்களிலே ஒருவர் இருவர் வேலை பார்க்கிறார்கள். சில குடும்பங்களில் எல்லோருமே வேலை பார்க்கிறார்கள். கோயம்புத்தூர் பகுதியில் வீட்டிலே இருக்கின்ற ஆண் பெண் இரு சாராருமே கூட வேலை செய்கின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. வேறு பல குடும்பங் களில் பார்க்கிறபோது, ஒருவர் இருவர் வேலை பார்க்கிறார்கள். சில இடங் களில் 4, 5 பேர்களைக் காப்பாற்ற ஒருவர் இருவர் வேலை பார்க்கிறார்கள். சில இடங்களிலே ஒருவருமே வேலை பார்க்காத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்களிலே இருப்பவர்களில் யாருக்கேனும் ஒருவருக்கு வேலை கொடுப்ப தன் மூலம் அந்த வேலையற்று வருமானமற்று இருக்கின்ற குடும்பங்கள் சிறப்பாக நடக்க முடியும் என்பதற்காக ஒரு கொள்கையின் அடிப்படையிலே இது கொண்டு வரப்பட்டது. ஆகவே அந்த அடிப்படையிலே யாருமே வேலை பார்க்காமல் இருக்கின்ற வீட்டில் ஒருவருக்கு எந்த நிபந்தனையின், எந்தத் தன்மையின் அடிப்படையிலே இதைக் கொடுக்கலாம் என்று விரிவாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். அதற்காக நாம் ஒதுக்கியிருப்பது ரூ. 15 கோடி. இந்த 15 கோடி ரூபாயில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்யலாம். இது இந்த ஆண்டோடு முடிந்துவிடுவதில்லை. ஆண்டுக்கு ஆண்டு என்று பார்க்க வேண்டும். இந்த ஆண்டு 15 கோடி ரூபாய். அடுத்த ஆண்டுக்கு என்று கணக்குப் பார்த்துச் செய்வோம். அதற்கான வாய்ப்பு வசதி இருக்கிறது. முதியோர் உதவித் தொகை தருவது என்று பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கொண்டு வந்தார்கள். நாட்டிலே இருக் கின்ற 60 வயது ஆனவர்கள் அத்தனை முதியோர்களுக்கும் தருவது என்று கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் அப்போது கிடைத்துவிடும் என்று அவர் சொல்லவில்லை. முதியோர் உதவித் தொகை தருவது முதலில் 16 ஆயிரம் பேர்களுக்கு என்று இருந்தது. அது அண்ணா திராவிட முன்னேற்ற

கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றபோது, 51 ஆயிரம் பேர்களுக்கு என்று வந்து சேர்ந்தது. காமராசர் அவர்கள் கொண்டு வருகின்றபோது, ஒரு ரெஸ்ட்ரிக்ஷன் வைத்திருந்தார்கள். கடந்த 5 ஆண்டு காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதிக கவனமும் அக்கறையும் காட்டியதால், 2 லட்சம் சில்லரை பேர்களுக்குக் கிடைக்கிறது. அதில் 30 ஆயிரம் விவசாயிகள் இருக்கிறார்கள். 30 ஆயிரம் 60 வயது ஆனவர்களுக்குத் தருகிறார்கள். விதவைகளுக்கு உடல் ஊனம் உற்றவர்களுக்கு, வயதைக் கணக்கிடாமல், முடியாதவர்களுக்குத் தருகிறார்கள். இந்தத் திட்டம் முடிந்து விட்டதா என்றால், முடியவில்லை. எல்லாம் சேர்ந்து 2 லட்சம் சொச்சம் வருகிறது. இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ரூ. 15 கோடியை வைத்து என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்றெல்லாம் கேட்கிறார்கள். இந்த ஆண்டோடு முடிந்து விடாது. நாட்டிலே இருக்கின்ற வேலை இல்லாமல் இருக்கின்ற அவ்வளவு குடும்பங்களுக்கும் இந்த ஒரு ஆண்டிலேயே கொடுத்து விடுவோம் என்று நாம் சொல்ல வரவில்லை. இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம், வகுத்திருக்கிறோம். திட்டமிட்டிருக்கிறோம். அதை எந்தெந்த வகையிலே நிறைவேற்றலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-50)

அது வந்ததற்குப் பிறகு இந்த ஆண்டு எந்த அளவிற்குச் செலவழிக்க முடியும் என்றால், ரூபாய் 15 கோடி செலவழிக்கலாம் என்ற அளவிற்கு நாங்கள் வந்திருக்கிறோம். விதவைகள் தங்களுடைய பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதற்காக நிதி ஒதுக்கினோம். நாட்டிலே உள்ள அத்தனை விதவைத் தாய்மார்களும் தங்களுடைய பெண் குழந்தைகளுக்குத் திருமணத்தை இந்த ஆண்டே செய்ய ஒதுக்கவில்லை. அதற்கு 10 லட்சம் ஒதுக்குவோமென்று சொன்னோம். அதை ஒரு ஆண்டில் தருவோமென்று சொன்னோம். 5 லட்சம் தாய் தந்தையர் இல்லாத பெண்களுக்கு, 5 லட்சம் ரூபாய் என்று சொன்னோம். நாட்டிலே கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய அனாதைகள் 5 லட்சம் பேர்கள்தானா இருக்கிறார்கள், 5 கோடி இருக்கிறார்களே என்று கணக்குச் சொல்லுகிறார்கள். ஆனால் ஆண்டுக்காண்டு நாம் திட்டங்களைத் துவக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு ஒதுக்கியுள்ள பணம் ரூபாய் 18 கோடி. அலுவலாளர்





களுக்கு வீடு கட்டித் தருகிறோம் என்று சொல்லுகிறோம். நாட்டிலே உள்ள அனைத்து அலுவலாளர்களுக்கும் ஒரே ஆண்டில் வீட்டைக் கட்டித் தர முடியுமா? அதற்கு ரூபாய் 10 கோடி இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறோம். அதில் முடியுமா என்றால் முடியாதுதான். இருக்கிற நிதி நிலைமையிலே அதை ஒதுக்குகிறோம். அந்த அடிப்படையிலேதான் வேலை வாய்ப்புத் திட்டமும் இருக்கிறது. தமிழக அரசு தனியாக ஒரு இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்துவதுபற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இதன் மூலம் அரசுக்குக் கூடுதலாக வருமானம் வருவதோடு தமிழ் நாட்டிலே வேலை வாய்ப்பு வசதிகள் பெருக வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறது. பக்கத்தில் உள்ள கர்நாடகாவில் இந்த இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். வேறு பல மாநிலங்களில் இருக்கிறது. அதில் சேருகிற பணம் மாநிலத்தில் உள்ளவர்கள் இன்ஷ்யூர் செய்வதோடு, அந்தத் தொகை அரசுக்கும் பயன்படும் என்று எண்ணி, அந்தத் திட்டத்தைப்பற்றிப் பரிசீலிக்கிறோம்.

சத்துணவுத் திட்டத்திற்கு நிதி ஆதாரம் சேர்க்கும் நோக்குடன் இந்தத் திட்டத்திற்காக தனியாக பரிசுச் சீட்டு நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்தப் பரிசுச் சீட்டை வாரா வாரம் நடத்துவதோடு கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் பலருக்கு வேலை வாய்ப்பு கிட்டுவதற்கு வகை செய்யும். தமிழகத்தில் கூட்டுறவு நிறுவனங்களும் நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தும் நியாயவிலைக் கடைகளையும் கண்காணிப்பதற்கு ஆங்காங்கே எந்தவிதத் தன்மையும் இல்லாத காரணத்தால், அதற்காகப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்ற திட்டமும் அரசின் பரிசீலனையில் இருந்து, ஆக்கபூர்வமாக அது இடம் பெறும் சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம், குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரும் திட்டத்தோடு இணைத்து, எந்த அளவிற்கு இந்த நோக்கங்களை அதோடு சேர்த்து நிறைவேற்றலாம் என்பதை இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ற படி அவற்றைச் செய்யலாம்.

பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றை நாட்டுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசு அலுவலாளர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் அத்தனை பேரும் இந்த அரசுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களும் அந்த உணர்வோடுதான் பாடுபட்டு வருகிறார்கள். மற்ற இனங்களைப்பற்றி ஆண்டுக்கு ஒரு தடவை கவனித்து, நிதிநிலை அறிக்கையில் சொல்லுகிறோம் என்னும்போது அரசு அலுவலாளர்கள், ஆசிரியர்கள் பிரச்சினை பற்றி அவ்வப்போது தீர்த்துக் கொண்டு வரும் அளவிற்கு, முடிந்த அளவிற்கு செய்து வருகிறோம். நிதி நிலை அறிக்கையில் போடப்பட்டுள்ள தலைப்புகளில் தவிப்

பிரிவுகள் பற்றி இல்லை. நிதிநிலை அறிக்கையில் வறட்சி, கூட்டுறவு, கல்வி, நீர்ப் பாசனம், பொதுப் பணித் துறை என்ற முறையில்தான் தலைப்புகள் இருக்கின்றன. எந்த ஒரு தனிப்பட்ட பிரிவு பற்றி தலைப்பு இருந்தால், ஆசிரியர்கள்-அரசு அலுவலாளர்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றிச் சொல்லவில்லையே என்று கேட்கலாம். பொதுவாக உள்ள சூழ்நிலையில் எதையெதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறோம். ஆண்டு முழுவதும் எதையெதை நிறைவேற்ற முடியுமோ அதை நிறைவேற்றுகிறோம். இந்தியாவில் இருக்கிற மாநிலங்களிலே இங்கேதான் குறைவாக இருக்கிறதென்று சொன்னார்கள். சிலபல மாநிலங்களோடு ஒப்பிடும்போது, சிலபல இனங்களில் கொஞ்சம் குறைவாக இருக்கும். சிலபல மாநிலங்களில் இல்லாத சலுகைகளையும் நாம் தந்திருக்கிறோம். சிலபல மாநிலங்களில் தருவதைவிட கூட்டியும் கொடுத்திருக்கிறோம். வேண்டுமென்றால் இன்னொரு வாய்ப்பு, சந்தர்ப்பம் ஏற்படுகின்றபோது இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில் உள்ளதைப் பட்டியல் போட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் சம்பளம் என்ன, படி என்ன, கொடுக்கப்படும் சலுகைகள் என்ன, ஓய்வு ஊதியம் எவ்வளவு, அதற்குப் பிறகு தரும் சலுகைகள் என்ன என்பதைப் படம் போட்டுக் காட்ட விரும்புகிறேன். இருப்பதை வைத்துக்கொண்டு போதுமென்று முடித்துவிட விரும்பவில்லை. இது செய்ய வேண்டிய தன்மையில் நாம் இருக்கிறோம். ஆகவே எதையும் செய்யக் கூடாது என்ற எண்ணமல்ல. மத்திய அரசு அறிவிக்கும்போது எல்லாம் நாமும் 17 தடவை அகவிலைப்படி உயர்வு கொடுத்திருக்கிறோம். அதை அறிவிக்கும்போது, அறிவிக்க வேண்டுமென்று சொல்லும்போது, நிதிநிலை இடர்ப்பாட்டின் காரணமாக சிலபல மாதங்கள் தள்ளி, ஏற்கெனவே அறிவித்ததற்குப் பிறகு கொடுக்கும் பழக்கத்தை ஏற்கெனவே இருந்த அரசு கொண்டிருந்தது. 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, மத்திய அரசு அறிவித்து 4 மாதங்கள் கழித்து, பின்னால் இருக்கும் மாதங்களிலிருந்து கொடுக்கலாமென்று முடிவு செய்து, கொடுத்திருக்கிறோம். எனவே அரசுக்கு அவர்கள்பால் முழு அனுதாபம் உண்டு. இன்னமும் சொல்கிறேன், அரசு அலுவலாளர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறுபட்டவர்கள் அல்ல. வேறுபட்டவர்கள் அல்ல. சிலபேர் மனமாச்சரியம் கொண்டிருக்கலாம். கட்சி வேறுபாடு கொண்டிருக்கலாம். கட்சி அடிப்படையில் காரியங்கள் ஆற்றலாம். அத்தனை பேருடைய ஆதரவு இல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1977 தேர்தலிலே வெற்றி பெற்றிருக்க முடியாது. அந்த அடிப்படை





யிலே மக்களுடைய அன்பை, ஆதரவை, நம்பிக்கையை, நன் மதிப்பைப் பெற்றிருக்கிறது. 1977-லே மக்களிடத்திலே நன் மதிப்பைப் பெற்றது, 1977-லேயும் மக்களிடத்திலே நன் மதிப்பைப் பெற்றது. 1980-லேயும் நன்மதிப்பைப் பெற்றது. அண்மையிலே நடந்து முடிந்த பெரியகுளம் தேர்தலிலே, பல்வேறு குறைபாடுகளை எல்லோரும் எடுத்துச் சொல்லிய பிறகும், பெரியகுளம் பாராளுமன்றத் தேர்தலில் மக்களுடைய நன் மதிப்பை நிலைநாட்டியது. மக்களுடைய ஆதரவு உண்டு, அன்பு உண்டு என்பதை நிலைநாட்டியது. அண்மையில் நடைபெற்ற திருச்செந்தூர் தேர்தலில் பல்வேறு குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்தபோதுகூட, எல்லோருடைய ஆதரவையும், அன்பையும், அரவணைப்பையும் இந்த அரசு இழக்கவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இழக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கட்சி மாச்சரியத்தின் அடிப்படையிலே சிலர் சிலபல கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். கருத்து வேறுபாடு உள்ளவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஜனநாயக நாட்டிலே அப்படித்தான் செய்வார்கள். அந்த அடிப்படையிலே இருக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் நாங்கள் தள்ளிவிடவில்லை. ஆராய்ந்து கொண்டு வருகிறோம். எதையெதை எப்பொழுது செய்ய முடியும் என்று பார்க்கிறோம். இப்போது இருக்கும் நிதி நெருக்கடி நிலைமையிலே பல்வேறு அமைச்சர்களின் செலவுத்திட்ட ஆணைகளும் நிலைமையில் அதைக் கட்டுப்படுத்தி வருகிறேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட பேரவையிலே ஒரு தடவை சுட்டிக் காட்டினார்கள். எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், கட்டுப்பாடு காரணமாகத்தான் '[illegible]' வருவதற்கு அவசியம் இல்லாத அளவிற்கு இருக்கிறது. நியமனங்களும் நடைபெற வேண்டும், உயர்வுகளும் நடைபெற வேண்டும். எல்லோரும் பயன் பெற வேண்டுமென்ற அடிப்படையிலேதான் பல பணிகளைச் செய்து கொண்டு வருகிறோம். எனவே கோரிக்கைகளைக் கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. கேட்க வேண்டியதுதான். ஆசிரியர்கள், அரசு அலுவலாளர்கள் எல்லோரும் கேட்க வேண்டியதுதான். இந்த அரசு எதையெதைச் செய்ய முடியும் இருக்கிற நிதிநிலைமையை வைத்து என்பதை ஆராய வேண்டியதுதான். அதற்குப் பிறகு இந்த ஆண்டு எதையெதைச் செய்ய இயலும் என்பதை அரசு பார்த்து நிதி ஒதுக்கித் தருகிறது. கேட்பதற்கும், முடிவெடுப்பதற்கும், இயலுவதற்கும் வேறுபாடு உண்டு. கேட்க வேண்டியவைகளைக் கேட்கலாம். ஆனால் முடிந்தவைகளை அதிகாரிகள் ஆராய்வார்கள். இயன்றதைச் செய்வார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

இன்றைக்கு ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை ஆசிரியர்கள்-அரசு அலுவலாளர்கள் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து கூறுவதற்காக என்னைத் தலைவராகவும், தலைமைச் செயலாளர், இரண்டாம் செயலாளர், நிதிச் செயலாளர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு அமைத்து, ஆராயும்படி முதலமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்கிறோம். இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களிலே எந்த ஒரு மாநிலத்திலாவது இப்படி 10,000 ரூபாய் தருகிறார்களா என்றால் எந்த மாநிலத்திலும் தரவில்லை. நாம் தர என்ன சூழ்நிலைகள் என்று பார்க்கிறோம். அந்த அளவிற்கு அலுவலர்கள், ஆசிரியர்கள் பணியாற்றிவிட்டு, வீட்டுக்குச் செல்லும்போது வெறும் கையோடு அனுப்புகிறோமா, அவர்களுக்கு ஒன்றுமே இல்லையா, அவர்கள் கஷ்டப்படுகிறார்களா என்று பார்த்து அது குறித்துப் புள்ளி விவரங்களைத் தேடி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால் அதில் அவர்கள் பங்கு என்ன, அரசின் பங்கு என்ன என்ற புள்ளி விவரங்களையும் திரட்டி வைத்திருக்கிறோம். இது குறித்து முதலமைச்சரவர்களுடன் பேசி, இதில் சங்கங்களில் உள்ள முக்கியமானவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'மீண்டும் உங்களை நான் சந்தித்து பேசுவேன்' என்று கூறியிருக்கிறார்கள். அரசு ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, அமைச்சரவை முடிவு எடுத்ததற்குப் பிறகு அதை வெளியிட வேண்டும். வீட்டுக்கு அனுப்பும்போது வெறுங் கையோடு அனுப்பி அவர்களைத் தவிக்க விடுகிறோமென்பதல்ல. நாட்டு மக்களுக்கும் தெரிய வேண்டும். மன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் தெரிய வேண்டும் என்று சொல்லுகிறேன். இருக்கிற நிலைமைகளை ஆய்ந்து, புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களுடன் கலந்து பேசி, தேவைப்பட்டால், அவர்கள் சங்கத் தலைவர்களோடு கலந்து பேசி, அதற்குப் பிறகு முடிவெடுத்து, அதற்குப் பிறகு அமைச்சரவை முடிவு எடுத்து, அதற்குப் பிறகு நாட்டுக்கு அறிவிக்கும் சூழ்நிலை இருக்கிறது. அவர்களை ஒன்றுமே இல்லாமல் விட்டுவிடுகிறோமா என்றால் இல்லை. சாதாரணமாக அரசாங்கத்திலே 33 ஆண்டுகள் பேசிக் சர்வெண்ட்டாகப் பணியாற்றிய ஒருவர், ஆரம்பத்தில் 250 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெறும் ஒருவர், ஓய்வு பெறும்போது சம்பளம் 425 ரூபாய் வாங்குகிறார். அவருக்கு பணிக்கொடை என்று நாம் ரூ. 7,013 கொடுத்துத்தான் அனுப்புகிறோம். வெறும் கையோடு அனுப்பவில்லை.

[illegible]



1983 மார்ச் 15] [மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 2-00)

அடிப்படை ஊழியர் ஒருவர் ஓய்வுபெறும்போது 500 ரூபாய் சம்பளம் பெறுகிறார் என்றால், அவர் 33 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால், அவருக்கு நாம் கிராஜுவட்டியாக கொடுப்பது 8,250 ரூபாய். 30 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால், அவருக்கு நாம் பணிக்கொடையாக கொடுப்பது 7,500 ரூபாய். 33 ஆண்டுகள் பணிபுரிந்து, 550 ரூபாய் வாங்கும் ஒருவர் ஓய்வு பெற்றால், அவருக்கு நாம் கொடுக்கும் பணிக்கொடை 9,075 ரூபாய். அவர் 30 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றால், அவருக்கு நாம் கொடுக்கும் கிராஜுவட்டி ரூபாய் 8,250. 700 ரூபாய் வாங்கிக்கொண்டு 33 ஆண்டுகள் பணி புரிந்துவிட்டு ஓய்வுபெறும் ஒருவர் வாங்கும் கிராஜுவட்டி ரூபாய் 11,560. அவரே 30 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால், அவர் வாங்கும் கிராஜுவட்டி ரூபாய் 10,500. ஒருவர் 22 வயதிலே சர்வீசுக்கு வருகிறார் என்றால், ஓய்வு பெறும் நிலையில், 58 வயதாகும்போது சாதாரணமாக 35, 36 வருடத்திற்கு மேல் பணி புரிந்திருப்பார். அந்த வகையில் முழு கிராஜுவட்டியையும் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதுபோல் 800 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு 33 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெறும் ஒருவர் 13,500 ரூபாய் கிராஜுவட்டியாகப் பெறுகிறார். 30 வருடம் பணியாற்றி ஓய்வுபெற்றால், அவர் பெறும் பணிக்கொடை ரூபாய் 12,000. 1,200 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும் ஒருவர் 33 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றால், அவர் ஓய்வு பெறும்போது, நாம் வழங்கும் பணிக்கொடை ரூபாய் 19,500. அதே நபர் 30 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றால், அவர் வாங்கும் பணிக்கொடை ரூபாய் 18,000. 1,500 ரூபாய் பெற்றுக்கொண்டிருப்பவர் வீட்டுக்கு 33 ஆண்டுகள் பணி புரிந்த பிறகு செல்லும்போது, நாம் வழங்கும் பணிக்கொடை ரூபாய் 24,750. ஆனால் அவர் 30 ஆண்டுகள் பணி புரிந்த பின் வீட்டுக்குச் சென்றால் நாம் வழங்கும் பணிக்கொடை ரூபாய் 22,500. 2,000 ரூபாய் வாங்கிக்கொண்டு 33 ஆண்டுகள் பணி புரிந்த பின் ஓய்வு பெற்றால் அவருக்கு நாம் வழங்கும் பணிக்கொடை ரூபாய் 33,000. அவர் 30 ஆண்டுகள் பணி புரிந்து பின்பு ஓய்வு பெற்றால், அவருக்கு நாம் வழங்கும் கிராஜுவட்டி ரூபாய் 30,000. அதேபோல 2,500 ரூபாய் வாங்கிக் கொண்டிருப்பவர் 33 வருட சர்வீசுக்கு பிறகு ரிட்டையராகி நாம் அவரை வீட்டுக்குப் போகச் சொல்லும்போது, வழங்குகின்ற பணிக்கொடை ரூபாய் 36,000. 30 வருடப் பணிக்குப் பின் ஓய்வு பெற்றாலும், அவரும் இந்த 36,000 ரூபாய் பணிக்கொடை தொகையைப் பெற தகுதியுடையவராகிறார். காரணம் 36 ஆயிரம் ரூபாயை நாம் கடைசி தொகையாக, கடைசி கட்டமாக வைத்திருக்கிறோம். ஆகவே அவர் 30 வருடம் பணியாற்றியிருந்தாலும் சரி, 33 வருடம் பணியாற்றியிருந்தாலும் சரி, இந்த 36,000 ரூபாய் கிராஜுவட்டியைப் பெறுகிறார். இதற்கு மேலும் 10 ஆயிரம் ரூபாய் ஓய்வு பெறும்போது, கொடுக்க வேண்டு

[மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 15

மென்று கேட்கிறார்கள். எந்த ஒரு மாநிலமும் இந்த மாதிரி இன்னும் தர வில்லை. இந்தக் கணக்கை நாங்கள் வைத்திருப்பதால் நாங்கள் என்னென்ன ஓய்வுபெறும்போது வழங்குகிறோம் என்பதற்கான கணக்கையும் போட்டு வைத்திருக்கிறோம். இங்கே பிரச்சினை வந்ததால், விளக்கமெல்லாம் நான் கொடுத்திருக்கிறேன். எல்லா கணக்கையும் நான் வைத்திருப்பதால், இனி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் தான் இறுதி முடிவு செய்ய வேண்டும். நாட்டுக்கு இது தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். ஓய்வு பெறும்போது, அரசு ஊழியர்களுக்கு ஒன்றுமே கொடுக்காமல் விரட்டப்பட்டு விடுகிறார்கள் என்று நாட்டு மக்கள் நினைக்கிறார் கள். குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு அடிப்படை நிலையிலுள்ள, கடைசி தொழிலாளர்கூட 7,000 ரூபாய்க்கு மேல் பணிக்கொடை வாங்கிக்கொண்டு தான் ஓய்வு பெறுகிறார். ஆக, கிட்டத் தட்ட 700 ரூபாய் சம்பளத்தை வாங்கிக் கொண்டு ஓய்வு பெறுபவர்களுக்கு எல்லாம் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நாம் கொடுத்துவிட்டுத் தான் அவர்களை வீட்டுக்கு அனுப்புகிறோம். இது நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும். எங்கள் நெஞ்சத்திலே தவறான எண்ணம் ஒன்றும் இல்லை. எங்களிடம் தாராளமாக இருக்கிறது என்றால், கொடுத்து விடலாம். ஆனால் அதே நேரத் தில் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இதே அவையில், இதே இருக்கையில் நின்றுகொண்டு சமர்ப்பிக்கும் போது, இதுபற்றி என்ன குறிப்பிட்டார்கள் என்பதை என்னால் இந்த சந்தர்ப் பத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. "விலை ஏறுகிறது. ஊதியங் கள் உயர்த்தப்படுகின்றன. விண்ணில் ஏறிப்பறக்கும் காற்றாடி போல் ஏறுகிற விலைவாசிக்கு, உயர்த்தப்படுகிற ஊதியங்கள் மேலும் உயரப் பறப்பதற்கு உதவு கிற நூல் கயிறாக அமைகின்றது. ஊதிய உயர்வுக் கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம்— அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை. ஊதியம் இருந்தால் தானே உயர்த்த வேண்டுமென்ற குரலே எழப் போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத்தான்—சரி யாகச் சொல்வதானால், அவர்களை முக்கியமாக வைத்துத்தான், நாட்டு பொரு ளாதாரப் புரட்சியையே உருவாக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். இருக்கின்ற நிலைமைகளை, அவர்கள் இந்த இடத்தில் இருக்கும்போது, ஊதியம் என்ற ஒன்று இருந்தால்தானே உயர்த்த வேண்டுமென்ற குரலே எழும் என்கிற கருத்தை அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். அதை நான் தவறு என்று சொல்லவில்லை. எந்த ஒரு ஆட்சியாக இருந்தாலும் எல்லாத் தரப்பி



1983 மார்ச் 15] [மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

னையும், எல்லாக் குறைபாடுகளையும் சேர்த்துத்தான் பார்க்க வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், எவ்வளவு மாச்சரியமான, எவ்வளவு வெறுப்பான, எவ்வளவு துவேஷமான, எவ்வளவு மாறுபாடான கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும், அவற்றையும் ஆத்திர மில்லாமல், வசைபாடாமல் நல்லவைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மை எங்களிடம் உண்டு. ஆத்திரமில்லாமல் இருப்பதுதான் நிமிர்ந்து நிற்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதுபோல், எங்களுடைய நிலைமைகள் என்றைக் கும் நிமிர்ந்து நிற்கும் அளவில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவை யின் அன்பையும், அரவணைப்பையும், நன்மதிப்பையும் பெற்றிருக்கிறது. இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் பயன்பெற வேண்டுமென்ற நம்பிக்கையில் நிதி நிலை அறிக்கையை இங்கே வைப்பது என்னுடைய கடமையும், பொறுப்புமாக இருக்கிற காரணத்தால், அந்தக் கடமை உணர்வோடு, பொறுப்புணர்வோடு நான் அவையில் வைத்துள்ள நிதி நிலை அறிக்கையை எல்லோரும் வரவேற்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியை யும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தது, அவை மீண்டும் 26—3—1983 சனிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-05)

## 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

**190. Notification issued with G.O. Ms. No. 1522, Rural Development and Local Administration, dated the 8th October 1982 regarding amendment to the Tamil Nadu Municipal Medical Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 *(d)* of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].**

**191. Notification issued with G.O. Ms. No. 3187, Home, dated the 24th December 1982 regarding exemption from payment of tax in respect of the Motor Vehicles owned by the Foreign and Commonwealth Trade Commissioner's stationed in the State of Tamil Nadu. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]**

192. Seventh Annual Report of the Tamil Nadu Salt Corporation Limited for the year 1981 (English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

193. Eighth Annual Report of the Tamil Nadu Salt Corporation Limited for the year 1981 (English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*B. Reports, Notifications and Others Papers.*

62. Thirty-seventh Report of the Committee on Government Assurances.



## இணைப்பு I

(312 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம் புத்தாநத்தம் கிராமத்திற்கும், வெள்ளையகவுண்டம்பட்டிக்கும் இடையே சாலை போடுவது சம்பந்தமாக இரு கிராமத்தில் உள்ள இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களிடையே மனக்கசப்பு நிலவி வந்திருக்கிறது. புத்தாநத்தம் கிராமத்திற்கு அருகிலுள்ள துவரங்குறிச்சி கிராமத்திலிருந்து புத்தாநத்தம் கிராமத்திற்கு ஞானரதத்தை மேளதாளங்களுடன் ஊர்வலமாக 13—11—1982 அன்று எடுத்துவர இந்துக்கள் விரும்பியிருக்கின்றனர். மசூதி முன்பாக மேள வாத்தியங்கள் ஒலிக்க ஊர்வலம் நடத்துவதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். கரூர் கோட்டாட்சித் தலைவர் தலையிட்டு இந்துக்களை அழைத்துப் பேசியுள்ளார். ஞானரதத்தை மாற்று வழியாக எடுத்துச் செல்ல இந்துக்கள் ஒத்துக் கொண்டனர். ஏதும் அசம்பாவிதங்கள் நடவாமல் தடுக்க வேண்டி நிலைமை கூர்ந்து கவனிக்கப்பட்டு வந்தது.

23—11—1982 அன்றும் 27—11—1982 அன்றும் சிறுசிறு சச்சரவு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவைகள் மீது காவல் துறையினர் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 30—11—1982 அன்று அமைதிக் குழுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இரு தரப்பினர் மீதும் குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 107-ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. 6—12—1982 அன்று மீண்டும் அமைதிக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. 19—12—1982, 20—12—1982 ஆகிய நாட்களில் இரு தரப்பினரிடையே சிறுசிறு தகராறுகள் நடந்தன. 20—12—1982 அன்று இரு சிறுவர்களிடையே ஏற்பட்ட தகராறின் காரணமாக இந்துக்களும் முஸ்லிம்களும் சட்ட விரோதமாகக் கூடினர். அவர்களைக் காவல் துறையினர் கலைந்து செல்ல வைத்தனர். உயர் அதிகாரிகள் விரைந்து சென்று இரு தரப்பினரிடையேயும் பேச்சு வார்த்தை நடத்தினர். அன்று மாலை சுமார் 70 வயதான திரு. சின்ன கவுண்டன் என்பவர் இறந்து விட்டார். அவரது மரணத்தின் மீது சந்தேகம் என புகார் செய்ததால் கரூர் கோட்டாட்சித் தலைவர் பிரேத விசாரணை நடத்தினார். மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு பிரேதம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறந்தவருக்கு மரியாதை செலுத்த மேளதாளங்களுடன் மசூதி உள்ள தெரு வழியாக செல்ல 21—12—1982 அன்று இந்துக்கள் விரும்பினர். மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## இணைப்பு

23—12—1982 அன்று அமைதிக் குழு கூட்டம் நடத்தப்பட்டது. மசூதியில் தொழுகை நடத்தும் நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் மசூதி வழியாகச் செல்லும்போது மேளங்கள் வாசிக்கலாம் என இருதரப்பினரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர்.

புத்தாநத்தம் கிராமம் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள ஒரு வீட்டில் நடைபெறும் குடும்ப வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக 26—1—1983 அன்று இரவு சுமார் 9 மணியளவில் பிச்சாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்கள் சிலர் மேளதாளத்துடன் ஊர்வலமாக வந்தனர். ஊர்வலம் மசூதியைக் கடந்து செல்லும்பொழுது மசூதியில் கூடியிருந்த முஸ்லிம்கள் சிலர் ஊர்வலத்தினரைத் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது. சம்பவங்களின் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 30—1—1983 அன்று அமைதிக் குழுக் கூட்டம் மீண்டும் நடத்தப்பட்டது. அமைதி காப்பதாக இரு பிரிவினரும் ஒத்துக் கொண்டனர். இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். நிலைமைகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றன. நிலைமை அமைதியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இணைப்பு II

(314 ஆம் பக்கத்தில் இனம் 4 (2) -க்கான அடிக்குறிப்பைக் காண்க)

1979-81ல் பொதுப்பணித் தேர்வாணைக் குழு ஒரு சிறப்புத் தேர்வு நடத்தி 1,142 பேர்களை பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தேர்ந்தெடுத்தது. இத்தேர்வுக்கு தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களை அனுமதிப்பது குறித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் இருவர் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே 6—2—82ல் அதற்கான பட்டியலை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பிய தேர்வாணைக் குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பட்டதாரி ஆசிரியர்களின் பணி சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்கு முடிவுற்ற பின்னரே வரன்முறை செய்யப்பட வேண்டுமென அறிவித்துள்ளது. என்ற போதிலும், ரிட் மனு தாக்கல் செய்த இருவருக்கு இரண்டு பதவிகள் காலியாக வைத்துவிட்டு மற்ற பதவிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை வரன்முறை செய்யலாமா என்பது குறித்து அரசு தேர்வாணைக் குழுவினருடன் கலந்து பரிசீலித்து வருகிறது.

D

143168